

இரண்டு
புத்தகங்கள்

கல்கி

KALKI 18.4.99 ரூ. 4.50








"தலையிலே அங்கங்கே வெள்ளைமுடி.. அதுதான் 'டை' அடிச்சுக்கிட்டேன்" என்று கூச்சத்தோடு யாராவது குறிப்பிட்டால், அவர் ஒரு பத்தாம் பசலி. இப்போதெல்லாம் தலைக்கு விதவிதமான வண்ணச் சாயங்களை ஏற்றிக் கொள்வதுதான் பேஷன். அதுவும், தலையில் கருகருவென்று முடி கொண்டவர்கள் தங்கள்

பேஷனால் பிரபலமான கலர்க் கூந்தல்!

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkiweekly.com
ஈ மெயில் : kalkiweekly@vsnl.com



நன்றி: ஏஷியன் ஏஜ், தகவல்: அ. சங்கரன்

கருங்கூந்தலை கலர் கூந்தலாக்கிக் கொள்வதைப் பெரிதும் விரும்புகிறார்கள்.

சென்னை பார்க் ஷெரடன் ஹோட்டலில் அழகு நிலையம் நடத்தும் திருமதி லில்லி மதோக்கிடம் இது பற்றிக் கேட்டோம்.

"உண்மைதான். முன்பெல்லாம் வெள்ளை நரையை கறுப்பாக்கிக் கொள்ளத்தான் எங்களிடம் வருவார்கள். கோத்ரெஜ் டை மட்டும் தான் கறுப்பு, பழுப்பு ஆகிய இரண்டு வண்ணங்களில் கிடைக்கும். செயற்கைச் சாயம் வேண்டாம் என்று எண்ணியவர்கள் ஹென்னாவைப் பயன்படுத்தச் சொன்னார்கள்.

கடந்த மூன்று வருடங்களாக இந்த நிலை மாறி வருகிறது. வெள்ளை முடியை மறைக்க என்றில்லாமல் வித்தியாசமாகத் தோற்றமளிக்கவும் பலவித வண்ணச் சாயங்கள் வந்துவிட்டன. அதிலும் பிரவுன் கலர் இன்றைய இளம் பெண்களிடையே மிகவும் பிரபலமாகிவிட்டது. இவை பெரும்பாலும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியானவை" என்றார்.

முழுக் கூந்தலை மட்டுமல்லாமல், அதன் சில பகுதிகளை மட்டும் வண்ணமாக்கிக் கொள்வதை "ஹைலைட்டிங்" என்று அழைக்கிறார்கள். இப்படியெல்லாம் ஒருமுறை டை அடித்துக் கொண்டால் அது ஆறு மாதங்களுக்கு அப்படியே இருக்குமாம்!

இந்த இடத்தில் தலை முடியைப் பற்றிய ஒரு சின்ன விஞ்ஞானத் தகவலை அறிந்து கொள்வது நல்லது. ஒவ்வொரு தலை முடியிலும் மூன்று படிமங்கள் உண்டு. மேற்புறமாக உள்ளதுதான் கூந்தலுக்குப் பளபளப்பைத் தருகிறது. நடுப்படிமம் கூந்தலுக்கு நிறத்தைக் கொடுக்கும் பிக்மெண்டுகளைக் கொண்டது. உட்புறமாக உள்ள மூன்றாவது படிமம்தான் சத்துக்களை உறிஞ்சிக் கொண்டு தலைமுடிக்கு போஷாக்கு அளிக்கிறது. வழக்கமான தலைச் சாயம் முதல் படிமத்தைத் தாண்டி இரண்டாவது வரை ஊடுருவுகிறது. ஆனால் ஹென்னா அப்படியல்ல. கூந்தலின் மேற்புறத்தை அடர்த்தியாக மறைத்து பளபளப்பைக் கொடுக்கிறது. அவ்வளவு தான்.

இதெல்லாம் போக சமீபகாலமாக 'கூந்தல் மஸ்காரா' அறிமுகமாகியிருக்கிறது. விசேஷங்களுக்குப் போகும்போது இதைப் பயன்படுத்துகிறார்கள். 'ஹைலைட்டிங்' செய்து கொள்ள ஒன்றரையிலிருந்து இரண்டு மணி நேரம் ஆகிறதென்றால், மஸ்காராவுக்கு சுமார் ஐந்து நிமிடங்களே போதும்! இதை வீட்டிலேயே செய்து கொள்ள முடியும். இரண்டு முறை தலைக்கு ஷாம்பூ போட்டுக் குளித்தால் மஸ்காரா போய்விடும்!

ஆனால் இவற்றில் பெரும்பாலானவற்றில் குறைந்த அளவிலாவது அமோனியா இருக்கிறது. அதிக அளவு அமோனியா கலந்திருந்தால் முடி கொட்டத் தொடங்கிவிடும். அமோனியா கலக்காத க்ரீம் என்றால் அந்த வண்ணச் சாயம் அதிக நாட்கள் தங்குவதில்லை.

யார் வேண்டுமானாலும் தலைச் சாயத்தை பூசிக் கொள்ளக் கூடாது. சிலருக்கு அலர்ஜி வரும். எனவே காதுக்குப் பின்னால் உள்ள தோல் பகுதியில் கொஞ்சம் தடவிப் பரிசோதித்துப் பார்த்து விட்டுப் பயன்படுத்தலாம்.

"அந்தக் காலத்தில் ஐம்பது வயது முடிந்தாலே ஏதோ வாழ்வின் முக்கியமான கட்டத்தைத் தாண்டிவிட்டதாக நினைப்பார்கள். இப்போது அப்படியில்லையே! பளிச்சென்ற தோற்றத்தில் எல்லோருக்குமே ஆர்வம் உண்டாகி வருவது நல்லதுதான்" என்ற லில்லி மதோக் வேறு சில தகவல்களையும் கூறினார்.

- இந்தி நடிகைகளில் இப்படிப்பட்ட வண்ணத் தலைச்சாயங்களை முதலில் பிரபலப்படுத்தியவர் டிம்பிள் கபாடியா. இங்கே குஷ்பு.
- தலைச்சாயத்தை சீராகக் கலக்கி உபயோகிக்காவிடில் நாளடைவில் பகுதி பகுதியாக வெளுத்துப் போகும். கண்ணாடிக் கிண்ணத்தில்தான் கலக்க வேண்டுமே தவிர ப்ளாஸ்டிக்கில் அல்ல.
- நடுத்தர வயதைத் தாண்டிய ஆண்கள் கருகருவென்று கறுப்புச் சாயத்தை பூசிக் கொண்டால் அது கொஞ்சம் அபத்தமாக இருக்கும். எனவே அப்படிப்பட்டவர்களுக்கு அவர்களுடைய தோற்றத்துக்கு ஏற்றபடி பழுப்பு அல்லது கரும்பழுப்பு நிறத்தில் தலைச் சாயத்தை சிபாரிசு செய்வோம்.

— ஜி.எஸ்.எஸ்.

ரசிகாவின் வண்ணக் கூந்தலை படம் பிடித்தவர்: பிரவீண்குமார்

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 1999

வாசகர்களையும் எழுத்தாளராக்கும் போட்டி!

ரொக்கப் பரிசோடு புத்தகப் பரிசு!



படைப்பாளிகளே, வாசக எழுத்தாளர்களே!
நீங்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சிறுகதைப் போட்டி வந்தே விட்டது!

முதல் பரிசு — ரூ. 5000
இரண்டாம் பரிசு — ரூ. 3000
மூன்றாம் பரிசு — ரூ. 2000

தவிர, பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ. 500 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர் எனில், வழக்கம் போல் போனஸ் உண்டு!

இவற்றோடு, பரிசு பெறுபவர்களுக்கு மட்டுமல்ல; பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படும் கதைகளை எழுதிய கதாசிரியர்களுக்கும் **சுந்தா** எழுதிய **பொன்னியின் புதல்வர்** (அமரர் கல்கியின் வாழ்க்கை வரலாறு) நூலும் பரிசாக அளிக்கப்படும்.

விதிமுறைகள் :

- சரித்திரம், சமூகம், மர்மம், நகைச்சுவை என எப்படிப்பட்ட கதையாகவும் இருக்கலாம். கதை உங்கள் சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும்; அவ்வளவுதான்!
- கல்கியில் 4 பக்கங்களுக்கு மிகாமல் இருப்பது நல்லது.
- சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உறுதிமொழிக் கடிதம் வேண்டும். அது இல்லாத கதைகள் பரிசீலிக்கப்படமாட்டா.
- அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லையென்றும் போட்டி முடிவு வெளியாகும் வரை எழுதுவதில்லை என்றும் உறுதி மொழி தர வேண்டும்.
- முழு வெள்ளைத் தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.
- தேர்வாகாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகள் ஒட்டிய அஞ்சல் உறை இணைக்கப்பட வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- பரிசுக்குரிய கதைகளை நடுவர்குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே இறுதி.
- முடிவு வெளியாகும் வரை, எவ்வித கடிதப் போக்குவரத்தோ, தொலைபேசி விசாரிப்புகளோ கூடாது.
- **'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி – 1999'** என்று உறையின் மேல் தவறாமல் குறிப்பிட்டு, அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கல்கி, 47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

- கதைகள் வந்து சேரக் கடைசித் தேதி : ஜூன் 15.
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் ஆகஸ்ட் 1 ஆண்டு மலரில் வெளியாகும்.

படைப்பாளிகள், வாசக எழுத்தாளர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கலந்து கொண்டு சிறப்பிக்க அழைக்கிறோம்.

— ஆசிரியர்





“என்னவோ போங்க, அளவு ரவிக்கை கொடுத்தும் இப்படிக் காலை வாரிட்டாரு டெய்லர்” என்று குற்றப் பத்திரிகை வாசிக்காத பெண்களே இருக்க மாட்டார்கள். அளவு அல்லது அளவு ரவிக்கை கொடுத்தே இந்தக் கதி என்றால் ரெடிமேட் ரவிக்கைகளைப் பெண்கள் ஏற்றுக் கொள்வார்களா? அதனால்தான் ரெடிமேட் சட்டை - பேண்ட்கள் மாதிரி ரெடிமேட் ரவிக்கைகளின்





• ராஜகோபால்

மார்க்கெட் சூடுபிடிப்பதில்லை.

இப்போது இந்த விஷயத்திலும் விதிவிலக்குகள் உருவாகத் தொடங்கி விட்டன. உதாரணத்துக்கு : ஆத்ரேயா கார்மெண்ட்ஸ்.

"இது ரொம்பத் தற்செயலாகப் பிறந்த நிறுவனம். வெளிநாட்டில் உள்ள என் உறவினர் ஒருவர் துணி வியாபாரம் செய்து கொண்டிருந்தார். இந்தியாவிலிருந்து போதிய ரெடிமேட் உடைகளைக் குறித்த நேரத்தில் பெற முடிவதில்லை. என்று அடிக்கடி குறைபட்டுக் கொண்டார். அப்போதுதான் நாமே ரெடிமேட் உடைகளைத் தயாரித்தாலென்ன என்று தோன்றியது.



காலம் மாறி விட்டது!

ரவிக்கைக்கு மேட்சாகப் புடைவை!



தொடக்கத்தில் பாவாடைகள் மட்டுமே தைத்து விற்றோம். பிறகு ரெடிமேட் ரவிக்கைகளைத் தயாரித்தால் என்ன என்று தோன்றியது. முதல் ரவிக்கை என் அம்மாவுக்கானது. பொருந்தியது. அதைத் தொடர்ந்து பல்வேறு அளவுகளில் தயாரித்தோம். முதல் இரண்டு வருடங்கள் ஸ்டாக் தேங்கத் தொடங்கியது. மார்க்கெட்டிங் போதாதது ஒரு காரணமென்றால், இந்தக் கலையை சரிவரப் புரிந்து கொண்டு முழு நிறைவு பெறவும் அந்தக் காலம் வேண்டியிருந்தது. இப்படி ஆறு வருடங்களுக்கு முன் தொடங்கிய எங்கள் நிறுவனம் இப்போது சிங்கப்பூர், மலேசியா, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கு ரெடிமேட் ரவிக்கைகளை ஏற்றுமதி செய்யும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது" என்கிறார் இதன் உரிமையாளர் ராஜகோபால்.

எப்படிக் கிடைத்தது வெற்றி?

முக்கியக் காரணங்களில் ஒன்றாக நவீன கருவி ஒன்றை இறக்குமதி செய்து பயன் படுத்துவதைக் குறிப்பிட்டார் சாரி - தொடக்கத்திலிருந்தே இந்த நிறுவனத்தின் ஃபேப்ரிக் எஞ்ஜினியராக இருப்பவர். கத்திரிக்கோலைக் கொண்டு துணிகளை வெட்டினால் அதற்கு நிறைய நேரம் பிடிக்கும். தவிர தொடர்ந்து வெட்டும் போது களைப்பு ஏற்பட்டு, நேரமாக ஆக ஒருவித ஒழுங்கின்மையும் அந்த வெட்டலில் தெரியத் தொடங்கும். ஆனால், இந்த நவீன கருவியைக் கொண்டு ஐந்தே நிமிடங்களில் ஏதோ கேக்கை வெட்டுவது போல் துல்லியமாக நாற்பது ரவிக்கைத் துணிகளை வெட்ட முடிகிறதாம்.

அரவிந்த், ப்ரிமீயர் போன்ற சிறந்த மில்களின் துணிகளை மட்டுமே தேர்வு செய்து தைத்ததில் சாயம் போவது, சிக்கிரம் கிழிவது போன்ற புகார்களிலிருந்து தப்ப முடிந்திருக்கிறது இவர்களால்.

உடை விஷயத்தில் - அதுவும் ரவிக்கை விஷயத்தில் பெண்களை திருப்திப்படுத்துவது கஷ்டமான விஷயமென்றாலும், அப்படி அவர்களின் நம்பிக்கையைப் பெற்றுவிட்டால் அவர்களே இந்தத் தயாரிப்புகளைப் பொறுத்தவரை ஊதியம் பெறாத விளம்பர ஏஜென்சிகளாகச் செயல்படுவார்கள்.

“கை மற்றும் முன்புறங்களில், இணைப்பில் இரண்டு மூன்று தையல்கள் போட்டிருப்பதால், அளவு கொஞ்சம் முன்னே பின்னே இருந்தாலும் ஓரிரு தையல்களைப் பிரித்து விடுவதன் மூலம் பொருத்தமானதாக ஆக்கிக் கொள்ள முடிகிறது. இது போன்ற சிறு சிறு உத்திகளால்தான் இரு கைகளும் வெவ்வேறு நீளம் கொண்டவர்கள், கையும் உடல்வாகும் பொருந்தாத அளவு கொண்டவர்கள் ஆகியோருக்கும் எங்கள் தயாரிப்புகள் பொருத்தமாக இருக்கிறது” என்றார் ராஜகோபால்.

அளவுப் பொருத்தம் ஒருபுறமிருக்க, ஃபாஷன்?... ரவிக்கைத் துணியின் அளவு எண்பது சென்டி மீட்டரென்றால், அதில் முதுகுப்புறம் மற்றும் கைகளுக்கான சுமார் நாற்பது சென்டி மீட்டரில்தான் ஃபாஷன் டிசைனர் தமது திறமையைக் காட்ட முடியும்.

“சவாலாக எடுத்துக் கொண்டோம். 'வேவ்ஸ்' என்ற எங்கள் டிசைன் தைப்பதற்கு சவாலாக இருந்தது. என்றாலும் இறுதித் தோற்றத்தில் பலரது பாராட்டுகளைப் பெற்றது. அவ்வப்போது, சீஸனுக்குத் தகுந்த மாதிரியும் டிசைன் செய்வதுண்டு...”

“வெவ்வேறு வண்ணங்கள் கொண்ட டிசைன் என்றால், புடைவைக்கு ஏற்ற மாதிரி அமைவது கஷ்டம் இல்லையோ?” என்ற கேள்விக்கு அதிரடியாக பதில் வருகிறது. “இப்போதெல்லாம் ரவிக்கையை வாங்கிக் கொண்டு, அதற்கு ஏற்ற மாதிரி புடைவை வாங்கத் தொடங்கி விட்டார்கள்...

“... அது மட்டுமல்ல. ஏதாவது திருமணம் போன்ற விசேஷங்களுக்குப் போகும் போது பளிச்சென்ற புடைவையும், ஏதோ ஒரு ரவிக்கையுமாக இங்கே நுழைந்து, தகுந்த ரெடிமேட் ரவிக்கையை வாங்கி அணிந்து செல்வதும் உண்டு... அத்தனை ஏன்? ஆண்கள் கூட இங்கு வந்து தங்கள் மனைவிக்கு ரவிக்கை செலக்ட் செய்து வாங்கிச் செல்கிறார்கள்!

— அருண் சரண்யா



வம், பாம்புகள்!

'ஹார்வி' என்றொரு ஃபாஷன் பத்திரிகை—மும்பையிலிருந்து வெளியாகிறது. அதிலொரு விளம்பரம்—பெண்களின் கைப்பைகளுக்கு மூன்று பைகளின் படம்— அதன் கீழ் ஒரு வாக்கியம்:

'ஈடன் தோட்டச் சம்பவத்துக்குப் பிறகு பாம்புகள் இவ்வளவு கவர்ச்சிகரமாகத் தோற்றமளிப்பது இப்போதுதான்...' என்று குறிப்பிட்டு பாம்புத் தோலுக்குப் பாலுணர்வைத் தூண்டும் கவர்ச்சி உள்ளதாகப் பிரகடனம் வேறு.

'பாம்புத் தோலில் பொருள்கள் செய்வதே 1991 முதல் தடை செய்யப்பட்டுவிட்ட நிலையில் இப்படியொரு விளம்பரமா!' என்று விலங்குகள் நல அமைப்பு ஒன்று விழித்துக் கொண்டது. மேற்படி பத்திரிகையின் ஆசிரியருக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பப்பட, ஆசிரியர் இறங்கி வந்து ஸாரி சொல்லி விட்டார்!

— குல்லு



மேக்-அப் கலைஞர், நாடக நடிகர், டிசைனர், பேக்கரி எக்ஸ்பர்ட் என்று எல்லாவற்றிலும் சக்கைப்போடு போட்டுவிட்டு, தற்போது புகழ்பெற்ற சினிமா நடிகர்களுக்கும் நடிகைகளுக்கும் உடைகள் டிசைன் செய்கிறார் ஷஹீத் ஆமிர்.

அதிர்ஷ்டம் மட்டும் கைகொடுக்கவில்லை இந்த இளைஞருக்கு; கடின உழைப்பும்தான்.

ஃபாஷன் உலகின் மும்மூர்த்திகள்!

சும்மா ட்ரை பண்ணிப் பார்ப்போமே என்று ராகுல் ராய்க்கு உடைகள் டிசைன் தயாரித்துக் கொடுத்தார். அது தான் ஆரம்பம். ஆமிர்கான், செய்ஃப் அலிகான் (ஷர்மிளா டாகுரின் மகன்), மனிஷா கொய்ராலா, மம்தா குல்கர்னி, சுஷ்மிதா சென், நானா படேகர், அக்ஷய் கன்னா, தபு, ரவீனா டாண்டன் என்று இவரது வாடிக்கையாளர் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது! இவர் உடை டிசைன்களை நாடும் டீ.வி நடிக-நடிகையர் பட்டியல் ஹனுமார் வால்தான்!



• ஷஹீத் ஆமிர்

நிறங்களை 'மிக்ஸ்' செய்து சரியான சேர்க்கைகளை உருவாக்குவது தான் ஷஹீதின் சிறப்பு. ஆண்கள் உடைகளுக்கு மிருதுவான இதாலிய துணிகளை உபயோகிக்கிறார்; பெண்களுக்கு மல், மற்றும் இயற்கை இழையாலான துணிகள் தான். கலம்காரி டிசைன்கள், பளபள கற்கள், ஜினிஞ்சல், ஸ்படிக மணி வேலைப் பாடுகளைப் பெரிதும் பயன்படுத்துகிறார் ஷஹீத்.



ஃப்ளூரசின்ட் வண்ணங்கள் இப்போது ஃபாஷன் இல்லை. எனவே அடிக்க வராத பச்சையின் வீச்சும், தீயின் சிவப்பும், குளிர்ச்சியான நீலமும், மிருதுவான ஆரஞ்சும் இவர் கற்பனையில் புகுந்து விளையாடுகின்றன!

'ரங்கிலா'வில் ஓரேயடியாக வண்ணத்தை வைத்து விளாசியவர் இப்போது அதைக் குறைத்துக் கொண்டு விட்டாராம்!

பிரியங்காவின் கணவர் ராபர்ட் வதேரா, சஞ்சய்தத், நிகில் நந்தா என்று வி.ஐ.பி.க்களின் 'டிசைனர் ஷர்ட்' தில்லியில் பிரபலம் அடையக் காரணம்-

ரோஹித் காந்தி.

ஆறு வருடங்கள் ஆடைகள் ஏற்றுமதித் துறையில் வேலை பார்த்தார். என்னவெல்லாம் கற்றுக் கொள்ள வேண்டுமோ அத்தனையும் கற்றுக் கொண்டு அத்துறையிலிருந்து வெளியே வந்தார் ரோஹித். ஆனால் கூடவே நேஷனல் இன்ஸ்டிட்யூட் அஃப் ஃபாஷன் டிசைனில் டிகிரியையும் வாங்கிக் கொண்டார்! இவரது வாடிக்கையாளர்களில், இவரது சக-டிசைனர்களே நிறையப் பேர் இருக்கிறார்கள் என்பதுதான் இன்னும் விசேஷம்!



• அஸீம் கான்

எல்லாரும் விழுந்தடித்துக் கொண்டு பெண்கள் உடைகளை டிசைன் செய்யும்போது, ரோஹித் துணிந்து ஆண்கள் உடைகளை மட்டுமே தேர்ந்தெடுத்தார். ''இப்போது ஆண்கள் நல்ல கட்டுமஸ்தான உடலைக் காண்பித்துக் கொள்வதில் ஆர்வமாயிருக்கிறார்கள். அவர்களுக்கான ஷர்ட்டுகளை விதம் விதமாக டிசைன் செய்கிறேன்!'' என்கிறார் ரோஹித். இவரது H2o ஷர்ட்டுகள் பிரபலமானவை.

துணிகளைத் தேர்ந்தெடுக்க இவரது மைத்துனர் (சென்னையிலிருந்து!) உதவுகிறாராம். ஆடை ஏற்றுமதி பிசினஸில் இருப்பவர். நவீன துணி ரகங்களில் டூ-டோன் வெல்வெட், பிளாஸ்டிசைஸ்டு டெக்ஸ்சர் இரண்டுக்குமே நல்ல கிராக்கி இருக்கிறதாம். இவை உடலைப் பிடிக்கிற 'கட்'டிங்கில் ஷர்ட்களாக, தில்லியில் சுடச்சுட விற்பனையாகிறதாம்.

அதிக விலை வைத்து விற்பதில் ரோஹித்துக்கு ஆசை இல்லையாம். அதனால் H2o ஷர்ட்டுகளை 700 ரூபாயிலிருந்து 1500 ரூபாய்க்குள்தான் விற்கிறாராம்.(!!!)



இப்போது இவருடைய நண்பர் ராகுல் கன்னாவின் தூண்டுதல் காரணமாக பெண்களின் டிசைனர் உடைகளை CUE என்ற பெயரில் அசத்தலாகக் கொண்டு வந்து விளாசித் தள்ளிக் கொண்டிருக்கிறார்!

ஹிலாரி கிளின்டன், எலிசபெத் டெய்லர், உமா துபாஷ், மௌரீன் வாடியா, லியா துபாஷ் என்று அமெரிக்க-இந்திய மகளிர் எல்லாரையும் தம் டிசைன்களால் கட்டிப்



• ரோஹித் காந்தி

"லைசென்ஸ் இல்லாமலே வண்டி ஓட்டு!"

சென்னை இந்திரா நகரில், பெண்களுக்காக, பிரத்யேகமான இரண்டு சக்கர வாகன டிரைவிங் ஸ்கூல் நடத்தி வருகிறார் துர்கா சந்திரசேகரன். அவர், தாம் ஆர்.டி.ஓ. ஆபீசில் சந்திக்கும் முக்கியமான பிரச்னை பற்றிச் சொல்கிறார்:

சமீபகாலமாக உடல் ஊனமுற்ற ஆண்களும், பெண்களும், வேலைக்குப் போய் வருவதற்கு சௌகரியமாக மூன்றாவது சக்கரம் பொருத்தப்பட்ட இரண்டு சக்கர வாகனங்களை அதிக அளவில் பயன்படுத்துகிறார்கள். ஆனால், இத்தகைய ஊனமுற்றவர்கள் டிரைவிங் லைசென்ஸ் பெறுவது பெரும் பிரச்னையாக உள்ளது.



• துர்கா

உடல் ஊனமுற்றவர்களுக்கு ஏற்ப, டூ வீலரை, அதை உற்பத்தி செய்த நிறுவனமே, மாற்றி வடிவமைக்க வேண்டும். அப்போதுதான் லைசென்ஸ் தருவோம் என்கிறார்கள் ஆர்.டி.ஓ. ஆபீசில்.

ஆனால், டூ வீலர் கம்பெனிகள், இத்தகைய பிரத்யேக வடிவமைப்புகளைச் செய்து, வாகனங்களை விற்பனை செய்வது கிடையாது. உள்ளூர் விற்பனையாளர்களே இதைச் செய்து கொடுக்கிறார்கள். இதை அங்கீகரிக்க ஆர்.டி.ஓ. ஆபீசில் மறுக்கிறார்கள்.

ஒரு தடவை இது சம்பந்தமாக ஓர் அதிகாரியுடன் விவாதித்தபோது, ''லோக்கலில் மூன்றாவது சக்கரம் பொருத்தினால் நாங்கள் லைசென்ஸ் தரமாட்டோம்! தேவையானால் லைசென்ஸ் இல்லாமலேயே ஓட்டட்டும்!'' என்றார் கடுமையாக.

இந்தப் பிரச்னைக்கு நானே ஒரு தீர்வைச் சொல்லட்டுமா? கனரக வாகனங்களைப் பரிசோதித்துவிட்டு ஃபிட்னஸ் சர்டிபிகேட் தருவது போல, இந்த உடல் ஊனமுற்றவர்களுக்கான பிரத்யேக வண்டிகளுக்கும் கொடுத்தால் என்ன?

— பாரதி

போட்டிருக்கும் அஸீம் கான் பம்பாய்க்காரர். புகழ் பெற்ற எம்பிராய்டரி டிசைனர் எஸ்.யூ. ஜரிவாலாவின் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

குடும்பத் தொழிலை விட்டு விட்டு, டாக்டருக்குப் படிக்கப் போனார். சரிப்பட்டு வரவில்லை. ஃபாஷனுக்கே திரும்பிவிட்டார்!

பார்ஸன்ஸ் ஸ்கூல் அஃப் டிசைனில் முதுகலைப் பட்டம். உடனே ஜியாஃப்ரி டீன் நிறுவனத்தில் அசிஸ்டென்ட் டிசைனர் பதவி. ஆனால் இரண்டு வருடங்களிலேயே அதை உதறி விட்டு, சொந்தமாகத் தொழிலைத் தொடங்கினார். பலன்- முதல் பாராவில் சொல்லப்பட்ட வி.ஐ.பி வாடிக்கையாளர்கள்!

மேற்கத்திய உடை வடிவங்களை, இந்திய எம்பிராய்டரி டிசைன்களுடன் வெகு சாமர்த்தியமாக இணைத்து fusion வகை டிசைன்களை அறிமுகப்படுத்திய இளைஞர் அஸீம்கான். முத்துக்கள், ஸ்படிகமணிகளையும் இவர் டிசைன்களில் பார்க்கலாம். ட்ரவுசர்கள், பஸ்டியர்ஸ், சாரி, நீண்ட குர்த்தா எல்லாமே இவர் கைபட்டால் நவீன வடிவம் பெற்று விடுகின்றன.

ராஜஸ்தானத்து அடர் வண்ணங்கள் தவிர, வெளிர் வெள்ளை, நீலம், க்ரீம், இளம் ஊதா எல்லாமே இவர் உபயோகிக்கும் நிறங்கள்.

கொலாபாவில் இவரது கடை அதி நவீனமானது. கண்ணைக் கூசாத விளக்கு வெளிச்சம், தாளம் போட வைக்கும் இசை என்று புதுமையாக இருக்கும்!

இப்போது இவருக்குச் சூட்டப் பட்டிருக்கும் பெயர்: ஃபாஷன் பாதுஷா!

— நம்பி

படங்கள்-நன்றி: சண்டே அப்சர்வர்

கல்லூரி வளாகத்தில்...



சென்னை கிறிஸ்துவக் கல்லூரிக்குப் போனோம். முதலில் எதிர்ப்பட்டவர் பேட் பாய்ஸ் கேங்கைச் (Bad Boys Gang) சேர்ந்த நோயல். அவரிடம், ''இங்கே லேட்டஸ்ட் ஃபாஷன் என்ன?'' என்று கேட்டோம்.

"கொஞ்சம் இருங்க. ஒரு ஷில்பான்ஸ் (சூப்பர் ஃபிகர்) வருது. மாஸ் காட்டிட்டு வந்து சொல்றேன்" என்றார்.

''மாஸ் காட்டறதுன்னா என்ன?''

"அதாங்க டீஸண்டா போய் கலாசறது.''

"அப்படின்னா?"

"வழிவுடு சார்!" என்றவர், நம் பரிதாபமான முகத்தைப் பார்த்து இரக்கப்பட்டு, "அது வேற ஒண்ணுமில்லே. சீன் கிரியேட் பண்றது'' என்று சொல்லிவிட்டுப் போனார்.

நாம் தலைமுடியைக் கொஞ்சம் பிய்த்துவிட்டு, 'காலேஜ் காம்பவுண்டு' என்ற ஞாபகம் உறுத்த, திரும்பவும்



• பேட்பாய்ஸ் கேங்!



• மரத்தடியில் உட்கார்ந்து கதையடிப்பதுதான் லேட்டஸ்ட் ஃபாஷனாம்!



• இதுவும் ஃபாஷன்!

மடோனாவும் உண்டு, மண்டேலாவும் உண்டு!

முடியை ஒழுங்குபடுத்திக் கொண்டு, யேசுகிறிஸ்து மேல் பாரத்தை போட்டு விட்டு கிறிஸ்துவக் கல்லூரிக்குள் நுழைந்தோம்.

'ஷில்பான்ஸ்' போல கல்லூரியில் புழக்கத்திலிருக்கும் மேலும் சில வார்த்தைகள் –'துண்டு', 'ராக்கெட்', 'சிட்டு.'

"நடிகர் விஜய் மாதிரி கழுத்துல டாலர் இல்லாத செயின் போடறது தான் இப்ப பசங்க மத்தியில ஃபாஷன்" என்கிறார் மாதவன். நிறைய பேர் கல் பதித்த வெள்ளி மோதிரம் போட்டிருக்கிறார்கள். (ராசிக்கல்!)

கையில் வளையம் மாட்டிக் கொள்வது, ப்ரேஸ்லட் போட்டுக் கொள்வது, ரிஸ்ட் பேண்ட் (wrist band) கட்டிக் கொள்வது ஒரு வகை ஃபேஷன். ரிஸ்ட் பேண்டில் வகைவகையாக டிசைன்கள் வந்து விட்டன. அதை, "ஃபிரெண்ட் ஷிப் பேண்ட்" என்கிறார் கால்டி. தாய்லாந்திலிருந்து வந்திருக்கும் மாணவர் ஒருவர், இந்த மாதிரி பேண்டுகளை செய்து விற்றுக் கொண்டிருக்கிறார். இப்போது லேட்டஸ்ட் ஃபாஷன் மரவிழுது ஒன்றைக் கையில் கட்டிக் கொள்வதாம்! உபயம்–ஒரு திபெத்து மாணவர்.



• மடோனாவும் உண்டு...

ஜான் சுந்தரும், முரளியும் மாணவர்கள் பயன்படுத்தும் சில வார்த்தைகளுக்கு அர்த்தம் சொன்னார்கள்.

டீசன்ட் கய் (Guy): ஜட்டங்காரன். அதாவது ஜொள்ளுப்பார்ட்டி!

'உஷார்' பார்ட்டி: கையில் காசில்லாமல் கேன்டீனுக்குள் நுழைந்து, யார் தலையையாவது தடவி, சிகரெட், லைம் ஜூஸ், டீ என்று நேரத்திற்கேற்ப 'கரெக்ட்' பண்ணி வெளியில் வருபவர்.

'நாக்ப(ர்)னஸ் கய்': இரவெல்லாம் கண் விழித்து, பேய் மாதிரி சுத்திவிட்டு, பகலில் தூங்கிவழிபவர்.

'கோகுலக் கண்ணன்': இவரைச் சுற்றி எப்போதும் ஐந்தாறு பெண்கள் இருப்பார்கள்.

'புலவர்': இலவசமாக கைரேகை பார்த்து ஜோதிடம் சொல்பவர் (கேர்ல்ஸுக்கு மட்டும்)

'காதல் மன்னன்': விரட்டி விரட்டி, பல கேர்ள்ஸை காதலிப்பவர் (இவரை யாரும் 'கேர்' பண்ணுவதில்லை என்பதுதான் முக்கியம்.)

'கூல் கை' : சாஃப்டாக, அமைதியாக எந்த விஷயத்துக்கும் டென்ஷனாகாமல் இருப்பவர்.

டாக்டர் & நர்ஸ்: கல்லூரியின் அடர்ந்த தோட்டத்தில் ஜோடியாக



அமெரிக்காவில் அமரர் கல்கி நூற்றாண்டு விழா

நிகழ்ச்சிகள்:

சிறப்புரைகள்,
அமரர் கல்கியின்
வாழ்க்கைக் குறிப்புகள்
கொண்ட கண்காட்சி

**வாஷிங்டன்,
டி.சி. பகுதியில்:**

ஏப்ரல் **18, 1999**
ஸ்ரீ சிவா-விஷ்ணு கோயில்
கிரீன்பெல்ட், மேரிலாந்து
மாநிலம்

**பென்ஸில்வேனியா
பகுதியில்:**

மே **1, 1999**
டெலவர் பெருநிலத்
தமிழ்ச்சங்கம்
பிலடெல்பியா நகரம்,
பென்ஸில்வேனியா மாநிலம்

**உங்கள் வாழ்த்துக்களை
வரவேற்கும்**

வாஷிங்டன் ஸ்ரீதர்
(விழா பொறுப்பாளர்)
மோகன் நாராயணன்
(மேரிலாந்து)
அன்பழகன் நடேஷ்
(பிலடெல்பியா)

மின் அஞ்சல்: shreelaz@toad.net
(வாஷிங்டன் ஸ்ரீதர்)

அலைந்து திரிந்து 'மூலிகை' எடுத்து வருபவர்கள்.

எஸ்டீம் ஏகாம்பரம்: 'பந்தா' பண்ணுபவர் அல்லது தற்புகழ்ச்சிக்காரர்.

ஒரு டிக்ஷனரி தயாரிக்க வேண்டிய அளவிற்கு வார்த்தைப் பட்டியல் நீண்டு கொண்டே இருக்கிறது. அந்த மாபெரும் இலக்கியப் பணியை மேற்கொள்வதில் ஒரு கஷ்டம்-டிக்ஷ்னரி தயாராவதற்குள் ஃபாஷன் மாறிவிடும்!

மதுரைப்பக்கம் கல்லூரிகளில் 'என்னா பங்கு' (பங்காளி) என்று பரஸ்பரம் கூப்பிட்டுக் கொள்வது மாதிரி, இங்கே 'இன்னா மச்சான்' என்கிறார்கள்.

தெரஸா சொல்கிறார், "இப்போ பாய்ஸ் எல்லாம் காதுல ஸ்டட் போட்டுக்கறதை ஃபாஷனா நினைக்கிறாங்க. அழுக்கு ஜீன்ஸ்தான் எப்பவும் போடுவாங்க. சில பேரு கைல ஒரு ரோஸ்(ரோஜா) வச்சுக்கறாங்க. ஆலிவ் ஆயில், க்ரீம்லாம் யூஸ் பண்ற கய்ஸ் இருக்காங்க. பியூட்டி பார்லர் போறாங்க! கண்ணாடி போடணும்னு அவசியம் இல்லைன்னாக் கூட கண்ணாடி போட்டுக்கறாங்க. அதுதான் ஃபேஷன்!"

"கேர்ள்ஸ் அடிக்கடி ஹேர்ஸ்டைல மாத்திக்கறாங்க. நகத்துல இரண்டு கலர்ல நெயில் பாலீஷ் போட்டுக்கறது ஒரு ஃபாஷன். எதாருந்தாலும் ஆல் மைட்டி ஷாப்ல போய் ஒரு கிரீட்டிங் கார்டு வாங்கி ப்ரெசன்ட் பண்றது ஒரு ஃபாஷன். எல்லாத்துக்கும் மேல ஒரே ஒரு நல்ல ஃபாஷன் என்னன்னா கிளாஸுக்குப் போகாமல் இப்படி மரத்தடில உக்காந்து கதையளக்கறது" என்றார் அனில் செல்வா.

ஹாஸ்டல் பக்கம் ஒரு விசிட் அடித்தோம். குவியல் குவியலாய் அழுக்குத் துணிகள், புத்தகம், குப்பை என இரைந்து கிடக்கின்றன அறைகள். சுத்தமான அறைகள் கூட அங்கங்கே கண்ணில் பட்டன. சுவரில் 'ப்ளோ அப்' இல்லாத அறைகளே இல்லை.

அவரவர் ரசனைக்கேற்ப ரஜினி, கமல், ஜாக்கி சான், சிம்ரன், ப்ருக் ஷீல்ட்ஸ், மடோனா போன்ற நடிக, நடிகையர் படங்கள். டெண்டுல்கர், கும்ப்ளே, டென்னிஸ் பெர்க்ஷாம்ப், மைக்கேல் ஓவன் என விளையாட்டு வீரர்களின் படங்கள். இவற்றுடன் நம் கண்ணில் மாட்டிய ஒரு படம்: ஆப்பிரிக்க கவிஞர் ஜிம்ஹாரிசன். ஓர் அறையில், ஒரு மண்டை ஓட்டை அழகாய்க் கட்டி தொங்கவிட்டிருந்தார் ஒரு மாணவர்!

'இருக்கட்டுமே' என்று சில விளம்பர போர்டுகளை அவ்வப்போது 'உஷார் பண்ணி' (அதாங்க, 'சுட்டுக்கிட்டு' வந்து) ஹாஸ்டல் வராந்தாவெங்கும் மாட்டி வைத்திருக்கிறார்கள்! பெப்சி, மிராண்டா போர்டுகள். TN-22, 0624 என்ற நம்பர் ப்ளேட் இவற்றோடு நம் கண்ணில் சிக்கியது 'போஸ்ட் ஆபீஸுக்கு வழி' என்கிற போர்டு!

— கே. பாலசுப்ரமணியன்

படங்கள்: **எம். சண்முகம்**

இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

ஸ்ரீ கந்தசுவாமி பர்மனெண்ட் பண்டு லிமிடெட்

SRI KANDASWAMY PERMANENT FUND LTD.
CHENNAI - 2.



சென்னை மாநகர சொத்துக்கள் மீதும் நகைகள் மீதும் கடன் வழங்கப் படும்!

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம்

Regd & H.O: 28, அக்ரஹாரம் தெரு, சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002, ☎: 8585918, 8548917, 8527573

B.O: 36, ஜீனிஸ் ரோடு, சைதாப்பேட்டை,
சென்னை - 15 ☎: 4359569

அண்ணா நகர் கிளை முகவரி:
B.O: 42. சிந்தூர்ஷாப்பிங் சென்டர், முதல் தளம்,
II அவென்யூ,
(ஐயப்பன் கோவில் அடுத்து)அண்ணாநகர்,
சென்னை – 600 040.
☎: 6263550, 6220649



சேர்மன்
Dr. P. பாலசுப்பிரமணியம்
சீனியர் டிரஸ்டி கந்தகோட்டம்,
சென்னை - 3.



உறுப்பினராகி பயன்பெறுவீர்! விடுமுறை: வெள்ளி

நம்பிக்கை • நாணயம் • பாதுகாப்பு

மரம் நடுவதன் பலன்

பலவிதமான மரங்களை நிழல் இல்லாத இடங்களில் உண்டாக்கி வளர்த்து, வழிப்போக்கர்களுக்கு நிழலுண்டாக்கியவன் தன் வம்சத்தில் இறந்தவர்களையும், இனி பிறப்பவர்களையும் பாவிகளாக இருந்தாலும் தூய்மைப்படுத்தப் பிதுரர்களுக்குப் ப்ரீதி உண்டாக்குபவனுவான். ஒருவன் இறந்த பிறகு அவனது புத்திரர் அவனைச் சாந்தியடையும்படி பலவித கிரியைகளைச் செய்வதுபோல் ஒருவன் வளர்த்த மரங்களும் அவனை சாந்தியடையச் செய்விக்கும். மரங்கள் மலர்களினுல் தேவகணங்களையும் பழங்களினுல் பிதுர்த் தேவர்களையும் நிழலினுல் அதிதிகளையும் பூஜிக்கின்றன. மலர், பழம் முதலியவற்றுடன் கூடி நின்று பூவுலகத்தில் இருப்பவர்களையும் திருப்தி செய்விக்கின்றன. கின்னரர், உரகர், இராக்ஷஸர், தேவர், கந்தருவர், ரிஷிகணங்கள் முதலிய யாவரும் விருக்ஷங்களை விரும்புகிருர்கள். இகத்திலும் பரத்திலும் இம்மரங்கள் தம்மை வளர்த்தவனுக்குப் புத்திரர்கள் என்று சொல்லப்படுகின்றன. நீர்த்துறைகளை உண்டாக்குபவர்களும், மரங்களை நட்டு வளர்ப்பவர்களும் யாகங்களைச் செய்த வேதியர்களும் சத்தியவான்களும் ஒரு காலத்திலும் ஸ்வர்க்க லோகத்தை விட்டு நீங்க மாட்டார்கள்.

(சிவ மஹா புராணம்)

இவர்கள் சூட் தைக்கும் இடம்!





"ரெடிமேட் ஆடைகளின் ஆதிக்கம் எத்தனை இருந்தாலும், அது எங்களைப் பாதிப்பதில்லை. எங்களிடம் பான்ட், ஷர்ட், சூட் தைத்துக் கொள்ள விரும்புகிறவர்கள், எங்களிடம்தான் வருவார்கள். வேறு எங்கேயும் போக மாட்டார்கள்!" என்று சற்றே பெருமையோடு சொல்லும் இளைஞர் உனீஸ் அகமது, புகழ்பெற்ற சையத் பாக்கர் அன்ட் கம்பெனியின் உரிமையாளர்.

அசாருதீன், சச்சின் டெண்டுல்கர் என்று ஸ்போர்ட்ஸ் உலகின் பிரபலங்கள், தங்கள் சூட்களைத் தைத்துக் கொள்ள சென்னையிலிருக்கும் சையது பாக்கர் அன்ட் கம்பெனிக்குத்தான் வருகிறார்கள்.

இந்தியாவில் உள்ள பிரபல தொழிலதிபர்கள், சினிமா நடிகர்கள், சில அரசியல்வாதிகள் கூட(!) இவர்களது கஸ்டமர்கள்தாம். ("தயவுசெய்து வற்புறுத்தாதீர்கள். யார் பெயரையும் குறிப்பிட விரும்பவில்லை!")



• உனீஸ் அகமது...



சையத் பாக்கர் அன்ட் கம்பெனியிலேயே துணியை வாங்கினால்தான், தைக்கும் வேலையையும் அவர்கள் ஏற்கிறார்கள். "நாங்கள் விற்பனை செய்யும் துணிகள் பிரபல மில்களின் தயாரிப்புக்கள். சாதாரண மில்களின் துணிகளை நாங்கள் வைத்துக் கொள்ளுவதில்லை!" என்கிறார் உனீஸ் அகமது.

"எந்த விஷயத்தில் நீங்கள் தனிப்பட்டவர்களாக இருக்கிறீர்கள்?"

"இங்கே ஸூட் தைத்துக் கொள்ள வருபவர்கள் யாரையுமே நாங்கள் 'வாடிக்கையாளர்' என்று முத்திரை குத்தி விடுவதில்லை. வரும் ஒவ்வொருவரும் ஒரு தனி நபர். அவரது தேவைகள் அலாதியானவை என்ற அணுகுமுறையை மேற்கொள்கிறோம் 45 வருடங்களாக இந்தத் துறையில் எங்களுக்கு அனுபவம். உலகத் தரத்துக்கு நிகரான எந்த டிசைன்களையும், எங்கள் மாடல்களிலிருந்து தேர்ந்து எடுத்து விட்டால், தைத்துக் கொடுக்கும் திறமை. சொன்னால் சொன்ன தேதிக்கு டெலிவரி. தைப்பதிலும் அளவு பொருத்திப் பார்ப்பதிலும் நாங்கள் காண்பிக்கிற அக்கறை; குறை சொல்ல முடியாத துல்லியம்... இதெல்லாம்தான் எங்களைத் தனிப்படுத்திக் காண்பிக்கின்றன!"

சையத் பாக்கர் நிறுவனம் அதிகம் விளம்பரம் செய்வதில்லை. காரணம், இவர்களிடம் தைத்துக் கொண்டவர்களே இவர்கள் புகழைப் பரப்பி விடுகிறார்கள். "இல்லை என்றால் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள தொழிலதிபர்கள் எங்களை நாடி வருவார்களா?" என்கிறார் உனீஸ் அகமத்.

1954-ல், உனீஸ் அகமதின் பாட்டனார் எம்.ஏ. பாசத் மவுண்ட் ரோடில் ஆர்ட்ஸ் காலேஜ் அருகே ஆரம்பித்தாராம் சையத் பாக்கர் நிறுவனத்தை. இப்போது கதீட்ரல் சாலையில் பெரிதாக இயங்கி வருகிறது.


"ஒரு சூட் தைக்க எவ்வளவு கட்டணம்...?"

"அது வேண்டாமே! மற்றவர்களை விட அதிகம்தான். ஆனால் எங்கள் வாடிக்கையாளர்கள் அதைப் பொருட்படுத்துவதில்லை!"

— சித்தார்த்
படம் : ஸ்ரீஹரி

பீஹார் கொலைகள்:

பீஹாரிலுள்ள 75 சதவிகித கிராமங்களுக்கு மேல் மின்சார வசதி கிடையாது. சாலை வசதியோ போக்குவரத்து வசதியோ கிடையாது. டெலிபோன் வசதியும் கிடையாது. கிராமங்களில் வசிக்கும் உயர்ஜாதி நிலச் சுவான்தார்கள் உள்பட அனைவருமே போன நூற்றாண்டு வாழ்க்கையைத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் தலித்துகளோடு உயர்ஜாதியினரும் சேர்ந்து அரசாங்கத்தையும் அரசியல்வாதிகளையும் எதிர்த்துத்தானே போராட வேண்டும்? அப்படியில்லாமல் இவர்களுக்குள் மாறி மாறிக் கொலை செய்து கொண்டு மடிவானேன்? இங்குதான் நமது அரசியல்வாதிகளின் நரித் தந்திரம் வேலை செய்கிறது!



1971-ம் ஆண்டில்தான் பீஹார் மாநிலத்தில் முதன் முதலாகக் கொத்தான கொலைகளுக்குப் பிள்ளையார் சுழி போடப்பட்டது. பூர்ணியா மாவட்டத்தி லுள்ள ரூபஸ்பூர் என்கிற கிராமத்தில் 14 மலை ஜாதியினர் கொல்லப்பட்டார்கள்.

எப்படி இது ஆரம்பமானது? இதற்கு பீஹாரின் பூகோளம் தெரிந்து கொள்வது நல்லது. மற்ற மாநிலங்களோடு பரப்பளவில்

துளிர்காயும்

ஒப்பிட்டால் ஒன்பதாவது இடத்தில் இருக் கும் பீஹார், ஜனத் தொகையில் இரண்டா வது இடத்தில் இருக்கிறது. மாநிலத்திலுள்ள மொத்த நிலப்பரப்பில் 10 சதவிகிதம் வனப் பகுதிகள் என்றாலும் மீதமுள்ள சுமார் 115 லட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பும் விளை நிலங்களே! இந்த விளை நிலங்களுக்குச் சொந்தக்காரர்களாக இருப்பவர்கள் பெரும் பாலும் பூமிகார் பிராமணர்களும் பிற உயர் ஜாதியினரும்தான். அதுவும் பீஹார் ஜனத் தொகையில் பதினொரு சதவிகிதமாக இருக்கிற பூமிகார்களுக்கு 24 சதவிகித நிலம் சொந்தமாக இருக்கிறது!

அரசியல் வாதிகளே!



• ரண்வீர் சேனையினர்... (படம் நன்றி : மம்மன் மாத்யூ)

இந்தியாவில் பெறப்படும் கனிம வளங்களில் 40 சதம் பீஹார் மாநிலத்தில் மட்டுமே பெறப்படுகிறது என்றாலும் இதன் மூலம் வேலை வாய்ப்புப் பெற்றவர்கள் சுமார் மூன்றரை லட்சம் பேர் மட்டும்தான். அதிலும் பிரமாநிலங்களைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள்.

இந்த நிலையில் விவசாயத்தை நம்பியே பீஹார் மக்கள் இருக்கிறார்கள். அதிலும் நிலங்களின் சொந்தக்காரர்கள் உயர் ஜாதியினராக இருப்பதால் பெரும்பான்மையினராக இருக்கும் தலித்துகளும், மலைஜாதியினரும் மற்றும் பிற்படுத்தப்பட்டவர்களும் உயர் ஜாதிக்காரர்களையே நம்பியிருக்க வேண்டிய சூழ்நிலை.

இங்கு ஜாதி வித்தியாசம் நிறைய்ய.

அந்தக் காலத்தில் பிராமணர்களே இங்கு இரண்டு பிரிவாகப் பிரிந்தார்கள். ஒரு பிரிவினர் பூமியையே தங்கள் ஹாரமாக — அதாவது பிரதானமாகக் கொண்டு பயிர்த் தொழில் செய்ய ஆரம்பித்தார்கள். அவர்களே பூமிகார். வேதங்கள், பூஜை புனஸ்காரங்களையே தங்கள் வாழ்க்கையாகக் கொண்டு இன்னொரு பிரிவினர் ஏற்பட்டார்கள். இந்த பிராமணர்களைப் 'பிச்சைக்கார பிராமணர்கள்' என்று பூமிகார் பிராமணர்கள் குறிப்பிடுவார்களாம்! இவர்களுக்குள்ளேயே இந்த நிலை என்றால் பிற ஜாதியினர் நிலை பற்றிக் கேட்கவே வேண்டாம்!

உயர் ஜாதியினருக்குப் பிற ஜாதியினர் தங்களுக்குச் சேவகம் செய்வதற்கென்றே பிறந்தவர்கள்; இவர்கள் எது செய்தாலும் அதைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்; எத்தனை குறைவாகக் கூலி கொடுத்தாலும் வாய் பேசாமல் வாங்கிக் கொண்டு போக வேண்டும் என்கிற ஆதிக்க மனப்பான்மை வேரூன்றி விட்டது.

இந்த நிலையில்தான் 1970-ல் மத்திய பீஹாரிலுள்ள போஜ்பூர் மாவட்டத்திலிருக்கும் எக்வாரி கிராமத்தில் நக்ஸலைட் இயக்கம் வேரூன்ற ஆரம்பித்தது. இவர்களின் தொடர்பால் தலித்துகள் உயர் ஜாதியினரை எதிர்த்துக் கேள்வி கேட்க ஆரம்பித்தார்கள். கூலியுயர்வு கேட்கத் தொடங்கினார்கள்!

அடங்கிக் கிடக்க வேண்டிய ஒரு ஜாதி, இப்படித் தலை நிமிர்ந்து கேள்வி கேட்பதை உயர் ஜாதியினர் எப்படிப் பொறுத்துக் கொள்வார்கள்? இவர்களுக்கு ஓர் எச்சரிக்கை செய்கிற விதமாகத்தான் — தென்னை மரத்தில் தேள் கடித்தால் பனை மரத்தில் நெறி கட்டுகிற மாதிரி — வடக்கு பீஹாரிலுள்ள பூர்ணியா மாவட்டத்தில் 14 மலை ஜாதியினர் கொல்லப்பட்டார்கள்.

இதன் காரணமாக நக்ஸலைட் இயக்கத்துக்கு அதிக ஆதரவு கிடைக்கலாயிற்று. அப்போதைய காங்கிரஸ் ஆட்சியில் உயர் ஜாதியினரின் ஆதிக்கமே அதிகமிருந்ததால், அரசு இயந்திரமான போலீஸைக் கொண்டே தலித்துகளுக்கு ஆதரவான நக்ஸலைட்டுகள் வேட்டையாடப்பட்டார்கள். 72-லிருந்து 75

வரை சுமார் 300 நக்ஸலைட்டுகள் போலீஸாரால் கொல்லப்பட்டார்கள். இவர்களுக்கு ஆதரவாக வங்கத்திலிருந்து வந்த 'புரட்சிப் படை'யினரும் போலீஸாரால் கொல்லப்பட்டார்கள். இவர்களெல்லாம் நமக்காகத்தானே சாகிறார்கள் என்கிற எண்ணம் தலித்துகளிடம் ஏற்பட ஆரம்பித்தது.

இந்தச் சூழ்நிலையில்தான் நக்ஸலைட் இயக்கத்திலிருந்து பிரிந்து வந்த சிலர் 75-ல் 'சி.பி.ஐ. (எம்.எல்) விடுதலை முன்னணி' என்கிற அரசியல் கட்சியை ஆரம்பித்துத் தேர்தலில் போட்டியிட ஆரம்பித்தனர். மீதியிருந்தவர்கள் போலீஸையும் உயர் ஜாதியினரையும் எதிர்ப்பதற்கான பயிற்சிகளை, ஆந்திர நக்ஸலைட்டுகளான மக்கள் போர்ப் படை (PWG) யிடம் பெற ஆரம்பித்தார்கள்.



''எவ்வளவு தைரியம் இருந்தா இவ்வளவு பப்ளிக்கா ஆடிட்டரை அடிச்சிருப்பீங்க. சட்டம் தன் கடமையைச் செய்யும் கறதை மறந்துட்டீங்களா?''

''யுவர் ஆனர்! ஆடிட்டரும் இதையே சொல்லித்தான் முதல்ல பயமுறுத்துனாரு!''

— சென்னிமலை சி.பி. செந்தில்குமார்

உயர் ஜாதியினர் மட்டும் சும்மா இருப்பார்களா? பூமிகார் ஜாதியினர் தங்களுக்காக பிரம்ம ரிஷி சேனா, ராஜபுத்திரர்கள் கங்கா சேனா என்று ஒவ்வொரு உயர் ஜாதியினரும் தங்கள் பாதுகாப்புக்கென்று தனித்தனி சேனைகளை அமைத்துக் கொள்ள, பிற்படுத்தப்பட்ட யாதவர்கள் தங்களுக்காக லோரிக் சேனாவையும் தலித்துகள் தலித் சேனாவையும் ஏற்படுத்திக் கொண்டார்கள். இந்தச் சேனைகளின் மோதலில் பெரும்பாலும் தலித்துகளே கொல்லப்பட்டார்கள் என்றாலும் எப்போதாவது பிற்படுத்தப்பட்டவர்களும் உயர் ஜாதியினரும் கொல்லப்படவே செய்தார்கள்.

உயர் ஜாதியினருக்கு வசதியிருப்பதால் லைசென்ஸ் பெற்றும் பெறாமலும் ஆயுதங்களை வாங்கி வைத்துக் கொள்ளும் சூழ்நிலையில், நக்ஸலைட்டுகள் என்ன செய்வார்கள்? போலீஸாரிடம் கொள்ளையடிக்க ஆரம்பித்தார்கள். நவீனப் பயிற்சிக்காக ஆந்திராவிலுள்ள மக்கள் போர்ப்படை (PWG) யை மீண்டும் நாட, அவர்கள் விடுதலைப் புலிகளை நாட, அவர்கள் இஸ்ரேலிய கூலிப்படையிடம் தாங்கள் பெற்ற பயிற்சியை இவர்களுக்குத் தர... ஆக, பயிற்சி விஷயத்தில் இஸ்ரேலிய கூலிப்படையிலிருந்து உல்ஃபா வரை அனைவரும் ஒருங்கிணைந்திருக்கிறார்கள். நவீன ஆயுதங்களையும் சுலபமாகப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இதையுணர்ந்ததால்தான் நிலவுடைமையாளர்களான உயர் ஜாதியினர் அனைவரும் தங்களின் தனித்தனியான ஜாதிப் படைகளையெல்லாம் ஒருங்கிணைத்து சமீப ஆண்டுகளாக ரண்வீர் சேனாவை அமைத்திருக்கிறார்கள்! இந்த ரண்வீர் சேனாவுக்கான உணவையும் உறைவிடத்தையும் அந்தந்த கிராம உயர் ஜாதியினர் - நிலவுடைமையாளர்கள் தந்தே ஆக வேண்டும். இல்லையெனில் ரண்வீர் சேனாவின் ராணுவ கோர்ட்டில் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும்; தண்டனை வழங்கப்படும்!

உயர் ஜாதியினர் இப்படி ஒருங்கிணைந்து செயல்படுகிற சூழ்நிலையில், நக்ஸலைட்டுகள் இப்போது 29 குழுக்களாகப் பிரிந்து செயல்பட ஆரம்பித்து விட்டார்கள். இந்தக் குழுக்களில் சித்தாந்த ரீதியாக, வர்க்கப் போராட்டத்துக்காகப் போராடும் குழுக்கள் மிகச் சிலவே. பிறகுழுக்களெல்லாம், கொள்ளையடிப்பதையும் கொலை செய்வதையும், ஆங்காங்கே 'தண்டல்' வசூலிப்பதையுமே தொழிலாகக் கொண்டு விட்டன. இப்படிப்பட்ட ஒரு குழுதான் எம்.சி.சி. (மாவோயிஸ்ட் கம்யூனிஸ்ட் சென்டர்) என்கிற அமைப்பு. இது யாருக்கு வேண்டுமானாலும் கூலிப்படையாகச் செயல்படத் தயாராய் இருக்கிறது. இந்தக் குழுக்களுக்குள்ளேயும் மோதல் ஏற்பட்டு ஒருவரையொருவர் கொலை செய்து கொள்கிறார்கள். இதைத்தான் அரசியல்வாதிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்!

லாலுவின் அரசியல் பிரவேசம் ரொம்பவும் கண்ணியமானது. ஜெயப்பிரகாஷ்

நாராயணின் நிலச் சீர்திருத்த இயக்கத்தில் மாணவராகக் குதித்தவர் லாலு. அதனால் ஏழைகளுக்கும் தலித்துகளுக்கும் உண்மையான பாதுகாவலர் என்கிற மாதிரியான தோற்றம் வந்து விட்டது அவருக்கு.

அதனால், பிற்படுத்தப்பட்டோரும் தலித்துகளும் உயர் ஜாதியினரிடமிருந்து லாலுவால்தான் தங்களைக் காப்பாற்ற முடியும் என்று மனப்பூர்வமாக நம்புகிறார்கள்.

இந்த நம்பிக்கையை வீணடிக்க விரும்பாத லாலு, அவர்களுக்குப் பாதுகாப்புத் தருகிற நக்ஸல் அமைப்புகளுக்கு மறைமுகமாக உதவுகிறார். தேர்தலில் வாக்குச் சாவடியைக் கைப்பற்றுவதற்காக எம்.சி.சி. போன்ற கூலிப் படைகளுடனும் சுமுகமான உறவு வைத்திருக்கிறார்.

இதைப் பார்த்துக் கொண்டு பி.ஜே.பி. சும்மா இருக்குமா? அவர்கள் ரண்வீர் சேனாவுக்கு மறைமுக ஆதரவு தர ஆரம்பித்தார்கள். பார்த்தார் லாலு. ரண்வீர் சேனாவின் தலைவர் பரமேஸ்வர் சிங் கைது செய்யப்பட்ட இரண்டு சமயமும் போலீஸாருக்கு வாய்மொழி உத்தரவிட்டு அவரை விடுதலை செய்யச்சொல்லி விட்டார்! பரமேஸ்வர் சிங்கின் சம்பந்தி முறையான ஒருவரையும் தமது (ராப்ரி) அமைச்சரவையில் அமைச்சராக்கி விட்டார்! இதன் மூலம் உயர் ஜாதியினர் சிலரின் மறைமுக ஆதரவையும் பெற்று விட்டார் லாலு. இந்த விஷயம் தலித்துகளுக்கும் பிற்பட்டவர்களுக்கும் தெரிந்து விடக் கூடாது என்பதற்காகத்தான் செனாரியில் பூமிகார்கள் கொல்லப்பட்ட போது, லாலுவோ, ராப்ரியோ அங்கு செல்லவில்லை.

கட்சியின் மாநிலத் தலைவராக யாதவர் ஒருவரை நியமித்து, பிற்படுத்தப்பட்டோரின் வாக்குகளைப் பெற நினைக்கும் பி.ஜே.பி., மறுபுறம் ரண்வீர் சேனாவுக்குத் தரும் ஆதரவு மூலம் உயர் ஜாதியினரின் ஆதரவையும் பெற முயன்று கொண்டிருக்கிறது. லாலு – பி.ஜே.பிக்கு இடையிலான அரசியல் போட்டிகளுக்கிடையில் காங்கிரஸ் பழைய பெருங்காய டப்பாவாகி விட்டது. ஜனதா தளத்தில் ராம்விலாஸ் பாஸ்வானால், தம் தொகுதி தலித்துகளைத் தவிர, மாநிலத்தின் பிற பகுதிகளில் செல்வாக்குப் பெற முடியாத சூழ்நிலை.

எனவே, லாலுவும் பி.ஜே.பியும்தான் தங்களது அரசியல் ஆதாயங்களுக்காக வன்முறையாளர்கள் மூலம் பீஹாரை ரத்தக் களறியாக்கிக் கொண்டிருக்கிறார்கள். லாலு மாதிரியான வெகுஜனத் தலைவர் ஒருவர் பீஹாரில் கிடையாது என்று பிறகட்சியினரே ஒப்புக் கொள்கிற ஒரு சூழ்நிலையில், லாலு நினைத்தால் பீஹாரை சொர்க்க பூமியாக்கிக் காட்ட முடியும். ஆனால் அவரோ, ஊழல் சேற்றில் முகம் கழுவி, அரசியல் சாக்கடையில் குளிப்பதில் ஈடுபட்டிருக்கிறாரே என்கிற கவலை, விஷயமறிந்த பீஹாரிகளுக்கு இருக்கிறது.

இதற்கிடையில், மனத்தில் வேரூன்றி விட்ட ஆதிக்க மனப்பான்மையை, ஜாதியுணர்வை – தூக்கியெறிய முடியாத உயர் ஜாதியினரும் அரசியல்வாதிகளே தங்கள் ரட்சகர்கள் என்கிற பொய்யான நம்பிக்கையோடு பிறஜாதியினரும் தங்களையறியாமலேயே அரசியல்வாதிகளின் நரித் தந்திரங்களுக்குப் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள்!

பீஹாரின் இன்றைய நிலைக்கு ஒரே யொரு உதாரணம்:

"பாட்னா வந்ததற்கு அடையாளமாக ஏதாவதொரு பொருளை வாங்கிச் செல்ல ஆசைப்படுகிறோம். இங்கே என்ன மலிவாகக் கிடைக்கும்?" என்று அங்கே அறிமுகமான நண்பர் ஒருவரிடம் கேட்டோம்.

"ஆயுதங்கள்தான் மலிவாகக் கிடைக்கும்!"

"விளையாடாதீர்கள். நாங்கள் சீரியஸாகக் கேட்கிறோம்!"

"நானும் சீரியஸாகத்தான் சொல்கிறேன். இருபதாயிரம் ரூபாய்க்கே ஏ.கே. 47 கிடைக்கும். வாங்கிக் கொண்டு போகிறீர்களா?"

பாட்னாவிலிருந்து : **இளங்கோவன், மு. சிவலிங்கம்**



"பெண்ணைப் பார்க்க வந்த பையன் சரியான ஞாபகமறதிப் பேர்வழியா இருப்பான் போலிருக்கே?"

"ஏன் அப்படிச் சொல்றீங்க?"

"ஊருக்குக் கிளம்பும்போது பெண்ணோட முகமே மறந்து போச்சு, இன்னொரு தடவை பார்த்துக்கவான்னு கேட்டானே!"

– சீர்காழி வி. ரேவதி



ஐந்தாம் அத்தியாயம்

ராக்கம்மாள்

பழுவேட்டரையரும் பார்த்திபேந்திரனும் சேர்ந்து கடற்கரையோரமாக உலாவச் சென்ற பிறகு நந்தினி சிறிது நேரம் தனியாக இருந்தாள். கடல் அலைகளைப் பார்த்த வண்ணம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.

"ராணி அம்மா!" என்ற குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

கலங்கரை விளக்கின் காவலர் தியாக விடங்கரின் மருமகள் அங்கே நின்றாள்.

"நீ யார்?" என்று நந்தினி கேட்டாள்.

"என் பெயர் ராக்கம்மாள்!"

"எங்கே வந்தாய்?"

இதற்கு மறுமொழி சொல்லாமல் ராக்கம்மாள் நந்தினியின் முகத்தை உற்றுப் பார்த்துக்கொண்டு நின்றாள்.

"என்னடி பார்க்கிறாய்? என் முகத்தில் அப்படி என்ன இருக்கிறது?"

ராக்கம்மாள் திடுக்கிட்டு, "மன்னிக்க வேண்டும், அம்மா! தங்களைப் பார்த்ததும் இன்னொரு முகம் எனக்கு ஞாபகம் வந்தது. ஆனால் அப்படி ஒரு நாளும் இருக்க முடியாது" என்றாள்.

"என்னடி உளறுகிறாய்! எது எப்படியிருக்க முடியாது?"

"அந்த ஊமை வெறியளுக்கும் தங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இருக்க முடியாது."

"அவள் யார் ஊமை?"

"ஈழத்தில் ஒருத்தி இருக்கிறாள்; என் மாமனாருக்குப் பெரியப்பா மகள். சிலசமயம் இங்கேயும் வருவாள்."

"அவளுக்கும் எனக்கும் என்ன?"

"அதுதான் சொன்னேனே? உறவு ஒன்றும் இருக்க முடியாது என்று."

"பின் ஏன் என்னைப் பார்த்ததும் அவளுடைய ஞாபகம் வந்தது?"

"என் கண்களின் கோளாறுதான். தங்கள் முகம்..."

"அவள் முகம் மாதிரி இருந்ததா?"

"முதலில் அப்படித் தோன்றியது."

"ராக்கம்மா! இப்போது அந்த ஊமை இங்கே இருக்கிறாளா?"

"இல்லை, அம்மா! அபூர்வமாக எப்போதாவது வருவாள்."

"மறுபடியும் வரும்போது என்னிடம் அழைத்து வருகிறாயா?"



"எதற்காக ராணி அம்மா!"

"என் முகம் மாதிரி முகமுடையவனைப் பார்க்க விரும்புகிறேன்."

"அதுதான் என் கண்களின் பிரமை என்று சொன்னேனே?"

"எதனால் அப்படி நிச்சயமாய்ச் சொல்கிறாய்?"

"ராணி! தாங்கள் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர்தானே?"

"ஆமாம். நீ?"

"நானும் பாண்டிய நாட்டாள். சற்று முன் நான் சொன்ன ஊமை சோழ நாட்டவள். ஆகையால்..."

"இருந்தாலும் பாதகமில்லை, உன்னைப் போல் இன்னும் சிலரும் அவளைப் பற்றி எனக்குச் சொல்லியிருக்கிறார்கள். அவளை என்னிடம் அழைத்து வருகிறாயா? அழைத்து வந்தால் உனக்கு வேண்டிய பொருள் தருவேன்."

"ராணி! அவளை அழைத்து வருவது சுழற்காற்றை அழைத்து வருவது போலத்தான். இருந்த இடத்தில் அவள் இருக்க மாட்டாள். பிறர் சொல்லுவதையும் கேட்க மாட்டாள். வெறி பிடித்தவள் என்று சொன்னேனே?"

"சரி! நீ எதற்காக இப்போது வந்தாய்? அதையாவது சொல்!"

"ராணி! சில நாளைக்கு முன்பு இரண்டு பேர் இங்கே வந்தார்கள். தங்கள் பெயரைச் சொன்னார்கள்."

"என் பெயரை ஏன் சொன்னார்கள்?"

"தங்கள் காரியத்துக்காக அவசரமாக இலங்கைக்குப் போக வேண்டும் என்றார்கள். என் புருஷனை அவர்களுக்குப் படகோட்ட அனுப்பி வைத்தேன்."

"திரும்பி வந்துவிட்டானா?"

"வரவில்லை; அதுதான் கவலையாயிருக்கிறது. அவருக்கு ஏதாவது நேர்ந்திருந்தால்..."

"ஒன்றும் நேராது. கவலைப்படாதே! அப்படி ஏதாவது நேரிட்டிருந்தால் உன்னை நான் பார்த்துக்கொள்கிறேன். படகிலே போன மனிதர்களைப் பற்றி ஏதாவது தெரியுமா?"

"அவர்கள் திரும்பி வந்துவிட்டார்கள். சற்று முன் ஆந்தையின் குரல் கேட்டதே? அதைக் கவனிக்கவில்லையா?"

"கவனித்தேன். அதனால் என்ன?"

"அது மந்திரவாதியின் குரல் என்று தெரிந்து கொள்ளவில்லையா?"

"உனக்கு எப்படி அது தெரியும்? நீ மந்திரவாதியைச் சேர்ந்தவளா?"

"ஆமாம், ராணி!" என்று சொல்லிவிட்டு, ராக்கம்மாள் கையினால் கோலம் போட்டுக் காட்டினாள்.

நந்தினி அவளை வியப்புடன் உற்றுப் பார்த்துவிட்டு, "இப்போது அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? உனக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"மந்திரவாதி தங்களைப் பார்ப்பதற்காகக் காத்திருக்கிறார்."

"என்னை வந்து பார்ப்பதுதானே? எதற்காகக் காத்திருக்க வேண்டும்?"

"இப்போது இங்கு வந்த பல்லவனை மந்திரவாதி சந்திக்க விரும்பவில்லை. ஈழத்தில் அவனைப் பார்த்தாராம். தங்கள் கணவரைப் பார்க்கவும் விரும்பவில்லை."

"மந்திரவாதியை நீ பார்த்தாயா?"

"சற்று முன் ஆந்தைக் குரல் கேட்டுப் போயிருந்தேன். தங்களை அழைத்து வரும்படி சொன்னார். குழகர் கோயிலுக்கருகில் ஓடைக் கரையில் ஒளிந்திருப்பதாகச் சொன்னார். வருகிறீர்களா, ராணி?"

"அது எப்படி நான் போக முடியும்?"

"குழகர் கோயிலுக்குப் போவதாகச் சொல்லிவிட்டுப் போகலாம்."

"நல்ல யோசனைதான்; வேறு துணை வேண்டாமா?"

"அவசியமில்லை; வேண்டுமானால் சேந்தன் அமுதனைத் துணைக்கு அழைத்துப் போகலாம்."

"அவன் யார்?"

"தஞ்சாவூர் ஊமையின் மகன்!"

"சிவ சிவா! எத்தனை ஊமைகள்?"

''இந்தக் குடும்பம் சாபக்கேடு அடைந்த குடும்பம். சிலர் பிறவி ஊமைகள். சிலர் வாயிருந்தும் ஊமைகள். என் புருஷன் அப்படி. அருமையாகத்தான் பேசுவார். நானும் பேச வேண்டாம் என்று திட்டம் செய்திருக்கிறேன்.''

''இலங்கை ஊமைக்கு மக்கள் உண்டா? உனக்குத் தெரியுமா?''

''ஒரு தடவை இரட்டைக் குழந்தைகள் பெற்றாளாம். குழந்தைகள் என்ன ஆயின என்று ஒருவருக்கும் தெரியவில்லை. நானும் அந்த இரகசியத்தைத் தெரிந்து கொள்ள எத்தனையோ நாட்களாக முயன்று வருகிறேன். இதுவரை பலிக்கவில்லை.''

"தஞ்சாவூர்க்காரன் இங்கே எதற்காக வந்திருக்கிறான்?''

''அவனுடைய மாமன் மகள் பூங்குழலியைத் தேடிக்கொண்டு வந்தான். அவள் இல்லை. அதனால் காத்திருக்கிறான்.''

"அவள் எங்கே போய் விட்டாள்?"

"நானே சொல்ல வேண்டும் என்றிருந்தேன். மந்திரவாதியை என் புருஷன் படகில் ஏற்றிக்கொண்டு போனதற்கு மறுநாள் இன்னும் இரண்டு பேர் வந்தார்கள். அவர்களைப் பிடிப்பதற்காகப் பழுவூர் ஆட்களும் தொடர்ந்து வந்தார்கள். அவர்களில் ஒருவனை என் நாத்தி படகில் ஏற்றிக்கொண்டு இரவுக்கிரவே இலங்கைக்குப் போனாள்.''

''அவளுக்குப் படகு விடத் தெரியுமா?''

"படகு விடுவதே அவளுக்கு வேலை. படகு விடாத நேரங்களில் கோடிக்கரைக் காடுகளில் சுற்றி அலைவாள். இந்தக் காட்டில் அவளுக்குத் தெரியாத மூலை முடுக்கு ஒன்றுமே கிடையாது."

''அவள் இன்னும் திரும்பி வரவில்லையென்றால், அதைக்கொண்டு நீ என்ன ஊகிக்கிறாய்?''

"யாரோ கடலில் முழுகிப் போய் விட்டதாக இவர்கள் அலறி அடித்துக் கொள்கிறார்களே, அது நிச்சயமல்லவென்று சொல்கிறேன். பூங்குழலி வந்த பிறகுதான் அது நிச்சயமாகும்."

''அந்தப் பெண்ணும் முழுகியிருக்கலாம் அல்லவா?''

"அவள் முழுக மாட்டாள். கடல் அவளுக்குத் தொட்டில். மேலும்..."

"மேலும் என்ன?''

"சற்று முன்னால் கலங்கரை விளக்கின் உச்சியில் ஏறிப் பார்த்துக் கொண்டிருந்தேன். வெகு தூரத்தில் ஒரு படகு வருவதுபோல் தோன்றியது...''

"அப்புறம்?"

''அப்புறம் அது கரைக்கு வரவில்லை.''

"என்ன ஆகியிருக்கும்?"

"இங்கே கடற்கரை ஓரத்தில் கூட்டமாயிருப்பதைப் பார்த்துவிட்டு வேறு சதுப்பு நிலக் கால்வாயில் படகை விட்டுக் கொண்டு போயிருக்கக் கூடும்."

"அதுகூடச் சாத்தியமா?"

"பூங்குழலிக்குச் சாத்தியமில்லாதது ஒன்றுமில்லை. தஞ்சாவூர்க்காரனும் என்னுடன் உச்சிக்கு வந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கும் அப்படியே தோன்றியதாம்."

"சரி; எப்படியாவது இருக்கட்டும்; நாம் இப்பொழுது குழகர் கோயிலுக்குப் போகலாம், வா!"

"துணைக்குச் சேந்தன் அமுதனைக் கூப்பிடட்டுமா?"

"வேண்டாம்! அவன் அவனுடைய மாமன் மகளைத் தேடட்டும். நாம் அதற்குக் குறுக்கே நிற்க வேண்டாம்."

இருவரும் குழகர் கோவிலை நோக்கிப் புறப்பட்டார்கள். பூங்குழலியைப் போலவே ராக்கம்மாளுக்கும் கோடிக்கரையின் புதை சேற்றுக் குழிகளைப் பற்றி நன்கு தெரிந்திருந்தது. நந்தினிக்கு ஜாக்கிரதையாக வழிகாட்டி அழைத்துக்கொண்டு போனாள்.

இருவரும் குழகர் ஆலயத்தை அடைந்தார்கள். கோவில் பட்டர் அவர்களைக் கண்டு வியப்படைந்தார்.

"ராணி! இது என்ன இந்த நேரத்தில் தனியாக வந்தீர்கள்? பரிவாரங்கள் இல்லாமல்? முன்னாலேயே எனக்குச் சொல்லியனுப்பியிருக்கக் கூடாதா? தங்களை வரவேற்க ஆயத்தமாக இருந்திருப்பேனே?" என்றார்.

"அதற்கெல்லாம் இதுதானா சமயம், பட்டரே! சோழ நாட்டுக்குப் பெரும் விபத்து நேர்ந்திருக்கிறதே! சோழ நாட்டு மக்களின் கண்ணின் மணியான இளவரசரைக் கடல் கொண்டு விட்டதாகச் சொல்கிறார்களே? இளவரசரைக் காப்பாற்றி அருளும்படி குழகரிடம் முறையிட்டுக் கொள்வதற்காக வந்தேன்" என்றாள் நந்தினி.

"அப்படியெல்லாம் ஒன்றும் நேராது, தாயே! தாங்கள் கவலைப்பட வேண்டாம். நம் பொன்னியின் செல்வருக்குச் சமுத்திர ராஜனால் ஆபத்து ஒன்றும் நேராது!" என்றார் குருக்கள்.

"எதனால் அவ்வளவு உறுதியாகச் சொல்லுகிறீர்கள், பட்டரே?"

"இளவரசர் பிறந்த நட்சத்



திரமும் லக்கினமும் அப்படி, அம்மா! உலகமாளப் பிறந்தவரைக் கடல் கொண்டு விடுமா? தாங்கள் வருத்தப் படாதீர்கள்! குழகரைப் பிரார்த்தித்துக் கொள்ளுங்கள். அவசியம் இளவரசரைக் காப்பாற்றுவார்!'' என்றார் பட்டர்.

இவ்வாறு கூறிவிட்டு சுவாமிக்குத் தீபாராதனை செய்து திருநீறும் கொடுத்தார். ''அம்மணி! தாங்கள் இவ்வளவு மேலான நிலைமையில் இருப்பது குறித்து மிக்க சந்தோஷம்!'' என்றார்.

''என்னை உங்களுக்கு முன்னமே தெரியுமா, பட்டரே?''

''தெரியும், ராணி! பழையாறையில் பார்த்திருக்கிறேன். வைகைக் கரைக் கோயிலிலும் பார்த்திருக்கிறேன். தங்கள் தமையன், திருமலை, - இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறான்?''

''ஆழ்வார்களின் பிரபந்தங்களைப் பாடிக் கொண்டு ஊர் ஊராய்த் திரிந்து கொண்டிருக்கிறான். அவனை நான் பார்த்து வெகு காலமாயிற்று.

''அவனுக்குக்கூட அதைப் பற்றிக் குறைதான், அம்மா! தாங்கள் பழுவூர் ராணியான பிறகு அவனைப் பார்க்க வேயில்லையென்று வருத்தப்பட்டான்.''

''அதற்கென்ன செய்யலாம், ஐயா! நான் புகுந்த இடத்தில் எல்லாரும் பரம சைவர்கள். அவனோ வீரவைஷ்ணவன். 'ஆழ்வார்க்கடியான்' என்று பட்டப் பெயர் வைத்துக்கொண்டு சைவர்களோடு சண்டை போட்டுக்கொண்டு திரிகிறான். அவனை எப்படி நான் சேர்ப்பது? புகுந்த வீட்டாரின் மனங்கோணாமல் நான் நடந்து கொள்ள வேண்டாமா?''

''உண்மை, தாயே! உண்மை! தங்கள் பதியின் மனங்கோணாமல் நடப்பது தான் முக்கியமானது. ஆழ்வார்க்கடியான் எப்படியாவது போகட்டும்!''

பட்டரிடம் விடைபெற்றுக் கொண்டு இருவரும் கிளம்பினார்கள்.

''தனியாகப் போகிறீர்களே? சற்றுப் பொறுத்தால் நானும் வந்து விடுவேன்.''

''வேண்டாம் ஐயா! எங்களுக்காக அவசரப்பட வேண்டாம். இந்தப் பெண்ணுக்கு இந்தப் பக்கமெல்லாம் நன்றாய்த் தெரிகிறது. அதோடு இன்றைக்குத்தான் கோடிக்கரை முழுதும் அமளி துமளி படுகிறதே! பயம் ஒன்றுமில்லை. நாங்கள் போகிறோம்'' என்றாள் நந்தினி.

இரு பெண்களும் ஆலயத்துக்கு வெளியில் வந்தார்கள். பட்டர் கண் பார்வையிலிருந்து மறைந்ததும் ராக்கம்மாள் நந்தினியின் கையைப் பிடித்து ஆலயத்துக்குப் பின்புறமாக அழைத்துச் சென்றாள். சிறிது நேரத்துக்கெல்லாம் தாழைப் புதர்கள் செறிந்த ஓடைக் கரையை அடைந்தார்கள். நட்சத்திர ஒளியின் உதவியைக் கொண்டு ஓடைக் கரையோடு நடந்தார்கள்.

ஆறாம் அத்தியாயம்

பூங்குழலியின் திகில்!

தாழைப் புதரின் மறைவில் பூங்குழலி மூச்சைப் பிடித்துக் கொண்டு நின்றாள். மந்திரவாதியும் நந்தினியும் மெல்லிய குரலில் பேசிய போதிலும் அவர்களுடைய பேச்சு பெரும்பாலும் அவள் காதில் விழுந்தது.

இளவரசரைக் கடல் கொண்டது என்பதில் தனக்கு நம்பிக்கையில்லை என்று நந்தினி கூறியதற்கு, மந்திரவாதி ''ராணி! என் பேச்சில் உங்களுக்கு எப்போதுமே நம்பிக்கையிருப்பதில்லை. எதனால் இப்போது அவநம்பிக்கைப் படுகிறீர்கள்?'' என்று கேட்டான்.

''இளவரசரின் ஜாதக பலத்தைப் பற்றி நீ கேட்டதில்லையா? சற்று

முன்னால்கூட குழகர் கோயில் பட்டர் அதைப் பற்றிச் சொன்னார்."

"பைத்தியக்காரத்தனம். கிரஹங்கள், நட்சத்திரங்களின் சக்தியைக் காட்டிலும் என்னுடைய மந்திரசக்தி வலியது. அமைதி குடி கொண்டிருந்த கடலில் நான் மந்திரம் ஜபித்துச் சுழற் காற்றை வருவித்தேன் என்பது தங்களுக்குத் தெரியுமா? முதலில் அந்தக் காஞ்சி நகர் ஒற்றனும் அதை நம்பவில்லை. பிற்பாடு, கடலில் முழுகி உயிரை விடும் போது, கட்டாயம் நம்பியிருப்பான்!"

"அவன், கடலில் முழுகி இறந்ததை நீ பார்த்தாயா?"

"நான் பார்க்காவிட்டால் என்ன? அவன் இருந்த கப்பல் தீப்பிடித்து எரிந்ததைப் பார்த்தேன்."

"தீப்பிடித்த கப்பலிலிருந்து அவனைத் தப்புவிக்க இளவரசர் கடலில் குதித்துப் போனாராமே?"

"போனவர் திரும்பி வந்தாரா?"

"திரும்பிப் பல்லவனுடைய கப்பலுக்கு வரவில்லை..."

"பின்னே என்ன? இரண்டு பகைவர்களும் ஒரே நாளில் பலியாவதற்காகவே வந்தியத்தேவனை உயிரோடு விட்டு விட்டு வந்தேன்."

"நீ என்னதான் சொன்னாலும் என் மனம் நம்பவில்லை. அவர்கள் இருவரும் இன்னும் உயிரோடிருப்பதாக என் மனத்திற்குள் ஏதோ சொல்லுகிறது. பூங்குழலியை உனக்குத் தெரியுமா?"

"நன்றாய்த் தெரியும். இலங்கையில் அவள் எங்களுக்குத் தொல்லையாயிருந்தாள். அவளும் சுழற்காற்றில் போயிருக்கலாம்."

"அதுதான் இல்லை. சிறிது நேரத்துக்கு முன்பு ஒரு படகு தூரத்தில் வந்தது. கலங்கரை விளக்கின் உச்சியிலிருந்து ராக்கம்மாள் பார்த்தாளாம். திடீரென்று அது மறைந்து விட்டதாம். படகில் இரண்டு மூன்று பேர் இருந்ததாகத் தோன்றியதாம்."

"அப்படியானால் தாங்கள் கிழவரை அழைத்துக்கொண்டு உடனே நடையைக் கட்டுங்கள். நான் இருந்து பார்த்துக் கொண்டு வருகிறேன்."

"நாங்கள் இருந்தால் என்ன?"

"கிழவர் இருந்தால் இளவரசருக்கு இராஜ மரியாதைகள் செய்து அழைத்துக் கொண்டு போகப் பார்ப்பார். காரியமெல்லாம் கெட்டுப் போகும்."

"மந்திரவாதி! நானும்தான் கேட்கிறேன். அவர்கள் இறக்க வேண்டிய அவசியம் என்ன? மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டிவிட எல்லாரும் சம்மதித்து விட்டால்..."

"அம்மணி! பெண் புத்தியைக் காட்டி விட வேண்டாம். காஞ்சி ஒற்றனுக்கு நம் இரகசியம் எல்லாம் தெரியும். அவன் இளவரசரிடமும் சொல்லியிருப்பான். பொழுது விடிவதற்குள் நீங்கள் புறப்பட்டுச் செல்லுங்கள். ராக்கம்மா! பூங்குழலி அவர்களை அழைத்து வந்தால் காட்டில் எங்கே வைத்திருப்பாள்?"

"மறைந்த மண்டபம் ஒன்று இருக்கிறது. அதுதான் அவளுடைய அந்தரங்க வாசஸ்தலம். காஞ்சி ஒற்றனை அதிலேதான் ஒரு பகல் முழுதும் மறைத்து வைத்திருந்தாள். பிறகு அதை நான் கண்டுபிடித்தேன்."

"நல்லது. அந்த மறைந்த மண்டபம் இருக்குமிடம் எனக்கும் தெரியும். அங்கே போய்க் காத்திருக்கிறேன். ராணி! சக்கரவர்த்தி எப்படியிருக்கிறார்? ஏதாவது செய்தி உண்டா?"

"எந்தச் சக்கரவர்த்தியைப் பற்றிக் கேட்கிறாய்?"

"நோயாளி சுந்தர சோழனைச் 'சக்கரவர்த்தி' என்று இந்த வாய் ஒரு நாளும் சொல்லாது. 'நமது சக்கரவர்த்தியைப் பற்றித்தான் கேட்கிறேன்."

"சௌக்கியமாயிருப்பதாகப் பத்து நாளைக்கு முன்பு செய்தி கிடைத்தது. ஆகா! எத்தனை நாள் ஆயிற்று பார்த்து?"

"சரி, சரி! சீக்கிரம் புறப்படுங்கள். அந்த முட்டாள் பல்லவன் என்ன

செய்யப் போகிறானாம்?"

"அவனையும் தஞ்சைக்கு அழைத்துப் போகிறோம்."

"அவனிடம் ஜாக்கிரதையாயிருங்கள்."


"அவனைப் பற்றிக் கவலையில்லை. நான் காலால் இட்டதை அவன் தலையால் செய்யக் காத்திருக்கிறான்!"

"இருந்தாலும் ஜாக்கிரதையாயிருப்பது நல்லது. காஞ்சி ஒற்றன் வந்தியத்தேவனிடம் தாங்கள் கொஞ்சம் ஏமாந்து போனீர்கள் அல்லவா?"

"அது உண்மைதான்; அதனாலேயே அவனை உயிரோடு மறுபடியும் பார்க்க விரும்புகிறேன்."

"அந்த ஆசையை அடியோடு விட்டு விடுங்கள், ராணி!"


இவ்வாறு நிலவரத்தைப் பேசிக் கொண்டே அவர்கள் அங்கிருந்து நகரத் தொடங்கினார்கள் என்று தெரிந்தது. பூங்குழலி தன்னை அவர்கள் பார்க்காத வண்ணம் இன்னும் நன்றாய்ப் புதரில் மறைந்துகொண்டாள். நல்லவேளையாக, அவள் இருந்த பக்கம் அவர்கள்



வரவில்லை. வேறு திசையாகச் சென்று விட்டார்கள்.

பூங்குழலி தற்செயலாக ஒட்டுக் கேட்ட விஷயங்கள் அவளுக்குப் பெருந் திகிலை உண்டு பண்ணிவிட்டன. பொன்னியின் செல்வரை எத்தனை வித





அபாயங்கள் சூழ்ந்திருக்கின்றன என்பதை எண்ணியபோது அவளுடைய கைகால்கள் நடுங்கின. கண்கள் இருண்டன. தொண்டை வறண்டது. உள்ளம் குழம்பியது. தான் விட்டு விட்டு வந்த படகை உடனே போய்ச் சேர வேண்டும் என்ற எண்ணம் மட்டும் வலியதாக முன் நின்றது. படகை விட்டு வந்த திசையை நோக்கி விரைந்து சென்றாள்.

இளவரசர் கொடிய விஷ சுரத்தினால் பீடிக்கப்பட்டிருந்தார். அவரைச் சிறைப்படுத்திப் போவதற்குப் பழுவேட்டரையர் காத்திருந்தார். அவரைக் கொன்று விடுவதற்குக் கொலையாளிகள் காத்திருந்தனர். அவர்களுக்குத் துணையாக இந்தப் பெண்ணுருக் கொண்ட மோகினிப் பிசாசு இருந்தது. பார்த்திபேந்திரனும் அவளுடைய மாய வலையில் வீழ்ந்துவிட்டான். இளவரசரைத் தான் அழைத்துச் சென்று பத்திரமாய் வைத்திருக்கலாம் என்று எண்ணிய மறைந்த மண்டபங்கூட இவர்களுக்குத் தெரிந்திருக்கிறது.

இவ்வளவு அபாயங்களிலிருந்தும் இளவரசரைப் பாதுகாக்கும் பொறுப்பு தன் தலையில் சுமந்திருப்பதாகப் பூங்குழலி உணர்ந்தாள். ஆகையினாலேயே

அவளுடைய மூளை குழம்பிற்று. இது காறும் அவளுடைய வாழ்நாளில் என்று மில்லாத ஓர் அனுபவமும் நேர்ந்தது. அதாவது காட்டில் வழி தவறி விட்டோமோ என்ற பீதி உண்டாயிற்று. சுற்றிச் சுற்றிப் புறப்பட்ட இடத்துக்கே வந்து கொண்டிருக்கிறோமோ என்ற எண்ணம் தோன்றியது. அப்படிச் சுற்றி வரும்போது இளவரசரின் எதிரிகள் யாரேனும் எதிர்ப்பட்டு விட்டால் என்ன செய்வது? அவர்களுக்கு என்ன சமாதானம் சொல்வது? எப்படி அவர்களிடமிருந்து தப்பித்துச் செல்வது...?

இல்லை, இல்லை! சரியான வழியிலேதான் வந்திருக்கிறோம். இதோ கால்வாய் தெரிகிறது. படகை விட்டு வந்த இடம் அதோ அந்த மூலையில் இருக்கிறது... பூங்குழலி அவ்விடத்தை நோக்கிப் பாய்ந்து ஓடினாள். அவளுடைய நெஞ்சு அடித்துக் கொள்ளாமல் நின்று விட்டது. ஏனெனில், அவள் விட்டிருந்த இடத்தில் படகைக் காணவில்லை! ஐயோ! படகு எங்கே போயிருக்கும்?

ஒருவேளை தான் இல்லாத சமயத்தில் பழுவேட்டரையரின் ஆட்கள் இங்கேயும் வந்திருப்பார்களோ? வந்து இளவரசரையும் வந்தியத்தேவனையும் சிறைப்பிடித்துக் கொண்டு போயிருப்பார்களோ? அப்படி நடந்திருந்தால் கூடப் பாதகமில்லை. அதைவிடப் பயங்கரமான சம்பவம் நிகழ்ந்திருக்குமோ? வந்தியத்தேவன் இளவரசரைத் தூக்கிக்கொண்டு மறைந்த மண்டபத்தைத் தேடிப் போயிருப்பானோ? அப்படியானால் அங்கே கொலைஞர்கள் காத்திருப்பார்களே? அடடா! என்ன தவறு செய்து விட்டோம்...?

அந்த மறைந்த மண்டபத்துக்கு உடனே போய்ப் பார்க்க வேண்டுமென்ற பரபரப்பு பூங்குழலியின் மனத்தில் குடிகொண்டது. காட்டு வழியில் ஓட்டம் பிடித்து ஓடினாள். மறுபடியும் அந்தப் பழைய சந்தேகம்; வழி தவறி விட்டோமோ என்ற சந்தேகம். சுற்றிச் சுற்றி வருகிறோமோ என்ற மயக்கம்.

அது என்ன? ஐயோ! அது என்ன?



ஏதோ காலடிச் சப்தம் போலிருக் கிறதே? யாரோ நம்மைத் தொடர்ந்து வருவது போலிருக்கிறதே? யாரா யிருக்கும்? எதற்காக இருக்கும்? ஒரு வேளை அந்தப் பயங்கரமான மந்திரவாதி தானோ? அப்படியானால் ஏன் பயப்பட வேண்டும்? இடுப்பில் செருகியுள்ள கத்தியை எடுத்துக் கொண்டால் போயிற்று! யாரா யிருந்தால் என்ன? எதற்காக ஓட வேண்டும்...?


இல்லை, இல்லை! ஓட வேண்டியது தான். இச்சமயம் யாருடனும் சண்டை பிடிக்கும் சமயம் அன்று. கையில் வலிவு இல்லை. கத்தியும் குறி தவறிப் போகும். உயிரை எப்பாடு பட்டாவது காப் பாற்றிக் கொள்ள வேண்டும். நமக்கு இத்தருணம் ஏதேனும் வந்தால் இள வரசருடைய கதி யாதாகும்? முன் னமே அந்த வந்தியத்தேவன் எச்சரித் தானே? உயிரைப் பத்திரமாய்க் காப் பாற்றிக் கொண்டு வருவதாகச் சொன் னோமே? அதை நிறைவேற்ற வேண் டியதுதான்!

பூங்குழலி மேலும் மேலும் நெருக்கமான காட்டில் புகுந்து ஓடினாள். ஆனால் துரத்தி வந்தவன் மேலும் பின் தொடர்ந்து வந்து கொண் டிருந்தான். பூங்குழலி போன வழியில் மரங்களிலிருந்த பட்சிகள் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடின. வளை களிலிருந்து நரிகள் கிளம்பி ஓடின. தூங்கிய காட்டுப் பன்றிகள் விழித் தெழுந்து விழுந்தடித்து ஓடின. மான் ஒன்று விர்ரென்று பாய்ந்து வந்து அவள் மேலேயே இடித்துப் புடைத்துக் கொண்டு ஓடியது. இவ்வளவுக் கும் மத்தியில் பின்னால் தொடர்ந்து வந்தவன் விட்டபாடாக இல்லை. அவனுடைய காலடிச் சப்தமும், அவன் ஓடியதால் பெருமூச்சு விடும் சப்தமும் கேட்டுக் கொண்டேயிருந் தன.

பூங்குழலி ஓடி ஓடிச் சலித்துப் போனாள். அந்தச் சலிப்பு அளவில்லாத கோபமாக மாறியது. வருகிறவன் யாராயிருந்தாலும் அவனை ஒரு கை பார்த்து விடுவது என்று முடிவு செய்தாள்.

(தொடரும்)





ஜோதியில்

இந்த மண்ணுலகில் தோன்றும் மகா புருஷர்கள் உடலை நீத்துச் செல்ல வேண்டிய காலம் வரும் போது வானுலகிலிருந்து ஜோதி மயமான புஷ்பக விமானம் வந்து அம்மகான்களை அழைத்துச் செல்லும் என்று இதிகாச புராணங்களில் நாம் படித்ததுண்டு.

இது கற்பனையாகவும் வர்ணனையாகவும் இருந்தாலும், வெளி உலகில் நாம் பார்க்கும் நிகழ்ச்சிகளைக் காட்டிலும் இந்தக் கற்பனை – வர்ணனைகள் உண்மையானவை என்று பெரியோர் நமக்கு எடுத்துச் சொன்னதுமுண்டு.

சென்ற 14-ந் தேதி வெள்ளிக்கிழமை இரவு எட்டே முக்கால் மணி சுமாருக்கு ஆகாசத்தையும் பூமியையும் ஒளி மயமாக்கிக்கொண்டு ஒரு ஜாஜ்வல்யமான ஜோதி வானத்தில் தோன்றி ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலை வரையில் பிரயாணம் செய்து மறைந்த காட்சியைத் திருவண்ணாமலையிலும் சென்னை நகரிலும் மற்றும் பல சுற்றுப்புற ஊர்களிலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் பார்த்தார்கள். அதே சமயத்தில் திருவண்ணாமலையில் கோயில் கொண்டு எழுந்தருளியிருந்த பகவான் ரமண ரிஷிகள் மகா சமாதி அடைந்தார்கள் என்பதை அறிந்து திகைத்தார்கள்.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா என்று ஆராய்ந்தார்கள்; சம்பந்தம் உண்டு என்று பலரும் நம்பினார்கள்.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் சம்பந்தம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒரு மகா புருஷர் நம்மை விட்டுப் பிரிந்தார். ஒரு மாபெரும் அருட்ஜோதி இந்த மண்ணுலகிலிருந்து மறைந்தது என்பதைப் பற்றிச் சிறிதும் ஐயமில்லை.

• • •

கடவுள் உண்டா, இல்லையா என்ற விவாதம் இன்று நேற்று உண்டானதல்ல. மனிதன் தோன்றி அறிவு பெற்ற நாளிலிருந்து இவ் விவாதம் நடந்து வந்திருக்கிறது.

''கடவுள் உண்டு'' என்னும் உண்மையை வாதங்களினால் நிரூபிக்க முடியாது. எத்தனை வாதங்கள் சொன்னாலும், அதற்கு எதிர்வாதங்கள் சொல்லக்கூடும். ஆனால் கடவுள் இல்லையென்பவர்

கலந்தார்!

கல்கி கலெக்ஷன்

அமரர் கல்கி

களை மாற்றுவதற்கு, ஒரே ஒரு வழிதான் உண்டு. "அப்பனே! இதோ இந்த மகானைப் பார்! இவரைப் பார்த்த பிறகாவது கடவுள் உண்டு என்று தோன்றினால் அவ்வாறு நம்பு. அப்படியும் உனக்கு நம்பிக்கை ஏற்படாவிட்டால் அதுவும் கடவுளுடைய திருவிளையாடல்தான். உன் வழியே நீ போ!" என்று சொல்வது தான் அந்த வழி.

அவ்விதம் சுட்டிக்காட்டி, "இதோ கடவுளைக் கண்ட மகான்; கடவுள் உண்டு என நிலை நிறுத்தும் பெரியார்!" என்று சொல்லக் கூடியவராக நம்மிடையே பகவான் ரமண ரிஷி விளங்கி வந்தார்.

சின்னஞ் சிறு பிராயத்தில், பதினேழாம் வயதில், ஸ்ரீ ரமணர் "கடவுளைக் காணுவேன்'' என்று விரதங் கொண்டு பெற்றோர் இல்லத்திலிருந்து புறப்பட்டார். ''ஞானத் தபோதனரை வாவென்றழைக்கும் மலை"யாகிய திருவண்ணாமலைக்கு வந்தார். அங்கேயே நிலை பெற்றுக் கடுந்தவம் புரிந்தார். துஷ்டர்களும் அறியாதவர்களும் அவருடைய தவத்தைக் கலைக்க முயன்றார்கள். எனவே, பாதாள லிங்கக் குகைக்குச் சென்று யார் கண்ணிலும் படாமல் மோனத் தவத்தில் ஆழ்ந்தார். பல தினங்கள் இருந்த இடத்திலிருந்து அகலாமல், உணவும் நீரும் இல்லாமல் தவம் புரிந்தார். தம்முடைய திருமேனியைப் பூச்சி புழுக்கள் அரித்துத் தின்றதைக் குறித்த சிந்தையே இல்லாமல் நிர்விகல்பத்தில் இருந்தார். பழைய காலத்து வேத ரிஷிகளைப் பற்றிப் படித்ததும் கேட்டதும் உண்மை என்பதை நாம் உணருமாறு மெய்ப்பித்தார். இத்தகைய நிலையில் காவியகண்ட கணபதி சாஸ்திரிகள் என்னும் பெரியார் அவரைக் கண்டு, "ரமண ரிஷி'' என்று கூறிப் போற்றி வணங்கினார்.

அன்று முதல் ரமண ரிஷியின் பெருமையை மக்கள் பலர் அறியலாயினர். தேசத்தின் நாலா திசைகளிலிருந்தும் அறிஞர்கள் பலர் மனச் சாந்தியை நாடி அவரைத் தேடி வந்தனர். அறிவிலும், ஆராய்ச்சியிலும் மிக்க ஐரோப்பியர்கள் பலரும் ரமண ரிஷியின் ஆசிரமத்திலே வந்து தங்கி வெளி உலகத்தில் வேறு எங்கும் காணாத மன அமைதியை இங்கே பெற்றனர்.

இவ்வாறெல்லாம் புகழ் பரவினாலும் ரமண ரிஷிகளின் உள்ளப் போக்கிலோ தவ வாழ்க்கையிலோ எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. நடை உடையும் மாறவில்லை. உபதேசமோ, உபந்நியாசமோ அவர் செய்யவில்லை. எப்போதும் போலவே அவருடைய பேச்சு மிகக் குறைவாயிருந்தது. ''சொல்லரிய பொருளை ஒரு சொல்லால் உணர்த்தியே சொரூபாநுபூதி காட்டி'' என்ற வாக்கியத்துக்கு இலக்காக விளங்கி வந்தார். அவருடைய தரிசனத்தினாலுமே அவர் அருகில் தங்குவதினாலுமே பாரமார்த்திக அநுபவத்தை அடைந்து வந்தார்கள் அவரை நாடி வந்த சீடர்கள்.

"ஒன்றாய்ப் பலவாய் உயிர்க்குயிராய் ஆடும் கருணைக் கடல் பரஞ்சோதியின்'' அருள் ஒளியிலே ஸ்ரீரமண ரிஷிகள் இரண்டறக் கலந்து விட்டார்.

ஆதி நாளிலிருந்து இந்தப் பாரத புண்ணிய பூமியில் எத்தனையோ மகான்களும், மகரிஷிகளும், அவதார புருஷர்களும், தெய்வ மனிதர்களும் தோன்றி மறைந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய பூதவுடல்கள் மறைந்தனவே தவிர, அவர்களுடைய அருள் ஒளியானது இந்தப் புண்ணிய நன்னாட்டில் எங்கும் பரவி நிலைத்து நின்று மக்களைத் தாய்மைப் படுத்திப் பரிபாலித்து வருகிறது. அதுபோலவே பகவான் ரமண ரிஷியின் அருள் ஒளியும் என்றென்றைக்கும் இந்தத் திருநாட்டைப் புனிதப்படுத்திக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

(கல்கி, ஏப்ரல் 23, 1950)

சுறு சுறுப்பில் சிற்றெறும்பையும் ஜப்பானியரையும் தோற்கடிக்கக் கூடிய சில தேச பக்தர்கள் திருச்சி சிறையில் இருந்தார்கள். அவர்களுள் ஸ்ரீ டி.எஸ். அவிநாசிலிங்கம் ஒருவர்.


காலையில் வார்டர்கள் வந்து கொட்டடிகளைத் திறந்ததும், அநேகமாய் எல்லாரும் கையில் பிரஷ், பேஸ்ட், பல் பொடி எடுத்துக்கொண்டு வெளியில் வருவது வழக்கம். சில ஆந்திர சகோதரர்கள் வெளியில் அவசர அவசரமாய் வந்து வேப்பமரத்தின் மேல் ஏறுவார்கள்! பல் குச்சி ஒடிப்பதற்குத்தான்.

ஆனால் ஸ்ரீ அவிநாசிலிங்கம் அறையிலிருந்து வெளியில் வரும்போதே, ஸ்நானபானம், பூஜை புனஸ்காரம் எல்லாம் முடிந்துக் கொண்டு, கையில் உபநிஷத புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு வருவார். 'பூஜை' என்று வேடிக்கைக்குச் சொல்லவில்லை. உண்மையாகவேதான். ஸ்ரீ அவிநாசிலிங்கம் டில்லி சட்டசபைக்குப் போனாலும், திருச்சி சிறைக்கு வந்தாலும் 'குரு மகராஜ்' அதாவது ஸ்ரீ ராமகிருஷ்ண பரஹம்ஸ தேவரின் படமும் கூடப் போயே ஆக வேண்டும்.

எட்டடி சதுரமுள்ள சிறைக் கொட்டடியில் ஒரு சின்ன மூலை. பூஜாக் கிரஹமாகி விடும். அங்கே குரு மகராஜின் படம் பிரதிஷ்டை செய்யப்படும். திருச்சி குவாரண்டைனில் ஒரு பக்கத்தில் சில மல்லிகைச் செடிகள் இருந்தன. அவற்றில் எந்தச் செடியிலாவது எப்போதாவது ஒரே ஒரு பூ அபூர்வமாய்ப் பூக்கும். முதல் நாள் சாயங்காலமே ஸ்ரீ அவிநாசிலிங்கம் எந்தச் செடியில் மொட்டுக் கட்டியிருக்கிறது என்று பார்த்து வைத்துக் கொள்வார். மறுநாள் காலையில் கொட்டடி திறந்ததும், ராம பாணத்தைப் போல் விர்ரென்று அந்த மல்லிகைச் செடியை நோக்கிப் போவார். அதில் பூத்திருக்கும் ஒரே ஒரு பூவை அருமையாய்ப் பறித்து எடுத்துக்கொண்டு வந்து ஸ்ரீ பரமஹம்ஸரின் படத்துக்குச் சாத்துவார்.

திருச்சி சிறையில் ராஜாஜிக்கு அடுத்தபடியாக மூச்சுவிட நேரமில்லாமல் வேலை செய்தவர் ஸ்ரீ அவிநாசிலிங்கம். அவர் படிக்காத சமயமெல்லாம் எழுதுவார்; எழுதாத சமயமெல்லாம் படிப்பார்.

சிறைக்குள் போனதும் புத்தகம் எழுத வேண்டுமென்ற ஆசை அநேகம் பேருக்கு ஏற்படுவதுண்டு. ஆசைப் படுகிறவர்களில் 100-க்கு 50 பேர் புத்தகம் எழுத ஆரம்பிப்பார்கள். ஐந்து பேர் எழுதி முடிப்பார்கள்; இவர்களில் இரண்டு பாக்கியசாலிகளின் புத்தகங்கள்தான் அச்சுவாகனமேறி வெளிவரும். அந்த இரண்டு பேரில் ஒருவராக ஸ்ரீ அவிநாசிலிங்கம் நிச்சயம் இருப்பார்.



• ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்


இவ்வளவு சுறுசுறுப்பாகப் படிப்பிலும் எழுத்திலும் ஈடுபட்டிருக்கிறாரே, சிநேகிதர்களுடன் பேசுவதற்கே அவருக்கு அவகாசம் இருக்காதோ என்று தோன்றலாம். அப்படியில்லை. அவருடைய வேலைத் திட்டத்தில் ''நண்பர்

களுடன் அளவளாவுதல்" என்று ஒரு 'ஐட்டம்' இருக்கும். அதற்கு இவ்வளவு நிமிஷம் என்று ஒதுக்கி வைத்திருப்பார். அந்த நேரம் வந்து விடப் போகிறதே என்று நண்பர்கள் பீதியுடன் முதுகைத் தொட்டுப் பார்த்துக் கொண்டிருப் பார்கள்.

ஸ்ரீ அவிநாசிலிங்கம் சிநேகிதர் களுடன் அளவளாவுதல் என்றால், அவர் களுடைய முதுகுக்குக் கொஞ்சம் அபா யந்தான். முதுகிலே 'ஷொட்டு'க் கொடுக் காமல் அவரால் அளவளாவ முடியாது. கையிலே பத்திரிகை, புத்தகம் ஏதாவது இருந்தால், அவை மூலமாகவே அளவளா வத் தொடங்கி விடுவார் புத்தகத்துக்குஞ் சேதம், முதுகுக்கும் அபாயந்தான்.

முதுகிலே 'ஷொட்டு'க் கொடுக்கிற வரைப் பற்றிச் சொல்லும்போது, தொடையில் தட்டிக் கொடுக்கிற வரைப் பற்றி ஞாபகம் வரு கிறது. ஓமந் தூர் ராமசாமி ரெட்டியார் உண்டு. அவருக்கு சந்தோஷமும் உற் சாகமும் எவ்வளவுக்கு அதிகமாகிறதோ, அவ்வளவுக்கு மேற்படி ஹிம்சையும் அதிகமாகிவிடும். வால்மீகி ராமாயணம் கேட்பதற்குத் தவறாமல் அவர் வரு வதுண்டு. அவர் வந்து எந்த இடத்தில் உட்காருகிறார் என்று பார்த்துக் கொண்டு, மற்றவர்கள் விலகி உட்காரு வது வழக்கம். சிலசமயம் அதிகம் பேர் வந்துவிட்டால் இப்படி விலகி உட்கார சாத்தியப்படாது. அப்போது அவர் பக்கத்தில் யாருக்கு இடங்கிடைக் கிறதோ, அவர்கள் பாடு ஆபத்துத்தான். ஸ்ரீ வரதாச்சாரியின் இராமாயண பக்தி உச்ச ஸ்தாயிக்குப் போகும் சமயங்களில் ஸ்ரீ ரெட்டியாருக்கும் குதூகலம் பிறந்து விடும். அந்தக் குதூகலத்தில் மெய் மறந்து பக்கத்திலிருப்பவர்களின் தொடையில் பளீர் என்று அடித்து விடுவார். ஸ்ரீ ரெட்டியாரின் குதூ கலத்தை நாலைந்து தடவை ருசி பார்த்தபிறகு, ஸ்ரீ சந்தானம் ஒரு யுக்தி செய்தார். இராமாயணத்துக்கு வரும் போது கையில் ஒரு தலையணையும் எடுத்துக்கொண்டு வந்து தொடை மீது வைத்துக் கொள்வார்! விழுகிற அறை தலையணை மீது விழட்டும் என்றுதான்.

• அவினாசிலிங்கம்



புத்தகம் எழுதுவதில் ஸ்ரீ அவிநாசி லிங்கத்துடன் போட்டியிட்டவர் ஸ்ரீ.கே. சந்தானர்.

சில அனுஅனுப்புக்காரர்கள்

சிறையில் சாத்வீக வாழ்க்கை நடத்தியவர்களில் ஒருவர்; காந்திஜியின் சிறந்த சீடர்; ..... ஆனாலும் அவர் பூரண அஹிம்சா தர்மி என்று சொல்வதற்கில்லை. பக்கத் தில் உட்கார்ந்திருப்பவர்களின் தொடைக்கு அவரால் ரொம்ப ஹிம்சை

நான் சிறையிலிருந்த போது இவர் தமிழில் "செல்வம்" என்ற பெயருடன் பொருளாதார சாஸ் திரத்தை எழுதி முடித்தார். காளிதாஸ மகாகவியின் "மேக தூதம்" என்னும் காவியத்தைத் தமிழில் மொழி பெயர்த்தார். பல சிறு கதைகள் எழுதி னார். நான் வெளியில் வந்த பிறகு இன்னும் அதிகமாக எழுதியிருக்க வேண்டும்.

ஸ்ரீ.கே. சந்தானம் தாம் படிப்பதோடும், எழுதுவதோடும் திருப்தியடையவில்லை. எல்லாரையும் படிப்பித்து விட வேண்டுமென்று அவருக்கு அளவிலாத ஆசை. ஒருதடவை அவர் "பத்தே நாளில் ஸம்ஸ்கிருதம் சொல்லிக் கொடுத்து விடுகிறேன்" என்று ஆரம்பித்தார். இந்த ஸம்ஸ்கிருத வகுப்புக்கு முக்கியமாக வந்தவர்கள் ஸ்ரீ.ஏ. வேதரத்தினம், ஓமந்தூர் ரெட்டியார், டாக்டர் சீனிவாசன் ஆகியோர். நானும் மேற்படி ஸம்ஸ்கிருத வகுப்புக்குப் போய்க் கொண்டிருந்தேன். ஆனால், நான் போனதன் நோக்கம், மேற்படி வகுப்பை சரியாக மூன்று மணிக்கு முடித்து விடுவதற்காகத்தான். ஏனெனில், மூன்று மணிக்கு ஸம்ஸ்கிருத வகுப்பை முடிப்பது மிக மிக முக்கியமாயிருந்தது. அப்போதுதான் டாக்டர் பி. சீனிவாசன் டீ போடுவதற்குக் கிளம்ப முடியும்.

திருச்சி சிறையைப் பற்றி நான் எதை மறந்தாலும் டாக்டர் பி. சீனிவாசன் போட்டுக் கொடுத்த டீயை மறக்க முடியாது. அதற்கு முன்னெல்லாம், எனக்கு டீ என்றால் பிடிக்காது. சூடான தேத் தண்ணீரின் அருமை பெருமைகளைப் பற்றித் தேயிலைப் பிரசாரக் கமிட்டியாரின் பிரசாரங்களெல்லாம் என் வரையில் விருதாவாகவே போய்க் கொண்டிருந்தன. டாக்டர் சீனிவாசன் போட்டுக் கொடுத்த டீயைச் சாப்பிட்ட பிறகு, நிலைமை மாறிவிட்டது.

ஆனால், தேயிலைப் பானம் என்றால், எல்லாம் தேயிலைப் பானமாகி விடாது. தயார் செய்கிறபடி செய்தால்தான் தேயிலைப் பானத்தின் பெருமையை உள்ளபடி அறியலாம். தேயிலையில் 'ஆரஞ்சு பெக்கோ தேயிலை' என்று இருக்கிறது. அந்த ரகந்தான் வேண்டும். எவ்வளவு கப் டீ தேவையோ அவ்வளவு 'ஸ்பூன்' தேயிலைத் தூள் எடுத்து ஒரு கெட்டிலில் போட்டுக் கொள்ள வேண்டும். கொதிக்கும் வெந்நீரை அதில் விட வேண்டும். சரியாக மூன்று நிமிஷம் அப்படியே வைத்திருக்க வேண்டும். உடனே, கெட்டில் தூம்பு வழியாக ஜலத்தை இறுத்து விட வேண்டும்.

இறுத்த தேயிலைத் தண்ணீரைத் தனித் தனி டம்ளர்களில் விட வேண்டும். ஒவ்வொரு டம்ளரிலும் இரண்டு ஸ்பூன் சர்க்கரை போட வேண்டும். ஒரு சின்னக் கரண்டி பாலையும் விட்டு இலேசாகக் கலக்க வேண்டும். அப்பொழுது டீ தங்க நிறமடைந்திருக்கும். சரியானபடி வெந்நீர் கொதித்திருந்தால் ஆவிகூட வந்து கொண்டிருக்கும்.

ஒரு கையில் மேல் வேஷ்டியைச் சுருட்டி வைத்துக்கொண்டு அதன் மேல் உறிஞ்சிச் சாப்பிட வேண்டும். டீயை நன்றாய் ஆற்றிவிட்டு அப்புறம் கடகடவென்று வாயில் ஊற்றிக் கொண்டு குடிப்பது உண்டே, அதைப் பஞ்சமா பாதகத்தில்தான் சேர்க்க வேண்டும். இந்தத் தேயிலைப் பான விதிகளுக்குள்ளெல்லாம், மிக முக்கியமான விதி, 'மூன்று நிமிஷ விதி'தான். அதாவது, தேயிலை வெந்நீரில் ஊறுவது மூன்று நிமிஷத்துக்கு ஒரு விநாடி குறையக் கூடாது. ஒரு விநாடி அதிகமாகவும் கூடாது. இதில்தான், காஞ்சி முனிசிபல் சேர்மன் டாக்டர் பி. சீனிவாசனுடைய இன்றியமையாத உதவி தேவையாயிருந்தது. மத்தியானம் சரியாக மூன்று மணிக்கு அவர் கெட்டிலில் தேயிலைத் தூளை எடுத்துக் கொண்டு சமையல் பிளாக்குக்குப் போவார். அங்கே வெந்நீர் கொதித்துக் கொண்டிருக்கும். கொதிக்கும் வெந்நீரைக் கெட்டிலுக்குள் விட்டுக் கொண்டு டக் டக் என்று நடந்து எங்கள் பிளாக்குக்கு வருவார். சமையல் பிளாக்கிலிருந்து அவருடைய கொட்டடிக்கு வருவதற்குச் சரியாக மூன்று நிமிஷம் ஆகும்; ஒரு விநாடி குறையாது, அதிகமும் ஆகாது. வேறு யாராவதாயிருந்தால், ஐந்தாறு நிமிஷத்துக்குக் குறைந்து வர முடியாது. ●

(மூன்று மாதம் கடுங்காவல் – வானதி பதிப்பக வெளியீடு)



உலக அழகிகளாக இந்தியப் பெண்கள் தேர்வு செய்யப்படுவது இப்போதெல்லாம் உலக அதிசயமாகக் கருதப்படுவதில்லை. மாறிவரும் இந்தச் சூழலில், புதிய நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் இந்தியா உலகின் ஃபாஷன் மையமாக உருவாக வாய்ப்புள்ளதா... சென்னை எழும்பூரில் உள்ள தேசிய ஃபாஷன் தொழில்நுட்பக் கழகத்தைச் சேர்ந்த சிலரிடம் கேட்டோம் :

எஸ்.வி. சங்கர் (இயக்குனர்) :

ஃபாஸ்ட் புட் ஆச்சு, சூப்பர் மார்க்கெட்டுகளாச்சு. சென்னை தன்னை வெகு நவீனமாக ஆக்கிக் கொண்டு வருது. தாராளமயமாக்குதலைத் தொடர்ந்து பல வெளி நாட்டு நிறுவனங்களும் இந்தியாவை வேகமாக முற்று




• சங்கர்



• தேவதாஸ்


ஃபாஷன் என்பது சீரியஸ் பிஸினஸ்!





படையப்பா ஷூ

"ஆண்கள் அணியும் ஷூக்களில் இப்போ இதுதான் லேட்டஸ்ட் ஃபாஷன். இதன் விற்பனை எக்கச் சக்கம்!'' என்று லக்ஷ்மி ஷூ கலெக்ஷனின் பரத் காட்டிய ஷூக்களில், நிறைய 'ஸ்டீல்' வேலைப்பாடுகள்! விலை 1800 ரூபாய்! அவர் சொன்ன வேறொரு தகவலைக் கேட்டதும் இதன் விற்பனை மேலும் அதிகரிக்கும் என்று தோன்றியது. படையப்பாவில் ரஜினி இதுபோன்ற ஷூக்களைத்தான் அணிகிறாராம்!''



படம் : ஸ்ரீஹரி

கையிடத் தொடங்கிவிட்டன - ஃபாஷன் பொருள்களைத் தயாரிக்கும் நிறுவனங்களும் தான்! உடலை அதிகம் வெளிக்காட்டாத வாறு அமையும் ஃபாஷன் உடைகளை, தங்கள் டீனேஜ் குழந்தைகள் அணிந்து கொள்வதை பெற்றோர்கள் எதிர்ப்பதில்லை. ஏன், ஆதரிக்கிறார்கள் என்றே சொல்லலாம். இந்த நிலையில் சர்வதேச ஃபாஷன் புயல் இந்தியாவில் மையம் கொண்டால் அதில் பெரிய ஆச்சர்யம் எதுவுமில்லை.

எஸ். தேவதாஸ் (பதிவாளர்) :

பழமையிலிருந்து இன்னும் மீளாத தாகக் கருதப்படும் சென்னையில் கூட உடைகள் விஷயத்தில் புரட்சி நடந்து கொண்டிருக்கிறது. இப்போதெல்லாம் தாவணிகளை சினிமாவில்தானே பார்க்க முடிகிறது! வருடத்திற்குச் சுமார் இருநூறு ஃபாஷன் டிசைனர்களை எங்கள் அமைப்பு உருவாக்குகிறது. வரும் நூற்றாண்டில் இவர்கள் எல்லாம் கற்பனைகளை கூர் தீட்டி உலவவிடும் போது, ஃபாஷன் உலகம் இந்தியாவை மரியாதையோடு பார்க்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

கவிதா சலூஜா (உதவிப் பேராசிரியை) :

கல்கத்தா, சென்னை போன்ற நகரங்கள் இன்னும் ஃபாஷனின் பிடிக்குள் வந்து விடவில்லை. ஏதோ அரை குறையாகத்தான் நவீன ஃபாஷன்களை ஏற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த விஷயத்தில் டெல்லி, பம்பாய்க்குப் பிறகு பெங்களூர் முன்னணியில் இருக்கிறது. ஆனால் ஐரோப்பிய நாடுகளோடு ஒப்பிடும் போது நாம் பல படிகள் பின்தங்கித்தான் இருக்கிறோம். ஃபாஷனில் அதிகமான புது முயற்சிகளை மேற்கொள்வதில் அமெரிக்கா முன்னணியில் இருக்கிறது. தவிர அங்கெல்லாம் நடுத்தர மக்கள் மற்றும் கீழ்த்தட்டு மக்களுக்கு ஏற்ற மாதிரி புதிய ஃபாஷன் உடைகள் உருவாக்கப்படுகின்றன. இந்தியாவைப் பொறுத்த வரை ஃபாஷன் என்றாலே அது பெரும் பணக்காரர்களுக்குத்தான் என்ற நிலை.

உலக அழகிகளாக இந்தியப் பெண்கள் தேர்வு செய்யப்படுவதும், ஃபாஷன் என்பதும் வெவ்வேறு விஷயங்கள். சொல்லப் போனால் ஃபாஷன் என்பது ஒரு சீரியஸான பிஸினஸ். அழகு என்பது இறைவன் அளித்த சங்கதி. அது உலகின் எந்த மூலையிலும் இருக்கலாம். அப்படிப் பார்த்தால் வெனிசுலா, எதியோப்பியா ஆகிய நாடுகளிலிருந்து எல்லாம் உலக அழகிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அதற்காக அங்கெல்லாம் ஃபாஷன் பெரிதும் முன்னேறியிருக்கிறது என்று அர்த்தமா?

தொலைக்காட்சியில் மேல்நாட்டு சானல்களால் நாகரிகத்தைப் பற்றிய உணர்வு அதிகமாகி இருப்பது உண்மை. ஆனால் அதே சமயம் உடைக்காக எக்கச்சக்கமாகச் செலவழிக்கும் மனப்பாங்கு இங்கு வளரவில்லை. தவிர அடிப்படை வசதிகளில் தன்னிறைவு பெற்ற நாடுகள்தான் ஃபாஷன் போன்ற விஷயங்களில் அதிக கவனம் செலுத்தி முன்னிலையில் இருக்க முடியும். இந்தியா போன்ற முழு வளர்ச்சியடையாத நாடுகளில் இதற்கெல்லாம் இப்போதைக்கு வாய்ப்பு இல்லை.

— குல்ஷு

படங்கள் : ப்ரவீண் குமார்

இதுவரை...

வைக்கம் முகம்மது பஷீர், தம்முடைய அடுத்த சிறுகதைத் தொகுதியை வெளியிடுவதற்கான அடிப்படை வேலைகளைச் செய்வதற்காக ஒரு நகரத்தில், வாடகைக்கு வீடெடுத்துத் தங்கியிருக்கிறார். அவருடைய பக்கத்து வீட்டைச் சேர்ந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் படிக்கும் சரஸ்வதிதேவி என்ற நாயர் குடும்பத்து இளம்பெண், தன்னுடைய கல்லூரி பேச்சுப் போட்டியில் பங்கெடுப்பதற்காக அவரிடம் உதவிகோரி வருகிறாள். பஷீரின் மனத்தில் அவள் மீது காதல் தோன்றுகிறது. முதலில் அதற்கு இடம்கொடுப்பது போல் காணப்பட்ட அவள், பிறகு அதற்கு மாற்றான கருத்தைக் கடிதங்கள் மூலம் வெளியிடுகிறாள். அதனால் மனம் தளர்வடைந்து, மறுபடியும் அவள் காதலைப் பெற முனைகிறார்.

இனி...

ஒரு காதல் டைரி

நான் சென்று இடைவழியில் வைத்து தேவியைச் சந்தித்தேன். நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. தேவியின் குடை சின்னதாக இருந்ததால், அவள் நனைந்து விட்டிருந்தாள்.

இப்படி மழையில் அரை மணி நேரம்.

"புத்தகங்களை ஏன் அனுப்பிச்சீங்க? பணம் தந்துடறேன். இல்லேன்னா திருப்பித் தந்துடறேன்" என்றாள்.

"பணத்துக்காக அனுப்பலே! வாசிச்சதும் கிழிச்சுப் போட்டுடுங்க. திருப்பித் தராதீங்க" என்றேன்.

"அப்புறம் நான் என்ன செய்யணும்?"

"எல்லோரோடதையும் வாசிங்க. ஒங்களுக்கு ரொம்பப் பிடிக்கற எழுத்தாளரை குருவா ஏத்துக்குங்க."

"எனக்கு இவ்விடத்து பாணிதான் இஷ்டம்."

இவ்விடம் என்பது நான். உண்மையாகவா?

"ஆனா நமக்குள்ளே நிறைய கருத்து வேறுபாடுகள் இருக்கு. நடுவிலே ஒண்ணு கேட்கட்டுமா? அந்தக் கடிதத்திலே எழுதியது உண்மையிலே தோணியதுதானா? இந்த வருஷம் நீங்க பாஸ் ஆகணும். குற்றத்தை என் தலையில கட்டிடலாம்னு பாக்காதீங்க."

"ஓ... அதெல்லாம் நான் சும்மா எழுதியது."

"சும்மா எழுதினதுதானா! அப்ப நான் பதில் எழுதப் போறதில்லே."

நான் புறப்பட்டேன்.

அடுத்த நாள் தேவி கிராமபோன் ரெகார்டைப் பற்றிச் சொன்னாள். அடுத்துள்ள ஒரு வீட்டில் கிராமபோன் உண்டாம். அங்கே இருக்கிற ஒரு பெண்ணுக்கு என் வசமுள்ள புதிய ரெகார்டுகள் கிடைத்தால் நன்றாக இருக்குமாம். தனக்கு அல்லவாம்.

"அப்படீன்னா தர மாட்டேன். ஒங்களுக்கு வேணுமா?"

"எனக்கு வேண்டாம்."

"வேணும்!" வேறு குரல். சௌமினி. தேவியின் தங்கை.

அவள் என் முகத்தை நேருக்கு நேர் பார்ப்பது அன்றுதான் முதல் முறை. நான் அங்கே குடியிருந்த காலமெல்லாம் என்னைப் பார்த்தால் தலைகுனிந்து, அவிழ்ந்து பறக்கும் முடியோடு வேகமாய் நடப்பாள்.

சட்டென்று ஏன் என்னிடம் இப்படி ஒரு சிநேகம்?

"ஆகட்டும். சௌமினிக்குத் தரேன்."

"இதில நான் தலையிடலே. கேட்டுக்கங்க!" தேவியின் கட்சி.

"கேட்டுட்டேனே!" – நான்.

அன்றே கிராமபோன் ரெகார்டுகளை எல்லாம் ஒரு கட்டாகக் கட்டி கொண்டு போய்க் கொடுத்தேன்.

6

வைக்கம் முகம்மது பஷீர்



அன்று நாலரை மணிக்கு ஒரு ரசமான விஷயம்!

நான் நன்றாக இல்லை என்று சொன்ன அந்தப் பாடாவதிக் கதையை தேவி மாணவர் காங்கிரஸ் மாநாட்டுச் சிறுகதைப் போட்டிக்கு அனுப்பி இருக்கிறாள்.

அதில் அவளுக்கு முதல் பரிசு!

''பாருங்க, பரிசுகள்'' என்று தேவி இரண்டு மூன்று புத்தகங்களை என்னிடம் கொண்டு வந்து காட்டினாள்.

"நல்லது! இருந்தாலும் அந்தச் சமாச்சாரத்தில எனக்கு எந்த மதிப்பும் தெரியலே. சுத்த பாடாவதி! இது கதையே இல்லே."

நான் சிணுங்கினேன்.

இனி தேவியைப் பார்க்க வேண்டாம்!

கடிதங்களை எல்லாம் திருப்பி அனுப்பி விடலாம்.

அடுத்த நாள் நான் மீண்டும் இடம் மாறத் தீர்மானித்தேன். தற்போது வசிக்கும் இடத்தை விட்டு ஒன்றரை மைல் தள்ளி மியூஸியத்தை அடுத்து இருபது ரூபாய்க்கு

தமிழில்: வையவன்

ஒரு சிறு 'மாளிகையை' வாடகைக்குப் பிடித்தேன்.

அன்றே போய், கொடுத்திருந்த ரெக்கார்டுகளை எல்லாம் திருப்பி வாங்கிக் கொண்டேன்; தேவி இல்லாத சமயத்தில். தேவியைப் பார்க்கக் கூடாது என்றே!

கடுமையான ஆத்திரத்தோடு சந்தேகம், சினம், பரிவு எல்லாம் கலந்து என்னை நிலைகுலைத்தன. பழைய நினைவுகளும் கூட.

நாட்கள் மீண்டும் நகர்ந்தன.

சிந்தனை. எப்போதும் சிந்தனை.

அவள் கடிதத்துக்குப் பதில் எழுதினேன். அதைக் கிழித்துப் போட்டேன். மறுபடி எழுதினேன். மீண்டும் கிழித்தெறிந்தேன்.

மற்றொரு விசேஷம்!

நான் அவள் தங்கைக்குக் கொடுத்த கிராமபோன் ரெகார்டுகளில் உள்ள 'எம்ப்ளமான, ஹிஸ்மாஸ்டர் வாய்ஸ் ரெகார்டுப் பெட்டிக்கு எதிரே கிராமபோனைக் கவனிக்கிற வெள்ளை நாயின் முதுகில் என் பெயர் எழுதியிருந்தது. அந்த நாயை வேறு அழ வைத்திருந்தது. கண்ணீர்த் துளிகள் சொட்டுச் சொட்டாக ஒழுகிக் கொண்டிருந்தன. பேனா மையினால் வரைந்தது.

தவிர 'ஸாட் ஸ்வீட் போயம்' என்று நான் எழுதி வைத்திருந்த ரெகார்டில் 'ஸாட் டெஸ்ட் ஸ்வீட் போயம்' அதாவது 'ஸாட்' டுக்குப் பின்னால் 'டெஸ்ட்' சேர்த்திருந்தது.

தேவலை! பெண் கெட்டிக்காரிதான்!

அவளுக்கு நாடகம் எழுதிக் கொடுக்க வேண்டும் இல்லையா? காதலும் தமாஷும் வேண்டும்!

நான் போனேன். பக்கத்து வீட்டிலிருந்து கூப்பிட்டு அனுப்பினேன். பெரிதாக டிரஸ் எதுவும் போட்டுக் கொள்ளாமல் நின்ற நிலையில் சாதாரணமாக ஓடி வந்தாள்.

"கூப்பிட்டதாச் சொன்னாங்க. போகணும். என்ன? புதிய எடம் சுகம்தானா?"

"ஓ... ஒரு மாதிரி சுகம்."

மேலே "தேவீ, அந்த ரெகார்டுப் பெட்டியோட வெள்ளை நாய்..." என்று நான் சொன்னதும் அவளிடம் ஒரு சிறு மந்தகாசம் உயர்ந்தது.

"நான்தான் அதை எழுதினேன்!"

"நல்லவேளை."

"ஓ. நான் தலையிடலேன்னாலும் அதை இவ்வளவு வேகமாக ஏன் வாங்கிட்டுப் போயிட்டீங்க? நாங்க என்ன பெரிய திவட்டிக் கொள்ளைக்காரங்களா? யாராவது சொன்னாங்களா?"

"ஏன் முழுசையும் பாட வச்சுக் கேக்கலியா?"

"நாங்க ராத்திரியிலே தூங்கறவங்க. அதெல்லாம் ஒண்ணு ரெண்டு ராத்திரியிலே தீர்ற சங்கதியா?"

"ஏன்... வேணுமா?"

"இனிமே வேண்டாம்பா."

"சரி. நாடகம் இருக்கே. அதான் எழுதச் சொன்னது. அது ஒரு கஷ்டம்!"

"ஏன்?"

"பெண்கள்தானே 'ஆக்ட்' பண்ணப் போறது. அதனால எனக்கு ஒரு தூண்டுதல் கிடைக்க மாட்டேங்கிறது. பெண்கள் ஆண்களுடைய பாத்திரத்தில் நடிக்கறதை நான் பாத்திருக்கேன். ஒலகத்திலேயே மகா மோசமான காட்சி எதுன்னு கேட்டா, என் பதில் பெண்கள் ஆண்கள் பாத்திரத்திலே நடிக்கிறதுதான்."

"நாங்க நல்லா நடிப்போம்."

"ஆனா, நான் எழுதற நாடகத்திலே புரட்சி வரும்."

"எங்களுக்கும் பிடிக்கும்."

"கதாநாயகன் வழுக்கையாய் இருப்பான்."

"அது வேணாம். வழுக்கைத் தலையர்களை வயசுப் பெண்களுக்குப் பிடிக்காது."

"ஓ" நான் சொன்னேன். "சந்தோஷம்! ரொம்ப சந்தோஷம்."

நிசப்தம்.

"என்ன, நான் இலக்கிய உலகத்தில் பிரவேசிக்கலாமா?" அவள்.

"நான் யாரையும் கேட்டுட்டு நுழையலே!"

நிசப்தம்.

சற்று கழித்து, "எனக்கு யாராவது தைரியம் கொடுக்கணும்" என்றாள் தேவி.

நான் மௌனம் அனுஷ்டித்தேன்.

"எனக்கு யாராவது தைரியம் கொடுத்தாத்தான் நான் எழுதுவேன். என்ன, நான் எழுதலாமா?"

"மன்னிக்கணும்."

நான் தொடர்ந்தேன்.

"ஒங்க கடிதத்திலே எழுதியது நிஜந்தானா? நிஜம் இல்லேன்னா இனிமே அது மாதிரி எழுத வேணாம். எனக்கு நெறைய வேலை இருக்கு. ஒரு தமாஷுக்கு கால விரயம் பண்ண என்னை நிர்ப்பந்திக்காதீங்க. நான் ஒரு சீமான் மகனில்லே."

மௌனம்.

பிறகு சொன்னேன்.

"பயிற்றுவித்தல் பத்தின புத்தகத்துக்காக என்னைத் தவிர வேற பலர்கிட்ட நீங்க சொல்லி வச்சிருக்கிற விஷயம் தெரிஞ்சது. ஒங்களுக்கு நெறைய ப்ரெண்ட்ஸ் உண்டே. அவங்களிலே நானும் ஒர்த்தன். இந்த நிலை எனக்கு இஷ்டமில்லே."

நிசப்தம்.

தேவியைக் காயப்படுத்தக் கூடாது. அவளுக்கு வேதனை தரக்கூடாது. துக்கமூட்டக் கூடாது. ஆனால் என்னைப் பரிகாசப் பாத்திரம் ஆக்குவது எனக்கு விருப்பமில்லை.

எனினும் சிந்தனை. தேவி என்னைப் பற்றி அதிகம் சிந்தித்துக் கொண்டிருக்கிறாள்; பதில் எதிர்பார்க்கிறாள். எனக்குத் தெரியும்.

"இன்னிக்கும் நான் தபால் இருக்கான்னு பார்த்தேன்!" தற்செயலாக வழியில் வைத்து என்னைச் சந்தித்தபோது தேவி சொன்னாள்.

நான் அசட்டையாக இருப்பது போல் காட்டிக் கொண்டு, "ஓ! எதுக்கு எழுதணும்?" என்று சொல்லிவிட்டு அகன்றேன்.

எங்கள் இருவர் இதயங்களும் சங்கமிக்கத் துடிக்கின்றன. குழப்பம், சந்தேகம், காதல். சிந்தனை அலைகள். 'ஸைக்கிக் இம்ப்ரஷன்.' குமுறும் சிந்தனை அலைகள்.



சென்னையில் முதல் முறையாக
பாண்டி பஜார் ஃபாத்திமா பிளாசாவில் உள்ள
புதிய
NARAYANA PEARLS
AND
JAIPUR JEWELS
அறிமுகப்படுத்தும்
அழகிய
கோலாபூர்
நகைகள்
Semi precious stoneல்
செதுக்கிய கடவுள்
சிற்பங்களும் கிடைக்கும்.
விதவிதமான வண்ண
மாலைகளுடன்
20% தள்ளுபடி
கோலாப்பூர் நகைகளை தவிர
முழுநேர ஜோதிட ஆலோசனை, ராசிக்கேற்ப கற்கள் பரிந்துரைக்கப்படும். எங்கள் கடையில் வாங்கிய ராசி கல் திருப்தி அளிக்கவில்லை எனில் நீங்கள் அதை திரும்ப கொடுக்கலாம் அல்லது மாற்றிக்கொள்ளலாம்.
எல்லாவித ஃபேஷன் நகைகள் இங்கு கிடைக்கும்
2nd Choice and Rolex Gold guaranteed கவரிங் வளையல்கள் இங்கு கிடைக்கும்.
உங்கள் பழைய ஃபேஷன் நகைகளை புதிய நகைகளுக்கு மாற்றிக்கொள்ளலாம்.
இங்கு ஜெய்பூர் மாலைகள் மற்றும் ரூபி, பச்சை, கோமேதகம் மற்றும் நீலம் மாலைகள் கிடைக்கும்.
ஞாயிற்றுகிழமையில் காலை 11.00 மணி முதல் மாலை 6.00 வரை கடை திறந்திருக்கும்.
ரூ.1,000க்கு
மேல் பொருட்கள் வாங்குவோருக்கு
கவர்ச்சிகரமான பரிசுகள்
NARAYANA pearls
and Jaipur Jewels
Fathima Plaza, 78, Pondy Bazaar,
Between Hotel Hameedia & Blue Star Opticals,
Chennai - 600 017. Ph.: 8258714.



''சார்! ராம சாமி தெருவுக்கு எப்படி சார் போக ணும்?''

''நேராப் போகலாம்... ஆனா... அங்கே மின் வாரியக் காரங்க ரோட் டுக்குக் குறுக்கே பள்ளம் வெட்டி வேலை பார்க்கிறாங்களே!''

''அப்ப இடது பக்கமா போகலாமா?''

''இடது பக்க ரோட்டிலேதான் டெலிஃபோன்காரங்க கேபிள் ஃபால்டுனு சொல்லி பள்ளம் வெட்டிப் போட் டிருக்காங்களே!''

''அப்ப வலது பக்கமா வழி இருக்கா சார்?''

''வலது பக்கம் குடிநீர் வாரியத்திலேருந்து பள்ளம் வெட்டி வேலை நடக்குதே?''

''அப்ப நான் எப்படி சார் போகலாம்?''

''நேரா வந்த வழியாவே வீட்டுக்குச் சீக்கிரமாப் போயிடுங்க. அதோ நாலு பேர் கடப்பாறை மண்வெட்டி யோட வறாங்க பாருங்க. பிறகு நீங்க வந்த வழி கட் ஆயிடப் போவுது!''

— சீத்தா தம்பி

என்னை இவள் சுற்றி வளைக்கிறாள். ஆனால் மோசம் செய்வாளா? எப்படி இத யத்தைத் திறப்பேன்? என்னவானாலும் எழுதி விடலாம். இரண்டில் ஒன்று தெரிய வேண்டும். நான் எழுதினேன். ஆனால் என் கடிதம் செல்லும் முன்பே குண்டு வெடித்து விட்டது.

நான் எழுதிய கடிதத்தை இரண்டாம் முறை நகல் செய்தேன். தேவி என்னைப் பற்றியே ஆழ்ந்து சிந்திக்கிறாள் என்று எனக் குத் தெரியும்.

என் கடிதம்.

"பிரியமுள்ள சரஸ்வதி தேவிக்கு,

கடிதங்களை எல்லாம் திருப்பி அனுப்பி யுள்ளேன். தவறாகப் புரிந்து கொண்டதால் அல்ல. வெறுப்பினாலும் அல்ல. அவசியத் தால். வேதனைப்படுத்த வேண்டும் என்ற எண்ணமில்லை.

எதிர்பாராது கிடைத்த அனுக்கிரகத்தை அபகரிக்கும் ஆசையும் இல்லை. உங்களுக்கு என் மீது நம்பிக்கை இல்லையென்று தோன்றுகிறது. பரிபூரணமாக என்னை நம் பாதவர்களோடு ஒரு மானசிகப் பற்று வைப் பது என்னால் முடியாது. அதுதான் சத்தியம்.

நம்முடைய நட்பை பொய்களிலும் சந் தேகங்களிலும் மூடி வைக்க வேண்டாம். புரிகிறதா, துயரின் இனிமை கலந்த மோகன காவியமே! இதயத்தை ஏன் அடைத்துப் பூட்டி வைத்திருக்கிறீர்கள்? வெளிப்படை யாக மனம் விட்டு என்னோடு பேசுங்கள்.

புரிந்து கொள்ள என்னால் முடியும்! மதிப்பதற்கும்.

எனக்குப் பேச வேண்டி இருப்பது பொய் களும், கபடங்களும் கலந்த ஒரு மூட்டை யோடு அல்ல. நான் சிநேகிக்கும் அந்தத் துயரின் இனிமை கலந்த மோகன காவியத் தோடு. சரஸ்வதி தேவியின் இருதயத்தோடு, சத்தியத்தோடு.

அதை யாருக்கோ கொடுத்து விட்டிருந் தால், யாருக்காகவோ பத்திரப்படுத்தி வைத் திருந்தால் – பிரிய சிநேகிதியே – நான் நல் வாழ்த்துக் கூறுகிறேன். எல்லா மங்களமும் சித்திக்கட்டும்.

தேவி, உங்கள் இதயம் வசந்தோற்சவப் பூங்காவாக மலரட்டும். அதிலிருந்து புத்தம் புது கான அருவிகள் பொங்கிப் பிரவகிக் கட்டும். துக்கங்களின் கார்மேகங்கள் அகன்று போகட்டும்.

ஆனந்தத்தின் முழு எழிலுடன் சந்தி ரோதயம் உதிக்கட்டும். சரஸ்வதி தேவி, நான் உங்கள் நலனையே விரும்பி வாழ்த்துகிறேன். நான் புறப்படுகிறேன். இனிமேல் எனக்குக் கடிதம் எழுதும்போது ஒரு பக்கத்தில் மட் டும் எழுதுங்கள். பதிலை மறுபக்கத்தில் எழுதி அனுப்புவேன். என் கடிதங்களை எல் லாம் கிழித்தெறிந்து விட்டீர்கள் அல்லவா?

இல்லையெனில் –

ஓ, விருப்பம் போல் செய்து கொள்ளுங் கள்.

நான் இந்த ஊரை விட்டுப் புறப்படு கிறேன். முன்னாலேயே சலித்துப் போயிற்று.

என் வீட்டில் இருந்து அம்மாவின் கடி தம் ஒன்று வந்துள்ளது. நான் அங்கே போக வில்லையெனில் என் குட்டித் தம்பியைக் கூட்டிக் கொண்டு அவர்கள் இங்கே வந்து விடுவார்கள்.

வயதான காலம். நான் போக வேண்டும். தேவி, பதிலை வேகமாக அனுப்பி வையுங் கள். இன்றே அதைக் கண்ட பிறகுதான் நான் இங்கிருந்து கிளம்புவேன்.

தேவி, உங்கள் இதயத்தில் காயங்கள் எப்படி உண்டாயின?

மறந்த வேதனைகளை நான் நினைவூட்டு வதாகக் கருத வேண்டாம். தேவி, அதை யெல்லாம் கதையாய் எழுதுங்கள். ஞாபகங் களுக்காக மட்டும் சொல்லுகிறேன். படித்து பாஸ் செய்யுங்கள். எந்தக் குற்றப் பளுவை யும் வழக்கைத் தலையின் மீது போட்டு விடாதீர்கள்!

(தொடரும்)

இஷா கோபிகர்— சமீபத்தில் 'என் சுவாசக் காற்றே' படத்தின் மூலம் தமிழுக்கு வந்திருக்கும் மும்பை முகம். சினிமாவுக்கு வருவதற்கு முன்னால் நாலு வருட மாடலிங் அனுபவம். ஃபாஷன் ஸ்பெஷலுக்காக அவரைச் சந்தித்தோம்.

"ஃபாஷன் என்பது பற்றி உங்கள் கருத்து என்ன இஷா?"

"இந்தியாவின் ஃபாஷன் தலை நகரம் என்று மும்பையைக் குறிப்பிடலாம். அங்கே வளர்ந்தவள் நான் என்றாலும் கூட, ஃபாஷன் என்பதற்கு நான் நினைக்கும் விளக்கம் சற்று வித்தியாசமானது. ஃபாஷன் என்றால், ஏதோ மேற்கத்திய கலாசாரத்தின் முழுமையான தாக்கத்தில், உடைகளை அணிவது என்றுதான் பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், என் கருத்து அதுவல்ல. ஃபாஷன் என்பது உடையில் மாத்திரமே இல்லை. ஆனால் உடைக்கும் அங்கே முக்கிய இடம் உண்டு. கூடவே, நாம் எப்படிப் பேசுகிறோம், பழகுகிறோம், மற்றவர்களிடம் எப்படி நடந்து கொள்கிறோம்; என்பதெல்லாம் கூட அதில் அடக்கம்!"

"உங்கள் விளக்கம் வித்தியாசமாக இருக்கிறது. ஆனாலும் வித்தியாசமாக உடைகள் அணிவதுதான் ஃபாஷன் என்ற எண்ணம்தானே பரவலாக இருக்கிறது?"

"ஆமாம்! அதற்காக ஃபாஷன் என்ற பெயரில் எப்படி வேண்டுமானாலும் உடைகள் அணிந்து கொள்ளலாம் என்பதில்



சுவாசக் காற்றின் ஃபாஷன்!

எனக்கு உடன்பாடில்லை. நாம் அணியும் உடை நமக்குப் பொருத்தமாக இருக்க வேண்டும். இதுதான் ஃபேஷன்; இதைத் தானே எல்லாரும் அணிகிறார்கள் என்ற காரணத்துக்காக நானும் அப்படி அணிய மாட்டேன். எனக்கு அது பிடிக்க வேண்டும்; பொருந்த வேண்டும் என்பது ரொம்ப முக்கியம்."

"படிக்கிற நாட்களில் ஃபேஷனுக்கு எவ்வளவு தூரம் நீங்கள் முக்கியத்துவம் கொடுத்தீர்கள்?"

"லேட்டஸ்டாய் என்ன டிரெண்டோ, அது எனக்குப் பிடிக்கும்பட்சத்தில் அதைப் பின்பற்றினேன். ஆனால், மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்று நான் தயங்கியது இல்லை. உதாரணமாக, நான் என் துணி அலமாரியை புரட்டிப் போட்டு எதையோ தேடிய போது, சில ஆண்டுகளுக்கு முன் ரொம்ப ஃபேஷனாகக் கருதப்பட்ட பெல்பாட்டம் பேண்ட் ஒன்றைப் பார்த்தேன். உடனே எனக்கு சந்தோஷம் தாங்கவில்லை. எடுத்து வாஷ் பண்ணி, மறுநாள் அதைப் போட்டுக் கொண்டு, காலேஜுக்குப் போனேன். என்னை அநேகம் பேர் வித்தியாசமாகப் பார்த்தார்கள் என்றாலும் கூட, அடுத்த ஒரு வாரத்துக்குள், எங்கள் கல்லூரியில், பத்துப் பதினைந்து மாணவிகள் பெல்பாட்டம் அணிந்து வந்ததைக் காண முடிந்தது."

"சினிமாவுக்கு வந்தபின் உங்கள் ஃபேஷன் டேஸ்ட் மாறியுள்ளதா?"

"சினிமாவுக்கு வந்த பின் எனக்கு திரைக்குப் பின், திரையில் என்று இரண்டு முகங்கள் உண்டு. திரைக்குப் பின்னால், இன்னும் நான் பழைய மாதிரிதான் இருக்கிறேன். எனக்குப் பிடித்த உடைகளையே அணிகிறேன். ஆனால், திரையில் தோன்றுகிறபோது, என் உடைகளை நானே முழுக்க முழுக்க முடிவு செய்வதில்லை. எனினும் நானும் முடிவெடுப்பதில் பங்குகொள்கிறேன்."

"உங்களுக்கு இஷ்டமில்லாத உடையை, அணிய வேண்டிய கட்டாயம் ஏற்பட்ட போது என்ன செய்தீர்கள்?"

"நல்லவேளை! எனக்கு இன்னமும் அது போன்ற கட்டாயச் சூழ்நிலைகள் ஏற்படவில்லை. ஷார்ட்ஸ் அணிந்து கொள்ள வேண்டுமென்றால், அது என்னை அசிங்கமாய் வெளிப்படுத்தக் கூடாது என்பதுதான் என் வரையறை. உடல்ரீதியிலும் சரி, மன ரீதியிலும் சரி, எனக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் எந்த உடையையும் நான் அணிய மாட்டேன்."

"பிடித்த உடை?"

"ஜீன்ஸ், டாப்ஸ்."

"உங்களுக்குப் புடைவை பிடிக்காதா?"

"பிடிக்குமே! வீட்டில் பூஜை என்றாலும், கோவிலுக்குப் போகிறபோதும் புடைவை அணியவே எனக்குப் பிடிக்கும். பொதுவாக திருமணங்களுக்கு, நவீன உடைகளிலும் காக்ரா உடைகளிலும் நான் செல்லுவேன் என்றாலும், நெருக்கமானவர்கள் வீட்டுத் திருமணம் என்றால், என் வோட்டுப் பட்டுப் புடைவைக்கே!

சந்திப்பு : **மானஸா**

அட்டை வண்ணப்படமும், படமும் : **ப்ரவீன்குமார்**



"எத்தனை வாட்டி சொல்றது... 'க்ளாப்' அடிக்கும் போது ஹீரோ முகத்துக்கு ரொம்ப பக்கத்தில 'போய்' அடிக்காதேன்னு!"

– இறிஸ்

அவள் எதிர்காலத்தை பற்றி நீங்கள் முன்கூட்டியே அறியமுடியாது ...



ஆனால் அதை பாதுகாக்க முடியும்.

ராஜ் லக்ஷ்மி

யூனிட் பிளான்-II

ஒரு பரிசை விடமேல், ஓர் எதிர்காலம்

சிறப்பம்சங்கள்

- 5 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்காகவே பிரத்தியேகமானது.
- குறைந்தபட்சம் ரூ.1500 முதலீடு. மேற்கொண்டு ரூ.500 பெருக்கு தொகைகளிலே. முதலீட்டுக்கு வரம்பு கிடையாது.
- பெண் குழந்தைக்காக, யாரேனும் ஒருதனி நபர் (பெற்றோர், உறவினர் அல்லது நண்பர்), ட்ரஸ்ட் , கூட்டுறவு சங்கம், கார்போரேட் பாடி, மத்திய அல்லது மாநில அரசாங்க நிறுவனங்கள் முதலீடு செய்ய முடியும்.
- ஒரு வயதுக்குள்ளோ அல்லது ஒரு வயது நிரம்பிய பெண் குழந்தையின் பெயரில் முதலீடு செய்யப்பட்ட ரூ.1500, 20 வருடங்களில் ரூ.15,000 ஆக வளர்ச்சி பெறக்கூடும். இந்த முதலீட்டின் திட்டத்தின்படி வரும் வளர்ச்சி பதிவு செய்யப்பட்ட வயதை பொறுத்து இருக்கும்.
- விண்ணப்பத்திற்கு ஒப்புதல் பெற்ற தேதியைக் கொண்டே திட்டத்தின் முதிர்வுத் தேதி கணக்கிடப்படும்.
- பெண் குழந்தை 18 வயது அடையும்போது, திட்டத்திலிருந்து விலகிக் கொள்ள உரிமை உண்டு.

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா

உங்கள் மேலான எதிர்காலத்திற்கு

இப்போது : விற்பனைக்காக திட்டம் மறுபடியும் வழங்கப்படுகிறது

அனைத்து பரஸ்பர ஃபண்ட் மற்றும் செக்யூரிடி முதலீடுகள் மார்க்கெட் ரிஸ்கிற்கு உட்பட்டவை. செக்யூரிடி மார்க்கெட்டுகளை பாதிக்கும் காரணிகளால் திட்டங்களின் நவ்-யின் மதிப்பு வளர்ச்சி அடையலாம் அல்லது குறையலாம். கடந்த கால செயலாற்றல் எதிர்கால விளைவுகளைக் குறிப்பிடுபவை அல்ல. "ராஜ்லக்ஷ்மி" யூனிட் ப்ளான்- II என்பது திட்டத்தின் பெயரே தவிர திட்டத்தின் தரம், அதன் எதிர்கால ஆதாயம் அல்லது வருமானத்தைக் குறிப்பிடுபவை அல்ல. திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படும் என்று யாதொரு உத்தரவாதமும் அளிக்கப்பட மாட்டாது. முதலீடு செய்யும்முன் வழங்கு பத்திரத்தை தயவு செய்து படிக்குமாறு கோரப்படுகிறார்கள்.

மண்டல அலுவலகம் : 29, இராஜாஜி சாலை, சென்னை 600 001. போன் : 517101.
கிளை அலுவலகங்கள் : • கோயம்புத்தூர் போன் : 214973 • சென்னை போன் : 517101, 517190
• மதுரை போன் : 738186 • திருச்சி போன் : 760060

063/99 C TAM B

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சாரியார்

12



மீனுக்கு இருக்கக் கூடிய சக்தியைப் பற்றிச் சொன்னேன். அதீதமான சக்தி அது. ஜலத்திலே தாய்மீன் ஒரு திசையிலே வேகமாக வரும். குட்டி மீன் எதிர்த் திசையிலே வரும். தாய்மீன் தன் குட்டி மீனைப் பார்க்கும். அதுவும் தன் தாயைப் பார்க்கும். அப்படிப் பார்த்தவுடனேயே குட்டி மீனுக்குப் பசி நீங்கிவிடுமாம். இடுகிடுவென்று திரும்பிப் போய் விடுமாம்.

இப்படி-பார்வையாலேயே பசியைப் போக்கக் கூடிய சக்தி மீன் ஜாதிக்கு இருக்

கிறதே! நமக்கு இருக்கிறதா இந்த சக்தி!

இன்னொரு திகைஷ ஆமையினுடையது. கிணற்றிலே ஆமைக் குட்டி பிறக்கிறது. அதை அடியேன் எடுத்துக் கொண்டு போய் மாம்பலத்திலே வேறு ஒரு கிணற்றிலே விட்டு விடுகிறேன். தாய் ஆமை இங்கே சுற்றிச் சுற்றி வருகிறது... குட்டியைக் காணாமல் போகவே, கண்ணை மூடிக் கொண்டு நினைக்கிறதாம் அது... 'என் குட்டி எங்கேயிருந்தாலும் பசி நீங்கட்டும்' என்று ஸ்மரிக்கிறதாம். அப்படி ஆமை கண்ணைத் திறந்து திறந்து மூடுவதை நாம் பார்க்கலாம். அவ்வாறு நினைப்பதற்கான சக்தி அதற்கு இருக்கிறது. நினைப்பதன் மூலமே பசி நீங்கச் செய்கிற சக்தி!

ஆகவே நம்மைக் காட்டிலும் மட்டமான ஜந்துக்களிடத்திலெல்லாம் இப்படிப்பட்ட சக்தி இருக்கிறது. ஐந்தறிவு ஜந்துக்கள். பித்ரு காரியம் பண்ணுகிற நாம் அந்த ஆமை நினைப்பது போல் பக்தி சிரத்தையாக, உள்ளன்போடு நினைத்துக் கொண்டால், இந்த உணவெல்லாம் அவர்களுக்குப் போய்ச் சேராதா!

குறையொன்றுமில்லை

ஆகையினாலே, பித்ரு காரியங்கள் குறித்து வீணான விசாரம் பண்ணாதே. பித்ரு காரியம் என்பது ரொம்ப முக்கியம் அந்த பித்ரு காரியத்தினாலே ஆராதிக்கப்படுபவன் பகவான் என்று மனத்திலே பூரணமாக நினைத்துக் கொண்டோமானால் அது வீணான காரியம் என்று தோன்றுமா!

விஷ்ணு இல்லாமல் பித்ரு காரியம் இல்லை; விஷ்ணு இல்லாமல் யக்ஞ காரியம் இல்லை.

சுபமான காரியத்தை எடுத்துக் கொண்டோமானால் கல்யாணத்தில் வரனை சகௌரவமாக அழைத்துக் கொண்டுவந்து பூஜை பண்ண வேண்டும் மாமியார்-மாமனார். 'விஷ்ணு ஸ்வரூபிணே வராயா' என்று வரனைக் கொண்டாட வேண்டும்.

அதற்காக இந்த மாதிரி நித்யம் பண்ண வேண்டுமா என்றால் இல்லை! கல்யாண தினத்திலே மட்டும்தான். மற்ற நாளிலெல்லாம் மாப்பிள்ளைதான் மாமனார் மாமியாரைக் கொண்டாட வேண்டும். ஐந்து பேர் நம் குருவுக்குச் சமம் என்கிறது சாஸ்திரம். யார் யார்? என்றால்... நமக்கு வித்யை கற்பித்த ஆசார்யர்; அம்மா-அப்பா, கன்யகா தானம் பண்ணிக் கொடுத்த மாமனார்-மாமியார். -இவர்களெல்லாம் குருவுக்குச் சமானம். எப்போதும் வந்தனீயாள். நாம்தான் அவர்களை வணங்க வேண்டும். திருமண நாளில் விஷ்ணுவைப் போன்று பூஜிக்கப்படும் மாப்பிள்ளையும் பிற்காலத்தில் அவர்களை வணங்க வேண்டும்.

யக்ஞரூபியானவன், பித்ரு காரியத்திலும் சுப காரியத்திலும் இருக்கிறான். இதையெல்லாம் ரக்ஷிப்பதைப் போலவே சகல உலகத்தையும் ரக்ஷிப்பவன் அவன். நம்மையும் ரக்ஷிப்பவன். இந்த பகவானே நமக்கெல்லாம் நண்பன்-மித்ரன் என்கிறது வேதம். அதனால்தான் அவனை நினைக்கும் தோறும் வருகிறான்.

தந்தையைப் போல் முன்னின்று உதவி செய்கிறான். தாயைப் போன்றவன்; நண்பனைப் போன்றவன். எல்லாவித பந்துவும் அந்த எம்பெருமான்தான். ஆத்ம பந்து அவனே. அவன் ஒருவனே. மீதியெல்லாம் 'ஆபாச பந்துக்கள்' என்று சொல்லிவிட்டது சாஸ்திரம்! பந்துக்கள் போல் தோன்றக் கூடியவர்கள்-ஆனால் அப்படியில்லை என்கிறது சாஸ்திரம். இவர்கள் எல்லாரும் கர்மாதீனமான பந்துக்கள். உண்மையான பந்து பரமாத்மா ஒருவன்தான்.

எல்லாவித ஐச்வர்யங்களும் உடையவன் என்று வேதம் அவனைக் கொண்டாடுகிறது. நம் மனத்தை அவனிடம் சமர்ப்பித்தோ

அருள்வாக்கு

வீடு அழுக்கு இல்லாமல் இருந்தால் போதாது. துணி அழுக்கு இல்லாமலிருந்தால் போதாது. உடம்பு அழுக்கு இல்லாமலிருந்தால் போதாது. நம் மனம் அழுக்கு இல்லாமல் ஆக வேண்டும்.

இதற்கு சாக்ஷாத் பராசக்தியும், பரமேச்வர பத்தினியுமான அம்பாளுடைய சரணாரவிந்தத் தியானம்தான் வழி. அம்பாளின் சரணத்தைத் தியானித்துக் கொண்டே இருந்தால் அழுக்கெல்லாம் போய், குறை எல்லாம் தீர்ந்து பூர்ணமாக அப்படியே நிரம்பிப் போய்விடுவோம். அழுக்கும் குறையும் உள்ள ஜீவர்களாக நாம் உண்டாகியிருப்பது அவள் விளையாட்டுத்தான். எனவே இதிலிருந்து நம்மை மீட்டு நிர்மலமாக, பூர்ணமாகப் பண்ணுவதும் அவள் காரியம் தான்.

ஆடு மாடு மாதிரி சாகாமல், சாந்தியும் ஆனந்தமும் நிரம்பி நம் உயிர் உடலிலிருந்து பிரிந்து மறுபடியும் உடம்பு எடுக்காமல் இருப்பதற்காகத்தான் இத்தனை மதங்களும் உள்ளன. அம்பாளின் தியானத்தைவிட வேறு மதம் வேண்டியதே இல்லை. சாந்தியும் ஆனந்தமும், தந்து நம்மைப் பூரணத்துவம் அடையச் செய்வது அதுவே.

அம்பாளைத் தியானித்துத் தியானித்து நம்மில் யாராவது நிரம்பிப் போய்விட்டால் நம் மதம் தானே வளரும். மதத்துக்காகப்

மானால் சரீர, ஐச்வர்ய, ஆரோக்கியாதிகளையெல்லாம் நமக்குக் கொடுக்கிறான். பரிபூரணமாய் எல்லாவற்றையும் அனுபவிக்கும்படியான சக்தியைக் கொடுக்கிறான்.

சுவாமி தேசிகன் ரொம்ப அழகாகச் சொல்கிறார்:

'தமதனைத்தும் அவர் தமக்கு வழங்கியும் தான்மிக விளங்கும் தகைமையுடைய அருளாளர்'

தன்னிடத்திலிருப்பது மொத்தமும் பிறருக்குக் கொடுக்கிறான். அப்படிக் கொடுத்ததாலே பகவானிடத்திலே குறைந்து போய் விடாது. தான் மிக விளங்குகிறான். வாரிக் கொடுக்க கொடுக்க விருத்தியாகிக் கொண்டே போகிறது அவனிடத்தில்.

பூர்வேபவ: பூர்ய: என்று வேதம் அவனைச் சொல்கிறது. தஸ்மை பூர்வ்யாய– என்கிறது. 'பூர்வீகனான பகவானின் பொருட்டே நாம் இருக்கிறோம்' என்று அர்த்தம்.

பூர்வீகனான பகவான் யார்? என்பது விசாரம். வித்யாரண்ய சுவாமி இதை எடுத்துக் காட்டுகிறார்: வைகுண்டம் என்கிற திவ்ய லோகத்திலே திருமாமணி மண்டபத்திலே ஆதிசேஷன் மேலே வீற்றிருந்து ஏழுலகும் ஆளும் பெருமானாய் இருப்பவன். தன் நடக்கையின் கீழ் நித்ய விபூதி லீலா விபூதி என்ற இரண்டையும் அடக்கக் கூடியவன். அந்த வாநிலவரசிலே விசேஷமாகக் காட்சி அளிக்கிறவன். வைகுண்டத்திலே நாம் போனால் பார்க்கலாம் அவனை... இங்கேயிருந்து பார்க்க முடியாது!

அங்கே அந்த நித்ய சூரிகள் இமை கொட்டுதல் இல்லாமல் அவனை சேவித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட எம்பெருமான் பரவாசுதேவன் இருக்கிறானே... அவனுக்குப் பூர்வீகன் என்று பெயர்.

அப்படியே உட்கார்ந்து உட்கார்ந்து பார்த்தான் பகவான்– அவன் பெருமையை ஒருவரும் தெரிந்து கொள்ளவில்லை. அப்படி எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இறங்கி வந்து விட்டான்.

தன் பெருமை எல்லாவற்றையும் குறைத்துக் கொண்டு இறங்கி வருகிறான். நவீனமாய்த் தோன்றுகிறான்.

வித்யாரண்யர் எழுதுகிறார்: பகவான் நரசிம்ஹன் வந்து தோன்றினான். ராமனாகவும் கிருஷ்ணனாகவும் தோன்றினான். இதெல்லாம் அவனுடைய நூதனமான ரூபம் என்கிறார்.

மங்களத்தையே கொடுக்கக் கூடியவன் மங்களத்தைத் தவிர மற்றொன்றும் அறியாதவன்– அவனை யாரொருவர் யக்ஞத்தின் மூலம் ஆராதிக்கிறார்களோ அவர்களுக்கு கதியை அளிப்பவன்.

ஆனால் அகிஞ்சனர்கள், நோற்ற நோன்பில்லாதவர்கள், நுண்ணறிவில்லாதவர்கள் என்ன செய்வது? யக்ஞம் பண்ண அவர்களால் முடியாதே என்றால்... எல்லோரும் பண்ணக் கூடியதான காரியம் இருக்கிறது. உட்கார்ந்து, விஷ்ணு என்று சொல்லக் கூடிய அவனின் உயர்ந்த திருநாமங்களை வாய்விட்டு, உகந்து, பக்தியுடன் சொல்லுங்கள். அப்படி பக்தியுடன் திருநாமத்தைச்

பிரசாரம், வாதம் எதுவுமே வேண்டாம். நான் ஏன் இதையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறேன்? உபந்நியாசம் செய்கிற இந்த நேரத்தில் அம்பாளைத் தியானித்துக் கொண்டிருந்தால் அது இந்த உபந்நியாசத்தைவிட மிகவும் ஆத்ம க்ஷேமமும் லோக க்ஷேமமும் ஆகும். இந்தப் பேச்சு வார்த்தைகளைவிட நிறைவுக்கு உதவுவது அதுவே. ஆனாலும் எனக்கு இந்த உண்மை இப்படிப் பேச உட்கார்ந்ததால்தான் தெரிகிறது. ஆகவே, பேசப் பேச அதுவும் என் நினைவைச் சுத்தப்படுத்துகிறது என்று தெரிகிறது. நம்மில் ஓர் ஆத்மாவாவது பூரணமாக உயருவதற்காகத்தான் மத விஷயங்களைப் பேசுகிறேன்.

இந்த மத விஷயங்களுக்கெல்லாம் முடிவு நம் குறைகளைக் களைந்து நிறைவு பெறுவதுதான். அவரவரும் அநுஷ்டானங்களைச் செய்து, தன் நிறைவை உண்டாக்கிக் கொள்ள வேண்டும் என்பதே நம் மதம். அதற்கான புத்தியும் சக்தியும் அம்பாளிடமே வேண்டிப் பெற வேண்டும்.



— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

சொன்னால், யக்ஞம் பண்ணினால் என்ன பலன் கிடைக்குமோ அதே பலன் கிடைக்கும்.

இப்படிச் சொன்னால் அதன் பிறகு யக்ஞத்திடம் யாராவது போவார்களா...? உடம்பை வருத்தி, உபவாஸாதிகளெல்லாம் பண்ணிக் கொண்டு யக்ஞம் நடத்துவது ரொம்ப சிரமம். அஸ்வமேத பிரகரணத்திலே சொல்கிறபோது, யக்ஞம் பண்ணுகிற போது 'நகத்தைக் கிள்ளக் கூடாது' என்று சொல்லியிருக்கிறது. அதே மாதிரி யாரோடும் கோபதாபங்களெல்லாம் கூடாது. வெறுமே பேசிக் கொண்டிருக்கக் கூடாது. பெரிதாகத் தும்மக் கூடாது; கொட்டாவி விடக் கூடாது; ஏப்பம் விடக் கூடாது. மௌனமாக இருக்க வேண்டும். மஹா பிரளயமாகப் பல் தேய்க்கக் கூடாது! - அக்கம் பக்கமெல்லாம் அலறியடிக்கும்படியாகப் பல் தேய்ப்பது! பெரிதாகச் சிரிப்பது! யக்ஞம் நடக்கிறபோது இதெல்லாம் செய்தால் ஜன்மாந்திரத்தில் பண்ணிய புண்ணியம் மொத்தமும் போய்விடுகிறதாம்!

அது மட்டுமல்ல; பசியைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். தாகத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். அவ்வப்போது தீர்த்தத்தைப் பருகிக் கொண்டிருக்கக் கூடாது. நாக்கு ரொம்ப வறண்டு போய்விட்டால் கொஞ்சம் தயிர் எடுத்து, தீர்த்தத்தைக் கலந்து ஒரு உத்திரிணி சேர்த்து, உள் நாக்கிலே படும்படி சேர்க்கலாம். அதுகூட நாக்கு வறண்டு போய் விட்டது; இனிமேல் மந்திரம் சொல்ல முடியாது என்கிற நிலையிலேதான்.

மேத்ய சரீரம் என்பது இடுப்புக்கு மேலே உள்ள பகுதி. அமேத்ய சரீரம் என்பது அதற்குக் கீழேயுள்ளது. யக்ஞம் பண்ணுகிறபோது அமேத்ய சரீரத்தில் கை படக் கூடாது. அப்படித் தொட்டு விட்டால் கட்டிய வஸ்திரத்துடன் போய் ஸ்நானம் பண்ணிவிட்டு வர வேண்டும்.

இப்படியெல்லாம் ரொம்ப நியமமாக இருக்க வேண்டும். பல நாள் இருப்பது எவ்வளவு சிரமம்! அதனால்தான் அவன் திருநாமத்தை அரை மணி நேரம் பக்தி சிரத்தையோடு சொல்ல வேண்டும் என்பதை நமக்கு வேதமே சொல்கிறது.

விஷ்ணுவை வேதம் குறிப்பிடுகிற போது எங்கே சொன்னாலும் வாமனனையும் சேர்த்தே சொல்கிறது. குள்ளமாக வந்தானே, அவன்... இரண்டடியால் மூவுலகும் அளந்தானே, அவன்-அந்த விஷ்ணு என்று அடைமொழி விசேஷணத்தோடே சொல்கிறது.

விச்வாமித்ரரை எங்கு சொன்னாலும் மஹாமுனி என்று சொல்கிற மாதிரி!

ஆண்டாளும் இதைக் கருத்தில் கொண்டுதான் யாகம் பண்ணினாள். பாவை நோன்பு என்று அவள் பண்ணியது பெரிய யக்ஞம்! விஷ்ணுவைக் குறித்து யக்ஞம். திருப்பாவை முப்பது பாடல் மூலம் ஒரு யக்ஞம். அதில் ஒவ்வொரு பத்துப் பாட்டிலும் விஷ்ணுவை வாமனன் என்று குறிப்பிடுகிறாள்.

(தொடரும்)

டெலிஃபோன்

மிஞ்சி மிஞ்சிப் போனால் மாதம் இருமுறை தொலைபேசியை உபயோகப் படுத்தப் போகிறவளுக்கு அப்படி என்ன அதில் ஆசை என்று நினைத்துத்தான் போன் கனெக்ஷன் வாங்காமல் தள்ளிப் போட்டேன். காஞ்சனா, காஸ் தீர்ந்து விட்டதென்றால் நான் ஆபீஸ் போகும் போது சொல்வாள். வழக்கமாக தொடர்ந்து மூன்று நாட்கள் மறந்து விட்டு நிற்பேன். அடுத்த நாள் அவளாகவே திட்டிக் கொண்டு வீட்டிலிருந்து ஐம்பதடி தூரத்தி லிருக்கும் ஒரே ஒரு ரூபாய் வசதியில் காஸ் காரனுக்கு போன் செய்வாள். இதை விட் டால் திருவொற்றியூருக்கு இவள் தங்கை வீட்டுக்கு போன் செய்து பிறந்த வீட்டு சமாச்சாரங்களை நாலைந்து எக்டென்ஷன் கள் வரை பேசித் தீர்ப்பாள். ஆக மாதம் பத்தோ இருபதோ செலவோடு ஒழிந்து போகும் ஒரு அனாவசியத்தை முன்னூறுக்கு மேல் அழுது அவசியமாக்கிக் கொள்ள வேண்டுமா என்று எண்ணினேன்.

மேலும் போன் வசதியிலுள்ள பாதக மான மற்றும் சில விஷயங்களுக்கும் பயந் தேன்.


“கொஞ்சம் எதிர் வீட்டு எத்திராஜைக் கூப்பிடறீங்களா?'' என்பார்கள். சிரமேற் கொண்டு எத்திராஜை அழைத்து வந்து பேச வைத்தால் அவர் வந்து பேசி விட்டு, "இனிமே இந்த கீச்சுக்குரல் ஆசாமி போன் செஞ்சா வந்து கூப்பிடாதீங்க... கடன்காரன். எப்பவோ கொடுத்த பணத்தைக் கேட்டு தொல்லை பண்றான். இனிமே யார் எதுன்னு விலாவரியா கேட்டுட்டுக் கூப் பிட்டாப் போதும்'' என்பார். இது தேவையா சொல்லுங்கள்?

இதைத் தவிர ஆபீஸில் ஆத்திர அவ சரத்துக்கு ஆள் கிடைக்கவில்லையென்றால் உடனே போன் பண்ணி நாம் மாட்டிக் கொள்ளும் வாய்ப்பிருக்கிறது.

“யோவ் மூர்த்தி... ஏதாவது காண்டாக்ட் நம்பர் இருந்தா ஆபீஸில் கொடுத்துத் தொலைங்க... வெள்ளிக்கிழமை ராத்திரி என் வீட்டுக்கு எம்.டி. போன் பண்ணி 'ஞாயிற்றுக் கிழமைக்குள்ளே டெண்டர் ஃபைலை முடிக்கணும். ஆபீஸ் வாங்க'ன்னு சொல்லிட்டாரு. இது மாதிரி சமயங்களிலே உன்னை வரச் சொல்லலாம்னு பார்த்தா போன் பண்ண முடியாம போகுது. அக்கம் பக்கத்திலே யார் வீட்டிலுமா போன் இல்லே.. நல்லா டபாய்க்கறீங்க" என்று மானேஜரும் பலமுறை கதறி விட்டார்.

அக்கம் பக்கம் அனேகமாக எல்லோர் வீட்டிலும் போன் வந்து விட்டாலும், இது போன்ற சில வீண் சங்கடங்களுக்கு இடம் கொடுப்பானேன் என்று இருந்தவனை காஞ்சனா அதே காரணத்தைச் சொல்லி நச்சரிக்க ஆரம்பித்தாள்.

“நான் என்ன ஒவ்வொருத்தி போல செல்போனா கேட் கிறேன்... போன் இல் லேன்னு சொல்லிக்கிற துக்கு வெட்கமா இருக்கு'' என்று 'நகை நட்டுண்டா நேக்கு' ஸ்டைலில் மூக்கைச் சிந்தத் தொடங்கினாள். தொலைகிறதென்று மூவாயிரம் கட்டி வைத் தேன்.



நேற்று சாயங்காலம் பளபளவென்று டெலிபோன் கருவி வந்தாயிற்று. அஷ்டமி, நவமி என்று நேற்று விட்டு விட்டவள், இன்று விடியற்காலையில் பட்டனை

அழுத்த ஆரம்பித்தவள்தான், விடுபவளாயில்லை.

"ஹலோ யாரு கமலாதானே. நான்தான் காஞ்சனா பேசறேன்... உன்னைக் காய்கறிக்



கடையிலே பார்த்ததா என் வீட்டுக்காரர் இப்பத்தான் சொல்றார். பாரேன் வீட்டுக்கு போன் வந்த சமாசாரத்தை உங்கிட்டே சொல்ல மாட்டாரோ... கேட்டாக்க, பக்கத்து ஃபிளாட்டிலேதானே கமலா இருக்காங்க. நேத்து ஃபோன் இன்ஸ்ட்டால் பண்ணும் போது பார்த்திருப்பேன்னு சொல்றார். இப்பக் கூட உன் வீட்டுக் கதவைத் தட்டி போன் வந்த விஷயத்தைச் சொல்றேன்னு சொன்னார். நான்தான் ஃபோன் வந்த சமாச்சாரத்தை ஃபோனிலேயே சொல்றேன்னு உனக்கு இப்போ பண்ணினேன். எங்க வீட்டு நம்பர் கூட ஈஸியா ஞாபகம் வச்சுக்கிற மாதிரிதான் இருக்கு. அதாவது இரண்டு ஆட்சிக் கவிழ்ப்புப் பண்ணினா எங்க வீட்டு போன் நம்பர். புரியலையா 356356. இனிமே அவசரத்துக்கு ஒரு தம்ளர் பால், காப்பிப் பொடின்னு நான் உன் வீட்டுக் கதவைத் தட்ட மாட்டேன். போன் பண்ணிச் சொன்னா நீயே கொண்டு வந்து கொடுத்துடப் போறே. சரி வைச்சுடறேன். இன்னும் ஒரு குயர் நோட்டு ஃபுல்லா சொந்தக்காரா, தெரிஞ்சவா நம்பர் இருக்கு. அத்தனையையும் இன்னிக்குள்ளே கவர் பண்ணணும்" என்று காஞ்சனா ரிஸீவரை வைக்காமலேயே போனை டிஸ்கனெக்ட் செய்துவிட்டு அடுத்த நம்பரை நோட்டுப் புத்தகத்தில் தேடினாள்.

மூக்கால் மூவாயிரம் அழுது பெறப்பட்ட தொல்லையை நினைத்து நொந்தபடி, வெந்து கொண்டிருந்த காய்கறி மீது உப்பை அள்ளிப் போட்டேன். காலையிலிருந்து காஞ்சனா சமையற்கட்டிற்குள் நுழையவில்லை. பல்லைத் தேய்த்து விட்டு டெலிபோன் பக்கத்தில் உட்கார்ந்தவள்தான், பளபள பட்டன்களை தேய்த்துத் தேய்த்து அரை நாளில் அரை இஞ்ச் அழுக்கை ஏற்றி விட்டிருந்தாள். நான் காப்பி, டிபன் என்று அவளுக்கு அந்தந்த நேரத்திற்கு சப்ளை செய்து கொண்டிருந்தேன்.

போன மாதம் என் பையன் பூணூல் கல்யாணத்திற்கு பத்திரிகை அனுப்ப குறித்து வைத்திருந்த விலாசங்கள், போன் நம்பர்கள் அடங்கிய நோட்டுப் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டவள், நேரடி சொந்தங்கள், ஒன்றுவிட்ட ரெண்டு விட்ட மற்றும் விடுபட்ட சொந்தங்களென தொடங்கி, ஒண்ணாங்கிளாஸ் முதல்

அகிலா கார்த்திகேயன்

கல்லூரி நண்பிகளென்று தொடர்ந்து, தற்போதைய பாட்டு கிளாஸ் பொம்மை கிளாஸ், தேவார, சௌந்தர்யலஹரி வகுப்பு மாமிகள் வரை ஒருவரையும் விடாமல், எல்லோருடைய நம்பர்களையும் தேடி தனக்கு போன் அந்தஸ்து வந்து விட்டதை பாதி நாளாக பறைசாற்றியபடி அமர்ந்திருந் தாள்.

"ஹலோ... யாரு அம்மாவா?" என்று திடீ ரென்று காஞ்சனாவின் குரல் உச்சஸ் தாயியில் ஒலிக்க எனக்கு கிலி கண்டது. லோக்கல் முடிந்து எஸ்.டி.டி. ஆரம்பம். "ஆங்... நான்தான் காஞ்சனா பேசறேன். ஆமாம் நேத்துதான் கனெக்ஷன் வந்தது. சரி சொல்றேன் குறிச்சுக்கோ... 3563.56. ஈஸியா ஞாபகம் வைச்சுக்கலாம் இல்லே... ஏன் தொண்டை கட்டினா மாதிரி பேசறே. ரெண்டு மிளகை வாயிலே அடக்கிண்டு வா. நான் லைன்லே இருக்கேன். அவசரம் ஒண்ணுமில்லே. அதுவரைக்கும் அப் பாகிட்டே குடு. யாரு அப்பாவா... நேத்து உன் லெட்டர் கிடைச்சுது. பி.பி. குறைஞ் சிருக்கு இல்லே. என் நாத்தனாருக்கு ஹைப்பர் டென்ஷன்னு முந்தா நேத்தி ஒரே களேபரமாயிருச்சு. இவர் போய் நாத் தனாரை பாத்துட்டு வந்தார். ஆமாமாம். சாப்பாட்டுலே கட்டுப்பாடு வேணும். நாத்த னாருக்கு நாக்கைக் கட்டுப்படுத்தாம திங் கணும். நல்லா காரசாரமா துவையலை அரைச்சு முழுங்கினா வராம என்ன பண் ணும்? சரி உடம்பைப் பார்த்துக்கோப்பா. சரி, சரி இப்பத்தான் வர ஆரம்பிச்சிருக்கு. நல்ல வடுவாய் வந்தா வாங்கிப் போட்டு வைக்கறேன். அதுக்கென்னப்பா... உன் வாய் செத்துக்கிடக்கு. நாலைஞ்சு மாவடு தொட் டுக்கிறதிலே என்ன வந்துடப் போறது. ராம்ஜி அங்க வரும்போது கொடுத்துவுட றேன். அம்மாகிட்டே கொடுக்கறயா... அம்மா இன்னிக்கு என்ன சமைச்சே... குழம்பு வடாமா... உம் நானும் போட ணும்மா. கொஞ்சம் எப்படிப் போடற துன்னு சொல்லேன். இருக்கார். என்னத் தையோ சமையல் ரூமிலே குடைஞ்சுண் டிருக்கார். கூப்பிடறேன்" என்று ரிஸீவர் வாயைப் பொத்திக் கொண்டு, "என்ன இன் னுமா சமைச்சு முடிக்கலே. எங்க அம்மா லைன்லே இருக்கா. கொஞ்சம் வாங்க" என்ற அந்த வம்புக்கு என்னையும் காஞ் சனா அழைத்தபோது, என் சொத்தைப் பல், டாக்டரிடம் போகாமலேயே விழுந்தது. அத்தனை ஆக்ரோஷமாக பல்லைக் கடித் துக் கொண்டு அடித்துப் பிடித்துக் கொண்டு ஓடி மேட்டூர் மாமியாரை, "ஹலோ சௌக்கியமா?" என்று அரை செகண்டில் விசாரித்து விட்டு ரிஸீவரை வைத்த பின்தான் சொத்தைப் பல்லைத் துப்பப் போனேன்.

"உங்களை யார் கட் பண்ணச் சொன்னா? இன்னும் அம்மாகிட்டே குழம்பு வடாம் போடறது பத்திக் கேட்டுக் குறிச்சுக்கலே. சுந்தர்கிட்டே பேசலே" என்று சர்வ அலட்சியமாக காஞ்சனா என் பல் லைப் பற்றியோ போன் பில்லைப் பற்றியோ கவலைப்படாதவளாய் மீண்டும் மேட்டு ருக்கு எஸ்.டி.டி.யில் பயணமானாள்.

அப்படியே சேலம், ஈரோடு, திருச்சி, பரமக்குடி, ஸ்ரீவில்லிபுத்தூர் என்று அவள் தூரத்து உறவுகளை துரத்தித் துரத்தி எஸ்.டி.யில் பிடித்தபோது, அந்த ஊருக்கெல் லாம் சூடுவைத்த மீட்டர் பொருந்திய ஆட் டோவில் பயணம் செய்யும் மனபிராந்தியில் என் இரத்த அழுத்தம் எகிறியது.

மதியம் வரை நிலைமை தொடர நான் கதிகலங்கினேன்.


"அப்படி என்ன காணாததைக் கண்ட வன் மாதிரி போனும் கையுமா உட்கார்ந் துட்டு இருக்கே.. இன்னிக்கு மட்டும் போன் சார்ஜ் ஆயிரக்கணக்கிலே ஆகியிருக்கும்" என்று சற்று துணிவோடு அவளை எச்சரித் தேன்.

"இதோ பாருங்கோ. பணம் போற தேன்னு அடிச்சுக்காதீங்க. நம்ப வீட்டுக்கும் போன் வந்தாச்சு. நாமளும் அந்தஸ்தாத்தான் இருக்கோம்'னு நாலு பேருக்கு காட்டிண்டா தப்பா, சொல்லுங்கோ. இன்னும் முக்கிய பட்டவாகிட்டேயெல்லாம் பேசலே. டில்லி பிச்சுமணியோட நம்பர் தெரியலே.. பெங்க

மனைவி: என்னங்க! விஷம் நீலக் கலர்ல தானே இருக்கும்?

கணவன்: ஆமாம்.. ஆனா நீ கொடுக்கற காப்பி மட்டும் ப்ரௌன் கலர்ல இருக்கும்.

– அவினாசி சுகுமார்



ளூருக்கு போன் பண்ணி விசாலம் மாமிகிட்டே கேட்டிருக்கேன். 'தேடி வைக்கறேன் திரும்பவும் காண்டாக்ட் பண்ணு'ன்னு சொல்லியிருக்கா. உங்க டைரிய பாத்து போபால் எஸ்.டி.டி. கோட் என்னென்னு சொல்லுங்கோ. கோபாலோட பேசணும்'' என்று ரிஸீவரை காதில் பொத்திக் கொண்டு நான் சொல்வதைக் காதில் வாங்கிக் கொள்ளாதவளாய் இன்டர்ஸ்டேட் தொலைத் தொடர்புகளைத் தொடர்ந்தாள்.

"சரி எக்கேடு கெட்டும்னாலும் போ... நான் சமையலை முடிச்சுட்டேன்.. பத்து பாத்திரம் தேய்க்கணும். துணியையெல்லாம் தோய்க்கணும். அதையாவது செய்வியா" என்று கேட்டதும்தான் காஞ்சனாவிற்கு பிரக்ஞை வந்தது.

"ஏன் முனியம்மா வரலையா?" என்றாள்.

"அப்படிக் கூட வீட்டு நினைப்பே இல்லாம பழியா போன்கிட்டே உட்காருவே.. இன்னிக்கு வேலைக்காரி வரலே" என்றேன்.

"ஐயையோ ரெண்டு நாள் துணி சேர்ந்திருக்கே. இவ ஏன் இப்படி கழுத்தறுக்கறா.. சரி, ஹேமா வீட்டுக்கும் முனியம்மாதான் செய்றா. ஹேமாவை போன் பண்ணி கேட்கறேன்" என்று அதற்கும் இவள் போனை நாடிய போது என் நாடி நடுங்கியது.

அதற்குள் முதன் முதலாக எங்க வீட்டு போனே ஒலித்தது. யார் என்ன விஷயம் என்ற ஆவல் மிகுதியில், காஞ்சனா பேசும் போது காதைத் தீட்டிக் கொண்டு கேட்டேன்.

"ஹலோ காஞ்சனா அம்மாங்களா... நான்தான் முனியம்மா பேசறேன். பக்கத்து வூட்டு மாமி வூட்டுக்குப் போன் பண்ண சொல்லத்தான் உங்க வூட்டுக்கும் போன் வந்துடுச்சின்னாங்க. இனிமே சௌர்யமா பூட்ச்சி. உன் வூட்டுக்கும் போன்லேயே நான் வர முடியாதன்னிக்கு சொல்லிடலாம் பாரு.." என்று முனியம்மா பேசியது கேட்டது.

"சரி, நீ எங்கேர்ந்து பேசறே" என்றாள் காஞ்சனா.

"என்னம்மா இப்படிக் கேட்டுக்கினே... அதான் வூட்டுக்கு வூடு லோகல் பட்டுகினிகிதுன்னு என் வூட்டுக்காரரு கனிக்ஷன் வாங்கி ஆறு மாசமாதே. நான் போன் வைச்சிகினுகிற எல்லார் வூட்லேயும் நம்பர் கொடுத்துகிறேன். உங்க வூட்லதான் இத்தினி நாள் கழிச்சி இப்பத்தான் வந்துகிது. என் நம்பரைக் குறிச்சிக்கிறயா?'' என்று முனியம்மா சொல்லச் சொல்ல காஞ்சனாவின் முகம் கடுகடுவெனவாகி ரிஸீவரை 'ணங்'கென்று வைத்தாள். வைத்தது தான் தாமதம் திரும்பவும் ஒலித்தது.

இப்பொழுது காஞ்சனா அதைத் தீண்டவில்லை.

"ஃபோனை எடேன்'' என்றவளிடம் பாய்ந்தாள்.

"நீங்களே எடுத்துப் பேசித் தொலைங்க" என்றாள்.

கௌரவப் பேத்தி!



நவோமி காம்ப்பெல் – உலகப் புகழ் ஃபாஷன் மாடல். தென் ஆப்பிரிக்க குழந்தைகள் நல நிதிக்குப் பணம் சேர்க்க பல நிகழ்ச்சிகளில் இவர் கலந்து கொண்டார். வழக்கமாக இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு அவர் வாங்கும் 'ரேட்டை'க் கணிசமாகக் குறைத்துக் கொண்டு நெல்சன் மண்டேலாவிடம் 'என் கௌரவப் பேத்தி' என்ற பட்டத்தையும் கட்டிக் கொண்டார். இப்போது வேறு தரப்பினரின் 'குட்டையும்' வாங்கிக் கொண்டிருக்கிறார்... இவருக்கு உடை வடிவமைத்தவர்களும், இவரை அழகழகாகப் படம் எடுத்தவர்களும் நவோமி புகழ் போதையில் தங்களைப் புறக்கணிப்பதாகக் குட்டியிருக்கிறார்கள்!

– குல்லு

அகராதியில் நைட் கவுன் (Night goun) என்பதற்கு 'படுக்கும்போது அணியும் நீண்ட இறுக்கமற்ற 'ஆடை' என்று தரப்பட்டிருக்கிறது. நைட் கவுன்தான் இப்போது நைட்டியாகச் சுருங்கி விட்டது. படுக்கும்போதுதான் அணிய வேண்டும் என்ற மரபு உடைக்கப்பட்டு, அலுவலகத்திலிருந்தோ அல்லது வெளியிலிருந்தோ வந்தவுடன் பெண்களும் இளைஞிகளும் நச நசப் புடைவை, சுரிதார்களைத் தூக்கியெறிந்துவிட்டு



•தெருவோரக் கடைகளிலும் அமோக விற்பனைதான்!
(படம்: ஸ்ரீஹரி)

நைட்டிக்கு மாறி விடுகிறார்கள். அதனால் வளரும் தேவைகளை கணக்கில் எடுத்துக் கொண்டு, நைட்டிகளை மட்டுமே தயாரிக்கும் தனி நிறுவனங்கள் பல வந்து விட்டன. கண்ணைக் கவரும் அட்டகாசமான விளம்பரங்கள், புதுப் புது டிசைன்கள். பெண்களை வியக்க வைக்கும் விலைப்பட்டியல் போன்ற விஷயங்கள் ஒருபுறமென்றால், பிளாட்பாரங்களில் குறைந்த விலைகளில் விற்கப்படும் நைட்டிகள் மறுபுறம்!

"நைட்டிக்கு வந்த வாழ்வைப் பார்த்தீங்களா? முதன் முதலா பத்து வருடங்களுக்கு முன்பு நான் நைட்டி அணியத் துவங்கினேன். கூட்டுக் குடும்பமாக இருந்ததால் முதலில் சில நாட்கள் நைட்டியுடன் டைனிங் டேபிளுக்கு வருவதே சங்கடமாகவும், வெட்கமாகவும் இருந்தது- ஆனால் காலப் போக்கில் எல்லோருமே அணியத் துவங்கி விட்டார்கள். பல பெண்கள் அருகிலுள்ள கடைகளுக்கு, காய்கறிகள் வாங்குவதற்கு என்று மேலே சின்ன டவலை போட்டுக்கொண்டு நைட்டியுடனேயே வெளியில் வரத் துவங்கி விட்டார்கள். இப்போது அந்த டவலையும் தூக்கிப் போட்டு விட்டார்கள்!" என்கிறார் மத்திய அரசு அலுவலகத்தில் பணிபுரியும் சந்திரிகா.

"மேல்தட்டுப் பெண்கள் நைட்டி அணிவதென்பது புதிய பழக்கமல்ல என்றாலும் இந்தக் கலாசாரம் நடுத்தர வகுப்பு –



குறிப்பாக வேலைக்குப் போகும் பெண்களைத் தாக்கியது பதினைந்து வருடங்களுக்கு முன்புதான். இப்போது கிராமத்தில் வயல்வேலை செய்யும் பெண்கள்கூட நைட்டி அணிய ஆரம்பித்துவிட்டார்கள்!" என்கிறார் டைலரான சண்முகம்.

தேவைகள் அதிகரித்துக் கொண்டே வருவதால் இப்போது நூற்றுக்கணக்கான டிசைன்களில் நைட்டிகள் வருகின்றன. தேன்நிலவுத் தம்பதிகளுக்கு என்று எட்டு நைட்டிகள் கொண்ட ஹனிமூன் செட், பாலூட்டும் பெண்களுக்கு வசதியான நைட்டி; கர்ப்பிணிகளுக்கான ஃப்ரீ ஸைஸ் நைட்டி என்று அசத்துகிறார்கள். சூரிதார் டாப்ஸ் போல சமீபத்தில் ஒரு டிசைன் வந்திருக்கிறது. முட்டி வரை நீண்டிருக்கும் இந்த ஆடையை நைட்டியாகவும் அணியலாம்; சூரிதார் டாப்ஸாகவும் அணியலாம்!

'நாங்கள் உற்பத்தி செய்கிற நைட்டிகளின் டிசைன்கள் மும்பையில் இருந்து இறக்குமதி செய்யப்படுபவைதான்" என்கிறார் உள்ளாடை உலகத்தில் தனி முத்திரை பதித்திருக்கும் 'நாயுடு ஹால்' ஆனந்த். "நாங்கள் எங்கள் நைட்டிகளுக்கு விளம்பரம் செய்வதில்லை. நன்றாக விற்கும் ஒரு பொருளுக்கு எதற்கு விளம்பரம்?" என்கிறார் ஆனந்த். நாயுடு ஹால் தயாரிப்பில் 150 ரூபாய் முதற்கொண்டு 1500, 2000 ரூபாய் வரை நைட்டிகள் இருந்தாலும் அறுபது, எழுபது சதவிகித விற்பனை என்பது 300 ரூபாய்க்குட்பட்ட நைட்டிகள் தானாம்.



நைட்டிகள் ஷோரூமை நடத்தும் 'சாட்டீனுட்' மதன் மோகன்.

விலை உயர்ந்த 'சாட்டீன்' துணியில் தயாரிக்கப்பட்ட நைட்டிகளும் நன்றாகவே விற்பனையாகிறதாம். பெரும்பாலான நைட்டிகள் காட்டன் + டெரின் கலவைதான். ஏனென்றால் இந்த கலவையில் தயாரிக்கப்பட்டவற்றைத் துவைத்து இஸ்திரி போடாமலேயே அணிந்து கொள்ள முடியும். முற்றிலும் காட்டன் நைட்டிகளை பெண்கள் அவ்வளவாக விரும்புவதில்லையாம். எங்களது ப்ராடக்ட் இப்போது தான் பிக் அப் ஆகி உள்ளது. இன்னமும் ஒரு வருடம் பொறுத்திருங்கள். பின்பு பேசுகிறேன்" என்கிறார் ராசாத்தி உரிமையாளர்களுள் ஒருவரான முத்து.

பெரிய தயாரிப்பாளர்கள் இப்படியெல்லாம் மார்க்கெட்டைக் கலக்கிக் கொண்டிருந்தாலும் தெருவோரக் கடைகளிலும் நைட்டி விற்பனை அமோகமாகத்தான் இருக்கிறது! "என்ன பிரச்னை என்றால் நாங்கள் நூறு ரூபாய் என்று விலை சொன்னால் அறுபது ரூபாயிலிருந்து பேரத்தைத் துவக்குவார்கள். கடைசியில் எண்பதில் முடியும்!" என்கிறார் பாண்டிபஜாரில் பிளாட்பார நைட்டி கடை வைத்திருக்கும் அன்சாரி.

"பெரிய, பெரிய வி.ஐ.பி வீட்டுப் பெண்மணிகளும் எங்களிடம் நைட்டி வாங்குவார்கள் ஸார்.. ஆனால் அது அவர்களுக்கல்ல; அவர்கள் வீட்டு வேலைக்காரிகளுக்கு!'' என்று சொல்லிச் சிரிக்கிறார் அன்சாரி.

தேசிய உடை ஆகி வரும் நைட்டி!

சமீப காலங்களில் பெண்களைக் கலக்கி வருவது ராசாத்தி நைட்டிகள். 'இதயம் நல்லெண்ணெய்த் தயாரிப்பாளர்கள் திடீரென்று நைட்டி தயாரிப்பில் இறங்கியது வியாபார உலகத்தில் பலரையும் ஆச்சர்யப்பட வைத்தது; அதிரடியாகக் களத்தில் குதித்து ஒரு பரபரப்பை உண்டு பண்ணியிருக்கிறது ராசாத்தி.

''ராசாத்தியில் ஐம்பதுக்கும் மேற்பட்ட டிசைன்களில் நைட்டிகள் இருக்கின்றன. 320 ரூபாயிலிருந்து 1200 ரூபாய் வரை உண்டு. எங்களிடம் வருபவர்கள் மேல்தட்டு வாடிக்கையாளர்கள் மட்டுமல்ல. நடுத்தர குடும்பத்துப் பெண்மணிகளும் உண்டு. காரணம் சற்று அதிகம் விலை கொடுத்து வாங்கினாலும், நீண்ட காலம் உழைக்கும் என்று வாங்குகிறார்கள்" என்கிறார் ராசாத்தி

— ஸ்ரீநிவாசன்

எங்களிடம் ராசிக்கல் மோதிரம் வாங்கி பயன்பெறும்
அனைவருக்கும் எங்களது வாழ்த்துக்கள்

ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை P.R. ஜுவல்லரி


P.R. JEWELLERY

GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES
102, USMAN ROAD, T. NAGAR, CHENNAI - 17.
PH: 4344442. TUESDAY HOLIDAY

P.R. ஜுவல்லரியில் ராசிக்கல் மோதிரம் வாங்கி அணிந்துபயன்பெறுங்கள். ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ. 400/-

குறிப்பு: எங்கு ஜோதிடம் பார்த்தாலும் எங்களிடம் வந்து ரூ. 400/-க்கு ராசிக்கல் மோதிரம் வாங்கி பயன்பெறுங்கள். ஒரிஜினல் கல் என முழு உத்திரவாதம் தருகிறோம்.

நகைக் கடைக்கு நிறைய அனுபவம் தேவை. எனக்கு 20 வருட அனுபவம் உள்ளது. **P.R.** ஜுவல்லரி நிறுவனம் தொடங்கி 13 ஆண்டுகள் ஆகிறது. எங்கள் கடைக்கு நிறைய வாடிக்கையாளர்கள் உள்ளனர். ஆர்டரின் பேரில் வைர நகைகள், தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் சிறந்த முறையில் செய்து தருகிறோம். பரிசுப் பொருட்கள் ரூ. 50 முதல் ரூ. 10,000 வரை கிடைக்கும். அனைத்து ராசிக் கற்களும், ஸ்படிக மாலைகள், ஸ்படிக வினாயகர், ஸ்படிக லிங்கம், பவழ வினாயகர், பவழ மாலைகள், முத்து மாலைகள் அனைத்தும் கிடைக்கும்.



நவரத்தினம்

ராஜாக்கள் காலத்தில் இருந்தே வைரங்கள், வைடூரியங்கள், இரத்தினங்கள், நவரத்தினங்கள் உபயோகத்தில் உள்ளன. தற்போது 3 வருடமாக அனைவரும் ராசிக் கற்களை விரும்பி வாங்குகிறார்கள். எந்த ஜோதிடராக இருந்தாலும் ஒருவருக்கு இராசிக்கல் தேர்ந்தெடுக்க அவரது ராசிப் படியும், நடப்பு திசைப்படியும், எண் படியும்தான் எழுதித் தருகிறார்கள். இதில் ராசிப்படி அணிவதுதான் மிகச் சிறந்தது. உதாரணமாக, நாம் கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்யும் பொழுது ஜென்ம நட்சத்திரம், இராசி சொல்லித்தான் அர்ச்சனை செய்கிறோம். அதனால், அதன்படி அணிவதுதான் மிகச் சிறந்தது. அனைவரும் நவரத்தின மோதிரம் அணியலாம். மிகவும் நல்லது. இது 9 கிரகங்களின் பலனைத் தரும். 6 கிராம் தங்கத்தில் நவரத்தின மோதிரம் ரூ. 6,250/-

நவரத்தினங்களின் பயன்கள், விலை விபரங்கள், அணிபவர்கள் வழிபட வேண்டிய ஸ்தலங்களின் விபரங்கள் :

1. சூரியன் – மாணிக்கம் **(RUBY)** அறிவு விருத்தியாகும். நல்ல உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்லும். தைரியத்தையும் துணிச்சலையும் தரும். செல்வம் தரும். சிம்மராசிக்காரர்களும், சூரிய தசை நடப்பவர்களும் அணியலாம். 1 CARAT விலை ரூ. 1500/- ஆகிறது. வெள்ளியில் அணிவது சிறந்தது. 20 Cent கல் வைத்து மோதிரம் ரூ. 400/- வழிபட வேண்டிய ஸ்தலம் சூரியனார் கோயில். தஞ்சை மாவட்டம். கும்பகோணத்திலிருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ளது.

2. சந்திரன் – முத்து **(PEARL)** ஞாபக சக்தி, செல்வம், வாக்கில் வலிமை, பலவித வசதிகள் ஏற்படும். கடக ராசிக்காரர்களும், சந்திரன் தசை நடப்பவர்களும் அணியலாம். 1 CARAT விலை ரூ. 100/-. வெள்ளியில் அணிவது சிறந்தது. 2 காரட் முத்து வைத்து மோதிரம். ரூ. 400/- வழிபட வேண்டிய ஸ்தலம் திங்களூர். தஞ்சை அருகில் உள்ளது.

3. குரு – புஷ்பராகம் **(PUSHPARAGAM)** வசதி, சுபகாரியங்கள், நன்மதிப்பு, செல்வம் ஆகியவை பெருகும். தனுசு ராசி, மீன ராசிக்காரர்கள் மற்றும் குருதசை நடப்பவர்கள் அணியலாம். வெள்ளை, மஞ்சள் ஆகிய வண்ணங்களில் கிடைக்

கும். தங்கத்திலும், வெள்ளியிலும் அணியலாம். 4 கிராம் தங்கத்தில் ரூ. 2300/- ஆகும். வெள்ளியில் ரூ. 400/- ஆகும். வழிபட வேண்டிய ஸ்தலம் ஆலங்குடி கும்பகோணத்தில் இருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ளது.


4. ராகு – கோமேதகம் **(GOMEDAGAM)** தடைபடும் காரியங்கள் நிறைவேறும். ராகு தசை நடப்பவர்கள் அணியலாம். வெள்ளியில் அணிவது சிறந்தது. 1 CARAT விலை ரூ. 250/- மோதிரம் விலை ரூ. 400/- வழிபட வேண்டிய ஸ்தலம் திருநாகேஸ்வரம் கும்பகோணத்தில் இருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளது.

5. புதன் – மரகதப் பச்சை **(EMERALD)** கல்வி, செல்வம், ஞானம், ஆரோக்கியம், அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். மிதுன ராசி, கன்னிராசிக்காரர்கள் மற்றும் புதன் தசை நடப்பவர்கள் அணியலாம். 1 CARAT விலை ரூ. 1500/- வெள்ளியில் அணிவது சிறந்தது. 20 Cent கல் வைத்து வெள்ளி மோதிரம் ரூ. 400/- வழிபட வேண்டிய ஸ்தலம் திருவெண்காடு, மயிலாடுதுறை அருகில் உள்ளது.

6. சுக்கிரன் – வைரம் **(DIAMOND)** புகழ், செல்வம், அனைத்துக் காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். துலா ராசி, ரிஷப ராசிக்காரர்கள் மற்றும் சுக்ர தசை நடப்பவர்கள் அணியலாம். தங்கத்தில் அணிவது சிறந்தது. 1 CARAT விலை ரூ. 35,000/- 5 Cent வைரம் வைத்து 4 கிராம் தங்கத்தில் மோதிரம் ரூ. 4,250/- வழிபட வேண்டிய ஸ்தலம் கஞ்சனூர், கும்பகோணத்தில் இருந்து சூரியனார் கோயில் வழியில் 20 கி.மீ. தொலைவில் உள்ளது.

7. கேது – வைடூரியம் **(CATSEYE)** வியாபாரம் பெருகும். நிறைய வருமானங்களைக் கொடுக்கும். கேது தசை நடப்பவர்கள் அணியலாம். வெள்ளியில் அணிவது சிறந்தது. 1 CARAT விலை ரூ. 1000/- 20 Cent கல் வைத்து மோதிரம் விலை ரூ.400/- வழிபட வேண்டிய ஸ்தலம் பெரும் பள்ளம் (வாணகிரி) மயிலாடுதுறை பூம்புகார் வழியில் தர்மகுளம் அருகில் உள்ள நாகநாதசுவாமி கோயிலில் உள்ளது.

8. சனி – நீலம் **(SAPPHIRE)** அறிவு, மன அமைதி, பெயர், புகழ், செல்வம் ஆகியவை தரும். மகர ராசி, கும்பராசிக்காரர்கள் மற்றும் சனி தசை நடப்பவர்கள் அணியலாம். 1 CARAT விலை ரூ. 1500/- வெள்ளியில் அணிவது சிறந்தது. 20 Cent கல் வைத்து மோதிரம் ரூ. 400/- வழிபட வேண்டிய ஸ்தலம் திருநள்ளாறு. காரைக்காலுக்கு அருகில் உள்ளது.



9. செவ்வாய் – பவழம் **(CORAL)** மனதில் துணிவு, திருஷ்டியைப் போக்கும். செல்வம் மேலும் பல நன்மைகள் கூடும். மேஷ ராசி, விருச்சிகராசிக்காரர்கள், செவ்வாய் தசை நடப்பவர்கள் அணியலாம். 1 CARAT விலை ரூ. 100/- வெள்ளியில் அணிவது சிறந்தது. 2 CARAT பவழம் வைத்து மோதிரம் ரூ. 400/- வழிபட வேண்டிய ஸ்தலம் வைத்தீஸ்வரன் கோயில். மயிலாடுதுறையில் இருந்து 14 கி.மீ. தொலைவில் வடக்கில் உள்ளது.

அனைவரும் அணியக்கூடியது கார்னெட் வெள்ளி மோதிரம். விலை ரூ.400/- இதை அணிவதால் படிப்பு, ஞாபக சக்தி, வேலை வாய்ப்பு, வியாபாரம், செல்வ வளம் பெருகும். நம்பிக்கை, உழைப்பு, முயற்சி செய்தால் ராசிக்கல் மோதிரம் அணிந்து 100 சதவீத வெற்றி பெறலாம். எங்களிடம் ஜாதகம் கொண்டு வந்தால் என்ன கல் போட வேண்டும் எனச் சொல்கிறோம். கட்டணம் கிடையாது. ஜாதகம் இல்லாதவர்கள் பிறந்த தேதி, நேரம் ஆகியவற்றைக் கொண்டு வந்தால் கம்ப்யூட்டர் மூலம் ஜாதகம் கணித்து தருகிறோம். கட்டணம் ரூ. 50/- எங்கு ஜாதகம் பார்த்தாலும் எங்களிடம் வந்து ராசிக்கல் மோதிரம் வாங்கிப் பயன் பெறுங்கள். நாங்கள் தரும் கல் ஒரிஜினல் என முழு உத்தரவாதம் தருகிறோம். தபால் எழுதினால் முழு விவர பாம்லட் இலவசமாக அனுப்புகிறோம்.

டுப்பியின் குடும்பம்

அலமு: அரஸ்



Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications
Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager; Subscription and Advertisement : 2345623
Chief Administrative Officer : 2345622; Fax : 2345621
Annual Subscription : India Rs. 250/-; Overseas Rs. 1900/- (Air Mail)
Half Yearly Subscription : India Rs. 125/-; Overseas Rs. 950/- (Air Mail)


இலவச
இணைப்பு
கல்கி
KALKI
18.4.99
ஃபாஷன்
ஸ்பெஷல் - II
நெற்றிக்கு நகைகள்!



தொடர்ந்து ஜெயிக்கும் சூரிதார்!

பதினைந்து வருடங்களுக்கும் மேலாக எப்படி இந்த சூரிதார் பெண்களின் அபிமானத்தை தொடர்ந்து பெற்று வருகிறது? தவிர இந்தப் பிரிவில் 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' எந்த மட்டில் உள்ளன? அறிவதற்காக பிஸன்ஸ் காம்ப்ளெக்ஸில் உள்ள சூரிதார் கடைகளுக்குள் நுழைந்தோம்!

முதலில் சல்வாரையும் கூட சூரிதார் என்றே தவறாக நினைத்துக் கொண்டிருக்கும் அப்பாவிகளுக்கு ஒரு சின்ன விளக்கம். (முதலில் ஒரு சின்ன சமாதானம். கமீஸையே சல்வார் அல்லது சூரிதார் என எண்ணும் பேரப்பாவிகளும் உண்டு.)

கமீஸ் என்பது டாப்ஸ். அதாவது மேற்புறம் அணியும் உடை. அதன் மேல்தான் துப்பட்டாவைப் படரவிட்டுக் கொள்வார்கள். பான்ட் போல அணியப்படும் கீழ்ப்பகுதி, அகலமாக இருந்தால் அது சல்வார். உடலை இறுகப் பிடித்துக் கொண்டிருந்தால் அது சூரிதார்.

தமிழகத்தைப் பொறுத்தவரை சல்வாரையும் சூரிதார் பிரிவில் சேர்ப்பவர்கள்தான் அதிகம்.

''வட இந்தியாவிலிருந்து - முக்கியமாக பஞ்சாபிலிருந்து மற்ற இடங்களுக்குப் பரவியதுதான் இந்தச் சூரிதார் உடைகள். இவற்றில் காஷ்மீர் ஸ்டைலையும், பாகிஸ்

தான் ஸ்டைலையும் முக்கியமாகக் குறிப்பிடலாம். காஷ்மீர் பாணியில் கால்புறம் உடை மிகவும் அகலமாக இருக்கும். ஜரிகையோடு, ஒருவித உலோகத்தனத்துடன் செய்யப்படும் ஊசிநூல் வேலைப்பாடான ஜர்தோஸியை இவற்றில் காணலாம்.பாகிஸ்தான் பாணி உடையின் கீழ்ப்புறமும் ஓரளவு அகலமானது தான் என்றாலும் மேற்புறம் அணியும் கமீஸ் அளவில் சின்னதாக இருக்கும்" என்றார் 'சரிதாஸ்' என்ற கடையின் மானேஜரான புருஷோத். ஆயிரத்திலிருந்து பத்தாயிரம் ரூபாய் வரையாம் விலை. அதிகபட்ச விலை பட்டு நூலினால் செய்யப்படும் சூரிதார் செட்டுக்கு.

ஷிஃபானில் உருவாகும் சூரிதார்கள் பெரும்பாலும் மும்பையிலிருந்து வருவதாகக் குறிப்பிட்டார் 'ஈவ்ஸ் க்ளப்' என்ற கடைக்குப் பொறுப்பேற்றிருக்கும் கிரி.

சமீபத்தில் இந்திய உடையான இதிலும் மேற்கத்திய நாகரிகத்தின் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. கமீஸின் கை குட்டையாகிப் போன ஃபாஷனைத் தொடர்ந்து, இப்போது கையில்லாமலேயே வரத் தொடங்கிவிட்டன. இது போன்ற ஸ்லீவ்லெஸ் கமீஸ்களுக்கு சற்றே மூடப்பட்ட இறுக்கமான கழுத்துப் பகுதி காணப்படுகிறது. (இதை ஆல்டர்நெக் என்கிறார்கள்). கீழ்ப்பாகத்திற்கு சல்வார் அல்லது சூரிதாருக்கு பதிலாக ஸ்கர்ட்கள்!

"இவற்றில் காக்ரா சோளி மேலும் பிரபலமடைந்து வருகின்றன" என்றார்கள் 'லாசாஸ்' கடையின் விற்பனைப் பிரதிநிதிகள். "குட்டையான கமீஸ் மற்றும் கீழ்ப்பகுதியில் ஸ்கர்ட்களை கொண்டவை இவை. இதோடு ஒப்பிடும்போது சல்வார் கொஞ்சம் அவுட் ஆஃப் ஃபாஷன் ஆகிவிட்டது என்றே கூறலாம்" என்று கூறியபடி தங்களது ஸ்பெஷல் ஐட்டமாக இதே மாதிரி ஓவர்கோட் ஸ்டைல் மாடல் ஒன்றையும் காண்பித்தார்கள். நான்கு பீஸ் உடை அது.

டீனேஜர்கள் அதிக எம்ப்ராய்டரி போட்ட கமீஸ்களையும், பெரியவர்கள் (சுமார் 45 வயதானவர்கள் கூட சல்வார்/சூரிதார் செட்களை ஆசையாக வாங்கிச் செல்கிறார்களாம்) பட்டில் செய்யப்பட்ட டிசைன்களை குறைவாகத்தான் வாங்கிச் செல்கிறார்களாம். இந்தத் தகவலை குறிப்பிட்ட 'லாவண்யா க்ரியேஷன்ஸ்' விற்பனைப் பெண்கள், "பிஸ்ஸி விஸி மெட்டீரியலில் தயாராகும் உடைகள் சுருங்குவதில்லை; அவற்றில் புள்ளிகள் விழுவதில்லை!" என்றும் சிபாரிசு செய்தனர்.

மேற்கூறிய கடைகளுக்கும், 'அட்ராக்ஷன்ஸ்' விற்பனை நிலையத்துக்கும் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. இங்கே சல்வார், சூரிதார், கமீஸ் ஆகியவை ரெடிமேடாகக் கிடைப்பதில்லை. துணியை வாங்கி அளவு கொடுத்துத் தைக்க வேண்டியதுதான். இதற்கென்றே மூன்று தையற்கலைஞர்களும் கடைக்குள்ளேயே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். "இதற்கான துணியின் நீளம் ஏழரை மீட்டர். துப்பட்டாவையும் சேர்த்துத்தான். அதே வண்ண துப்பட்டாவும் உண்டு; கான்ட்ராஸ்ட் கலரிலும் உண்டு. ஃபான்ஸி வகைகளை பம்பாயிலிருந்தும், பருத்தி வகைகளை அகமதாபாதிலிருந்தும், பட்டு வகைகளை பனாரஸிலிருந்தும் தருவிக்கிறோம்" என்றார் கடைக்குப் பொறுப்பேற்றிருந்த ஹரீஷ். இதற்கான துணியின் விலை ரகத்திற்கேற்றபடி 250 ரூபாயிலிருந்து 3000 ரூபாய் வரை கிடைக்கிறதாம். கோடையில் பருத்தி வகையும், மழைக்காலத்தில் பட்டு மற்றும் செயற்கையிழை உடைகளும் அதிகம் விற்கின்றனவாம்!

— ஜி.எஸ்.எஸ்.

படங்கள் : ஸ்ரீஹரி

"என்னடி! உன் வீட்டுக்குத் தெரியாமல், அவரைக் காதலிக்கிறியே, உன்னை அவர் கைவிட்டுட்டா, நீ என்னடி செய்வே...!"

"பத்தோட பதினொண்ணுன்னு விட்டுவிட வேண்டியதுதான்!"

– யு. அரக தேன்மொழி





"இன்னைக்கு எங்க ஆபீஸ்ல டீ-பார்ட்டி."

"யாரைக் கவுக்கப் போறீங்க?"

– சீர்காழி ரேவதி

ஒன் உமன் பட்டி மன்றம்

உங்கள் வாழ்க்கையில்
சக்ஸஸ் என்பது

நாளைய எதிர்பார்ப்பா? **நேற்றைய சாதனையா?**





நாளை ஒரு புதிய நாள். புதியன
உதயமாகும். நாளை நமதே.
இன்றைய பிரச்சினைகளை
மறந்து விட்டால், ஒளிமயமான
வாழ்க்கை உருவாகும்.
நாளையிலிருந்து ஒரு புதிய
சகாப்தம் தொடங்கும்

இந்நாள் ஒரு பொன் நாள்.
இன்றைய பொழுதை நிரம்பட
செலவு செய்ய மறக்காதீர்கள்.
இன்று நீங்கள் சிந்தும் ஒவ்வொரு
வியர்வைத் துளி மூலம் தான்
நாளைய பலனை எதிர்பார்க்கலாம்.
இன்று நீங்கள் சேமிக்கும் ஒவ்வொரு
சிறிய தொகையும் நாளை பெரிய
தொகையாக உங்களுக்கு உதவுவது
போல.

சேமிப்பு என்றென்றும் கைகொடுக்கும் தோழன்.
சீட்டு மூலம் சேமிக்கத் தொடருங்கள். நேற்றைய தினத்திற்கு
சிறந்தது. இன்றைய தினத்திற்கு உகந்தது. நாளைய
தினத்திற்கோ அவசியமானது.

தமிழ் புத்தாண்டு சீட்டு விழா
ஏப்ரல் 5 - 30

14/3, தண்டபாணி தெரு, தி.நகர், சென்னை - 600 017

Ram Kaashyap
Chits Private Limited

சீட்டு = தலை சிறந்த சேமிப்பு திட்டம், எக்காலத்திற்கும்.

12.5 x 20



கோபத்தில் சிவக்க வேண்டும்!

'கறுப்பா? கவலை வேண்டாம். எங்கள் தயாரிப்பை தினமும் தடவிக் கொண்டால் நான்கே வாரங்களில் சிவப்பழகு பெறலாம்' என்றெல்லாம் விளம்பரங்கள் வருகின்றன. சிவப்புதான் அழகு என்கிற மாயை மக்கள் மனத்தில் பதியவைக்கப்படுகிறது. இந்தப் போக்கு சரிதானா? தங்கள் கருத்துக்களை இங்கே பரிமாறிக் கொள்கிறார்கள் இளையதலைமுறையைச் சேர்ந்த நால்வர்.

ஜனகசுதா : கறுப்பு அழகில்லை என்பதை என்னால் ஒத்துக் கொள்ளவே முடியாது. ரோம சாம்ராஜ்யத்தையே ஆட்டிப் படைத்த கிளியோபாட்ரா கறுப்பழகிதானே. தவிர அழகு என்பது சருமம் சம்பந்தப்பட்ட விஷயம் மட்டுமில்லையே.

ஸ்வர்ணரம்யா : கறுப்பாக இருப்பது அழகில்லை என்று நிறையப் பேர் நினைக்கிறார்களே தவிர, 'ஏன் அது அழகில்லை சொல்லுங்களேன்' என்று கேட்டால் பதில் தெரியாமல் விழிப்பார்கள்.

ஜகதீஷ்குமார் : ஒன்றை ஒப்புக் கொள்வது நல்லது. 'ஏற்றத்தாழ்வு என்பது தவறுதான். என்றாலும் பலர் இருக்கும் கூட்டத்தில் சிவப்பான ஒரு முகம்தான் முதல் பார்வையில் மனத்தைக் கவரும். சரியோ தவறோ, கறுப்பு நிறத்தை ஒரு வித டல்னஸோடுதான் நாம் தொடர்புபடுத்திப் பார்க்கிறோம். இந்தப் போட்டியுகத்தில் மற்றவர்களின் முதல் மதிப்பீட்டிலேயே நாம் உயர்ந்து விட வேண்டுமென்றால் சிவப்புமேனி அதற்கு உதவத்தான் செய்கிறது.

கிருத்திகா : டீனேஜ் வயதில் பலவித ஆசைகள் தோன்றும். ஃபாஷனுக்கு ஏற்ற உடையணிய வேண்டும் என்பதைப் போல சிவப்பாகக் காட்சி தரவேண்டும் என்பதும் ஓர் ஆசைதான். இந்த டீனேஜ் பருவத்தினரை, சிவப்பழகு க்ரீம் தயாரிப்பவர்கள் கவரப் பார்க்கிறார்கள். இதில் பெரிதாக தப்புக் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஜகதீஷ்: இதுபோன்ற விளம்பரங்கள் பெண்களைத்தான் குறிவைக்கின்றன. அதாவது ஒரு ஆண் எந்தக் கலரில் இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் பெண்ணுக்கு மட்டும் சிவப்பழகு மிக முக்கியம் என்கின்றன இவை.

கிருத்திகா : அதுவும் உண்மைதான். உலக அழகிப் போட்டிகள் எல்லாம் நடக்கிறதே. அதன் நீதிபதிகள் சிவப்பழகிகளைத்தானே தேர்ந்தெடுக்கிறார்கள்!

ரம்யா : அப்படிச் சொல்ல முடியாது. ஆப்பிரிக்காவிலிருந்து கூட எப்போதோ ஒரு முறை நேர்ந்தெடுக்கப்படுவதுண்டு.

கிருத்திகா : கறுப்பு ஸ்லேட்டில் பழுப்பு சாக்பீஸில் எழுதும்போது எழுத்துக்கள் பளிச்சென்று வெள்ளையாகத் தெரிகிறதில்லையா? அந்த மாதிரி கறுப்பு-சிவப்பு என்ற உயர்வு தாழ்வு இல்லாமல் பார்க்கப் பழகினால்தான் நல்லது.

ரம்யா : ஆனால் விமானப் பணிப் பெண்கள், ரிஸப்ஷனிஸ்டுகள் போன்றவர்கள் சிவப்பாக இருக்க வேண்டும் என்றுதானே இன்னமும் நினைக்கிறார்கள்? ஆணுக்குப் பெண் சமம் என்று உரிமை பேசும் போதே, 'தோலின் நிற அடிப்படையில் பெண்களை பிரித்துப் பார்த்து வேலைக்கு எடுத்துக் கொள்ளும் இந்தப் போக்கு கண்டு நாம் கோபத்தில் முகம் சிவக்க வேண்டாமோ!


• ஸ்வர்ணரம்யா


• ஜகதீஷ் குமார்

சுதா : முதல் கட்டமாக கறுப்பாக இருப்பவர்கள் தாழ்வு மனப்பான்மை இல்லாமல் இருக்க வேண்டும். மாணவப் பருவத்தில் இந்த வேறுபாடுகள் மனத்தில் பதிவதேயில்லை. கல்யாணம் என்று வரும் போதுதான் 'சிவப்பு நிறமுடைய' என்று தொடங்கும் விளம்பரங்களைக் கொடுக்


• கிருத்திகா



கிறார்கள்.

கிருத்திகா: சிவப்பான மனைவி அமைந்தால், 'நீ கொடுத்து வச்சவண்டா' என்று நண்பர்கள் சொல்வதுண்டு இல்லையா! இது போன்ற சமூக விமர்சனங்கள் நம் மதிப்பீடை பாதிக்கின்றன.

ஜகதீஷ் : படித்த குடும்பங்களில் இப்போதெல்லாம் இதைப் பார்ப்பதில்லை. பெண் நல்லதொரு வேலையில் இருந்தால் போதும் என்கிறார்கள். கிராமங்களில்தான் கல்யாணத்தின்போது கலர் பொருத்தம் பார்ப்பது என்பது இன்னமும் இருக்கிறது. படித்தவர்களின் எண்ணிக்கை அதிகமாகி விட்டாலே இந்தப் பாகுபாடு குறைந்து விடும்.

சுதா : க்ரீம் போன்றவையெல்லாம், மேனியைப் பாதுகாக்க இருக்கணுமே தவிர இப்படி கலரை மாற்றிக் காட்ட என்றெல்லாம் இருக்கக் கூடாது. தவிர கருநிறம் கொண்ட மனைவி அமைந்த கணவனுக்கு ஒருவித காம்ப்ளெக்ஸ் வரக் கூடும். ஆனால் கணவன் கறுப்பானவனாக இருந்தாலும் மனைவிக்கு வருத்தம் இருக்காது.

ரம்யா : பெற்றோர்கள் இந்த விஷயத்துல தங்களை மாத்திக்கலேன்னா நீ சொல்ற வழிதான் சரின்னு படுது.

ஜகதீஷ் : தோற்றம் என்பதில் சிவப்பு அல்லது குறைந்தபட்சம் மாநிறம் என்ற மறைமுக அளவீட்டை பலரும் வைத்திருக்கிறார்களே! ஆனால் கறுப்பு நிறம் கொண்டவர்களிலேயே பேரழகர்களும் அழகிகளும் இல்லையா என்ன?

கிருத்திகா : அதுதானே? ரஜினிகாந்தையும், சுமாரான கலரே கொண்ட டைட்டானிக் ஹீரோ லியனார்டோ டிகாப்ரியோவையும் மறந்து விடலாமா?



• ஜனகசுதா

ரம்யா: ஏன், சரோஜாதேவி, கே.ஆர்.விஜயா போன்ற ஒருகால கனவுக் கன்னிகள் கூட சிவந்த நிறம் கொண்டவர்கள் இல்லையே.

சுதா : அமெரிக்காவின் இன்றைய நம்பர் ஒன் மாடல் நவோமி காம்பெல் ஒரு நீக்ரோதான்!

ஜகதீஷ் : என்னைக் கேட்டால் கிரிக்கெட் வீரர் லாராவின் அழகு யாருக்கும் இல்லேன்னுதான் சொல்லுவேன். அது சரி, இப்படியெல்லாம் உதாரணங்கள் இருந்தும் ஏன் நம்ம சமூகத்திலே சிவப்புத் தோலுக்கு ஒரு தனி மரியாதை?

ரம்யா : வீட்டுப் பெரியவங்கதான் முக்கியக் காரணம். 'அய்யே ஏன் இப்படிக் கறுத்துப் போயிட்டே?' என்று அவர்கள் கேட்கும்போதெல்லாம் கறுப்புத் தோல் என்பது ஏதோ தப்பான விஷயம் என்று மனத்தில் பதிந்து விடுகிறதே.

கிருத்திகா : இப்பக் கூட 22 காரட் தங்கம் சேர்க்கப்பட்ட கலவையை தேய்த்துக்கிட்டா முகம் சிவக்கும்னு ஒரு பத்திரிகையிலே போட்டிருக்காங்க. இதெல்லாம் இப்ப அவசியமா? சாந்தமான குணம்தானே நிஜமான அழகு?

ரம்யா : வெளிநாட்டுக்காரர்கள் - முக்கியமா அமெரிக்கா, ஐரோப்பாக்காரங்க சிவப்பாயிருப்பதாலே அப்படியிருந்தாத்தான் அழகுன்னு இங்கேயும் நினைக்கறாங்க.

சுதா : ஒருவர் பழகும் விதத்தைக் கொண்டுதான் அவர் அழகானவரா இல்லையான்னு முடிவெடுக்கணும்.

தொகுப்பு : **அருண்சரண்யா**

படங்கள் : **ஸ்ரீஹரி**

வட்டமேஜை

நெகிழ வைத்த பீஹார் பயணம்!

✉ ஜாதி, மதம் இனங்களைக் கடந்து மனித நேயத்தோடு பீஹார் மக்களின் சோகத்தில் பங்கெடுக்க முதன் முதலில் சென்றது நமது 'கல்கி' என்றறிந்தபோது நெகிழ்ந்து போனேன்!
சென்னை - 86, புதுவை ச. புகழேந்தி.

✉ நெஞ்சு பொறுக்காத பீஹார் படுகொலையின் கோரத்தைக் 'கல்கி' சம்பந்தப்பட்ட குக்கிராமத்துக்கு நேரில் சென்று - விசாரித்துத் தரப்பட்ட அறிக்கை குமுறிக் குமுறி அழ வைக்கிறது!
இனாம் மணியாச்சி, ச.ஆ. கேசவன்.

✉ தாமரைக்கனிக்குச் சாமரம் வீசுவதா? தலையங்கம் அறிவார்த்தமான கருத்துகளின் வெளிப்பாடு.
விழுப்புரம் - 2, வை.வெங்கடேசன்.

✉ பிரபல எழுத்தாளர்களின் எழுது கணம் பிரமிக்க வைத்தது! பிரமாதம் என சந்தோஷப்பட வைத்தது!
நெய்வேலி - 3, எஸ். ஸ்ரீகாந்த்

✉ 'பிட்ச் ஃபீவர்' பாடல் கேசட்டைப் பற்றி ஆவலைத் தூண்டி விட்டு, கடைசியில் கேசட் இன்னும் விற்பனைக்கு வரவில்லை என்று 'சோக கீதத்'தைப் பாட வைத்து விட்டீரே!
திருமானூர், ஏ.ஆர். மார்ட்டின்

✉ சாருநிவேதிதாவின் சிறுகதை ரசிக்கும்படி இருந்தது. சர்ச்சையைக் கிளப்பிவிடும் நாவல் - அதுவும் தமிழில் வருவது பகல் கனவாகத்தான் இருக்கும் என்பது அடியேனின் கருத்து.
நாமக்கல் - 3, கே. மூர்த்தி.

✉ கமி சூப்பர் மார்க்கெட்டில் கு. அழகிரிசாமி பற்றி ஒரு தகவல் மனதைத் தொட்டது. அந்த எளிமைதான் அவரை இன்றுவரை பேச வைத்துள்ளது.
திருச்சி - 14, ராஜிராதா.



✉ கமலின் 'ஹே ராம்' படத்தைப் பற்றியும், அது தொடர்பான பல விஷயங்களையும் நன்கு அலசி ஆராய்ந்து எழுதியிருந்தார் உமது நிருபர்.
மொரட்டுப்பாளையம், க.நா. இராஜேஸ்வரன்.

✉ அன்று பாரதி எக்ஸ்பிரஸ்; இன்று கல்கி எக்ஸ்பிரஸ்' கட்டுரை படித்தேன். டெல்லி தமிழ்ச் சங்கத்தினர் நடத்திய கல்கி நூற்றாண்டு விழாவை நேரில் கண்டது போல் மகிழ்ச்சியடைந்தேன்.
மணியக்காரன்பாளையம், ஏ.ஜி. கல்யாணசுந்தரம்.

✉ பாப்பாபட்டி போன்ற கிராமங்கள் தேர்தலில் பங்கு கொள்ளாமைக்கு அவர்களின் ஒற்றுமைதான் காரணமென்றால், அங்குள்ள எல்லா ஜாதி மக்களும் ஒன்று சேர்ந்து பொதுவாக ஒருவரைத் தேர்ந்தெடுத்து, சுமுக உறவுடன், அரசு தரும் பயன்களையும் பெற்று சுபீட்சமாக வாழலாமே! இந்தியாவிலேயே ஒரு மாதிரி கிராமமாகத் திகழலாமே!
காரைக்குடி. பாலு.

✉ தங்கர்பச்சானைச் சந்தித்த "பாலு"வுக்கு மாத நாவல் எழுத்தாளர் பெயர் மட்டுமே தெரிந்திருந்தது என்பது நாணயத்தின் ஒரு பக்கமே! ஆனால், தாங்கள் குறிப்பிட்ட சில 'கிராமிய எழுத்தாளர்கள்'தான் இலக்கிய பீடத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிறார்கள் - என்கிற எண்ணம் தவறு! மண் வாசனை கலந்த உரையாடலும், புரியாத நடையும் மட்டுமே கதைக்குச் சிறப்புச் சேர்க்காது. சொல்லப் போனால் ஒரு சிலர் எழுதக் கூசும் விஷயங்களை இந்த 'வாசனை'யிலும் நடையிலும்தான் மறைக்கிறார்கள்!
கே.கே. புதூர், ஈ. லக்ஷ்மணன்.

✉ கல்கி (7.3.99) இதழில் பெண்கள் தேர்ந்தெடுக்கும் பெண்மணிகள் பகுதியில் காவல்துறை அதிகாரி திலகவதி ஆசியாவிலேயே வெல்டிங் தொழில் செய்யும் முதல் பெண்மணி என்று ஒருவரைக் குறிப்பிட்டுள்ளார். திருச்சியில் தலைமை தபால் நிலையத்திற்கு எதிரே நகராட்சி அலுவலகம் செல்லும் சாலையில் ஏற்கெனவே இரு சகோதரிகள் வெல்டிங் பட்டறையில் பணி புரிந்தார்கள். மேலும் தாய்லாந்தில் பெண்கள் பெட்ரோல் பைப் லைன் வெல்டிங் செய்கிறார்கள். அதுவும் அதி நுட்பமான TIG வெல்டிங் முறையில் செய்கிறார்கள். தாய்லாந்துப் பெண்களின் வெல்டிங் தகுதியை நிர்ணயிக்க நான் உடன் இருந்ததால் இதை இவ்வளவு திண்ணமாகக் கூற முடிகிறது!
ஜுபைல், எஸ். சுரேஷ்குமார்.



கஞ்சி போட்டு விரைப்பாக இருந்த கதர் ஜிப்பா, கதர் வேட்டி அணிந்திருந்த சத்தியமூர்த்தி, மதுரையில் காந்தி அருங்காட்சியகத்தின் பொறுப்பாளராக இருந்து சமீபத்தில்தான் ஓய்வு பெற்றிருந்தார்.

ராஜபாளையம், மாயூரநாத சுவாமி கோவில் அருகே பேருந்து நிறுத்தத்தில் நின்ற போது தற்செயலாய் அவளைப் பார்த்தார்.

சாலையோரம் குத்தவைத்து உட்கார்ந்து, முதல் நாள்இரவு பெய்த மழையால் தரையில் தேங்கியிருந்த தண்ணீரை வலது கையில் கொஞ்சம் கொஞ்சமாக அள்ளி அள்ளித் தீர்த்தம் குடிப்பது போல உறிஞ்சிக் குடித்துக் கொண்டிருந்தாள். காய்ந்து போன கனகாம்பரம் பூவும், நீண்ட நாரும் அவள் தலையில் தொங்கிக் கொண்டிருந்தன. கிழிந்துபோன அழுக்குச் சேலைக்கு மேலே பலவகையான சின்னச் சின்ன துணிகளைச் சுற்றி இருந்தாள்.

மஞ்சள் பூசிய முகத்தில் எட்டுக்கல் பேசரி மூக்கில் ஜொலிக்க அருகில் அமர்ந்திருந்த மனைவியிடம், "அங்கே பாரு!" என்று சுட்டிக் காட்டினார்.

நீண்ட காம்பவுண்ட் சுவரில் 'ராம்கோ சூப்பர் கிரேடு' விளம்பரத்தைப் பார்த்த ஜானகி, "சிமெண்ட்டா?" என்றாள்.

அதற்குள் பேருந்து புறப்பட்டு விட்டது.

"நான் ஒன்னைக் காமிச்சா, நீ ஒண்ணைப் பார்க்கிறே! ஒரு பைத்தியம் சகதித் தண்ணியைப் போயி குடிச்சிக்கிட்டு இருந்திச்சி, பாவம்!"

பேருந்து நிலையத்திற்கே உரித்தான சிறுநீர் நாற்றம் மூக்கைத் தாக்கும்போது வண்டி நின்றது.

'காமராஜர் நகருக்கு எப்படிப் போகணும்?' என்று டீக்கடையில், வாடகை சைக்கிள் கடையில், மருந்துக் கடையில் விசாரித்துக் கொண்டே தம் ஒரே மகன் ஹரிஹரன் வீட்டைக் கண்டு பிடித்து உள்ளே சென்றார்கள்.

சுப்ரியா சாந்திலால்

மனதில் கனவு

"வாங்க மாமா, வாங்க அத்தே!" என்று மலர்ந்த முகத்துடன் வரவேற்றாள் கீதா.

"ஹரி பாங்க்குக்குப் போயிட்டானா?"

"ஆமா மாமா!"

"ஆர்த்தி எங்கே?" என்று கேட்டாள் ஜானகி.

"ஸ்கூலுக்குப் போயிருக்கா! பக்கத்திலே தான் இருக்கு! இன்னைக்கி சனிக்கிழமை யாலே 'ஹாஃப்டே'தான்!"

"ஊர் பிடிச்சிருக்கா?"

"நம்ம ஊர் மாதிரி வராது அத்தே! இங்கே எல்லாமே ரொம்பக் 'காஸ்ட்லி'யா இருக்கு! ஆட்டோ சார்ஜ் ரொம்ப அநியாயம்! 'அடிக்கடி கலவரம் வரும்'ன்னு சொல்லிப் பயமுறுத்துறாங்க! வாங்க, வீட்டைச் சுத்திக் காமிக்கிறேன்!"

தோட்டத்தில் இருந்த செடியில் கனகாம்பரம் நூற்றுக்கணக்கில் பூத்திருந்தது. அவற்றைப் பார்த்தவுடன் சத்தியமூர்த்தியின் மனக் கண்ணில் அந்தப் பைத்தியத்தின் தலையில் தொங்கிக் கொண்டிருந்த காய்ந்து போன கனகாம்பரப் பூவும் நீண்ட நாரும் மின்னல் வேகத்தில் வந்து வந்து சென்றன.

"கோயில் எல்லாம் இங்கே, எங்கே இருக்கு?"

"நிறைய இருக்கு அத்தே! வடக்கே ஒரு கிலோ மீட்டர் தூரத்திலே மாயூரநாத சுவாமி கோயில் இருக்கு! தெற்கே சொக்கர் கோயில், அய்யப்பன் கோயில், மாரியம்மன் கோயில் இருக்கு! கிழக்குப் பக்கம், ரொம்ப தூரத்திலே வேட்டைப் பெருமாள் கோயில் இருக்கு! நாங்க வாராவாரம் மாயூரநாத சுவாமி கோயிலுக்குத்தான் போய் வந்துகிட்டிருக்கோம்!"

'மாயூரநாத சுவாமி கோயில் நிறுத்தத்திலேதான் அந்தப் பைத்தியம் சகதித் தண்ணியைக் குடிச்சிக்கிட்டு இருந்தா' என்று சத்தியமூர்த்தியின் மனம் தனக்குத்தானே பேசிக் கொண்டது.

ஹரிஹரன் வேலை முடித்து வீட்டுக்குள் நுழையும் போதே ஆர்த்தி ஓடி வந்து, "டாடி! தாத்தா பாட்டி வந்திருக்காங்க!" என்று சொல்லிக் குதித்தாள்.

அன்று இரவு சத்தியமூர்த்தி, "மதுரையிலேன்னா தமுக்கம் மைதானம், மெடிக்கல் காலேஜ் கிரவுண்ட், ரேஸ்கோர்ஸ்ன்னு வாங்கிங் போக நிறைய ஏரியா இருக்கு! இங்கே வாக்கிங் போக நல்ல இடம் இருக்கா?" என்று ஹரியிடம் கேட்டார்.

"பாலிடெக்னிக் கிரவுண்டுக்குப் போகலாம், ஆனா நம்ம வீட்டிலேயிருந்து ரொம்பத் தூரம்!" என்று சொன்ன ஹரி, சற்று யோசித்த பின், "நீங்க வீட்டிலேயிருந்து கிளம்பி, மதுரை ரோடு வழியா காட்டன் மார்க்கெட் தாண்டி மாயூரநாத சுவாமி கோயிலுக்குப் போங்க! வாக்கிங்குக்கு வாக்கிங்கும் ஆச்சி, கோயிலுக்குக் கோயிலும் ஆச்சி!" என்றான்.

மறுநாள் காலை சத்தியமூர்த்தி கோவிலுக்குப் புறப்படும்போது, "லேசா தூறல் விழுது மாமா, குடை கொண்டு போங்க!" என்று எடுத்துக் கொடுத்தாள் கீதா.

காட்டன் மார்க்கெட் தாண்டி சிறிது தூரம் சென்ற பின் வேப்பமரத்தடியில் ஒரு டீக்கடை இருந்தது. அங்கிருந்து மேற்குத் திசையில் பிரிந்த மண்சாலை கோவிலில் சென்று முடிந்தது. கோவிலுக்கு வலதுபுறம் ஒரு தேரும், இடது புறம் திருமண மண்டபமும் இருந்தன. கோவில் ஒலிபெருக்கியில் சுப்ரபாதம் துல்லியமாக ஒலித்துக் கொண்

டிருந்தது. பட்டுச் சேலை உடுத்தியிருந்த இரு பெண்மணிகள், ஈரத் தலையுடன் பூஜைக்குரிய பொருள்களை வெள்ளியிலான பூக்கூடையில் வைத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தார்கள்.

சுவாமி தரிசனம் முடித்து கோவிலிலிருந்து வெளியே வரும்போதும் தூறல் விழுந்து கொண்டிருந்ததால் குடையை விரித்து மெதுவாக நடந்தார்.

அப்போது, தேரின் அடியிலிருந்து வெளியே வந்த அந்தப் பைத்தியம், வானத்தைப் பார்த்து, "மேரே சிர்பர் கௌன் பானி டால்தா ஹை?" (என் தலையிலே தண்ணியை ஊத்தறது யாரு?) என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டே, தலையில் குட்டிக் கொண்டாள்.

சத்தியமூர்த்தி அவளை உற்று நோக்கினார். அதே காய்ந்த கனகாம்பரப் பூவும் நாரும் அவள் தலையில் இன்னும் தொங்கிக் கொண்டிருந்தன. அத்துடன் காய்ந்த கதம்ப மாலையின் ஒரு பகுதியும் புதிதாகச் சேர்ந்து தொங்கிக் கொண்டிருந்தது. வயது முப்பது இருக்கலாம். ஒரு காலத்தில் பல் துலக்கி, குளித்து, தலைசீவி, லட்சணமாக இருந்திருப்பாள். சராசரியான உருவம். ஆனால் வயிறு மட்டும் பெரிதாக இருந்தது.

ஆடு மேய்ப்பவர்களைப் போலிருந்த இரண்டு சிறுவர்கள் அவளைப் பார்த்து, "பைத்தியம்டா டேய்!" என்று சொல்லித் தரையிலிருந்து கல்லை எடுத்து அவள் மீது குறிபார்த்து வீசி விட்டுப் பறந்து ஓடினார்கள். கல் பட்ட இடத்தைத் தடவி விட்டுக் கொண்டே, திருமண மண்டபம் நோக்கிச் சென்றாள்.

"குத்தா, குத்தா!" என்று கத்தினாள். சகதியில் படுத்திருந்த ஒரு தொத்தல் சொறிநாய் அவள் குரலைக் கேட்டு வாலை ஆட்டிக் கொண்டே ஓடி வந்தது. அதைக் கட்டி அணைத்துத் தூக்கிக் கொண்டு மீண்டும் தேருக்கு அடியில் சென்று மறைந்தாள்.

சத்தியமூர்த்தியின் மனம் அவளைப் பற்றி ஆயிரம் கேள்விகள் எழுப்பியது.

'நம்மளை மாதிரி ஆளுங்களுக்கு ஒருநாள் லேசா நனைஞ்சாலே காய்ச்சல் வந்திடுது! ஆனா, இந்த மாதிரிப் பைத்தியங்களுக்கு நோய் வர்றதில்லையே, அது ஏன்? சகதித் தண்ணியைக் குடிச்சாளே, காலரா வந்தா என்ன செய்வா? கவர்மெண்ட் ஆஸ்பத்திரிக்குப் போகத் தெரியுமா? அப்படியே போனாலும் அங்கே டிரீட்மெண்ட் கொடுப்பாங்களா?

"எப்படி வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்?' என்று தெரியாமலேயே சத்தியமூர்த்தி வீட்டை அடைந்தார்.

அன்று இரவு சத்தியமூர்த்திக்கு உறக்கம் வரவில்லை. ஒரு கொசு காதுக்கு அருகில் வந்து ரீங்காரம் இசைத்தது. 'குட் நைட்' செருகினார்.

'இந்நேரம் அவ தேருக்கு அடியிலே நல்லா தூங்கியிருப்பாளா? அங்கே கொசு, எறும்பு, பூச்சி, நட்டுவாக்கலி, பாம்பு எது வேணும்னாலும் கடிக்கும். பைத்தியங்களுக்கு எந்த விஷமும் ஒண்ணும் செய்யாது போல! இவளுக்கு எப்படி பிடிச்சது? அந்த டீக்கடைக்காரனுக்கு இவ பூர்வீகம் தெரிஞ்சிருக்கும்.

அதிகாலை எழுந்து, குளித்து வேகமாகப் புறப்பட்டார். டீக்கடைக்கு வந்து நின்றார்.

டீக்கடைக்காரன், வாளியில் இருந்த அழுக்குத் தண்ணீரில் எச்சில் கிளாஸை முக்கி கழுவிக் கொண்டிருந்தான். கடைக்கு முன்னால் கூரையிலிருந்து வாழைப்பழத்தார் தொங்கிக் கொண்டிருந்தது.

சத்தியமூர்த்தியைப் பார்த்து, "உக்காருங்க சார், காபியா டீயா?" என்று கேட்டான்.

மரப்பலகை பெஞ்சில் உட்கார்ந்தார். நான்கு கால்களில் ஒரு கால் மட்டும் ஆடியது. "ரெண்டு வாழைப் பழம் கொடுங்க!" என்றார்.

"நீங்களே பிச்சி எடுத்துக்குங்க!"

தோலை ஆராய்ந்து, பழத்தைத் தொட்டு லேசாக அழுத்தி, 'சாப்பிடும் அளவுக்குக் கனிந்து இருக்கிறதா?' என்று பார்த்து, இரண்டு பழங்களைப் பிய்த்து எடுத்தார்.

"சார் ஊருக்குப் புதுசா?" என்று அவன் பேச்சைத் துவக்கியது சத்தியமூர்த்திக்கு வசதியாகி விட்டது.

"ஆமா! என் மகன் 'டிரான்ஸ்ஃபர்' ஆகி இங்கே வந்திருக்கான், கனரா பாங்க்லே வேலை!" என்று சொல்லிவிட்டு, எதேச்சையாகக் கேட்பது போல, "இங்கே ஒரு பைத்தியம் அலையுதே, அவ யாரு?" என்று கேட்டார்.

"அவ யாரோ, எந்த ஊரோ, யார் கண்டா? ஒரு வருஷமா இங்கேதான் கத்திக்கிட்டிருக்கா! தேருக்கு அடியிலேதான் படுப்பா! ஏதோ ஒரு வடநாட்டுப் பாஷையிலே தானா பேசிக்கிட்டு இருப்பா! கோயில்லே கொடுக்கிற பிரசாதம் வாங்கிச் சாப்பிடுவா! அவளைப் பத்தி ஏன் கேட்



இரத்த சோகையால் உடல் அழகு பாதிக்குமா?

நம் உடல் உறுப்புக்கள் அதனதன் வேலையை நன்றாக செய்ய ஊட்டச் சத்தும், காற்றும் மிக மிக அவசியம். அவற்றை ஒவ்வொரு உறுப்புக்கும் எடுத்துச் செல்ல உதவும் முக்கிய திசுதான் 'இரத்தம்'. இதனுடைய ஓட்டத்தின் மூலம்தான் ஒவ்வொரு உறுப்பும் அதற்கு தேவையான ஆக்சிஜன், மற்றும் சத்து போன்றவற்றை பெறுகிறது.

இரத்தத்தில் உள்ள வெள்ளையணுக்கள் வெளியிலிருந்து வரும் நோய் கிருமிகளை எதிர்த்து, நம்மை நோய்களிலிருந்து காப்பாற்றுகிறது. அடுத்தது 'சிவப்பணு'. இதுதான் ரத்தத்திற்கு சிவப்பு நிறம் கொடுக்கிறது. இந்த சிவப்பணு உருவாவதற்கு புரதச் சத்தும், இரும்புச் சத்தும் மிக முக்கியம். இவை இரண்டையும் இரத்தத்தில் உள்ள ''ஹீமோ குளோபின்'தான் தருகிறது.

இரத்தத்தில் இந்த ஹீமோகுளோபினின் அளவு, தரத்தாலோ அல்லது அளவாலோ குறையும் போதுதான் 'இரத்த சோகை' என்னும் நோய் ஏற்படுகிறது.

இரத்த சோகை உள்ளவர்களின் கண்கள், நாக்கு, நகக்கண், மற்றும் முகம் அனைத்தும் வெளுத்துக் காணப்படும். சிறிய வேலை செய்தாலும், மூச்சுத் திணறல் மற்றும் அசதி ஏற்படும். களைப்புத் தன்மை, பசியின்மை, சளி, மலச்சிக்கல் போன்றவையும் உண் டாகும். மாதவிடாய் நின்று போதல், மற்றும் இரத்த சோகை முற்றிய நிலையில் நெஞ்சு வலி போன்ற இருதயக் கோளாறுகள் ஏற்படும்.

இரத்த சோகையை தடுப்பது எப்படி?

நல்ல சத்துள்ள உணவை உட்கொள்வதால் இதை தவிர்க்கலாம். முக்கியமாக இரும்புச் சத்து, புரதச் சத்து, வைட்டமின் சி, பி12 ஆகியவை உள்ள உணவுகளை எடுத்துக் கொள்வது நல்லது. கீரை வகையில் முருங்கைக் கீரை, வெந்தயக் கீரை, வெங்காயம், கொத்தமல்லி, கரிவேப்பிலை, பூண்டு, முள்ளங்கி, பழவகையில் பேரீச்சை, கொய்யா, பப்பாளி, வாழை, நெல்லி, எலுமிச்சை முதலியவை நோயை வராமல் தடுக்கும்.

இரத்த சோகைக்கு தெய்வீக முறை மருத்துவம்!

இரத்த சோகைக்கு எத்தனையோ வகை மருந்துகள் இருந்தாலும், அவையெல்லாம் இயற்கை அளித்த வரப்பிரசாதமான மூலிகைகளுக்கு ஈடு ஆகாது. குறிப்பாக தெய்வீக மூலிகைகளான வேப்பிலை, அருகம்புல், அரசனிலை, வில்வம், அத்தியிலை, மாவிலை மற்றும் முருங்கை, கடுக்காய், வெந்தயம், நெல்லி போன்ற மூலிகைகளை வெயிலில் உலர்த்தி சம அளவில் கலவையாக செய்து தினமும் மருத்துவரின் ஆலோசனைப்படி உட்கொண்டால் இரத்த சோகையிலிருந்து முழுமையாய் விடுபடலாம். தவிர, அன்றாடம் சாதாரணமாக செய்யக்கூடிய தேகப்பயிற்சிகளை செய்வதும் நல்லது.

மேலும் விவரங்களுக்கும், சிகிச்சைக்கும் டாக்டர் எம். சபாபதியை கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

Dr. M. Sabapathy,
115, Purasaiwalkkam High Road, Kellys (Near Prince Manor)
Chennai - 600 010. Phone : 6424285, 6427638

தமிழகத்தின் அனைத்து முக்கிய நகரங்களிலும் மற்றும் மும்பை, டில்லி, பெங்களூரிலும் ஒவ்வொரு மாதமும் டாக்டரை சந்திக்கலாம். விவரங்களுக்கு மேலே உள்ள முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

— ADVT —

டீங்க?''

"சும்மாதான்! பார்த்தா பாவமா இருந்திச்சி! ரெண்டு வாழைப்பழம் எவ்வளவு?''

"ஒண்ணு ஒண்ணேகால் ரூபா, ரெண்டுக்கு ரெண்டார் ரூபா ஆகுது!''

பணத்தைக் கொடுத்துவிட்டுப் புறப்பட்ட சத்திய மூர்த்தி தேருக்கு அருகில் வந்து நின்றார். அவளைக் காணவில்லை. நான்கு சக்கரங்களுக்கு அடியிலும் தேடினார். அவள் இல்லை.

கோவிலுக்குச் சென்று, சுவாமியைக் கும்பிட்டு பிராகாரத்தை வேகமாக வலம் வந்தார்.

'எங்கே போயிருப்பா? கல்யாண மண்டபத்திலே போய்த் தூங்கிட்டாளா?''

கோயிலுக்கு வெளியே வந்து, மண்சாலையில் மெதுவாக நடந்தார். சாலையின் ஒரு புறம் கோயிலுக்குச் சொந்தமான 'லைன்' வீடுகள் வரிசையாக இருந்தன.

இரண்டு வீடுகளுக்கு இடைப்பட்ட குறுகிய சந்திலிருந்து, திடீரென்று அவள் தோன்றினாள்.

சத்தியமூர்த்தி ஜிப்பா பைக்குள் கையை விட்டு இரண்டு வாழைப் பழங்களை வெளியே எடுத்து, அவள் முன் நீட்டினார்.

சிறிது நேரம் சத்தியமூர்த்தியின் முகத்தையே உற்றுப் பார்த்து, பின் பயம் தெளிந்தவளாய் அருகில் வந்து, பழங்களை 'வெடுக்' என பறித்துக் கொண்டு தேரை நோக்கி ஓடினாள்.

மறுநாள் அதிகாலையில் ஆகாயம் கறுப்புச் சேலை கட்டியிருந்த போதே புறப்பட்டு விட்டார். டீக்கடையை நெருங்கும் போது கறுப்புச் சாயம் வெளுத்து விட்டது.


மண்சாலையில் வேகமாக நடந்தார். மூச்சு வாங்கியது.

தேருக்கு அடியிலிருந்து அவள் வெளியே வந்ததை, தூரத்திலிருந்தே கவனித்து விட்டார். அவளுக்குப் பின்னால், அந்தச் சொறி நாயும் வாலை ஆட்டிக் கொண்டே வந்தது.

'எஜமானன் நல்லவனோ கெட்டவனோ, ஏழையோ பணக்காரனோ, பைத்தியமோ அறிவாளியோ, யாராக இருந்தாலும் நன்றியோடு இருப்பது நாய் ஒன்றுதான்.'

சத்தியமூர்த்தி அவள் கழுத்தைக் கூர்ந்து பார்த்தார். தாலியும் இல்லை. கறுப்புப் பாசி மணியும் இல்லை.

'அப்படீன்னா, கல்யாணமே நடந்திருக்காதா? வயிறு ஏன் பெரிசா இருக்கு? 'உண்டாகி' இருப்பாளா? இவ நல்லவ, தப்பான



"ஆறு ரவா தோசை, மூணு பொங்கல், அஞ்சு வடை, ஒரு செட் போண்டா; இதெல்லாம் நேற்று சாப்பிட்டேன் டாக்டர். ஜீரணிக்கவே இல்லே!''

"கொஞ்சம் இரு; நீ சொல்றதை என்னாலேயே ஜீரணிக்க முடியலியே!''

— சீத்தாதம்பி

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

வழியிலே போயிருக்கவே மாட்டாள். ரவுடிப் பயல் எவனாவது கெடுத்திருப்பானா?'

வீட்டுக்கு வரும் வழியில் யோசித்துக் கொண்டே வந்தார். 'ஜானகி, ஹரி, கீதா கிட்டே எல்லா விஷயமும் சொல்லிடணும்! நான் சொன்னா தட்டமாட்டாங்க! இவளை ஒரு டாக்டர் கிட்டே கூட்டிட்டுப் போய் காமிச்சி, பைத்தியம் தெளிய வைக்கணும்! 'டெலிவரி' முடிஞ்ச பிறகு மதுரையிலே இருக்கிற கஸ்தூரிபாய் அனாதை விடுதியிலே ரெண்டு பேரையும் சேர்த்திடணும்!'

அன்று இரவு ஹரிஹரன், ஜானகி, கீதா மூவரும் தனியாக உட்கார்ந்து, நீண்ட நேரம் விவாதித்து, ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

மறுநாள் ஹரிஹரன் தனது பாங்க் நண்பன் ரமணனிடம் அப்பாவைப் பற்றியும், அந்தப் பைத்தியத்திடம் அவர் காட்டும் பரிவு பற்றியும் விளக்கிச் சொன்னான்.

அதற்கு அவன் "இது ஒரு வகையான மனநோய்! அப்செஸ்சன் (Obsession)னு சொல்லுவாங்க. மனச்சாட்சிக்குப் பயப்படறவங்க, எந்த வேலையைக் கொடுத்தாலும், ரொம்ப நேர்மையா, பொறுப்பாச் செய்றவங்க, கடமை உணர்ச்சி உள்ளவங்க. இந்த மாதிரி குணம் உள்ளவங்களுக்குத்தான் இந் நோய் வருது! இவங்க எந்நேரமும் ஒரு பொருளைப் பற்றியே சிந்தனை செஞ்சிக்கிட்டு இருப்பாங்க! வெளியூருக்கு கூட்டிப் போய் டிரீட்மெண்ட் கொடுத்தா சீக்கிரம் குணமாயிடும்! அதனாலே உங்க அப்பாவை இன்னைக்கே கூட்டிட்டுப் போனா ரொம்ப நல்லது!''என்றான். ●

அக்னிசர்மா பக்கம்

மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

புது வருஷம் உங்களுக்குப் பல நன்மைகளைக் கொண்டு வரப் போகுதுங்க. முக்கியமா உங்க நீண்டநாள் கனவு ஒண்ணு கூடிய சீக்கிரம் நனவாகப் போகுது. வழக்குகள்ல வெற்றி, வியாபார விருத்தி, வெளிநாட்டுப் பயணம்னு ஓஹோன்னு இருக்கப் போறீங்க. ராசில சனியும் சூரியனும் இருக்கறதால அலைச்சலும் உஷ்ணத்தால சிறு சங்கடங்களும் இருக்கும். மத்தபடி இந்த வாரம் உங்க காட்டுல மழை.

ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

பல கிரகங்கள் உங்களுக்குச் சாதகமா இருக்கு. துணிஞ்சி எந்தக் காரியத்துல இறங்கினாலும் வெற்றி நிச்சயம். பத்திரிகை - எழுத்துத் துறையினருக்குப் புகழும், கணக்கு, கம்ப்யூட்டர் துறையினருக்குப் பணமும் சேரும். பெண்களால ஏதாவது ஆதாயம் கிடைக்கும். பணப் பிரச்னை இருக்காதுன்னாலும் செலவை கட்டுக்குள்ள வெச்சிக்கங்க. திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் சிலருக்கு உண்டாகலாம்.

மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

திட்டமிட்டு எதைச் செய்தாலும் கண்டிப்பா வெற்றிதான். இந்த வாரம் உங்க நிர்வாகத் திறமை, பாலீஷ் போட்டாப்பல பளிச்சிடும். விளையாட்டு, வணிகத் துறையினருக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. சுரங்கம், மின்சாரம் மாதிரியான பணிகள்ல இருக்கறவங்க எச்சரிக்கையா இருக்கணும். பெண்களுக்குப் பதவி உயர்வு இருக்கும். பொதுப் பிரச்னைகள்ல அதிகம் தலையிடாம இருங்க. வீட்டுல ஒரு நல்ல காரியம் நடக்கப் போகுது.



கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

எதையும் தீர யோசிச்சி செயல்படுங்க. வழக்கு, வம்புகள் பக்கம் போகாதீங்க. உங்க நலன் விரும்பிகளோட நெருக்கமா இருக்கறது மூலம் பல சங்கடங்களைத் தவிர்க்கலாம். இந்த வாரம் நீங்க அதிகாலைல தொடர்கிற எந்தக் காரியமும் பிரமாதமா ஓர்க் அவுட் ஆகும். பெற்றோர் உடல் நலத்துல கவனம் செலுத்துங்க. வீண் செலவுகள் வேணாம். லாட்டரி, ரேஸ் எதுவும் உதவாது; கவுத்துடும்.

சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*


கடன் வாங்காம, கொடுக்காம இருக்கறது ரொம்ப நல்லது. இந்த வாரம் நீங்க ஏமாற்றப்படறதுக்கான சான்ஸ் அதிகம். பர்ஸை பத்திரமா வெச்சிக்கிங்க. பயணத்திலயும் எச்சரிக்கை அவசியம். பொதுக் காரியத்துக்கு நிதி கேட்டு யாரும் வந்தா, விசாரிச்சிட்டு உதவுங்க. வீட்டுல சில பிரச்னைங்க வரும். சத்தம் போடாதீங்க. ஆபீஸ்லேயும் அமைதி காக்க வேண்டியது அவசியம்.

கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

உங்க மதிப்பு 'குப்'புனு உயர்ற நேரம் இது. கவனமா காரியம் ஆற்றினீங்கன்னா, வெற்றி உறுதி. சிலருக்கு விருப்பமான இடமாறுதல்கள் வரலாம். அரசு மூலம் ஏதாவது நல்லது நடக்கும். வீட்டுல அமைதியும்


மிதுன ராசிக்காரரான சோனியா காந்தி, எதைச் செய்தாலும் வெற்றி பெறுவாராம்!

மகிழ்ச்சியும் நிலவும். சிலருக்குத் திருமண ஏற்பாடு நடக்கும். வெளிநாட்டுத் தொடர்பு நல்லது செய்யும். உங்களுக்கு ஒரு அதிர்ஷ்ட வாய்ப்பு வர்ற நேரம் இது.




துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*

ராகுவைத் தவிர வேற எந்த கிரகமும் உங்களை சப்போர்ட் பண்ணல. அதனால எதிலும் ரொம்ப எச்சரிக்கை அவசியம். அகலக் கால் வைக்காம இருங்க. புது முயற்சிகள் இப்ப வேண்டாம். கடன் கொடுக்கல், வாங்கல் வேண்டவே வேண்டாம். பயணத்துலேயும் ரோடு கிராஸ் பண்ணும்போதும் எச்சரிக்கை அவசியம். வீட்டுல மனைவியோட சிறு பிரச்னை வரலாம். விட்டுக் கொடுத்து நடந்துக்கங்க.



விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

வாழ்க்கை வசதிகள் கூடும் நேரம். புதிய பொருட்கள் பல வாங்குவீங்க. மகன்களால பேரும் புகழும் வரும். உடல் நலன் சிரா இருக்கும். எழுத்தாளர்களுக்கு ஓஹோ வாரம்! பரிசு ஏதாவது கிடைக்கும்னு தோணுது. அரசாங்க பாக்கி ஏதாவது இருந்தாலும் இப்ப அது வந்து சேரும். சிலருக்குக் கடல் பயண யோகமும் தெரியுது.




தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

வெளிநாடு பிளான் வெச்சிட்டிருக்கறவங்களுக்கு க்ரீன் சிக்னல் கிடைக்கப் போகுது. ஆனா, குடும்பத்துல சில திடீர் பிரச்னைகள் வரும் போலத் தெரியுது. உறவினர்களோட சுமுகமா பழகணும். வாக்குவாதம் வேணாம். பணப் பிரச்னை இல்லாத வாரம். ஆனாலும் அநாவசிய செலவுகளைத் தவிர்க்க வேண்டியது அவசியம். உங்க நீண்ட நாள் கனவு ஒண்ணு இப்ப நனவாகப் போகுது.



மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

உங்க வாக்கு சாதுர்யம் ரொம்ப பலன் தரும். குறிப்பா சேல்ஸ்மேன்களுக்கு இந்த வாரம் ஆர்டர்ஸ் நிறைய கிடைக்கும். இளைஞர்களுக்குத் திருமணம் கை கூடும். புதிய வேலை, புதிய நட்பு, புதிய வியாபார ஒப்பந்தங்கள் ஏற்படலாம். கணிதம், எழுத்து, பத்திரிகைத் துறையினருக்கு ஆதாயமான நேரம். பெண்களுக்குப் புதிய புடைவை வாங்கற யோகம் உண்டு.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*


மகிழ்ச்சியான, கவலை இல்லாத வாரம். மேலதிகாரி - ஊழியர், அப்பா - பிள்ளை, மாமியார் - மருமகள் உறவு நிலை சுமுகமா இருக்கும். சில புண்ணிய காரியங்கள்ல ஈடுபடுவீங்க. வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்குவீங்க. சிலருக்கு நீண்ட தூரப் பயணம் இருக்கும். ஆனா, உபயோகமா இருக்குமான்னு சந்தேகம்தான்! ஆபீஸ்ல பழைய பாக்கி ஏதும் இருந்தா வந்து சேரும். நண்பர்கள் விஷயத்துல மட்டும் எச்சரிக்கையா இருக்கணும்.





மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

பிரமாதமான முன்னேற்றம் இருக்காதுன்னாலும் கவலைப்படும்படி பிரச்னையும் இருக்காது. தினசரி வேலைகள் சுமுகமா நடக்கும். சிலர் வீடு வாங்குவாங்க. சிலர் பைக் வாங்கலாம். ஆபீஸ்ல யார்கிட்டேயும் முறைச்சிக்கமா இருங்க. வீட்டுல ஒரு விசேஷம் வருது. பணத்தை வீணா செலவு பண்ணாம சேகரிச்சி வெக்கறது ரொம்ப நல்லது. இந்த வாரம் வயிறு சம்பந்தமான பிராப்ளம் ஏதாவது வரலாம்; எச்சரிக்கையா இருங்க. ●





1999 ஏப்ரல் 18
பிரமாதி சித்திரை 5
மலர் : 57
இதழ் : 38

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

தேர்தலே தீர்ப்பு!

'தமிழகத்தில் மீண்டும் விடுதலைப் புலிகள் நடமாட்டமும் பயிற்சி முகாம்களும் அதிகரித்து விட்டன' - இது ஜெயலலிதாவின் லேட்டஸ்ட் குற்றச்சாட்டு.


அவரது பிற சாரமற்ற குற்றச்சாட்டுகளைப் போல் இதை ஒதுக்குவது அபாயத்தில் முடியக்கூடும்.

மத்திய அரசின் இன்றைய பாதுகாப்பு அமைச்சரும் தமிழகத்தின் இன்றைய முதல்வரும் ஒரு காலத்தில் புலிகளின் அனுதாபிகளாக இருந்தவர்கள். மத்திய அரசின் கூட்டணியில் இடம் பெறும் வைகோ இன்றும் புலிகளின் பகிரங்க அனுதாபி. இந்தப் பின்னணியில், தமிழகத்தின் பாதுகாப்பு நிலைமை குறித்து மத்திய உளவுத்துறை பெற்றுள்ள விவரங்களைத் தெளிவுபடுத்தும் கடமை பிரதமருக்கு இருக்கிறது.

ஜெயலலிதாவின் குற்றச்சாட்டு ஆதாரமற்றது எனில் நல்லது. இல்லையெனில் என்ன பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதும் தெரிவிக்கப்பட வேண்டும். இதைச் செய்யத் தவறினால் பெரிய அவப் பெயர் நேரக்கூடும் என்பதுடன் பிரதமர் தமது அலட்சியத்தால் ஜெயலலிதாவின் கரங்களை பலப்படுத்திய 'புண்ணியத்தை'யும் கட்டிக் கொள்வார்.

விஷ்ணு பகவத் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட வேண்டும்; பெர்னான்டஸ் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும்; பகவத் நீக்கப்பட்ட பின்னணி விசாரணைக்கு உட்படுத்தப் பட வேண்டும் என்ற ஜெயலலிதாவின் நிபந்தனைகளுக்கு மதிப்புத் தரப்பட வேண்டியதில்லை. இதை உணர்ந்து ஒதுக்கித் தள்ளும் தைரியத்தைப் பெற்றிருக்கிறது பி.ஜே.பி.

இந்த நிபந்தனைகளுக்கு அப்பாற்பட்ட காரணங்கள்தாம் ஜெயலலிதாவின் முடிவைத் தூண்டின என்பது தெளிவாகவே தெரிகிறது. நேற்றுவரை தனி நீதிமன்றங்களை எதிர்த்து மாநில அரசு மீது



வழக்குத் தொடுத்தவர், இன்று மத்திய அரசை எதிர்த்தும் உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறார். 'தி.மு.க. அரசை டிஸ்மிஸ் செய்யாமல் மத்திய அரசு காலம் கடத்துகிறது" என்றும் 'தாம் எவ்வளவு நாள்தான் காத்திருக்க முடியும்?' என்றும் பகிரங்கமாகவே கேட்டிருக்கிறார்.

பி.ஜே.பிக்கு ஆதரவை வாபஸ் பெற்ற பிறகு, காங்கிரஸுடன் எப்படி புதிய ஆட்சி அமைக்கலாம் என்பதற்கான காகிதக் கணக்குகளைப் போட்டுக் கொண்டிருக்கிறார் சு. சுவாமி. பி.ஜே.பியின் எழுபதுக்கும் மேற்பட்ட எம்.பிக்கள் பிரிந்து வந்து காங்கிரஸ் - அ.தி.மு.கவை ஆதரிக்கத் தயார் என்ற வதந்தியையும் உலவ விட்டிருக்கிறார்.

பிரதமரோ, இந்த அரசியல் நெருக்கடிகளை பி.ஜே.பி எப்படியும் வென்றுவிடும் என்று நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார்!

அனைத்துத் தரப்பினரும் இவ்வாறு மிதமிஞ்சிப் பேசுவதால் ஏற்படாத அச்சம் சோனியாவின் மௌனத்தால் நமக்கு ஏற்படுகிறது.

காங்கிரஸ் தலைவியின் சம்மதத்துக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது அ.தி.மு.க. பவார் போன்ற சில காங்கிரஸ் தலைவர்களோ இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பிரதமர் நாற்காலியைக் குறி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சோனியாவின் இத்தாலியப் பின்னணி அவரை அப்பதவிக்கு உகந்தவராக்காது என்ற கணக்கில் தங்கள் ஆசையை வளர்த்துக் கொள்கிறார்கள்.

ராஜீவ்காந்தி காலத்தில் நிகழ்ந்ததுபோல், காங்கிரஸின் ஆதரவைப் பெற முயன்று வருகிறார் சந்திரசேகர். அவர் பிரதமராகி தமிழக அரசை டிஸ்மிஸ் செய்ய உத்தரவிட்ட சரித்திரத்தை எளிதில் மறந்து விட முடியாது!

இந்தப் பொறிகளில் சிக்கி, காங்கிரஸையும் தன்னையும் குறுக்கு வழியில் நாசத்துக்கு அழைத்துப் போகும் தவறை சோனியா செய்துவிடக் கூடாது. அ.தி.மு.க. ஆதரவுடனோ சந்திரசேகரின் ஆதரவுடனோ சோனியா ஆட்சி அமைக்க முயற்சி செய்வது காங்கிரஸுக்கு மட்டுமின்றி நாட்டுக்கும் இழைக்கக்கூடிய துரோகம்! அந்த முடிவின் பின் விளைவுகளை தேசம் சந்திக்கிற கால கட்டத்தில், 'என்னவிருந்தாலும் சோனியா வேற்று நாட்டவர்தானே, அதனால்தான் இப்படி யோசிக்காமல் முடிவெடுத்து நாட்டை இந்த நிர்க்கதிக்கு உள்ளாக்கிவிட்டார்' என்ற அவப்பெயர் அவரை வந்தடையும்.



சந்தர்ப்பவாத அரசியலை ஒதுக்கி, சோனியாகாந்தி தேர்தலைச் சந்திக்க முடிவெடுக்க வேண்டும். தேர்தல் அறிவிக்கப்படுவதற்கான வாய்ப்பே சோனியாவின் முடிவைப் பொறுத்துத்தான் அமையும் என்பதால் இன்று மிகப் பெரிய பொறுப்பு அவர் கையில் இருக்கிறது.

சில மாதங்களுக்கு முன் நடந்த வட மாநிலத் தேர்தல்களில் காங்கிரஸ் நம்பிக்கையூட்டும் வகையில் வெற்றி பெற்றிருக்கிறது. மத்தியில் பி.ஜே.பி.க்கும் ஐக்கிய முன்னணிக்கும் வாய்ப்புத் தந்து ஏமாற்றமுற்ற மக்கள், ஒரு நல்ல மாற்றத்தை விரும்பும் மனோ நிலையில் இருக்கிறார்கள். இதை உணர்ந்து, திட்டமிட்டுச் செயல்பட்டு, காங்கிரஸ் தனிப்பெரும்பான்மையுடன் ஸ்திரமான ஆட்சி அமைக்கலாம். மாறாக, தேர்தலைச் சந்திக்காமல் தற்போது ஆட்சியில் அமர முயன்றாலோ சிறுபான்மை அரசாகத்தான் காங்கிரஸ் ஆட்சி இருக்கும். சரிவர இயங்க முடியாத இழுபறியால் பி.ஜே.பி, ஐ.மு. போலவே கெட்ட பெயரைத்தான் வாங்க நேரிடும்.

அ.தி.மு.க அமைச்சர்களின் ராஜினாமா கடிதங்களைப் பெற்றுக்கொண்ட பிரதமர், அவற்றைக் குடியரசுத் தலைவரிடம் அனுப்ப அவசரம் காட்டவில்லை. பெரும்பான்மையைத் தக்க வைத்துக் கொள்ள பி.ஜே.பி திரைமறைவு முயற்சிகளை மேற்கொண்டிருப்பது தெளிவு. 'குதிரை வியாபாரம்' 'அ.தி.மு.கவைப் பிளக்க முயற்சி' போன்ற வதந்திகள் வேகமாக வலம் கொண்டிருக்கின்றன.

இப்படியெல்லாம் முயன்று பதவியில் நீடிக்கிற ஓர் அரசு, மீண்டும் தன் பெரும்பான்மையைக் காப்பாற்றிக் கொள்வதற்கே கவனத்தையும் நேரத்தையும் செலவிட வேண்டியிருக்கும். புதிய கூட்டாளிகளின் புதிய மிரட்டல்கள் தொடரும். உருப்படியாக எதையும் சாதிக்க முடியாது.

அ.தி.மு.க ஆதரவு விலகல் உறுதியானதுமே பிரதமர் தமது ராஜினாமாவை குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பிப்பது நல்லது. அதோடு நாடாளுமன்றத்தைக் கலைத்து, மீண்டும் தேர்தலுக்கு வழி வகுக்க வாஜ்பாய் தமது சிபாரிசைச் சேர்த்து வழங்கிட வேண்டும். குடியரசுத் தலைவரின் பணியை இது சுலபமாக்கும்.

மாறாக, வாஜ்பாய் தமது அமைச்சரவையின் ராஜினாமாவை மட்டும் வழங்குவாரானால், தலைக்குத் தலை ஆட்சி அமைக்கவும் பெரும்பான்மையை நிரூபிக்கவும் முன் வருகிற கன்னாபின்னா கூட்டணிகளுக்கு வாய்ப்பளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். அத்தகைய சோதனைகளைத் தாங்கும் நிலையில் நாடு இன்று இல்லை. ○



• சிவகாமியின் சபதம் நாட்டிய நாடகம்

ரசிகர் குடும்பம் எடுத்த விழா!

மஞ்சள் வெய்யில் மலைக் கோட்டையை ஆரத் தழுவிக் கொண்டிருந்த அற்புத கணங்களில் திருச்சி, பெமினா ஹோட்டல், லோட்டஸ் ஹால் நிரம்பி வழிந்தது. பத்து வயதுச் சிறுவன்- சிறுமி முதல் எப்படியும் நூறைத் தொட்டுவிட முயற்சி செய்து கொண்டிருக்கும் 'இளம் உள்ளங்கள்' வரை விழா மண்டபத்தை அடர்த்தியாய் ஆக்ரமித்துக் கொண்டனர்.

அரங்கிலே அமர இடமின்றி பால்கனியில் பாவையரும் (பயந்து விட வேண்டாம்! இது அந்தப் பால்கனி அல்ல!) பால்கனிப் பாவையர்க்குத் துணைவரும், குழந்தைகளும் ஒன்றாய் அமர்ந்து விழாவினைக் காண நேர்ந்தது கண் கொள்ளாக் காட்சி.

விழாக் குழு அமைப்பாளர் அகஸ்தியர் எஸ். கோபால கிருஷ்ணன், விழா நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடைபெற அனைத்து ஏற்பாடுகளையும் முன்னின்று செய்திருந்தார்.

பூவாளூர் நாகராஜன் குழுவினர் நாதஸ்வர மங்கள இசையுடன் விழா இனிதே துவங்கியது.

முன் அறிவிப்பு ஏதுமின்றி சட்டெனத் தவழ்ந்து வரும் சந்தனக் காற்றைப் போல எழுத்தாளர் பாலகுமாரன் அரங்கின் உள்ளே நடந்து வந்தார். அமரர் கல்கியின் திருவுருவப் படத்துக்கு மல்லிகைச் சரம் சாத்தி ஒரு நிமிடம் அவர் தியானித்து நின்ற போது, அரங்கில் இருந்த அத்தனை பேர் உள்ளங்களிலும் "கல்கி" என்னும் மந்திரச் சொல் மீண்டும் மீண்டும் அலை ஓசையாய் எதிரொலித்தது.

அனைவரையும் அன்புடன் வரவேற்ற அகஸ்தியர் கோபாலகிருஷ்ணன், விழாக் குழுவினரை நன்றியுடன் நினைவு கூர்ந்தார். டால்மியா சிமிண்ட்ஸ் கோபால ஸ்வாமியை தமது உரையில் நன்றியுடன் சுட்டிக் காட்டினார். தமது தந்தையார் நிறுவிய புத்தகக் கடைக்கு அகஸ்தியர் என்று பெயர் வைத்தது அமரர் கல்கி அவர்கள்தான் எனக் குறிப்பிட்டார்.

தமிழக ஆளுனர் பாத்திமா பீவி அவர்களின் வாழ்த்துச் செய்தி அடங்கிய அமரர் கல்கி நூற்றாண்டு விழா மலரை மாநகராட்சி மேயர் புனிதவல்லி பழனியாண்டி வெளியிட முதல் பிரதியை மாவட்ட ஆட்சித் தலைவர் வை. மூர்த்தி பெற்றுக்கொண்டார்.

கல்கி எழுதிய வானதி பதிப்பக வெளியீடான 'மூன்று மாத கடுங்காவல்' நூலை அகஸ்தியர் கோபால கிருஷ்ணன் வெளியிட முதல் பிரதியை டால்மியா சிமிண்ட்ஸ் கோபாலஸ்வாமி பெற்றுக் கொண்டார். வானதி பதிப்பகக் குடும்பத்தார் அனைவரும் வந்திருந்து விழாவுக்குப் பெருமை சேர்த்துத் தந்தனர்.

திருச்சிக்கும் கல்கிக்கும் இடையே உள்ள நெருங்கிய தொடர்பை துவக்க உரையில் கல்கி ராஜேந்திரன் வெளிப்படுத்தினார். 'மிகவும் பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் அமரர் ஒருவருக்கு நூற்றாண்டு விழா அமைதியாக நடந்து கொண்டிருக்கிறது.



• விழா மேடையில்...

விழாவுக்கு வருவதாக ஒப்புதல் அளித்திருந்த சோ அவர்களால் விழாவுக்கு வர இயலாமல் போய் விட்டது. பரபரப்பான அரசியல் சூழ்நிலையின் காரணமாக அவர் டெல்லிக்குப் பறந்து போயிருக்கிறார். அதனால் சோ மீது யாரும் கோபப்பட வேண்டாம். பரபரப்பான சூழ்நிலையை உருவாக்கக் காரணமானவர்கள் மீது உங்கள் கோபம்...'' என்று சொல்லி ஒரு நிமிடம் இடைவெளி விட்ட போது அரங்கில் சிரிப்பொலியும், கைத் தட்டலும் அடங்க சில நிமிடங்கள் கடந்து போயின.

கல்கி இருச்சியில் படித்தார், இங்குதான் படிப்பைப் புறக்கணித்து சுதந்தர இயக்கத்தில் சேர்ந்தார், இங்குதான் சிறைவாசமும் அனுபவித்தார்.

ராஜகுமாரி, ஜெயா பாலாஜி (அகில இந்திய வானொலி) சமயோசிதமாக இணைப்புரை வழங்க, நிகழ்ச்சி தொடர்ந்தது.

தலைமை உரை நிகழ்த்திய மாவட்ட ஆட்சித் தலைவர் வை. மூர்த்தி அவர்கள், "நான் எழுதிய சிறுகதைகள் கல்கியில் பிரசுரிக்க இயலாமல் திரும்பி வந்த காலங்கள் அன்று. ஆனால் இன்றோ கல்கி விழாவுக்குத் தலைமை தாங்க வேண்டிய பொறுப்பு எனக்கு கிடைத்துள்ளது. அதனைப் பெற்றுத் தந்தது இந்த மாவட்ட ஆட்சித் தலைவர் பதவி. இல்லையேல் இத்தனை பெரிய விழா மேடையில் இந்த நாற்காலியில் அமர எனக்கு இடம் கிடைத்திருக்காது. நாம் அமர நேருகின்ற நாற்காலிகள் எல்லாமே தாற்காலிகமானவைதான். இதோ கல்கி அவர்களுக்கு நிரந்தர நாற்காலி தந்து அவரது உருவப் படத்துக்கு பூமாலை சூட்டியுள்ளார்கள். தமிழ் வாசக உள்ளங்களில் கல்கி அவர்களுக்கு என்றைக்குமே நிரந்தர நாற்காலி ஒன்று உண்டு'' என்று குறிப்பிட்டபோது



• 'மூன்று மாத கடுங்காவலை' அகஸ்தியர் கோபாலகிருஷ்ணன் வெளியிட டால்மியா சிமெண்டஸ் கோபாலஸ்வாமி பெற்றுக் கொள்கிறார்.

அரங்கில் கரவொலி எழுந்தது.

கல்கி விழா எங்கு நடந்தாலும் அங்கு போய் இரண்டு வார்த்தை பேசி விட்டு வருவது தமக்குக் கிடைக்கின்ற கௌரவமாகக் கருதுவதாகக் குறிப்பிட்டார் எழுத்தாளர் பாலகுமாரன். "கல்கியின் எழுத்துக்களை படித்துவிட்டு வந்தவர்கள் யாரும் வாழ்க்கையில் சோடை போனது கிடையாது. அதற்கு உங்கள் முன் நிற்கின்ற நானே சான்று. பொன்னியின் செல்வனைப் பல முறை படித்துப் பார்த்த பிறகே எப்படி எழுத வேண்டும் என்கிற அடிப்படை எனக்குத் தெரிந்தது'' எனக் குறிப்பிட்டார் அவர்.

"இந்த விழாவிற்கு கல்கியின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நான்கைந்து பேர் வந்திருக்கிறார்கள். கல்கி வாசக குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பெருமளவில் மனப்பூர்வமாய் திரண்டு வந்திருக்கிறார்கள். கல்கியின் வாசக குடும்பத்திலிருந்து வந்திருப்பவன் நான்''

என்று ஆரம்பத்திலேயே தமக்கு 'பெரும்பான்மை பலம்' சேர்த்துக் கொண்டு உரை நிகழ்த்திய திருச்சி சிவா, "கல்கி அவர்களின் மறைவுக்குப் பின்னால் பிறந்தவன் நான். இளைய தலைமுறைக்கும் கல்கியின் படைப்புகள் சென்றடைய வேண்டும் என்பதற்காக என்னுடைய பத்து வயது மகளை இந்த விழாவிற்கு அழைத்து வந்துள்ளேன். காலங்களைக் கடந்து நிற்கும் கல்கியின் எழுத்துக்கள் என்னைப் பாதித்தன. எனது சகோதரியின் ஆண் குழந்தைக்கு பெயர் சூட்ட நேர்ந்தபோது, 'வந்தியத்தேவன்' என்று பெயர் வைத்தேன். தமிழுணர்வு ததும்புகிற கல்கியின் எழுத்துக்களை அடுத்த தலைமுறையும், அதற்கடுத்த தலைமுறையும் தொடர்ந்து படிக்கச் செய்வோம்!" என்று சபதமே செய்து விட்டார்!

"எண்ணங்கள் எனது முதல் நூல். அதனை எனது தாய் தந்தைக்குச் சமர்ப்பணம் செய்தேன். இரண்டாவது நூலை எனக்கு உலக அறிவு புகட்டிய அமரர் கல்கி அவர்களுக்கு சமர்ப்பணம் செய்தேன்" என்று டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி உரை நிகழ்த்திய நிமிடங்களில் அரங்கமே அவருக்கு மௌனமாய் நன்றி சொன்னது. 'கல்கி – சதாசிவம் – ராஜாஜி- ரசிகமணி ஒன்றாய் இணைந்திருந்தது ஒரு சத்சங்கம்" என்றார் அவர். மேலும் அவர் தமது சிந்தனை உரையில், "சுதந்தரப் போராட்டத்தின்போது மற்றவர்கள் தடுத்தும் கல்கி அவர்கள் சிறைக்குச் சென்றார். வாசன் சொல்லியும் கேட்கவில்லை. ராஜாஜி சொல்லியும் கேட்கவில்லை. அப்பொழுதுதான் கல்கியின் மனைவி சொன்னார். 'அவர் எனக்காக மட்டும் பிறக்கவில்லை. இந்த நாட்டுக்காகவும் பிறந்திருக்கிறார்'' என்று கோடிட்டுக் காட்டியபொழுது செவி மடுத்த அத்தனை உள்ளங்களும் பாகாய் உருகிப் போயின.

மேடையில் மல்லிகைச் சரங்களால் பூப்பந்தல் அலங்காரம். எனில், வார்த்தைச் சரங்களை வைரமணி மாலைகளாய்க் கோத்து தோரணங்களாய்த் தொங்கவிட்டு விழாவுக்கு அழகு சேர்த்தார் வலம்புரி ஜான். நகைக் கடைக்குள் நிறுத்தப்பட்ட பெண்ணின் மனநிலையில் அவையோரின் முன்னால் நிற்பதாகக் கூறிய அவர், "கால வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படாத கல்வெட்டு கல்கி! எல்லோரும் அவரை ஓர் எழுத்தாளர் என்றே குறிப்பிடுகிறார்கள். எனக்கு என்னவோ அவர் ஒரு வேதாந்தி – சூஃபி – தத்துவஞானியாகவே தெரிகிறார்.

"இன்பம் – துன்பம் இரண்டையும் ஒன்றாய் நினைக்கும் பக்குவம் எல்லோருக்கும் வந்து விடாது. துன்பத்துள்ளே இன்பம் என்ற கருத்தைச் சொல்லியது மட்டுமல்லாமல் வாழ்ந்து காட்டியவர் கல்கி. ரஸிகமணியின் பாராட்டையும், மூதறிஞரின் விமர்சனக் கணைகளையும் சமமாக எடுத்துக் கொண்டார். கல்கி ஒரு வேதாந்தியாகவே எனது பார்வைக்குத் தெரிகிறார். நாட்டுப் பற்றையும் - மொழிப் பற்றையும் இரண்டு கண்களாகப் பாவித்து வாழ்ந்தவர் கல்கி '' என்று மணிமகுடம் சூட்டி இதய சிம்மாசனத்தில் அமர வைத்து அழகு பார்த்தார் வலம்புரி ஜான்.

தேசியக் கல்லூரி முதல்வர் சேஷாத்ரி, ஜமால் முகம்மது கல்லூரி முதல்வர் அப்துல்லா பாஷா, திருச்சிராப்பள்ளி வானொலி நிலைய இயக்குனர் செல்வி தனலெட்சுமி, பாரதி காவலர் இராமமூர்த்தி, பட்டுக்கோட்டை கல்கிதாசன், ஸ்ரீரங்கம் ஆண்கள் மேனிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் வரதராசன், இ.ஆர். மேனிலைப்பள்ளி தமிழாசிரியர் இராமமூர்த்தி மற்றும் பலரின் மகிழ்வூட்டிய நகைச் சுவைப் பேச்சு, கருத்தாழம் மிகுந்த சிந்தனை உரைகளுக்குப் பின்னர் ஸ்ரீரங்கம் பரத நாட்டியாலா ரேவதி முத்துஸ்வாமி குழுவினரின் 'சிவகாமியின் சபதம்' நாட்டிய நாடகம் கன ஜோராய் அரங்கேறியது.

தொடர்ந்தாற்போல் ஆறு மணி நேரமாய் அரங்கில் அமர்ந்திருந்த அத்தனை பேரையும் மாயக் கயிற்றால் கட்டிப் போட்டிருந்தது ''கல்கி'' என்னும் மந்திரச் சொல் தான்.

— திருவரங்கம் திருநாவுக்கரசு

இந்தக் கோடை விடுமுறையில்
இன்டெர்நெட் உலகில் சஞ்சரியுங்கள் . . .
உங்கள் உள்ளம் விரும்பும்
காமிக்ஸ் தோழர்களின்
துணையோடு . . .



Internet Camp

4 years and above

இந்தக் கோடை விடுமுறையை உற்சாகமாய்க்
கொண்டாடுங்கள். உங்கள் அபிமான காமிக்ஸ் தோழர்களின்
துணையோடு இன்டெர்நெட் உலகில் பயணமாகுங்கள்! சொந்தமாக
'E-ஸ்க்ராப்' புத்தகம், ஹோம்பேஜ் போன்றவற்றை உருவாக்குங்கள்.
இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள். இன்டெர்நெட் எனும்
புதிய தோழனை அறிமுகம் செய்து கொள்ளுங்கள்,
இன்டெர்நெட் முகாம் : ஏப்ரல் 15 '99
அன்று தொடங்குகிறது.

Fully air conditioned classrooms.



I.T. Kids
GROWING UP WITH COMPUTERS

For details contact : Corporate Office : **I.T. KIDS (P) LTD.,** 4, Atkinson Road, Ground Floor, Atkinson Palace, **Vepery**, Chennai - 600 007. Ph : 6416038, 6416007, Fax : 044-583270 • **Chennai :** 112, Valluvar Kottam High Road, **Nungambakkam**, Ph : 8260934 • Srichakra R-5 A/2, **Anna Nagar** West Extension, (Near SBOA Primary Matriculation School), Ph : 6282869 • 17, K.B.Dasan Road, (SIET College Road), **Teynampet**, Ph : 4364119 • 6, 7th West Cross Street, (Near Chinthamani), **Shenoy Nagar**, Ph : 6282590 • 13, Ashok Avenue, Rangarajapuram, **Kodambakkam**, Ph : 4804606 • 157-E/21, Ram's plaza, MTH Road, **ICF**, Ph : 6289312 • 45A, Barnaby Road, **Kilpauk**, Ph : 6415516 • #164, North Usman Road, **T.Nagar**, Ph : 8284685 • 6/6, IV Main Road, **Kottur Gardens**, Ph : 4422448 • 4, II Floor, Ceebros Arcade, 1, 3rd Cross Street, Kasturibai Nagar, **Adyar**, Ph : 4415866 • Alamel Enclave, 1/1, C.P. Ramaswamy Street, 4th Street, Ground Floor, **Abhiramapuram**, Ph : 4995942 • 102, GST Road, **Chrompet** • 64-A, II Main Road, **Nanganallur**, Ph : 2347922 • **Coimbatore :** 126B, Race Course Road, (Behind Nilgiris), Ph : 213080 • RSB Towers, 1274, Mettupalayam Road, (Near Saibaba Temple), Ph : 433368 • 371, Nanjundapuram Road, Ramanathapuram, Ph : 315859 • **Tiruppur :** 66, Valipalayam, Opp. Logu Paper Mart, T.S. Puram, Ph : 747112 • **Trichy :** 3rd Floor, Ramanthan Arcade, Thennur High Road, Ph : 721582 • **Kumbakonam :** 15, 16, Karthy Complex, II Floor, Nageswaran North Street, Ph : 426090 • **Ooty :** 205, Satthar Buildings, Commercial Road (above Bata Shoes) • **Kotagiri :** Opp. Head Post Office, K.B.Complex, Ramchand, Ph : 73894 • **Dindigul :** 5, Co-operative Colony, Ph : 432351 • **Vellore :** 36, Katpadi Road, Gandhi Nagar, Cell : 98430 - 48913 • **Erode :** I Floor, Radha Complex, 227, Brough Road, Ph : 262317 • **Trivandrum :** Ph : 491339 • **Bangalore :** Ph : 5462738

Bring this ad along and get a gift on enrollment.


தலைநகரில் நடக்கும் சூழ்ச்சிக் கூட்டங்கள்!

பழுவேட்டரையர்கள் தலைமையில் கடம்பூர் மாளிகை நள்ளிரவு சூழ்ச்சிக் கூட்டத்தைப் போல், டெல்லியில் பல்வேறு மாளிகைகளில் "சூழ்ச்சி லஞ்ச்-டின்னர்" கூட்டங்கள். எல்லாக் குறு நில மன்னர்களும் (மாநிலத் தலைவர்கள்) முன்னாள் வேந்தர்களும் (பிரதமர்கள்) பங்கு கொள்ளும் இக்கூட்டங்களில் விவாதிக்கப்படுவது மாற்று மந்திரி சபை. பி.ஜே.பி. சூழ்ச்சி முறியடிப்புக் கூட்டங்களில்: "ஆட்சியை எப்படித் தக்க வைத்துக் கொள்வது...?"

ஆனால் அரசு கவிழ்வது சோனியா காங்கிரஸின் நிலைப்பாட்டைப் பொறுத்துத்தான் இருப்பதாகத் தெரிகிறது. ஜெயலலிதாவினால் வாஜ்பேயி அரசை சிறுபான்மையாக்க முடியுமேயொழிய, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலமோ பிற வழிகள் மூலமோ அரசை அகற்ற சோனியா கட்சியினால்தான் இயலும் என்பதே இன்றைய நிதர்சன உண்மை.

சோனியாவிற்கிருக்கும் பிரச்னைகள் இரண்டு: ஒன்று தம் தலைமையில் மாற்று அரசை அமைக்க வேண்டும் அல்லது பொதுத் தேர்தலை மீண்டும் சந்திக்க வேண்டும். இரண்டிலுமே இப்போது பிரச்னைகள் அதிகம் என்று அவர் கருதுவதால், இப்போதைக்கு இரண்டு முடிவுகளுக்கும் 'அவர் தயாரில்லை என்றே சொல்லலாம்.

சோனியா ஒரு முடிவிற்கு வரும் வரை வாஜ் பேயி சிறுபான்மை அரசின் பிரதமராக, நரசிம்மராவைப் போல, தொடர்வதில் எந்த விதப் பிரச்னையும் வரப்போவதாகத் தெரியவில்லை. எனவேதான் பி.ஜே.பி. மிகுந்த நம்பிக்கையுடன் அ.தி.மு.க. ஆதரவை வாபஸ் பெற்றாலும் தான் அரசை நடத்திச் செல்ல முடியும் என்று அறிவித்து விட்டது. அ.தி.மு.கவே மறுபடியும் தேர்தல் வந்தால் இதே எண்ணிக்கையுடன் மீண்டும் வந்து தனது பேரம் பேசும் சக்தியைத் தக்க வைத்துக் கொள்ள முடியுமா என்று அஞ்சுகிறது!



சொல்லப் போனால் சோனியா கட்சியுடன் நடக்கும் பேரத்தில் அ.தி.மு.க. கேட்டிருப்பது: தமிழகச் சட்டசபைத் தேர்தல்கள் வரை, அதாவது 2001வரை, பி.ஜே.பிக்கு மாற்றாக மத்தியில் வரும் எந்த அரசையும் கலைக்கக் கூடாது: கருணாநிதி, அவர் குடும்பத்தினர் மற்றும் சன் டீ.வி. மீது தாம் கொடுத்திருக்கும் ஊழல் புகார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்; தம்மீதுள்ள வழக்குகளை இழுத்தடித்து தமக்கு அவற்றிலிருந்து பாதுகாப்புக் கொடுக்க வேண்டும்; தேவகௌடா மற்றும் குஜ்ரால் எப்படி தி.மு.க.-த.மா.கா. சொல்படி செயல்பட்டு தம் மீது நடவடிக்கை எடுத்தார்களோ, அதே போல் தம் தயவில் இருக்கும் ஒரு பிரதமர் தம் சொல் கேட்டுக் கலைஞர் மீது கடும் நடவடிக்கைகளைத் துவங்க வேண்டும்.

மாற்று ஏற்பாடு பற்றிப் பேசும் போதே இவ்வளவு பேரம் பேசும் ஜெயலலிதா மாற்றரசு அமைந்த பிறகு என்னவெல்லாம் கேட்டு ஆட்டிப் படைப்பாரோ என்ற அச்சம் சோனியா கட்சியினருக்கு இருக்கிறது.

இதற்கிடையில் சுப்பிரமணியம் சுவாமி பி.ஜே.பி. அரசுக்கெதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர 50 பாராளுமன்ற உறுப்பினர்களின் கையெழுத்துக்களைத் திரட்டியிருக்கிறார். சட்டப்படி ஒரு அரசின் மீது இத் தீர்மானத்தைக் கொண்டுவர குறைந்த பட்சம் 50 உறுப்பினர்களின் பிரேரணை தேவை.

லாலு பிரசாத்-முலாயம் சிங் யாதவ் இவர்களுடன் நடந்த ஒரு மதிய உணவு சந்திப்பில் "யாதவ்களின் கூட்டணி மாற்று அரசு அமைக்கத் தயாராக இருப்பதாக" நம்மிடம் தெரிவித்தார். ஏப்ரல் 15 பாராளுமன்றம் இடைவேளைக்குப் பிறகு மீண்டும் கூடும்போது தீர்மானம் தாக்கல் செய்யப்படும் என்றார்.

"இது மதராஸிகளின் போட்டி" என்று வர்ணித்தார் ஒரு ஹிந்தி அரசியல்வாதி.



ஏனெனில் கவிழ்ப்பு முயற்சியில் சுவாமி முன்னணியில் நிற்பதைப் போல, அதை முறியடிக்கும் முயற்சியில் பி.ஜே.பி. தரப்பிலிருந்து ரங்கராஜன் குமாரமங்கலம். பிரமோத் மஹாஜன்-குமாரமங்கலம் குழு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முறியடிக்க பி.ஜே.பியினால் நியமிக்கப்பட்டிருக்கிறது.



இக்குழு ஹரியானாத் தலைவர் ஓம் பிரகாஷ் சோட்டாலாவின் ஆதரவை மீண்டும் இழுக்க முயற்சிகளைத் துவங்கியிருக்கிறது. தேவைப்பட்டால் அ.தி.மு.கவையும் உடைக்க முயல வேண்டும் என்பது இக்குழுவின் கருத்து. ஆறிலிருந்து ஒன்பது உறுப்பினர்களைப் பதவி ஆசை காட்டி இழுத்து விடலாம் என்று ஒரு கணக்குப் போடுவதாக ஒரு பி.ஜே.பி. கிச்சன் கேபினெட் உறுப்பினர் ஒருவர் கூறினார்.

இது தவிர கன்ஷிராமின் பஹுஜன் சமாஜ் கட்சியையும் தம் பக்கம் இழுக்க முயற்சிகளைத் துவங்கியிருக்கிறது இக்குழு. தமிழகக் கட்சிகளில் ம.தி.மு.க. தவிர பா.ம.கவைத் தக்க வைத்துக் கொள்ளவும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டியிருக்கும் இக்குழுவுக்கு என்றார் அந்த பி.ஜே.பி. உறுப்பினர். ஏனெனில், ராம்தாஸ், வைகோ, வாழப்பாடி ராமமூர்த்தியைப் போல் ஜெயலலிதாவின் முழு வெறுப்பிற்கு ஆளாகவில்லை. நிலைமைக்குத் தகுந்தவாறு "அந்தப் பக்கமும்" போகத் தயங்க மாட்டார் என்று காவிப்படை அஞ்சுகிறது.

சோனியா கட்சித் தரப்பிலிருந்து மன்மோஹன் சிங், அர்ஜுன் சிங், ஷரத் பவார், பிரணாப் குமார் முகர்ஜி அடங்கிய ஒரு குழு இடது சாரிகள் மற்றும் பிற பெருந்தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப் பணிக்கப்பட்டிருக்கிறது.

ராஜேஷ் பைலட், குலாம் நபி ஆஸாத், மணி சங்கர் ஐயர், பி.ஜெ.குரியன் கொண்ட இன்னொரு குழு உதிரிக் கட்சிகளிடமும், பூட்டா சிங் வட கிழக்கு மாநில சுயேட்சைகளிடமும் பேச்சுவார்த்தைகள் நடத்தி வருகின்றனர்.

இங்கு ஐந்து விதமான அரசியல் சூழ்நிலைகள் உருவாகக்கூடும் என்று எல்லாத் தரப்பினருமே கணிக்கின்றனர்:

1. சோனியா தலைமையில் காங்கிரஸ் அணி அரசு. இதற்கு சோனியாவிடமிருந்தே சரியான ஆதரவில்லை. தமது கட்சியைத் தனிப் பெரும்பான்மைக்கு அடுத்த தேர்தலில் நடத்திச் செல்ல முடியும் என்று அவர் எண்ணுகிறார். அப்போதுதான் அரசுக்கும் தலைமை ஏற்க வேண்டும் என்று கருதுகிறார்.

2. சோனியா இல்லாத மற்றொரு காங்கிரஸ்காரர் தலைமையில் அரசு-மன்மோஹன் சிங்கோ சிவ சங்கரோ பிரதமராக. இதுவும் கட்சிக் கூட்டங்களில் விவாதிக்கப்படுகிறது. சிவ சங்கரின் பெயர் அவர் ஆந்திராவைச் சேர்ந்த தலித் என்பதால் இப்போது புதிதாக நுழைந்திருக்கிறது. ஆந்திர மாநிலத் தேர்தல்களில் சோனியா கட்சி வெற்றிக்கு இது உதவும் என்றும் விவாதிக்கப்படுகிறது.

3. மூன்றாம் அணித் தலைமை. காங்கிரஸ் அரசில் அங்கம் வகித்தாலும் சரி வகிக்காவிட்டாலும் சரி. இதற்கு சோனியா கட்சியில் மிகக் குறைந்த ஆதரவே இருக்கிறது.

4. மீண்டும் ஐக்கிய முன்னணி காங்கிரஸ் ஆதரவில். அநேகமாக பழைய ஜனதாத் தளத் தலைவர்களைத் தவிர ஒருவரும் இதற்கு உடன்படவில்லை. தேவகௌடா இந்த அமைப்பில் தமக்கு மீண்டும் பிரதமர் லாட்டரி அடிக்கலாம் என்ற நப்பாசையில் தாம் கலந்து கொள்ளும் கூட்டங்களிலெல்லாம் இந்தப் பிரேரணையை வைத்துப் பார்க்கிறார். ஆனால் காங்கிரஸில் இதற்கு ஆதரவில்லை.

5. வாஜ்பேயி கவிழ்வார் ஆனால் மறு தேர்தல் வரை காபந்து பிரதமராகத் தொடர்வார். வரும் தேர்தலில் தாங்கள் அறுதிப் பெரும்பான்மையுடன் வந்து விடுவோம் என்று பெரும்பான்மை காங்கிரஸ்காரர்கள் கருதுகிறார்கள்.

இடது சாரிகளைப் பொறுத்த வரை "இனி இந்த அரசு பிழைக்காது". தலைநகர் அரசியலில் கவனிக்கப்படும் அளவில் வளர்ந்து வரும் மற்றொரு தமிழர், வலது கம்யூனிஸ்ட் கட்சி தேசியக்குழு உறுப்பினர் டி.ராஜா. "அ.தி.மு.க. போனாலே பி.ஜே.பி. அரசு கவிழும்" என்று கூறும் ராஜா கூறுவதும் "விரைவில் வேறொரு அரசு" என்பதே.

ஆனால் லாலு-முலாயம் கூட்டணியில், பின்னவர் காங்கிரஸ் அரசை ஆதரிப்பதில் தயக்கம் காட்டுகிறார். "ஏற்பாடுகள் முடிவு செய்யப்படும் நிலை வரும்போது முலாயம் எங்கள் நிலைப்பாட்டைத்தான் ஆதரிப்பார்" என்றார் சுர்ஜீத் நம்மிடம் நம்பிக்கையோடு. எல்லாரும் இப்போது எதிர்பார்த்துக் காத்திருப்பது ஏப்ரல் 15- பாராளுமன்றம் இடைவேளைக்குப் பிறகு மீண்டும் கூடும் தினம்.

— டெல்லி வெங்கட்

KALKI SHOPPING PAGE



சென்னையில் டெயில் எண்ட் பாட்ஸ்மேன்!

ஆண்கள் ஃபாஷன்

ஆண்கள் ஃபாஷன் என்பது கடந்த பத்து ஆண்டுகளாகத்தான் நம் நாட்டில் சூடுபிடித்து வளர்ந்து வருகிறதாம்! - சொல்கிறார்கள் கிரீஷ் - ரமேஷ். 'ரெக்ஸ் ஃபாஷன்' என்று பெயரிலேயே ஃபாஷனைச் சூடிக் கொண்ட கடையின் சொந்தக்கார சகோதரர்களுள் இருவர்.

"அது கூட சென்னைக்கு எந்த ஃபாஷனும் டெயில் எண்ட் பாட்ஸ்மன் மாதிரி கடைசியாகத்தான் வரும். பெரிய பரபரப்பையெல்லாம் ஏற்படுத்திடாது..." என்கின்றனர் இவர்கள்.

பெங்களூர், மும்பைதான் ஆண்கள் ஃபாஷனின் ஊற்றுக்கண்களாம். "அங்கெல்லாம் ஒரு கல்யாணத்துக்குப் போட்டுக்க, தனியா பிரத்யேகமா ஷர்ட் வாங்குவாங்க ஆம்பளைங்க... லேடீஸ் அதுக்குன்னு தனி சேலை வைச்சுக்கற மாதிரி... இங்க அப்படியில்ல.. காலைல ஆபீஸுக்குப் போட்டுட்டுப் போற சட்டையோட அப்படியே கல்யாணத்துக்குப் போற மாதிரியும் இருக்கணும்னு பார்க்கறாங்க. கொசுறா அதுலயே ஒரு காஷுவல் லுக் வேணும்னும் எதிர்பார்க்கறாங்க..."



அப்படியானால் லூயி பிலிப், பீட்டர் இங்க்லான்ட், ஆலன் ஸோலி, வான் ஹுசன் போன்று அரை டஜன் சர்வதேச பிராண்டுகளில் சட்டைகள் விளம்பரப்படுத்தப்படுகின்றனவே.... அவற்றின் கதி..?

இவற்றுக்கு ஒரு தேவை உருவாகியிருக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறார்கள் ரெக்ஸ் சகோதரர்கள். ரெடிமேட் சட்டைகள் மட்டுமே நன்றாக விற்று வந்த சென்னையில் தற்போது ரெடிமேட் பான்டுகளுக்கும் நல்ல வரவேற்பு என்கிறார்கள்.

நல்ல விலைக்குத் துணி வாங்கி, சரியாகத் தைக்காவிட்டால் ஏற்படும் பணி நஷ்டம், மனக் கஷ்டம்.

தையல்காரரின் தாமதத்தை சகித்துக் கொள்ள வேண்டிய சங்கடம் போன்றவை ரெடிமேட் உடையில் கிடையாது என்பது போக, அவற்றை விற்பனை செய்யும் கடைகளே கச்சிதமான சைஸுக்கு 'ஆல்டரேஷனும்' செய்து தந்து விடுகின்றன.

ஆலன் சோலி என்பது இங்கிலாந்து நாட்டு 'பிராண்ட்'. ஒரு சட்டையின் ஆரம்ப விலை எழுநூறு ரூபாய்! பீட்டர் இங்கிலாந்து 'நாணயமான சட்டை' என்று தனது தயாரிப்பை விளம்பரப்படுத்துகிறது! வான் ஹுசன் சட்டைகளுள் கோடு, கட்டமில்லாத 'பிளெயின் நிறங்கள்' நிறைய விற்பனையாகின்றன. ரூபாய் 695 முதல் 1395 - விலை வைத்துள்ளார்கள். இவ்வளவு விலை இருப்பதால்தானோ என்னவோ, ஒருத்தருக்கு இரண்டு பேராகப் பார்த்து வாங்கலாம் என்று பெரும்பாலும் கணவன் - மனைவி சேர்ந்தே வந்து வாங்குகிறார்களாம்.

— குல்லூ

படம்: ஸ்ரீஹரி

பணம் – இந்த மூன்றெழுத்து மந்திரக்கோல் வாழ்க்கைத் தத்துவத்தையும் உணர்த்தக்கூடியது. தாங்கள் உணர்ந்ததைப் பகிர விரும்பும் பல விஐபிகள் இந்தப் புதிய பகுதியில் வாரம் ஒருவராகப் பேசுவார்கள். இந்த வாரம் மனோரமா....



நான் ரொம்ப கஷ்டத்தைப் பார்த்தவள். அதுவும் சின்ன வயசிலேயே வறுமையை அனுபவிச்சவ. பணக் கஷ்டம் என்றதும் எனக்கு ஒரு சம்பவம் ஞாபகத்துல வருது. அப்போது எனக்கு எட்டு, ஒன்பது வயசிருக்கும். என் அம்மா எத்தனை கஷ்டப்பட்டுக் குடும்பம் நடத்தறாங்கன்னு எனக்குப் புரியற வயசு. செட்டி நாட்டுல காரைக்குடிக்குப் பக்கத்துல, பள்ளத்தூர் என்கிற ஊர்தான் எங்களுக்கு. எங்க ஊருக்குப் பக்கத்துல ஒரு கோவில். சோலையாண்டவர் கோவில்னு பேர். ரொம்ப சக்திவாய்ந்த சாமி. அங்க ஒரு திருவிழா. எங்க அம்மா, வருமானத்துக்காக முறுக்குப் பிழிஞ்சு, அதை விப்பாங்க. கோவில்ல திருவிழாங்கிறதால, அவங்க, அங்க போய் முறுக்கு வித்தா, நாலு காசு கிடைக்குமேன்னு நினைச்சாங்க.

திருவிழாவுல முறுக்குக் கடை போடணும்னா, குறைஞ்சது பத்து ரூபாயாவது வேணும். ஆனா, எங்க அம்மாவைப் பொறுத்தவரை பத்து ரூபா என்பது மிக அதிகத் தொகை. கைல காலணா இல்லை. யார் யாரிடமோ கேட்டு, ரெண்டு மூணு ரூபாயா கடன் வாங்கி, பத்து ரூபா சேர்த்தாங்க. அந்தப் பத்து ரூபாயில அரிசி, எண்ணெயெல்லாம் வாங்கி முறுக்குப் பிழிஞ்சாங்க. முறுக்கையெல்லாம் நான்தான் கூடையில எடுத்து அடுக்கி வெச்சேன். சுடச்சுட முறுக்கு. புது முறுக்கு வாசனை மூக்கைத் துளைச்சுது. நாக்குல எச்சில் ஊறுது. ஆனாலும் நான் ஒரு முறுக்கு எடுத்துச் சாப்பிடவா என்று என் அம்மாவிடம் கேட்கவில்லை. காரணம், நாம சாப்பிடாம, அந்த முறுக்கை வித்தா, நாலு காசு கிடைக்குமே என்கிற எண்ணம்தான்.

ஓலைக் கூடையில அடுக்கி வைத்த முறுக்கை எடுத்துக் கொண்டு, சோலையாண்டவர் கோவிலுக்குப் போனோம். கோவில் குளத்தை ஒட்டினாப்பல ஒரு இடம் பார்த்து முறுக்குக் கடை போட்டோம். நான்தான் கடையைப் பார்த்துக் கொண்டேன். என் அம்மா, 'இதோ பக்கத்துல போயிட்டு, கொஞ்ச நேரத்துல திரும்பி வந்திடறேன்'னு சொல்லிட்டுப் போயிட்டாங்க.

கால் மணி நேரம் போல ஆகியிருக்கும். திடீர்னு ஒரு காளை மாடு. அப்படியும் இப்படியுமா ஓடி, கடைகளை மிதிச்சு துவம்சம் பண்ண ஆரம்பிச்சுது. எல்லாரும், கடைகளை அப்படியே விட்டுட்டு, 'ஐயோ! அம்மா!'ன்னு கத்திக்கிட்டு தலைதெறிக்க ஓட ஆரம்பிச்சாங்க. நான் சின்னப் பொண்ணு. என்ன பண்ணுவேன்! ஓடலாம்னு ஒரு பக்கம் நினைச்சாலும், இன்னொரு பக்கம், கடன் வாங்கி, கஷ்டப்பட்டு செஞ்சு, வியாபாரம் பண்ணக் கொண்டு

வந்த முறுக்கை அப்படியே விட்டுட்டு, ஓட மனசில்லை. ஆனா முறுக்குக் கூடையை தூக்கிக்கிட்டு ஓடவும் முடியாது. பயந்து போய் நின்ன போது, யாரோ ஒரு பொம் பளை, என் கையைப் புடிச்சு இழுத்துக் கிட்டு ஓடிட்டாங்க! எட்ட நின்னு முறுக்குக் கூடையையே நான் பார்த்துக்கிட்டிருந்தேன்.

ஓலைக் கூடையை கீழே தள்ளி மிதித்தது. முறுக்கெல்லாம் ஒடஞ்சு, மண்ணுல சித றிச்சு. கொஞ்ச நேரத்துல அந்த மாடு போயி டுச்சு. எங்க அம்மா ஓடி வந்தாங்க. நானும் வந்தேன். மண்ணுல சிதறிக் கிடந்த முறுக் குத் துண்டுங்களைப் பார்த்ததும் எங்க கண் ணுல ரத்தக் கண்ணீர் வந்திடுச்சு.

அப்பக் கூட, 'ஆத்தா! உனக்கு ஒண்ணும் ஆகலையே! அது மட்டும் சந்தோஷம்'ன்னு சொல்லி என் அம்மா, என்னைக் கட்டித் தழுவிக்கிட்டாங்க. அந்த மாட்டுனால ஏற் பட்ட கடனை அடைக்க என் அம்மா எத் தனை கஷ்டப்பட்டாங்கன்னு எனக்குத் தான் தெரியும்!'' (இதைச் சொல்லுகிற போதே மனோரமாவின் கண்களில் இலே சாகக் கண்ணீர். பேச்சை நிறுத்திவிட்டு, கண்களைத் துண்டால் துடைத்துக் கொள்ளுகிறார். தொடர்கிறார்.)

இப்பவும் நான் சோலையாண்டவர் கோவிலுக்குப் போயிக்கிட்டுத்தான் இருக்

ணம்!

கேன். அந்தக் கோவில் குளத்துகிட்ட நாங்க அன்னிக்கு முறுக்குக் கடை போட்ட இடத் துக்குப் போய் நின்னு சில நிமிஷங்கள் என் பழைய நினைவுகளில் ஆழ்ந்து போவேன். சுற்றி நிற்கும் ஜனங்களுக்கு என் மனசுக் குள்ள இருக்கிற புழுக்கம் தெரியாது. சினிமா நடிகையைப் பார்த்த சந்தோஷத்துல நிற்பாங்க.

பிறகு, நாடகக் கம்பெனிகளின் பரிச் சயம் ஏற்பட்டு, ஆண்களே பெண் வேட மிட்டு நடித்தாலும், பாட்டுப் பாடுவதற்குப் பெண் குரல் தேவைப்பட்டது. என்னைப் பாடக் கூப்பிட்டார்கள். நான் நாடகத்துக் குப் பாட்டுப் பாடினேன். கூடவே சில நிமிட ஜிப்ஸி நடனமும் ஆடச் சொன்னார்கள்.

முதல் நாள் நாடகத்தில் பாட்டுப் பாடி, டான்ஸ் ஆடினதற்கு முப்பது ரூபாய் சன் மானம் கிடைச்சுது. அதை என் அம்மா விடம் கொண்டு போய்க் கொடுத்தேன். நீ சம்பாதிச்ச முதல் பணம். உனக்கே ஏதாவது வாங்கித் தரேன்னு சொல்லி கடைக்குக் கூட்டிக்கிட்டுப் போனாங்க. பதினஞ்சு ரூபாய்க்குக் காதுக்கு ஒரு கவரிங் தோடு, பாவாடை, தாவணி, எல்லாம் வாங்கிக் கொடுத்தாங்க. அன்னிக்கு நான் பட்ட சந் தோஷத்தை, நான் என்றைக்கும் என் வாழ் நாளில் அனுபவித்ததே கிடையாது.

அந்தக் கவரிங் தோடை நான் பத்திரமா கப் பாதுகாத்து வைச்சிருந்தேன். கொஞ்ச நாள் முன்னால பார்த்தால், அதைக் காணோம். எனக்கு ரொம்ப வருத்தமாப் போயிடுச்சு.

சினிமாவுல வாய்ப்புக் கிடைச்சு, மாலை யிட்ட மங்கையில நான் நடிச்ச போது சம் பளம் ரெண்டாயிரம் ரூபாய். சினிமாவுல சம்பாதிச்சதை சிறுகச் சிறுக சேர்த்து வெச்சு, மேற்கு மாம்பலத்துல ஒரு வீடு வாங் கினேன். நடிச்சு, புகழும், பணமும் வந்த பின், தி. நகர்ல இந்த வீட்டை வாங்கினேன்.

ஒருகாலத்துல, நடிப்புல இருந்து ஓய்வு பெற்று, செட்டில் ஆகிற எண்ணத்துடன், திருவாரூர் பக்கத்தில் நிலம் வாங்கி, என் நெருங்கியவர்களி டம் ஒப்படைத்தேன். அவர் கள் மறைவுக்குப் பின், அந்த சொத்தையெல்லாம், அவர் களின் குடும்பத்தினரும், வாரி சுகளுமே எடுத்துக் கொண்டு விட்டனர். பணம், எப்படி யெல்லாம் ஜனங்களை மாத்தி விடுது என்று நான் அப்போது உணர்ந்து கொண்டேன். அது மட்டுமா? நண் பர்கள் கூட கடன் வாங்கியவுடன், நம்மிட மிருந்து விலகிப் போகிறார்கள் என்பது என் அனுபவம்.

சில பேர் இதுக்கு இவ்வளவு செலவு பண் ணேன்; அதுக்கு அவ்வளவு செலவு பண் ணேன்னு சொல்கிறபோது, இப்படிச் செலவு பண்ண எப்படி இவங்களுக்கு மனசு வரு துன்னு நான் ஆச்சரியப்படுவேன். எதுக்கு இப்படிச் செலவழிக்கறாங்கன்னு கோபம் கூட வரும்.

என்னைப் பொறுத்தவரை பணத்தை அவ சியத்துக்குத்தான் செலவழிக்கணுமேயொழிய, ஆடம்பரத்துக்குச் செலவழிக்கக் கூடாது.

சந்திப்பு : **மௌலி**






வங்கத்திலிருந்து வரும் ஒன்பது கெஜம்!

வங்கத்தில் கங்கையின் இருபுறங்களிலும் பற்பல நெசவாளர்கள் செயல்பட்டு வருகிறார்களாம். "தகுந்தவர்களைத் தேடி கிட்டத்தட்ட டாக்கா எல்லை வரை கூடத் தாம் சென்று வர வேண்டும்." என்கிறார் கமலா ராஜன். அசோக் நகரில் "சாருலதா சாரி ஷாப்" என்ற பெயரில் அவர் தொடங்கிய புடைவைக் கடைக்கு இப்போது அண்ணா நகரிலும் ஒரு கிளை.

"வழக்கமாக பெங்கால் காட்டனென்றால் சற்றே பெரிய புள்ளிகளை உடல் முழுவதும் கொண்ட புடைவைதான் நினைவுக்கு வரும். இவை ஹூக்ளியிலேயே தயாரிக்கப்படுபவை. மற்ற வகைச் சேலைகளென்றால் மாநிலத்தின் மிக உள்ளே செல்ல வேண்டியிருக்கும்" என்றார்.

இப்போதெல்லாம் ஆர்கன்ஸா அதிகம் விற்கிறது. ப்ரிண்ட் போடப்பட்ட பாலிகாட்டின் விற்பனையும் அமோகம்தான். பூனம் சேலைகளை அப்படியே கட்டிக் கொள்ளலாம் - இஸ்திரி செய்ய வேண்டிய அவஸ்தை இல்லை. இந்தச் சிறப்பு கார்டன் சேலைகளுக்கும் உண்டு. இப்படித் தமது கடையில் விற்காத பிற வகைச் சேலைகளையும் வெளிப்படையாகவே புகழ்ந்தாலும், பெங்கால் காட்டனின் சிறப்புகளை பட்டியலிட மறந்து விடவில்லை கமலா.

"நீண்ட நாள் உழைக்கும் வகை இது. தவிர வெயில் காலத்துக்கு மிக ஏற்றது. மாம்பழ பார்டர், கோபுர டிசைன் பார்டரெல்லாம் காஞ்சிபுரம் மற்றும் வெங்கடகிரி பட்டுச் சேலைகளில்தான் பார்க்க முடியும். ஆனால் நாங்கள் அதே போன்ற டிசைன்களை பெங்கால் காட்டனிலும் தருகிறோம். இப்படி வேண்டுமென்று மேற்கு வங்கத்திலுள்ள நெசவாளர்களிடம் கூறி நெய்யப்படுபவை இவை. வேடிக்கை என்னவென்றால் இதுபோன்ற புடைவைகளை இப்போது வங்காளிகளும் விரும்பி அணியத் தொடங்கியிருக்கிறார்கள்.



பெங்கால் காட்டனில் ஒன்பது கஜப் புடைவையை நீங்கள் இங்கே வாங்க முடியும். பூனே பகுதியிலும், தமிழகத்திலும்தான் இந்த நீளம் கொண்ட சேலையை அணிகிறார்கள். முதலில் ஆச்சரியப்பட்டாலும் விளக்கிய பிறகு இது



போன்ற சேலைகளைத் தயாரித்துத் தர ஒப்புக் கொண்டனர் நெசவாளர்கள்.

பட்டில் காணப்படும் டிசைன்கள் காட்டனிலேயே கிடைக்கும்போது பணமும் மிச்சம், கோடைக்காலத்துக்கு அணியவும் சௌகரியம் என்பதால் பலரும் இதற்கு மாறி விட்டார்கள்..." என்பவர், பருத்தி மற்றும் பட்டுப் புடைவைகளுக்குக் கஞ்சி போட்டுத் தரும் அரிய பணியையும் மேற்கொள்கிறார்.



இதனாலெல்லாம் பட்டின் பவிசு குறைந்து விடவில்லை! வெறும் புடைவையில் காணப்பட்ட பட்டிழைகள் இப்போது விதவிதமான ஆடைகளிலும் ஆக்கிரமிக்கின்றன - சல்வார், காக்ரா, ஃப்ராக்...

"அது மட்டுமல்ல... பட்டுப் புடைவையைக் கூட ஃபாஷன் உடை போல் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். சுமார் மூன்று மாதங்களுக்கு முன் நியூயார்க்கில் நடைபெற்ற பட்டு உடைக் கண்காட்சியில் சில மாடல்கள் பட்டுப் புடைவையை வித்தியாசமான விதத்தில் அணிந்து வர (கை மற்றும் மார்புப் பகுதியில் ஜரிகை பார்டர் வருவது போல்), இப்போது அங்கு பட்டுப் புடைவைகள் அதிகமாக விற்கத் தொடங்கியுள்ளன. இங்கு வரும் அமெரிக்க சுற்றுலாப் பயணிகள் கூட ஐந்தரை மீட்டரில் பட்டுப் புடைவை வேண்டும் என்று கேட்டு வாங்கிச் செல்கிறார்கள்!" என்கிறார் ஹயக்ரீவா சில்க் ஹவுசின் உரிமையாளர்களில் ஒருவரான வரதன்.

வேறென்ன மாறுதல்கள் பட்டுப் புடைவை விற்பனையில் ஏற்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்பினோம்.

''பட்டுச் சேலைகளில் வண்ணங்களுக்காக - முக்கியமாக கறுப்பு மற்றும் மெரூன் ஆகியவற்றுக்கு - ஏற்றப்படும் சாயத்தில் பென்ஸின் கலந்திருப்பது வழக்கம். இது அதிக அளவில் கலந்திருந்தால் தோல் வியாதி ஏற்படலாம் என்பதால் இதற்குத் தடை விதித்திருக்கிறார்கள். எனவே ஆறு மாதங்களாக தீவிர ஆராய்ச்சி செய்து பென்ஸின் இல்லாத வண்ணப் பொருள்களைக் கண்டுபிடித்துப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறோம்.

"ஃபிலியேச்சர் பட்டு என்ற ஒன்று அறிமுகமாகியிருக்கிறது. இதுவும் இயற்கையான பட்டுதான் என்றாலும் மிக மென்மையானது. எடை குறைவு என்பதால் அணிய சௌகரியம். ஆனால் வழக்கமான பட்டைப் போல் ஒன்றரை பங்கு விலை.''

— குல்லூ

ஓயாமல் ஒலிக்கும் தொலைபேசி!




• J.D. குடும்பம்

"இப்போது நினைத்தால் கூட பிரமிப்பாக இருக்கு" என்றார் திரு துரை. சென்னையில் பிரபலமடைந்துள்ள 'ஜே.டி. கேடரிங் சர்வீஸ்'ன் உரிமையாளர். "ஒரு காலத்தில் பட்சண வண்டியில் – அதுதான் கண்ணாடியில் தள்ளுவண்டி இருக்குமே அதுதான் – முறுக்கு, தட்டையெல்லாம் தெருத்தெருவாக விற்ற நான், இன்றைக்கு சொந்தக் காரில் போகும் நிலையை எட்டியிருக்கிறேன் என்றால் அது பகவான் அருள் தான்."

உறுதியும், விடாமுயற்சியும் உள்ளவர்களுக்குத்தான் இறைவனின் அருள் அதிகமாகக் கிடைக்கும். அந்த விதத்தில் துரையின் வெற்றிக்கதை மற்றவர்களுக்கும் ஊக்கத்தைக் கொடுக்கும்.

"எங்கள் பரம்பரையில் பலரும் சமையல்காரர்கள்தான். என் அப்பா ஜெயராம ஐயர் கும்பகோணத்தில் இட்லி வியாபாரம் செய்து கொண்டிருந்தார். உடன் பிறந்தவர்கள் நாங்கள் ஐந்து பேர். கைக்கும் வாய்க்குமாக வாழ்க்கை. ஸ்கூலில் படித்துக் கொண்டே காலையிலும் மாலையிலும் வீடு வீடாகப் போய் இட்லி, முறுக்கெல்லாம் விற்று வருவேன். இதற்கு நடுவே அப்பாவுக்கு உடல் நிலை சரியில்லாமல் போனது. தள்ளுவண்டியில் பலவித பட்சணங்களை வைத்துக் கொண்டு அவர் கிளம்பும்போது பார்த்து, நடுக்கு ஜுரம் வந்துவிடும். அன்றைக்கு விற்கவில்லையென்றால் வீட்டில் சாப்பாட்டுக்கே வழி இல்லை என்பதோடு சுண்டல் போன்றவை ஊசிப் போய், பயனில்லாமல் போய் விடுமே. அதனால் "இன்னிக்கு மட்டும் நீ ஸ்கூல் போக வேணாம். இதை வித்துட்டு வந்துடுடா" என்பார். இது அடிக்கடி நடக்கவே நான் எட்டாம் வகுப்பில் பெயிலானேன். பரீட்சையில் தோல்வியடைந்ததால் இல்லை; பள்ளிக்குப் போகாமல் இருந்ததால்.

"இப்படியே வாழ்க்கை போய்க் கொண்டிருந்த போதுதான் என் அண்ணனுக்கு ஊனமுற்றோர் பிரிவில் சென்னையில் டெலிபோன் பூத் வேலை கிடைத்தது. சென்னைக்கு வந்தோம். அப்போது எனக்கு சுமார் இருபது வயது. ஆனைமுகன் என்றே பலராலும் குறிப்பிடப்பட்ட என் அப்பாவின் உடல் நிலை



• திருமண மண்டபம்

மேலும் சரியில்லாமல் போனது. மேற்கு மாம்பலத்தில் நாங்கள் இருந்த ஒண்டுக்குடித்தன வீட்டில் ஒரு பெரும் விபத்து நடந்தது. கிணற்றில் தண்ணீர் இழுக்கும் போது தவறிப் போய் அதற்குள் விழுந்து விட்டார் அம்மா. 45 அடிக் கிணறு அது! பொது மருத்துவமனையில் சேர்த்தோம். எங்களின் சமையல் வேலை மற்றும் பட்சண வியாபாரத்திலும் பெரிய முன்னேற்றம் காணோம். சரி சென்னையே வேணாம், எங்காவது கிராமத்துக்குப் போயிடுவோம்னு பெரியபாளையத்துக்கு போய் ஒரு சின்ன ஹோட்டலைத் தொடங்கினோம். ஆனால் கொஞ்ச நாளிலேயே அதிலும் லாபமில்லை என்பது புரிந்தது. எப்படியாவது சென்னைக்கே வந்து சாதித்துக் காட்டணும்னு வெறி வந்தது. திரும்பவும் சென்னைக்கு வந்தோம். குரோம்பேட்டையில் மீண்டும் சமையல் தொழில்.

"எனக்குக் கல்யாணம் செய்து வைக்கணும்னு அம்மாவுக்கு ஆசை. ஆனால் சமையல்காரனுக்குப் பெண் கொடுக்க யாரும் தயாராக இல்லை. அப்போது அண்ணா சாலையி

லுள்ள 'டாக்' நிறுவனத்தின் தலைவராக இருந்த வேதநாராயணன் தங்கள் நிறுவனத்தின் கான்டீனை நடத்தும் பொறுப்பை அளித்தார். இரண்டு வருடங்கள் சிறப்பாக நடத்தினேன். என்றாலும் தொழிலாளர் பிரச்னையால் கான்டீன் மூடப்பட்டது. இதற்கு நடுவே எனக்குக் கல்யாணம் நிச்சயமானது - கான்டீன் பொறுப்பாளர் என்ற பதவி கௌரவம் கொடுத்ததால், ஆதம்பாக்கத்திலிருந்த தனது ஒன்றேகால் க்ரௌண்ட் மனையை விற்றுத்தான் தன் மகளின் திருமணத்தை நடத்த வேண்டிய நிலையில் இருந்தார் என் மாமியார். அதெல்லாம் வேண்டாமென்று சொல்லி என் செலவிலேயே கல்யாணத்தை நடத்திக் கொண்டேன். 'இப்பவே மாமியார் பக்கம் சரிஞ்சுட்டியா?' என்ற கமெண்ட்டுகள் வீட்டில் எழுந்தது வேறு விஷயம்" என்று சிரித்தார்.

கான்டீன் மூடப்பட்டவுடன், மனம் வெறுத்துப் போய் 'பம்பாய்க்குச் சென்று பிழைத்துக் கொள்ளலாம்' என்று கிளம்பிச் சென்று, அங்கும் பல சோதனைகளை சந்தித்துவிட்டு சென்னை திரும்பும்போது வழியில் மந்த்ராலயத்துக்குச் சென்று ராகவேந்திரரை தரிசித்திருக்கிறார். "அதுதான் என் வாழ்க்கையின் திருப்புமுனைன்னு சொல்லணும். மெட்ராஸ் வந்தவுடனேயே வணிகவரி அதிகாரியான துரைசாமி என்பவர் என்னிடம் இருபதாயிரம் ரூபாயைக் கொடுத்துத் தன் மகளின் கல்யாணத்துக்கு ஒரு சத்திரத்தை ஃபிக்ஸ் பண்ணித் தரச் சொல்லிவிட்டு, அப்படியே அதற்கான சமையல் பொறுப்பையும் என்னிடம் கொடுத்தார். பிறகு மாதம் ஐயாயிரம் ரூபாய் வருமானம் வருமளவுக்கு சமையல் ஆர்டர்கள் வந்து குவிந்தன. இந்தக் கால கட்டத்தில் நான் சந்தித்த சோதனைகளும், அவமானங்களும் நிறைய. முன்னேறியே தீர வேண்டும் என்ற வெறிதான் என்னை இயக்கியது.



• உபநயன நிகழ்ச்சியில்...

சமையலில் நல்ல பெயர் எடுத்தாலும், வேலை கொடுப்பவர்கள் கம்மியாகவே இருந்தார்கள். என்ன செய்யலாம் என்று பல இரவுகள் தூங்காமல் யோசித்ததில் ஒரு ஐடியா தோன்றியது. கொழுத்த முகூர்த்த தேதியில் பத்து கல்யாண மண்டபங்களை நானே ரிசர்வ் செய்து வைத்துக் கொண்டேன். சத்திர மானேஜர்களும் எனக்கு உதவினார்கள். சத்திரம் புக் செய்ய வந்தவர்கள் என்னிடம் அனுப்பப்பட, உரிய தொகையைப் பெற்றுக் கொண்டு சத்திரத்தை விட்டுத் தந்தபோதே என் சமையல் திறமையைச் சொல்லி வாய்ப்பு கேட்டேன். வளர்ந்து படர்ந்தது. ஒரே நாளில் பத்து கல்யாணத்தைக் கூட செய்யும் அளவுக்கு கல்யாண கான்ட்ராக்டராகவும் பரிமளிக்க முடிந்தது.

அப்போதுதான் ஐந்து வருடங்களுக்கு முன் ஆதம்பாக்கம் - உள்ளகரம் பகுதியில் உள்ள இந்த இடம் விலைக்கு வந்தது. என் தொழிலுக்குத் தொடர்புள்ள முதலீடான திருமணச் சத்திரம் ஒன்றை இங்கு கட்டத் தீர்மானித்தேன். என்னுடைய பல வாடிக்கையாளர்கள் பண உதவி செய்தார்கள். நானே எதிர்பார்க்காத வகையில் வெகுவேகமாக **''ஸ்ரீ குரு ராகவேந்திரா கல்யாண மண்டபம்''** உருவானது. இரண்டு மாடிகள். ஒரே சமயத்தில் மூன்று திருமணங்களை மூன்று தளங்களில் நடத்தலாம்.

நகரப் பகுதியில் அமையாமல் சற்றுத் தள்ளி அமைந்திருப்பதால் இதை புக் செய்யத் தயக்கம் ஏற்பட வாய்ப்பு உண்டே? "குறைவில்லாமல் வருடத்திற்கு நூறு கல்யாணங்களுக்கு இங்கு புக்கிங் நடக்கிறது. வசதிகள் அதிகம் உண்டு இங்கு. சத்திரத்தில் அறைகள் எங்கோ தனியாக அமையாமல் கூடத்தை ஒட்டியே அமைந்திருப்பதால், திருமணம் நடக்கும்போதே அறைகளில் உள்ள நடமாட்டத்தைப் பற்றியும் அறியலாம். வீடியோ கனெக்ஷன், ஜெனரேட்டர் என்று வேறு வசதிகளும் உண்டு. அதுமட்டுமல்ல. இதில் கிடைக்கும் பணத்திலிருந்து பல நல்ல காரியங்களைச் செய்து வருகிறேன். சமீபத்தில் கூட இருபது சிறுவர்களுக்கு இலவசமாகவே உபநயனம் செய்து வைத்தேன். விரைவில் பத்து ஜோடிகளுக்கு இலவசமாகத் திருமணம் செய்து வைக்கவும் உத்தேசம். தாங்கள் திருமண மண்டபத்துக்குக் கொடுக்கும் தொகை சத்காரியங்களுக்கும் போய் சேருகிறது என்ற நினைவும் இருப்பதால்தான் பலரும் 2345232 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு திருமண மண்டபத்தை புக் செய்கிறார்கள்" என்றார் துரை.



• குத்துச்சண்டை...





• 'உதைப்பு'!

• ...சாம்பியன்கள்!

● த. குணசேகரன், கவுந்தப்பாடி.

? தமிழக சட்டசபைக்கு அ.தி.மு.க எம்.எல்.ஏ. சுந்தரம் ஹெல்மெட், கவச உடையுடன் வந்தது பற்றி...?

! ஒரே கட்சிதான் என்றாலும் தாமரைக் கனி என்றால் கொஞ்சம் 'உதைப்பு' இருக்கத்தானே செய்யும்!

● ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்.

? நீண்ட காலம் எதிர்க்கட்சியாக இருந்த தால் ஆட்சி நடத்துவது எப்படி என்று பி.ஜே.பிக்குத் தெரியவில்லை என ஜெ கூறுகிறாரே?

! ஜெ தலைமையிலான அ.தி.மு.கவுக்கோ ஆட்சி நடத்தவும் தெரியவில்லை, பொறுப் பான எதிர்க்கட்சியாகவும் விளங்கத் தெரியவில்லை; கூட்டணிக் கட்சியாக ஒத் துழைக்கவும் விருப்பமில்லையே... இது கேவலமில்லையா!

● எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

? பரபரப்பை மட்டுமே செய்தி யாக்கி காசாக்க நினைக்கும் பத்திரி கைகள் பற்றி...?

! அது சரி. வெறும் பரபரப்பே போதும், ஆழமான செய்திகள் வேண்டாம் என்று நினைக்கிற வாசகர்கள் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

● எம். கார்த்திகேயன், கோவை – 6.

? தமிழகத்தில் இந்த ஆண்டு மின்வெட்டு எப்படி இருக்கும்...?

! மின்வெட்டு இருக்காது என்று முதல் வரும் அமைச்சரும் சொல்கிற ஒவ்வொரு நாளும் இங்கே (சென்னையில்) மின்வெட்டு ஏற்பட்டு விடுகிறது. ஒட்டுமொத்தமாக தமி ழகத்தின் நிலை...? வாசகர்கள்தான் சொல்ல வேண்டும்!

● க. நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்.

? எனக்குப் பெண் பார்க்கிறார்கள். எப் படிப்பட்ட பெண்ணைத் தேர்ந்தெடுப் பது?


! உங்களைத் தேர்ந்தெடுக்க மகிழ்ச்சியுடன் சம்மதிக்கிற ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுங் கள்!

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி.

? 'அந்தக் காலத்தில் எங்களுக்கு மேல் ஜாதி ஆசிரியர்கள் பாடம் நடத்தியது போல், இந்தக் காலத்தில் பிற்படுத்தப் பட்ட, தாழ்த்தப்பட்ட ஆசிரியர்கள் பாடம் சொல்லிக் கொடுப்பதில்லை...' என்று சட்டசபையில் கல்வி அமைச்சர் அன்பழகன் வேதனையுடன் கூறியுள் ளாரே?

! சில விதிவிலக்குகள் இருப்பினும் பொது வாகக் கல்வியின் தரமும் அதை போதிப்பவர் களின் தரமும் ரொம் பக் குறைந்து போய் விட்டது என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இதில் ஜாதிப் பிரச்னையைப் புகுத்தாமலேயே கல்வி மேம்பாட்டுக்கு வழி காண்பது நல்லது. சாத் தியமற்றதும் அல்ல. உடனே தொடங்கினால் ஐந்தாறு ஆண்டுகளில் பலன் கிடைக்க ஆரம்பிக்கும்.

• குற்றவாளி!



பெர்னாண்டஸ்

● உ. காசிநாதன், சோழபுரம். ❑

? டீ.வி. சானல்களில் மதுபான விளம் பரங்களைத் தடைசெய்வது பற்றி...?

! இதுவும் சரி, லாட்டரி ஒழிப்பு யோச னையும் சரி... சரியான திசையில் இயங்கும் சிந்தனைகள். பேச்சோடு நின்று விடாமல்

நீங்கள் கேட்டவை — தராசு

சட்ட வடிவம் தரப்படுமா என்பதுதான் சந்தேகம்!

● மீனா முருகேசன், திருச்சி – 18.

? பொறுப்பை உணர்ந்து செயல்பட்டால் அடுத்த தேர்தலில் காங்கிரஸ் ஆட்சி என்று திண்டிவனம் ராமமூர்த்தி கூறு கிறாரே...?

! சரியாப் போச்சு! அவருடைய பொறுப் புக்கே உலை வைத்திருக்கிறார்களே...! அப்பு றம் காங்கிரஸ் ஆட்சியாவது மண்ணாவது! உட்பூசலில் உழலும் கட்சி உருப்படாது.

● பொ. முத்துலட்சுமி, வடக்கு நரிப்பையூர்.

? சுப்பிரமண்யம் சாமியின் குறிக்கோள் என்ன...?

! சகுனித்தனம்.

● ஜி. செல்வராஜன், வெங்கலம்.

? மூன்று நாடுகள் கிரிக்கெட்டின் கடைசி இரு ஆட்டங்களுக்கு கேப்டனாக்கப்பட்ட ஜடேஜா?

! வெற்றி தோல்விக்கு கேப்டன் உதவலாம். ஆனால் வெற்றி தோல்வியை கேப்டன் நிர் ணயிப்பதில்லை. Motivation and team-work தாம் அதை சாதிக்கிறது என்பதை இந்தியாவின் தோல்வி மீண்டுமொருமுறை நிரூபித்திருக் கிறது.

● ராஜி, கமுதி.

? ஜெயலலிதாவின் நிர்ப்பந்தங்களுக்கு முடிவுதான் என்ன...?

! இன்னொரு தேர்தல்தான்! அதில் அவர் தோல்வியைத் தழுவுவதுதான்.

அக்ரஹாரம்.

? சுபாவங்களை மாற்றிக் கொள்வது சுலபமா...?

! சுலபமல்ல. ஆனால், அவசிய மானால் மாற்றிக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். குறைந்தபட்சம்



• யோசிக்காமல் யோசனை!



• புகுத்திய பிரச்னை!



• தோல்விப் பாடம்!

நமது சுபாவத்திலுள்ள குறையை உணர்ந்து எச்சரிக்கையாவது கொள்ள வேண்டும்.

● மு. முஸ்தபா, இராமேச்வரம்.

? தமிழ் இலக்கியங்களை கோடம்பாக் கத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும் என்று நடிகர் நாசர் கூறியுள்ளாரே?

! எதற்கு? குட்டிச் சுவர் பண்ணவா...?

● ராஜி ராதா, திருச்சி – 14.

? பெர்னான்டஸ் செய்த குற்றம்தான் என்ன...?

! அவர் அ.தி.மு.க

செய்த குற்றம் என்ன..?

வில் இல்லா ததுதான்.

● பி. பி. சந்திரசேகரன், கரூர்.

? இளம் எழுத்தாளர்களை எந்த ஒரு பத்திரிகையும் ஊக்குவிப்பதில்லையே... ஏன்?

! கல்கியில் எழுதுகிற 90 சதவிகிதம் பேர் கிழவர்கள் இல்லை.



• குறிக்கோள் வீரர்!


● ஜெ. கண்ணன், சென்னை – 101.

? மைக் டைசனும் தாம ரைக் கனியும் சந்தித்துக் கொண்டால் என்ன பேசிக் கொள்வார்கள்...?

! டைசன் : பாக்ஸிங் ரிங் குல நான் சாம்பியன்.

தாமரைக்கனி : 'ரிங்' பாக் ஸிங்க்ல நான்தானே சாம்பி யன்!

● ஜி. ராமதாஸ், கணபதி



• பொறுப்புக்கு உலை!

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
உ. காசிநாதன்,
34, சன்னதி தெரு,
சோழபுரம் அஞ்சல்,
கும்பகோணம் தாலுகா,
தஞ்சை மாவட்டம் - 612 503.

சுமி சூப்பர்மார்க்கெட்!



உலகம் முழுக்கப் பரவி இருக்கற தமிழ் எழுத்தாளர்களை ஒண்ணு சேர்க்க ஒரு முயற்சி ஆரம்பிச்சிருக்கார் ஓர் எழுத்தாளர்.

பாரீஸ்ல, ஸ்விஸ்ல, லண்டன்ல, நார்வேல - இன்னும் எங்கெங்க எல்லாம் மனுஷன் வாழ முடியுமோ, அங்கெல்லாம் பரவி இருக்காங்க தமிழ் எழுத்தாளர்கள். (இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களையும் சேர்த்து).

அவங்களுக்கெல்லாம் பிரசுர வாய்ப்பு ரொம்பக் கம்மி இல்லையா? மோ ஒவர், ஒரு கலெக்ஷன் கொண்டு வரணும்னு ஆசைப்பட்டாக்கூட அதுக்கு இந்தியா வரணும்.

இங்க வந்தப்புறம் பப்ளிஷர்லை நோக்கிப் படையெடுக்கணும்.

''என்னது? இலக்கியமா? சமையல் இலக்கியம், சனிப்பெயர்ச்சி இலக்கியம் ஏதாச்சும் இருந்தா சொல்லுங்க''ன்னு அவங்க நறநறக்கப் பண்ணினா மாறாத புன்னகையோட பொறுத்துக்கணும்.

இதுக்கெல்லாம் மேல, சென்னையைத் தவிர வேற எங்கேயிருந்து எழுதினாலும் சரியா 'போய்ச் சேர' மீடியம் கிடையாது.

உணர்வு ரீதியா பிரிஞ்சு இருக்கற வருத்தம் NRI ரைட்டர்ஸுக்குக் கண்டிப்பா இருக்கத்தானே செய்யும்?

பார்த்தார் அந்த எழுத்தாளர். வாழ்க்கைல பெரும் பகுதியை ஆஸ்திரேலியா, சௌத் ஆஃப்ரிக்கா, வேற சில வெஸ்டர்ன் கன்ட்ரீஸ்லேயும் கழிச்சிட்டு, இப்ப அக்கடான்னு மெட்ராஸ் வந்து உட்கார்ந்தவருக்கு இருப்புக் கொள்ளலை.

உலகத் தமிழ் எழுத்தாளர்களை 'ஒன்றிணைத்து', (என்ன தமிழ்!) சென்னையை பப்ளிஷிங் கேந்திரமா வெச்சு, பெரிய பிளான் ஒண்ணு பண்ணார்.

கோடம்பாக்கம் ஹைரோடுல ஒரு இடம் வாங்கி, பிரெஸ் வித் ஷோரூம் ஒண்ணு கட்ட ஆரம்பிச்சிட்டார். (சொந்தப் பணம் சார்!)

இது மூலம் பிற நாட்டு நல்லறிஞர் சமாசாரமெல்லாம் இங்க பப்ளிஷ் ஆகும். உலகம் முழுக்க டிஸ்ட்ரிப்யூஷன் நடக்கும். கையோட, பல மொழிகள்ல ட்ரான்ஸ்லேட் பண்ற சோலியும் சைட்-பை-சைட் நடக்கும்!

பெரிய ப்ராஜக்ட் இது! ஒரு கவர்ன்மென்ட் செய்ய வேண்டிய காரியத்தை, தனி மனுஷர் செய்ய ஆரம்பிச்சிருக்கார். இது சம்பந்தமா உலக எழுத்தாளர்களை சந்திச்சுப் பேச, ப்ராஜெக்டுக்கு நிதி திரட்ட ஒரு உலக சுற்றுப்பயணமும் லாஸ்ட் வீக் தொடங்கியிருக்கார். சுமார் ஒன்பது மாதப் பயணம்.

நியாயமா, ஃபர்ஸ்ட் பேராலேயே அவர் பெயரை நான் சொல்லியிருக்கணும். இப்ப சொல்றேன். 'தீ', 'நனவிடை தோய்தல்' மாதிரியான தம் படைப்புகள் மூலம் இலக்கிய உலகத்துல பெரிய பரபரப்பேற்படுத்திய எஸ். பொன்னுதுரை; இலங்கைத் தமிழ் எழுத்தாளர்.

* * *

சன் டிவி உமா டென்ஷனாவது ஏன்?

''சன் டிவி 'வணக்கம் தமிழகம்' நிகழ்ச்சியை ரெக்கார்ட் பண்ணித்தானே டெலிகாஸ்ட் பண்றாங்க? ப்ரீவியஸ் டே நைட் ட்ரெய்லரெல்லாம் போடறாங்க! ஆனா, மறுநாள் காலை ஒளிபரப்பின் போது எட்டு மணி ஆச்சுன்னா உமா டென்ஷனாகி, 'சன் செய்திகளுக்கு நேரமாயிடுச்சு. அதை

முடிச்சிட்டுத் தொடரலாம்'னு ரொம்ப கரெக்டா டயம் பார்த்து எப்படிச் சொல்றாங்க?''

– இப்படியொரு தீர்க்க முடியாத பாண்டியன் சந்தேகத்தைக் கிளப்பியிருக்கார் நம்ம fan சண்முகசுந்தரம்.

லைவ் ப்ரோக்ராம் மாதிரி ஒரு தோற்றம் குடுக்கறதுதான் நோக்கம்னா அதுக்கு ட்ரெய்லர் எதுக்குங்கறது நியாயமான கொஸ்சின்.

இதை விசாரிச்சி எழுது சுமிங்கறார். விசாரிக்கறதுன்னு ஆரம்பிச்சா, இன்னும் பல சமாசாரம் உடனே ஞாபகத்துக்கு வருது.

சன் நியூஸ் இன்டர்வல் முடிஞ்சு மறுபடி ஸ்டார்ட் ஆகும்போதெல்லாம் ரீடர்ஸ் ரெண்டு பேரும் சொல்லி வெச்சு ஒருத்தரை ஒருத்தர் பார்த்து அசடு வழிய சிரிக்கறது எதுக்காக?

நியூஸ் முடிஞ்சதும், என்னவோ CTBT ஒப்பந்தமே முடிஞ்சாப்பல ரெண்டு பேரும் எதிலோ கையெழுத்துப் போடறாங்களே, அது ஏன்?

இன்னும் நிறைய ஏன், எதற்காக கையில ஸ்டாக் இருக்கு. But, நயா பைசா பிரயோஜனமில்லாத கேள்விகள்.

எனக்குத் தெரிஞ்ச ஒரு பத்திரிகை ரிப்போர்ட்டர், 'செமி-ஃபிக்ஷன்' ஆர்டிகிள்ஸ்னு ஒரு பிரயோகம் சொல்லுவார். இதுல இருக்கற அதிர்ச்சி, பத்திரிகையாளர்களுக்கு மட்டும் புரியும்.

Sun TV ப்ரோக்ராம்களை செமி நேச்சுரல் நிகழ்ச்சிகள்னு வேணா சொல்லலாம்.

* * *

அடுத்த வாரக் கொண்டாட்டத்துக்கு ஏற்பாடுகள் துரிதமா நடந்துட்டிருக்கு. மன்ற உறுப்பினர்கள், போஸ்ட்மேன் சைக்கிள் கேரியர் நொறுங்கி விழற அளவுக்குக் கத்தை கத்தையா அனுப்பிட்டிருக்காங்க.

இப்ப பிராப்ளம் என்னன்னா, அத்தனையையும் நான் இந்த வாரத்துக்குள்ள படிச்சி முடிக்கணும். So, இந்த வாரம் எந்தப் புத்தகமும் படிக்கலை; எங்கேயும் டாட்டா போகக் கூட இல்லை!

படையப்பாக்கு மட்டும் போகலாம்னா, அம்பது நாளைக்கு டிக்கெட் கிடைக்காதுங்கறாங்க. எல்லாம் ரசிகர் மன்றத்துக்காரங்களுக்கு ரிஸர்வ் ஆயாச்சாம்.

So, ரஜினி படமும் நம்ப ஆனிவர்ஸரி செலிபரேஷனும் ஒண்ணா வருது!

நாம போஸ்டர் அடிச்சி ஒட்டப் போறதில்லைங்கறதுதான் ஒரே வித்தியாசம்.

* * *

அகில உலக சுமி ரசிகர் மன்றத்தின் கலாக்ஷேத்ரா காலனி கிளைத் தலைவர் எஸ். இராமமூர்த்தி, கல்கி எடிட்டருக்கு ஒரு லெட்டர் ஜெராக்ஸ் பண்ணியனுப்பியிருக்கார். ஹம்சத்வனி சபா செக்ரடரி ராமசந்திரனுக்கு அவர் எழுதின லெட்டரோட காபியாம்.

சமீபமா வெள்ளெழுத்து வந்து கஷ்டப்படறதால எடிட்டர் அந்த மங்கலான ஜெராக்ஸை என்கிட்டியே கொடுத்துப் படிக்கச் சொல்லிட்டாங்க... ராமமூர்த்தியோட ஆறு பக்க ஆதங்கத்தின் ஆறு வரிச் சுருக்கம் இதுதான்:


கச்சேரிகள்ல தமிழ்ப் பாட்டு திருப்பதி லட்டுல பாதாம் பருப்பு மாதிரி அபூர்வமாத்தான் அமையுதாம். ராமச்சந்திரன் ஏன் ஒரு தமிழிசை விழா நடத்தக் கூடாதுன்னு கேட்டிருக்கார். அதோட எல்லா கச்சேரியிலயும் தமிழ்ப் பாட்டுக்கு 33% இட ஒதுக்கீடு கேட்கறார்!

ஐ டோன்ட் அக்ரீ! தமிழ்ப் பாட்டு நிறைய பாடிக்கிட்டுத்தான் இருக்காங்க. தெலுங்குதான் உசத்தின்னு அட்டுப் பிடிவாதம் பிடிச்ச காலமெல்லாம் போயிடுச்சு.

தீக்ஷிதர் கிர்த்தனைகள் மட்டுமே பாடின டி.எம். கிருஷ்ணாவை ஒரு பிடி பிடிச்சிருக்கார் இராமமூர்த்தி. ஸோ வாட்...? கேட்க பிரமாதமாயிருந்துச்சே... அப்புறம் இன்னொரு விஷயம். கிருஷ்ணா பற்றி போன வருஷம் புகார் படிச்சிருந்தேன் ஞாபகமிருக்கா... இப்போ குழந்தைத்தனமெல்லாம் போயி சமர்த்தாயிட்டார்... வெறுமே தோள்களுக்கற அளவுக்குக் கையாட்டறதோட சரி!

— சுமி

நிருபர்: உங்களோட 'தாய்மொழி' என்ன?
நடிகை: என்னங்க நீங்க? இந்தக் கேள்வியை என்னோட தாய்கிட்டதானே நீங்க கேட்கணும்!
– யமுனா ரங்கநாதன்



KALKI SHOPPING PAGE

நுங்கம்பாக்கம் லேடீஸ் ரிக்ரியேஷன் கிளப் உறுப்பினர்களால், ஆரம்பிக்கப்பட்ட பத்மா சேஷாத்ரி பள்ளியில் ஆசிரியைகளாக இருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் வெறும் பட்டப்படிப்பு மட்டுமே முடித்த குடும்பத் தலைவிகள். ஆசிரியையாகப் பணி புரிவதற்குரிய பி.எட் படிப்பை முடித்தவர்கள் இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நான், வெறும் பட்டதாரியாக இருப்பது போதாது. பி.எட் படிக்க வேண்டும். அது இன்னும் சிறப்பான முறையில் ஆசிரியைப் பணி செய்வதற்கு உதவிகரமாக இருக்கும் என்று கருதினேன்.

ஆனால் இப்போது, உள்ளதுபோல, ஊருக்கு இரண்டு ஆசிரியர் பயிற்சி மையங்கள் அப்போது இல்லை. இருக்கிற ஒன்றிரண்டு மையங்களுக்குச் சென்று படிக்கலாம் என்றால், அதிலும் ஒரு கஷ்டம் இருந்தது. சுமார் ஒரு வருட காலம், பள்ளி சம்பந்தப்பட்ட பணிகளிலிருந்து என்னை விடுவித்துக் கொண்டு, குடும்பம் சென்னையிலேயே இருக்க, நான் மட்டும் வெளியூர் சென்று தங்கிப் படிக்க வேண்டும். ஆனால், ஒரு வருஷத்துக்கு, பள்ளிக்கூட வேலையிலிருந்து நான் விலகிச் செல்ல விரும்பவில்லை. ஆக, கூழுக்கும் ஆசை; மீசைக்கும் ஆசை என்பதாக என் நிலைமை இருந்தது. அந்தச்சமயத்தில், நான் ஒரு விஷயம் தெரிந்துகொண்டேன். மைசூரில் உள்ள ஒரு நிறுவனம், பி.எட் பயிற்சியளிக்கிறது. அது பதினாலு மாத காலப் பயிற்சி. ஆனால் பதினாலு மாதம் மைசூரில் தங்கிப் படிக்க வேண்டிய அவசியம் இல்லை. முதல் இரண்டு மாதங்கள் மைசூரில் தங்கிப் படிக்க வேண்டும். அதன்பின், ஊருக்குத் திரும்பி பிராக்டிகல் பயிற்சி போல, பள்ளியில் பணிபுரிந்து கொண்டே படிக்கலாம். கடைசி இரண்டு மாதங்கள் மறுபடியும் மைசூரில் தீவிரமான பயிற்சி அளிக்கப்படும்.

பள்ளிக்கூட நிர்வாகத்தில் எனக்கு உதவியாக இருந்த மற்றவர்கள், "நீங்கள் கவலைப்படாமல் மைசூர் புறப்பட்டுப் போங்கள்; இரண்டு மாத காலம்தானே! நாங்கள் சமாளித்துக் கொள்ளுவோம்!" என்று என்னை ஊக்கப்படுத்தினார்கள். என் கணவர், "நீ தைரியமாய் புறப்பட்டுப் போ! நான் அவ்வப்போது மைசூர் வந்து உன்னைப் பார்க்கிறேன்; குழந்தைகளை நான் கவனித்துக் கொள்ளுகிறேன்" என்று எனக்கு ஆதரவாகப் பேசினார். என் அம்மாவும் தன்



(படம்: ஸ்ரீஹரி)

பங்குக்கு எனக்கு உதவ முன் வந்தார். நான் இல்லாத இரண்டு மாத காலமும், எங்கள் வீட்டிற்கு வந்து தங்கியிருந்து, குடும்பத்தையும், குழந்தைகளையும் பார்த்துக் கொள்ள முன் வந்தார்.

குடும்பமும், பள்ளிக்கூடத்தில் சக ஆசிரியைகளும் அன்போடு வழியனுப்பி வைக்க, நான் மைசூர் புறப்பட்டுப் போனேன்.

திருச்சியில் பட்டப் படிப்பை முடித்து விட்டு, அதன்பின் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஜர்னலிசம் டிப்ளமா முடித்து சுமார் இருபது வருடங்கள் ஓடி விட்டன. அதன்பின் நான் மறுபடியும் படிக்கப் போனேன். நாற்பது வயதுக்குமேல் பொறுப்புகள் அதிகமான குடும்பத் தலைவி, படிப்பைத் தொடருவது என்பது, அந்தக் கால கட்டத்தில் ரொம்ப அதிசயமான விஷயம். என்னுடைய ஒரு சில உறவினர்கள், "இத்தனை வயசில் இவளுக்கு என்ன படிப்பு வேண்டிக் கிடக்கு?" என்று கேலி செய்தார்கள். ஆனால், என் காதுவரை இத்தகைய விமர்சனங்கள் வந்தபோது, நான் அவற்றுக்கு

முக்கியத்துவம் தராமல் ஒதுக்கித் தள்ளினேன். அப்போது, ஒய்.ஜி.பி கொடுத்த அதிகபட்ச ஊக்கத்தை நான் மறக்கவே முடியாது.

மைசூரில், ஹாஸ்டல் வசதி. ஆரம்பம் முதலே குடும்பத்துடனேயே வசித்துப் பழகிப் போன எனக்கு, கணவரையும் குழந்தைகளையும் பிரிந்து இருப்பது ஆரம்பத்தில் சிரமமாகத்தான் இருந்தது. ஆனால், குடும்ப நினைவுகளிலே நான் மூழ்கிப் போய் வருந்துகிற சூழ்நிலை ஏற்படாதபடி, எங்கள் பயிற்சி அமைந்துவிட்டது. காலை ஏழரை மணிக்கு வகுப்பு ஆரம்பமாகி விடும். மாலை ஆறு மணிவரை தொடர்ந்து நடைபெறும். அப்புறம் இரவில், அன்று வகுப்பில் நடத்தியது, மறுநாள் நடத்த இருப்பது இவற்றையெல்லாம் படித்துத் தயார் படுத்திக் கொள்ள வேண்டும்.

வெறும் பாடம் நடத்தியதுடன் விடுவார்களா என்றால் இல்லை. அடிக்கடி டெஸ்ட் வைப்பார்கள். சிலசமயம் முன்கூட்டியே சொல்லிவிட்டு டெஸ்ட்

ஆசிரிய மாணவி!

வைப்பார்கள். சிலசமயம், திடீரென்று வைப்பார்கள். எனவே, அன்று நடத்தின பாடங்களை அன்றைய தினமே படித்து விடுவது என்பதை என் பழக்கமாக்கிக் கொண்டேன்.

இன்றைக்குப் பொதுவாக, பள்ளிக்கூடத்தில் படிக்கிற மாணவர்கள் மத்தியில் அன்று நடத்தப்பட்ட பாடங்களை, அன்றைய தினமே படித்து விடுகிற பழக்கம் காணப்படவில்லை. ஏதாவது ஹோம் ஒர்க் இருந்தால், அதைச் செய்வது; ஹோம் ஒர்க் ஏதும் இல்லையெனில், புத்தகத்தையே தொடுவது கிடையாது. இதற்கு மாணவ, மாணவிகளை மட்டுமே நான் குறை சொல்ல மாட்டேன். பெற்றோர்களும்கூடக் காரணம்தான். பசங்கள் வீட்டுக்கு வந்தவுடன் ஹோம் ஒர்க் இருந்தால், பண்ண வைப்பது. இல்லையெனில், பேசாமல் விட்டு விடுவது. அன்றைக்கு என்ன பாடம் நடத்தப்பட்டதோ, அதைப் படி என்று சொல்லுவது கிடையாது.

இது ஒரு பக்கம் இருக்கட்டும்; நான் எப்படிப் படிப்பேன் என்று சொல்லுகிறேன். உங்களுக்கு நம்புவதற்குக் கஷ்டமாகக்கூட இருக்கும். இரவு பன்னிரெண்டு மணி வரை கண் விழித்துப் படித்துக்கொண்டிருப்போம். அப்படி நெடுநேரம் கண் விழித்துப் படிக்க நானும், மற்ற மாணவிகளும் என்ன செய்வோம் தெரியுமா? தலையில் நிறைய தேங்காய் எண்ணெய் தடவிக் கொள்ளுவோம். கொஞ்சமாக இல்லை. எண்ணெய் தேய்த்துக் குளிக்கிறபோது வைத்துக் கொள்ளுவோமே அதைப் போல, கணிசமான அளவில் தலையில் எண்ணெய் வைத்துக் கொள்ளுவோம். அதனால் என்ன பலன்?

தலையில் எண்ணெய் இருக்கும்போது படுத்துத் தூங்க முடியாதல்லவா? ஆக, கண் விழிப்பது கட்டாயமாகி விடும்! வெள்ளரிக்காய், முள்ளங்கி போன்றவற்றை துண்டுகளாக நறுக்கி, அவற்றை மென்று தின்றபடியே படிப்போம். ஹாஸ்டலில், இரவு முழுக்க வெந்நீர் கிடைக்கும். எனவே பன்னிரண்டு மணி வரை படித்துக் கொண்டிருந்துவிட்டு, அப்புறம் ஜாலியாக வெந்நீரில் ஒரு குளியல் போட்டு விட்டுப் படுத்தால், சுகமாய்த் தூக்கம் வரும். காலையில் எழுந்தால், கிடுகிடுவென்று தயாராகி, ஏழரை மணிக்கு வகுப்புக்குச் சென்று விடுவேன்.

ஹாஸ்டலில் படிக்கிறபோது, நான் பின்பற்றிய இன்னொரு விஷயம் மூன்று நான்கு பேர் கூட்டாகப் படிப்பது. இந்த மாதிரி படிப்பதால், நாலு பேரும் ஒருவருக்கொருவர், தெரிந்ததைச் சொல்லிக் கொள்வதும் தெரியாததைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுவதும் சாத்தியமாகும். ஒரு விஷயத்தை நாமே படித்துத் தெரிந்து கொள்ளுவதைவிட, தெரிந்தவர் சொல்லக் கேட்கிறபோது எளிதில் புரியும். ஆனால், இதில் முக்கியமான ஒன்று என்னவென்றால் நாலு பேரின் கூட்டுப் படிப்பு, வீணான அரட்டையாக மாறி விடக் கூடாது. அது, நாலு பேரின் படிப்பை பாழடித்து விடும்.

திருமதி ஒய்.ஜி.பி

சென்னைக்கும், மைசூருக்கும் கூடிதப் போக்குவரத்து நடந்து கொண்டிருந்தது என்றாலும் வார இறுதி நாட்கள் என்றால், ஒய்.ஜி.பி. தனியாகவோ அல்லது தம் சக நாடகக் குழு நடிகர்களுடனோ மைசூர் வந்து விடுவார். மைசூரிலேயே நாடக ஒத்திகைகளை வைத்துக் கொள்ளுவார்கள். எனவே, அப்போது வார இறுதி நாட்களுக்காக ஏங்கியபடி காத்திருப்பேன்.

ஒரு நாள், எங்கள் ஹாஸ்டலில், என்னைக் காண ஒரு விசிட்டர் வந்திருந்தார். அவர் வந்திருந்த செய்தி, ஹாஸ்டல் முழுவதும் காட்டுத் தீ போலப் பரவியது. அத்தனை மாணவிகளும், அவரைக் காணக் கூடிவிட்டனர். அவர் யார் தெரியுமா? எம்.ஜி.ஆர்.தான்! மைசூர் பிருந்தாவன் கார்டனில் ஒரு சினிமா ஷூட்டிங்கிற்காக வந்திருந்தார் எம்.ஜி.ஆர். நான் மைசூரில் தங்கி பி.எட் படிப்பது அவருக்குத் தெரியும் என்பதால், திடீரென்று, எங்கள் ஹாஸ்டலுக்கு ஒரு விசிட் அடித்து, என்னை ஆச்சரியப்படுத்தி விட்டார்! எங்கள் குடும்பத்துக்கு மிகவும் நெருக்கமானவர் எம்.ஜி.ஆர்.

அன்று என்னைப் பார்க்க வந்திருந்தபோது, எம்.ஜி.ஆர் தம்முடன் தமது படத்துக் கதாநாயகியையும் அழைத்து வந்திருந்தார். அந்தக் கதாநாயகி வேறுயாருமில்லை! ஜெயலலிதாதான்! (ஜெயலலிதா மற்றும் அவருடைய அம்மா ஒய்.ஜி.பி.யின் நாடகக் குழுவில் நடித்ததுண்டு. ஹாஸ்டலில் தங்கிப் படித்த அந்தக் குறுகிய காலத்தில் இப்படிப் பல கலகலப்பான நிகழ்ச்சிகள்!

பி.எட். பரீட்சை எழுதியபோது ஒரு தமாஷான சம்பவம் நடந்தது. சைக்காலஜி பரீட்சை. நான் மிக நன்றாகத் தயார் செய்து கொண்டு போயிருந்தேன். கேள்வித்தாளைப் பார்த்தபோது, இனிய அதிர்ச்சி! பாடத் திட்டத்தின் முதல் இரண்டு, மூன்று அத்தியாயங்களைப் படித்திருந்தாலே போதும்! மிக நன்றாக பரீட்சை எழுதி விடலாம் என்பதுபோல, கேள்விகள் கேட்கப் பட்டிருந்தன. நன்றாகப் பரீட்சை எழுதி முடித்துவிட்டு, ஹாலை விட்டு வெளியே வந்தேன். வெளியில் நின்று, மற்றவர்களுடன் கேள்வித்தாள் பற்றி பேசிக் கொண்டிருந்தபோது, நான் உரத்த குரலில், "இப்படி ஒரு கேள்வித்தாளை, தயார் செய்த முட்டாள் யாராக இருக்கும்?" என்று சொல்ல, எங்களைத் தாண்டிச் சென்ற எங்கள் பேராசிரியர் ஒருவர், ஒருகணம் தயக்கத்துடன் நின்று, எங்களிடம் வந்து "அந்த முட்டாள் நான்தான்!" என்றார் ரொம்பக் கேஷுவலாக. எங்களுக்கு ஒரே அதிர்ச்சி.

"அதில்லை சார்! முதல் சில அத்தியாயங்களிலிருந்தே பெரும்பாலான கேள்விகள் கேட்கப்பட்டிருந்தனவா? அதனால்தான் இப்படி தவறாகக் கமெண்ட் அடித்து விட்டேன். தயவு செய்து மன்னித்து விடுங்கள்" என்றேன்!

"நீங்கள் எதையும் விடாமல், முழுமையாய்ப் படிக்க வேண்டும்! அதுதான் ரொம்ப முக்கியம். கேள்விகள் எதிலிருந்து கேட்கப்பட்டாலும், உங்களால் விடை எழுத முடிய வேண்டும்! அதுதான் ஒரு புத்திசாலி மாணவனுக்கு இலக்கணம்!" என்று சொல்லிவிட்டு போய்விட்டார் அவர்.

என்னுடைய கடுமையான உழைப்புக்கு நல்ல பலன் கிடைத்தது. பி.எட் தேர்வில், தென்பிராந்தியத்தில் நான்தான் முதலாவதாய்த் தேறினேன். தங்கப்பதக்கம் வழங்கினார்கள்.

எங்கள் பள்ளியில் பணியாற்றிக் கொண்டிருந்த பி.எட் படிக்காத ஆசிரியைகளை, பி.எட் படிக்கும்படி தூண்டினேன். என்னைப்போலவே எங்கள் பள்ளி ஆசிரியைகள் பலரும் பி.எட் படித்து முடித்தனர்.

சில வருடங்கள் கழித்து நான் எம்.எட். படிக்க விரும்பினேன். சென்னைப் பல்கலைக் கழகத்தில் எம்.எட். சேர்ந்தேன். தினம் மாலை மூன்று மணிவரை பள்ளியில் வேலை பார்த்துவிட்டு, அதன் பின் சென்னை பல்கலைக் கழகத்துக்கு எம்.எட் வகுப்புக்குச் செல்வேன். வெற்றிகரமாக எம்.எட் முடித்தபின், வெறும் பட்டதாரியாக இருக்கிறோமே! முதுகலை பட்டம் பெற்றால் என்ன என்று தோன்றியது. எம்.ஏ (வரலாறு) சேர்ந்தேன். இந்தத் தடவை என்னுடன் பணியாற்றிய இன்னும் மூன்று பேரையும் என்கூட சேர்த்துக்கொண்டேன். நாங்கள் நாலு பேருமாய்ச் சேர்ந்து கொண்டு தினமும், வடசென்னையில் வசித்த ஒரு வரலாற்றுப் பேராசிரியர் வீட்டுக்குப் போய் பாடம் கேட்டுக் கொண்டு வருவோம். வெற்றிகரமாய் எம்.ஏ. முடித்தேன்.

நான் மைசூரில் பி.எட் படிக்கப் போனபோது, இவளுக்கு எதற்கு மைசூரில் படிப்பு என்று விமர்சித்தவர்கள், நான் குடும்பத்தையும் கவனித்துக்கொண்டு, பள்ளியையும் பார்த்துக்கொண்டு, எம்.ஏ முடித்தபோது வாயடைத்துப் போனார்கள்.

(இன்னும் சொல்லுவேன்)

தொடங்கி சில வருடங்கள்தான் ஆகின்றன என்றாலும் 'ஹெல்த் அண்ட் க்ளோ' நிறுவனம் சென்னையில் தனது கிளைகளை அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஒரு விதத்தில் பார்த்தால் மற்ற சூப்பர் மார்க்கெட்டுகளைப் போலவே முதல் பார்வையில் தென்பட்டாலும் சிலவிதங்களில் தனித்தும் நிற்கிறது (உதாரணம் – ஒவ்வொரு கிளையிலும் உள்ள மருந்துக் கடை). இந்த நிறுவனத்தின் பொது மேலாளர் பாலசந்திரனை ஃபாஷன் ஸ்பெஷலுக்காக சந்தித்தோம்.







● காஸ்மெடிக்ஸ் (ஒப்பனைப் பொருட்கள்) விற்பனை சம்பகாலமாக அதிகரித்து வருகிறது இல்லையா? இதற்கு முக்கிய காரணங்கள் என்ன?

காஸ்மெடிக்ஸ் என்ற வார்த்தையின் பொருளே மாறியிருப்பதுதான் முக்கிய காரணம். முன்பெல்லாம் வண்ணம் சம்பந்தப்பட்ட என்று – உதட்டுச் சாயம், நகப்பூச்சு போன்ற – பொருள்களைத்தான் காஸ்மெடிக்ஸ் என்று குறிப்பிடுவோம். இப்போது அந்தப் பிரிவில் தலைமுடி மற்றும் தோல் பராமரிப்புப் பொருள்களும் சேர்த்தே குறிப்பிடப்படுகின்றன. இவற்றின் விற்பனை நாளுக்கு நாள் முன்னேறி வருகிறது. உடல் ஆரோக்கியத்துக்கும் இவை உகந்தவை என்பதால் அழகான தோற்றம் என்பதோடு இவற்றின் பங்கு நின்று விடுவதில்லை. இதனால்தான் இவை அதிகம் விற்கத் தொடங்கியுள்ளன.


● இதுபோன்ற அழகுப் பொருள்களைத்தான் விற்கிறீர்களென்றால் உடல் ஆரோக்கியத்தைக் குறிக்கும் 'ஹெல்த்' என்ற வார்த்தை எதற்காக உங்கள் நிறுவனத்தின் பெயரில் இடம் பெற வேண்டும்? அழகையும், ஆரோக்கியத்தையும் இணைப்பது ஒருவித மாயையை உண்டாக்குவது போலல்லவா இருக்கிறது?

எங்கள் நிறுவனத்தின் பின்னணியைக் கொஞ்சம் சொன்னால்தான் இதற்கான பதில் விளங்கும். டைரி ஃபார்ம் இன்டர்நேஷனல் என்ற நிறுவனம் ஹாங்காங்கில் தொடங்கப்பட்ட நிறுவனம். அங்கும், சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா போன்ற இடங்களுக்குமாகச் சேர்த்து இதற்கு சுமார் 2,500 கடைத் தொடர்கள் உள்ளன. சிங்கப்பூரில் 'கார்டியன்' என்ற பெயரில் பிரபலமான தங்கள் கடைகளைப் போலவே இந்தியாவிலும் கால்பதிக்க வேண்டுமென்று இவர்கள் விரும்பினார்கள். இந்த நிறுவனமும், ஆர்.பி.ஜி. க்ரூப்பும் ஏற்படுத்திக் கொண்ட கூட்டு முயற்சியின் விளைவுதான் ஹெல்த் அண்ட் க்ளோ. ஒரு புறம் அழகுப் பொருள்களை விற்பனைக்கு வைத்தாலும் மறுபுறம் சத்துக்கள் அடங்கிய பிஸ்கெட்ஸ், ஹெல்த் ட்ரிங்க்ஸ், நீரிழிவு நோய்க்காரர்களுக்கான க்ளூக்கோஸ் கலக்காத உணவு வகைகள், உடலைக் கச்சிதமாக வைத்துக் கொள்ளக் கருவிகள், அடிப்படையான மருந்துப் பொருள்கள் இவற்றையும் விற்க நினைத்தோம். இப்படியெல்லாம் தீர்மானித்த பிறகு இந்த இரு நோக்கங்களையும் சுட்டிக்காட்ட 'ஹெல்த் அண்ட் க்ளோ' என்ற பெயர் வெகு பொருத்தமாக இருப்பதாகத் தீர்மானித்தோம்.

● அடுத்தடுத்து உங்கள் கிளைகள் அதிகமாகிக் கொண்டே போகின்றன. உங்கள் வெற்றியின் ரகசியம் என்னவோ?

கவர்ச்சிகரமாகவும், அதே சமயம் நிறைய வெரைடி இருப்பதாகவும் பொருள்களை அழகாக அடுக்கிப் பார்வைக்கு வைப்பதும், பார்வையாளர்கள் தாங்களே யோசித்துத் தேர்ந்தெடுக்கும் வகையில் அவை வைக்கப்படுவதும் முக்கிய காரணங்கள். அது மட்டுமல்ல. வேறு சில கவர்ச்சிகளும் உண்டு. எங்கள் ஸ்பென்சர் ப்ளாஸா கடையில் பாண்ட்ஸ் நிறுவனத்தின் ஓர் இயந்திரம் இருக்கிறது. இதில் அழகு தொடர்பான எந்த விதக் கேள்விகளையும் கேட்டு விளக்கங்கள் பெறலாம். தவிர பல்வேறு புகழ் பெற்ற

அழகைக் கூட்டும் பொருட்கள்!



நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களையே எங்கள் கடைகளில் பணிக்கு அமர்த்தியிருப்பதால் அவர்களின் தயாரிப்புகளால் என்ன பயன், அவற்றை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பது பற்றிய சந்தேகங்களை அவர்களே தீர்த்து வைக்கிறார்கள்.

● உடல் ஆரோக்கியத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் பொறுப்பு மிக்கவர்கள் என்ற உங்கள் இமேஜை நம்பி நுழையும் வாடிக்கையாளர்கள் இருப்பார்கள். இங்கு வாங்கப்படும் பொருள்களின் தரத்தைப் பற்றி உங்களால் தர உத்தரவாதம் கொடுக்க முடியுமா - குறைந்தது உடல் நலத்துக்கு அவற்றால் ஏதும் பாதிப்பு ஏற்படாது என்று?

புகழ் பெற்ற தயாரிப்பாளர்களின் பொருள்களைத்தான் விற்பனைக்கு வைக்கிறோம். தங்கள் பொருளின் பெயர் கெட்டுவிடக் கூடாது என்பதில் அவர்களுக்கு நிறைய அக்கறை இருக்கும். பலவித தர நிர்ணயத்துக்கு இவை உட்பட்டுத்தான் விற்பனைக்கே வருகிறது. பிரபலமாகாத நிறுவனங்கள் எங்களை அணுகினால், அவற்றின் தொழிற்சாலைக்கு நேரடியாகச் சென்று, அவர்களின் தயாரிப்பு முறையும், தர நிர்ணயமும் திருப்தியான அளவில் இருக்கிறதா என்பதை உறுதி செய்த பிறகே அவற்றை விற்பனைக்கு வைக்கச் சம்மதிக்கிறோம்.

● ஒப்பனைப் பொருள்களைப் பொறுத்த வரையில் என்னென்ன ஐட்டங்கள் சமீபத்தில் வரவேற்பைப் பெற்றிருக்கின்றன?

சூரியனின் புற ஊதாக் கதிர்கள் தாக்காமல் பாதுகாக்கும் க்ரீம் மற்றும் லோஷன்கள், முகச் சுருக்கங்கள் விழுவதைத் தள்ளிப்போட வைக்க உதவும் பொருள்கள், இவற்றோடு கம்ப்யூட்டர் திரையை (டீ.வி. திரையையும் தான்) தொடர்ந்து பார்ப்பதால் கண்ணுக்கு கீழே உண்டாகக் கூடிய கருமை மற்றும் கருவளையங்களைப் போக்குவதற்காக அறிமுகமாகியுள்ள பொருள்கள் திருப்திகரமான அளவில் விற்கத் தொடங்கி விட்டன! பொதுவாக செயற்கைப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படும் சாதனங்களை விட, இயற்கை மூலிகைகளைக் கொண்டு உருவாக்கப்படும் சாதனங்களை வாங்குபவர்கள் அதிகரித்துள்ளனர். பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் கூட இது போன்ற பொருள்கள் தங்களுக்குத் தேவை என்று உணரத் தொடங்கியிருப்பதும் ஒரு முக்கியக் காரணம். தவிர இவற்றை ஃபாஷன் என்ற கோணத்தில் பார்ப்பதை விட, அன்றாட வாழ்வுக்கு அவசியம் என்று கருதும் கண்ணோட்டம் பெருகி வருகிறது.

— ஜி.எஸ்.எஸ்.

படங்கள் : ஸ்ரீஹரி

டீ.வி விமர்சனம்:



- 'ஷில்பி' போட்டிக் உரிமையாளர்களில் ஒருவரான பாமினி நாராயணன் விமர்சிக்கிறார்

"தூர்தர்ஷனின் தேசிய ஒளிபரப்பு, ஸ்டார் டீ.வி.யில் இடம் பெறும் 'செய்திகள்' வாசிப்பவர்கள் எளிமையான ஃபாஷன் கொண்டவர்களாகத் தெரிகிறார்கள். தூர்தர்ஷனின் இந்தி சீரியல்களில் கூட, மற்ற விஷயங்கள் எப்படியோ, உடை விஷயத்தில் ஓரளவு கவனம் எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் சன், உதயா ஆகிய சானல்களில் தோன்றுபவர்கள் - முக்கியமாக செய்தி வாசிப்பவர்கள் ஏதோ டேஸ்ட் இல்லாமல் உடை அணிவது போலிருக்கிறது. பூப்போட்ட உடை, அழுத்தமான வண்ணங்கள் என்று கண்களை உறுத்தும் உடை. ஃபாஷன் என்பது கண்களை உறுத்துவது அல்ல. வித்தியாசமாகவும் அமைந்து கண்ணுக்கு இதம் கொடுப்பதுதான். தவிர செய்தி வாசிப்பாளர்கள் கவர்ந்திழுக்கக் கூடிய உடைகளை அணிந்து நேயர்களை செய்தியிலிருந்து திசை திருப்பக்கூடாது."

எக்ஸிகியூடிவ் பெண்களுக்கான ஃபாஷன் பேண்ட்!

புடைவை, சூரிதார், ஜீன்ஸ் இன்னபிற பெண்கள் உடைகளை விற்க ஆயிரமாயிரம் கடைகள் இருக்கின்றன. ஆனால், மும்பையைச் சேர்ந்த பார் கோடு (Bar Code) நிறுவனம் ஒரு புது முயற்சியில் இறங்கியுள்ளது. ஆம்! வேலைக்குப் போகிற பெண்களுக்காக பேண்ட், ஷர்ட், ஓவர் கோட் தயாரித்து விற்பனை செய்து வருகிறது.



இந்த நிறுவனம் அண்மையில் சென்னையில் ஓர் உடை கண்காட்சி நடத்தி, தன் வியாபாரத்துக்கு முன்னோட்டம் பார்த்தது. அடுத்து கோவையில் கண்காட்சி நடத்தவும் திட்டமாம்.

கண்காட்சியை நடத்திய ஷீலா ஜெய குமாரிடம் பேசினோம்.

"ஆண்களுக்குச் சரிநிகராக, இப்போது எல்லா துறைகளிலும் பெண்கள் வந்து விட்டனர். அலுவலக வேலைகளைப் பொறுத்தவரை ஆண், பெண் பேதம் இல்லாமல் போய் விட்டது. அப்புறம், உடையில் மட்டும் ஏன் வித்தியாசம்? ஆண்கள், பெண்களைப் போல சேலை, சூரிதார் அணிய முடியாது. ஆனால், பெண்கள், ஆண்களைப் போல, பேண்ட், ஷர்ட் அணிய முடியுமில்லையா? இது மட் டுமே காரணமில்லை. கல்லூரி நாட்களில், ஜீன்ஸ், டி-ஷர்ட், மிடி, டாப்ஸ் என்று ஜாலியாய் வளைய வரும் இளசுகள், படிப்பை முடித்து விட்டு, வேலையில் சேருகிறபோது பொறுப்பு வந்து விடுகிறது. வேலை செய்கிற இடத்தில், ஜீன்ஸ் இத்யாதிகள் பொருத்தமாக இருக்காது. அப்படிப்பட்ட சூழ்நிலையில், புடைவை அல்லது சூரிதாரை விட, பேண்ட், ஷர்ட் அணி



''குடும்ப விஷயங்களை ஆபீஸ்ல சொல்லவே கூடாது சரக!''

''ஏன் அப்படிச் சொல்றீங்க?''

''போன வாரம் நீ ஊருக்குப் போயிருந்த விஷயத்தை சொல்லித் தொலைச்சிட்டேன்... உடனே பார்ட்டி வச்சாத்தான் போச்சுன்னு சொல்லி 500 ரூபாய் மொய் ஆயிடிச்சம்மா!''

– சீர்காழி ரேவதி



''என்ன சார் வேணும்?''

''அரை மணி நேரம் மாவு ஆட்டுற மாதிரி ஏதாவது கொண்டுவாப்பா!''

– அவினாசி க. குமார்


''என்னடா... கையில இவ்வளவு பெரிய காயம்?''

''கோழி பிடிச்சப்ப சுட்டுருச்சு!''

''என்னது... கோழி பிடிச்சப்ப சுட்டுருச்சா?!''

''ஆமாடா.. நான் பிடிச்சது நெருப்புக் கோழிய...!''

– டி.என். சத்யா முருகவேல்



வதையே சௌகரியமாய் நினைக்கிறார்கள். அவர்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் செயல்படுகிறது பார்கோடு'' என்றார்.

''உங்கள் உடைகளுக்குப் பெண்களிடையே வரவேற்பு எப்படி இருக்கிறது?''

''மும்பையிலும், டெல்லியிலும் மிக நல்ல வரவேற்பு. அதிலும் நடுத்தர வயதுடைய வேலைக்குப் போகிற பெண்கள், பேண்ட், ஷர்ட்டை ரொம்ப டீசன்டான உடையாகவும், சௌகரியமான உடையாகவும் கருதுகிறார்கள்.''

''மும்பை, டில்லி போன்ற காஸ்மோபாலிடன் கலாசாரத்துக்கு அது சரியாக இருக்கலாம். ஆனால் சென்னை இன்னும் பழைமையிலிருந்து முழுமையாக விடுபட்டு விடவில்லையே! இங்கே இன்னமும் புடைவையும், சூரிதாரும்தானே ஆட்சி புரிகின்றன?''


''அது உண்மைதான். பஸ்ஸில், மின்சார ரயிலில் பொது இடங்களில், பாண்ட், சட்டை அணிந்த பெண்கள் கண்ணில்படுவதில்லை என்பது வாஸ்தவம். ஆனால், அத்தகைய பெண்கள் சென்னையில் இல்லை என்று நினைத்து விடாதீர்கள். பெரிய ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்களில் அவர்களைக் காண முடிகிறது. காரில் வந்து போகிறவர்களாக அவர்கள் உள்ளனர். சென்னையின் ஓரிரு கடைகளில், அவர்களுக்கான பேண்ட், ஷர்ட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.''

இப்போது கண்காட்சிகள், ஷோரூம்கள் மூலம் விற்பனை செய்து கொண்டிருந்தாலும், விரைவில் தபால் மூலம் ஆர்டர் பெற்று, விற்பனை செய்யவிருக்கிறது பார்கோடு. பல்வேறு சைஸ், நிற, மாடல் உடைகள் பற்றிய விவரங்கள் அடங்கிய படங்களுடன் கூடிய விலைப் புத்தகத்தைப் பார்த்து, விரும்பும் இட்டத்தை ஆர்டர் செய்துவிட்டு, பணத்தைச் செலுத்தி டெலிவரி எடுத்துக் கொள்ளும் 'மெயில் ஆர்டர்' விற்பனையை அறிமுகப்படுத்தப் போகிறார்கள்.

தபாலில் உடை வாங்கும் போது ஒரு அசௌகரியம்! போட்டுப் பார்த்து கண்ணாடி முன் நின்று அப்படி இப்படி திரும்பி... ஊஹூம்! நோ சான்ஸ்!

— கௌதம்

Are you worried about your job interview?



Come to Success Learning Institute. And discover how to succeed in an interview.

Training for Interview Success - The course for graduates developed by an MBA from Indian Institute of Management, Ahmedabad with 23 years of experience

Right from writing your bio-data to managing the impressions that you create in an interview, you'll learn a lot. The course which is in two stages covers extensively the various skill areas required for interview success - Presentation, Listening, Non-verbal Communication (Body Language), Persuasion etc.

Stage I - Home Learning Course - gives you an understanding of the interview process and how to prepare for it, and Stage II - Practical Training Programme - takes you through Mock Interviews, Group Discussions and Role Plays to train you for success.

Now why just worry about your interview success when you can get trained by professionals?

Fill in the coupon given and send it to us today.

Stage I	Rs.195/-
Stage II	Rs. 895/-
Stage I & II Combined (A saving of Rs.100/-)	Rs. 990/-

SUCCESS LEARNING INSTITUTE

14, First Main Road, Lake Area,
Nungambakkam, Chennai 600 034.

Stage I

Home Learning Course

(Material will be sent by V.P.P.)

Stage II

Practical Training Programme - 2 days

(Will be held in Chennai, Coimbatore, Trichy and Madurai.)

☐ I want to join the Home Learning Course (Stage I) now. I will pay Rs.195/- and accept the V.P.P. parcel. Subsequently, if interested, I will pay Rs.895/- and join the Practical Training Programme.

☐ I want to join both the Home Learning Course and the Practical Training Programme (Stage I & II Combined) right away and save Rs.100/-. I will pay Rs.990/- and accept the V.P.P. parcel for Stage 1.

Name: ______________________

Address: ______________________

____

____

______________ Pin code: ______

SUCCESS LEARNING INSTITUTE

14, First Main Road, Lake Area, Nungambakkam, Chennai 600 034.

SLI/10C

கறுப்பு வெள்ளைக் கனவுகள் 4

மகா அந்தக் கடிதத்தைத் திரும்பவும் வாசித்தாள். மடக்கிப் பிரித்துத் திறந்ததில், மடித்த இடங்கள் துல்லியமாகக் கசங்கியிருந்தன. மடக்கின இடங்களில் எழுத்துக்களும் மங்கத் துவங்கியிருந்தன.

அன்புள்ள மகாவுக்கு,

திடீரென்று உங்களிடம் சொல்லாமல் ஊரை விட்டு வந்தமைக்கு மன்னிக்க வேண்டும். நீங்கள் அன்று ஏதாவது பதில் சொல்லியிருந்தால் - உடன்பட்டோ அல்லது எதிர்த்தோ கூட - நிம்மதியாக இருந்திருக்கும். கொடுமையான கொலை எதுவெனில் மௌனத்தைச் சொல்லலாம். அன்றைக்கு நீங்கள் போன பிறகு, நானும் சைக்கிளிலேயே சாத்தனூர் அணை போனேன்.

அவ்வளவு தூரம் ஓட்டிப் போனதாலோ என்னவோ கை மறுபடியும் வீங்கியது; அதைவிட மனசு கனத்துக்கிடந்தது. நான் அவசரப்பட்டு அப்படி சொல்லிவிடவில்லை. அந்தத் தெளிவு இந்தக் கடிதத்தை நான் எழுதும் இந்த நொடியில்கூட இருக்கிறது.

நீர் சுழன்று, சுழன்று போய்க் கொண்டிருந்தது. எந்தப் பகுதி நீர் யாரைச் சென்று அடைகிறதோ, எந்தப் பகுதி நீரை யார் பருகுகிறார்களோ என்று யாரால் தீர்மானிக்கவும், கணிக்கவும் முடியும்? நம் பெண்கள் அவர்களுக்கான முகங்களை அவர்கள் அணிந்து கொள்ளும் தருணம் இன்னும் வரவில்லையோ என்று அப்போது தோன்றிற்று. தன்னைச் சார்ந்த ஆணின் முகத்தையே தன் முகமாகக் கொண்டிருக்கும் அவலம் இருக்கிறது. நீங்களும் அதில் விதிவிலக்கல்ல. இப்படி நான் சொல்வது உங்களை வருத்தப்படுத்த வேண்டும் என்பதால் அல்ல. முகமூடிகளைக் களைய பெண்கள் முன் வருவதில்லை என்கிற வருத்தத்தினாலேயே சொல்கிறேன்.

ஒரே நாளில் என் நேசத்தைப் பெற்ற மனிதர்களை இழந்து நின்ற எனக்கு, சக்தியைத் தந்தது பாரதி. அப்புறம் நீங்கள். இதை நான் என் வாழ்வின், எந்தக் காலகட்டத்திலும் சொல்வேன். நீங்கள் உங்கள் விருப்பத்தின்படி வாழும் வாழ்வு, சந்தோஷமளிக்குமெனில், அதுவே என் காதலின் வெற்றியாகக் கருதவும் செய்வேன். இதை நான் அன்று, இருட்டின் மடியில் தவழ்ந்த அணை நீரின் குளிர்ச்சியில் தீர்மானித்தேன்.

இருட்டின பிறகும் அங்கேயே இருந்தேன். குழப்பங்கள் நீங்கப் பெறாதவனாகத்தான், நான் திரும்பினேன். அறையில் எனக்காகக் காத்திருந்தது, கோவையிலிருந்து என் நண்பனின் கடிதம். ஒரு வேலைக்காக உடனடியாகப் புறப்பட்டு வரச் சொல்லியிருந்தான். அந்த இட மாற்றம், எனக்கும் அவசியமாயிருந்தது. மறுநாள் விடியும் முன்பே, புறப்பட்டுச் சென்றேன்.

நல்ல வேலை. அளவான ஊதியம். நாங்களிருந்த வீட்டைச் சென்று பார்த்தேன். மங்கிய நினைவுகளின் ரணங்கள் பொங்கிப் பாய்ந்தன. மனிதாபிமானப் பார்வையை நாம் அணிந்து கொள்ளும் கால கட்டம் வந்து விட்டது மகா. நிர்வாணமாக நம்மை உலகிற்குக் கடவுள் அனுப்பினால், நாம் ஜாதி என்கிற ஆடையையும், மதம் எனும் மோதிரத்தையும் தரித்துக் கொள்கிறோம், இல்லையா?

நிற்க, தமிழுக்கு ஒரு கடிதம் எழுதினேன். பதிலில்லை. சொல்லாமல் போய் விட்டானே- ஏமாற்றுக்காரன் என்று நீங்கள் நினைத்து விடக் கூடாது என்பதாலேயே இது உங்களுக்கு.

பதில் எழுதுவீர்களா?

அன்புடன்,
சபரி.



தமயந்தி

மகா பெருமூச்சு விட்டுக் கொண்டாள். கடிதத்தைக் கிழித்து விடலாமா என்று யோசித்தாள். இன்னொருமுறை வாசித்து விட்டுக் கிழித்து விடலாம் என்று தீர்மானித்தாள். கண்கள் மங்கின. சுருட்டின கடிதம் உள்ளங்கைப் பிசுபிசுப்பில் நனைந்தது. அப்பா, இந்தக் கடிதத்தைப் பார்த்தால் ரௌத்ரமாவார். எத்தனையோ தீர்மானங்களுக்குப் பிறகு, சபரி அன்று சொன்னதை அவரிடம் சொன்னதுமே கத்தினார்.

"நீ என்ன சொன்னே?"

"......."

"நெனைச்சேன். உருகி உருகி ஆஸ்பத்திரிக்குப் போனியே. அப்படித்தான் சொல்வான். உன் நிலைமை தெரிஞ்சவன். மசிஞ்சிடுவானு தீர்மானிச்சிருப்பான்."

"..."

"அவனை பிரின்ஸ்பால்ட்ட சொல்லிடு."

"வேணாம்ப்பா."

"மகா..."


"தெரிஞ்சோ தெரியாமலோ, நானும் அவருக்காக..."

அப்பா எதுவும் பேசாமல் எழுந்து போனார். அப்படி சொல்லக்கூட எங்கிருந்து தைரியம் வந்ததோ என்று தோன்றியது. இவளுடன் பேசாமலே இரண்டு, மூன்று நாள் போனது. அந்தத் தாக்குதல் மனசைக் கிறிவிட்டது.

"நான் சபரிட்டகூட ஒத்துக்கல பாட்டி, அப்பா சம்மதிச்சா, சரினு சொல்லலாம்னு நினைச்சுத்தான் சொன்னேன். தப்பா...?"

"போடி. பைத்தியக்காரி."

நாலாவது நாள் ஊரிலிருந்து சதாசிவம் வந்து நின்றார். எள்ளும் கொள்ளும்



"எது பேசினாலும் என் மனைவி குத்தமா எடுத்துக்கறா!"

"பேசாம மௌனமா இருந்து பாரேன்."

"இருந்து பார்த்தேனே! வாய்ல என்ன கொழுக்கட்டையா'ன்னு கேட்டு சண்டைக்கு வராளே!"

— டி.என். பாலகிருஷ்ணன்

வெடித்த முகம். இவளைப் பார்த்ததும் முகத்தைத் திருப்பிக்கொண்டார்.

"அப்பா லெட்டர் போட்டிருந்தார். இதெல்லாம் நல்லால்லை மகா. செல்வாக்குத் துரோகம் செய்ய எப்படித் துணிஞ்சே?"

"மாமா... நான்..."

"பூ வச்சிட்டே. பொட்டு வச்சிட்டே. சரி. சின்ன வயசு. காலமும் மாறுது. அதுக்காக யாரோ ஒருத்தனைக் காதலிக்கறது... சேச்சே... எங்களுக்குமில்லே அவமானம்?"

பாட்டி காப்பித் தம்ளரை நீட்டினாள். வேண்டாவெறுப்பாக சதாசிவம் வாங்கிக் கொண்டார்.

"கோவமா இருக்கீங்க போல?"

"மகா இப்படி செய்வானு நினைக்கவே இல்லை நான்."

"என்ன செஞ்சிட்டா அவ? என்ன செஞ்சிட்டான்னு லெட்டர் போட்டிருக்கான் இவன்?"

"பாட்டி..."

"இப்ப சொல்றேன். நீங்ககூட இப்படி செய்வீங்கனு நாங்க நினைக்கல. இருதய வியாதியுள்ள பையன்னு ஒருதபா கல்யாணத்துக்கு முன்னால சொல்லி இருப்பீங்களா?"

சதாசிவம் சட்டென்று எழுந்தார். முகம், உணர்ச்சிக் கலவரங்களால் கன்றிப் போனது.

"தனியாப் போராடிட்டிருக்கிற ஆன்மாவை மேலும் நோகடிக்கறது நல்லதில்லை. அதன் வலி எனக்குத் தெரியும். எனக்காச்சும் ஒரு கொடிக்கம்பா இவ அப்பன் இருந்தான்."

"அம்மா... வந்தவரை அவமானப்படுத்துறே?"

"கூட்டிட்டு வந்து எம் பேத்தியை நீ அவமானப்படுத்துறே?"

பாட்டி தீயாய் அடிவயிற்றிலிருந்து அலறினாள். சதாசிவம் காப்பித் தம்ளரைக் கீழே வைத்துவிட்டு, "போறேன்" என்று தரையிடம் சொல்லிவிட்டு கிளம்பினார். அப்பா அவர் பின்னாலேயே ஓடினார். அம்மா நிலை குத்தப் பார்த்தாள்.

மகா ஸ்தம்பித்து நின்றாள். பாட்டியைக் கட்டிப் பிடித்தழ வேண்டும் போலிருந்தது. வீடு யுத்தகளம் போல தோன்றிற்று. பாட்டி இல்லையென்றால், மனசு மரணிக்கும் சூழ்நிலைகள் வந்திருக்கும் என்று தீர்மானமாகத் தோன்றிற்று.

இந்தக் கடிதத்தைக்கூட பாட்டியிடம் காட்டலாம். காட்ட வேண்டும். சபரி என்கிற நல்ல மனிதனின் அடையாளம், இந்தக் கடிதம். எத்தனை நாகரீகமாக வார்த்தைகள் வந்து விழுகின்றன. எத்தனை லாகவமாகத் தன் மௌனத்தை ஏற்றுக் கொள்கிறான்.

பாட்டியும் கடிதம் வாசித்து ரொம்ப நேரம் மௌனமாக இருந்தாள். அந்தக் கடிதம் பற்றி அவள் வேறெதுவும் சொல்லாதது ஏமாற்றமாகவே இருந்தது. சபரியுடனான உறவில், முற்றுப்புள்ளி பெறும் கட்டம் வந்துவிட்டது. இனி, இழந்ததைப் பற்றிப் பேச வேண்டாம் என்று பாட்டி தீர்மானித்திருக்கலாம். இழந்ததா? இழந்து விட்டோமா? அலைகள் போல துக்கம் மனதில் பரவியது. நடுஇரவு எழுந்து அந்தக் கடிதத்தைக் கிழித்துப் போட்டாள்.

மறுநாள் காலை எழும்போது காய்ச்சல் தலைக்கனத்தோடு, எழுந்திரிக்க முடியாமல்

செய்தது. ஒரு வாரமாய் கல்லூரிக்குப் போகாமல், பாடங்களும் விட்டுப் போயின. தமிழ், இவளுக்காக தினமும் வந்து எழுதிக் கொடுத்துப் போனாள்.

அன்று தான் ஜுரம் இல்லை. திண்ணையில் சாய்ந்தாற்போல உட்கார்ந்து, மலையையே பார்த்துக் கொண்டிருந்தாள் மகா. மழை வரும் போல, மேகம் கறுத்து, மலையின் மேல் கூடாரங்கள் போட்டிருந்தன. திடீரென்று அந்தக் குரல் கவனத்தை ஈர்த்தது.

சபரி, சபரிதான். இவளைப் பார்த்துச் சிரித்தான்.

"உள்ளே வரலாமா?"

என்ன சொல்ல என்று தயங்கினாள். பாட்டி உள்ளிருந்து "வாங்க வாங்க" என்றாள். அதிர்ச்சி, பனிக்கட்டியாய் மகாவை உறைய வைத்தது.

"பாட்டி லெட்டர் போட்டிருந்தாங்க." என்றான் அவளைப் பார்த்து.

அப்பா இவனைப் பார்த்து முகம் திருப்பிக் கொண்டார் என்றாலும், சபரி அவருக்கு வணக்கம் சொன்னான்.

"ம்ம்..."

"இதுதான் சபரி." பாட்டி அறிமுகப்படுத்தினாள்.

"அதுக்கென்ன இப்போ?"

"அதுக்கென்னவா? உம் பொண்ணை கல்யாணம் கட்டிக்கலாமானு கேட்டு வந்திருக்கார்."

"அனாமத்து ஆட்களுக்குக் கொடுக்கறதில்லைனு சொல்லிடு."

அப்பா எழுந்து உள் அறைக்குப் போய் சாத்திக் கொண்டார். சபரியின் முகம் அவமானத்தில் சுருங்கியிருந்தது. பாட்டி இப்போதும் புன்னகைத்தாள். "இங்க வா" என்று மகாவைக் கூப்பிட்டாள்.

"இவரப் பிடிச்சிருக்கா?"

"..."

"சொல்லுடி மகா. எப்பப் பேசணுமோ அப்ப பேசணும். தெரியுமில்லே?"

"ம்..."

"உங்கப்பன் கல்யாணத்தை நடத்தித் தர மாட்டான். அதனால... பேசாம ரெஜிஸ்தர் மேரெஜ்ங்கிறார்களே... அதப் பண்ணிக் கோங்க..."

"பாட்டி..." என்றான் சபரி.

"நீங்க அனாமத்து இல்லைனும், இவளை அனாமத்து ஆக்கிற மாட்டீங்கனும் நம்பறேன் நான். நிச்சயமா இந்த ஜென்மத்துல



"தலைவர் குண்டர் படையோட எங்கே கிளம்பிட்டாரு."

"அம்மா பேசணும்னு சொல்லி அனுப்பினாங்களாம்!"

— குடந்தை கே.ஆர். ரவிக்குமார்

இவன் கல்யாணம் பண்ணி வைக்க மாட்டான். போராட்டங்கள் இல்லாம காதலா? போராடத் துணிவுள்ளவன்தானே காதலிக்கவும் வேணும்?"

அடுத்த வாரத்தில் ஒருநாள் தமிழ், மற்றும் சில நண்பர்கள் மத்தியில் ரெஜிஸ்தர் ஆபீசில் மாலை மாற்றிக் கொண்டார்கள். பாட்டி வந்து, சாட்சிக் கையெழுத்துப் போட்டுவிட்டு, கண்ணில் நீர்மல்க அணைத்துக் கொண்டு தேம்பினாள்.

"நல்லாரு குழந்தே. உங்கப்பா சம்மதிக்கலைனு வருத்தப்படாதே. அவன் ஊருக்கு பயப்படுறான். பாரேன்... மனசுல உனக்குக் கல்யாணம்னா ஆனந்தமா கூத்தாடுவான். சரியாயிரும். எல்லாம் சரியாயிரும்டி. சந்தோஷமாருக்கு. என் மகன் கல்யாணத்தையே பாக்கக் கொடுத்து வைக்காதவ நான். உங் கல்யாணத்த நடத்திட்டேன் மகா."

பாட்டி தேம்பினாள். "நீ சந்தோஷமாருக்கேனு செல்வாகூட சந்தோஷப்படும் மகா. நாம நேசிக்கறவங்க சந்தோஷமாருந்தாத் தானே மனசு நிறையும்?"

மகா வெறுமனே தலையசைத்தாள். இரவு வெகுநேரம் மகாவும் சபரியும் அவர்களுக்கான ஹோட்டல் அறையில் விழித்திருந்தார்கள். ஜன்னல் வழியே வானம் தெரிந்தது. வெளியே, வண்ண விளக்குகள் உயிர்பெற்று, அணைந்து கொண்டிருந்தன. வானம் இருள் நீங்கி, வண்ணமாய் ஜொலித்தது.

"நிலாக்கால வானவில் போலில்லை மகா - விளக்கு வெளிச்சங்கள்."

"ம்ம்..."

"மக்கு மக்கு. நிலாக்காலத்தில் வானவில் வருமா?"

"வரும். மனத்தில் சூரியன் இருந்தால்" என்றாள்.

(முற்றும்)

நிறம் தரம் நிரந்தரம்

எந்த வியாபாரமானாலும் போட்டி என்பது சகஜமாகி விட்ட நிலையில், வாடிக்கையாளர்களைக் கவர அனைவரும் தவறாமல் பயன்படுத்தும் ஒரே தந்திரம் Discount Sale. கடைகளில் நல்வரவுப் பலகைக்கு பதில் பெரிய பெரிய பலகைகளில் 'தள்ளுபடி விற்பனை' என்ற வார்த்தை கட்டாயம் இடம்பிடித்திருக்கும். எத்தனை சதவீதம் என்பது பொருள் மற்றும் கடைகளைப் பொறுத்தே அமையும். தரமான பொருள்களின் விலையில் பாதியைக் குறைத்துத் தருவது எப்படி சாத்தியம்? அதே சமயம் அதன் உண்மையான விலையே, அந்தப் பொருளின் மீது குறிப்பிட்டிருக்கும் விலையில் பாதிதான் இருக்குமா? இந்தக் கேள்வியுடன் தி.நகரில் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் **Dhanalakshmi Sarees** உரிமையாளர் திரு. S.K. லிங்காராம் அவர்களிடம் கேட்டோம்.

“துணி வியாபாரத்தில் அதிக போட்டி என்பதால் சிலர் இந்த யுக்தியைக் கொள்கின்றனர். இதில் சிலருக்கு இலாபமும் சிலருக்கு நஷ்டமும் ஏற்படுவதுண்டு. உதாரணமாக அகலம் குறையும் அல்லது சாயம் போய் விடும்.

“எங்கள் கடையைப் பொறுத்தவரையில் நாங்கள் வாடிக்கையாளர்களுக்கு முழு உத்தரவாதத்துடன் சேலைகள் விற்பனை செய்கிறோம். புடைவைகளில் சிறு குறைகள் இருந்தாலும் உடனே மாற்றித் தருகிறோம். 1996-க்குப் பிறகு இந்த வருடம்தான் நாங்கள் Discount Sale போடுகிறோம். சில கடைகள் போல் விலையை உயர்த்தி, பிறகு தள்ளுபடி செய்வதில்லை. பொருள்களின் உண்மையான விலையில் இருந்துதான் தள்ளுபடி செய்கிறோம். அதே சமயம் தரத்தில் எப்போதுமே குறைவந்ததில்லை. இதற்கு என்னிடம் வரும் வாடிக்கையாளர்களே சாட்சி! ஏனென்றால் நான் திடீரென்று இந்த வியாபாரத்தில் குதித்து விடவில்லை.

“நான் பின்னி கம்பெனியில் வேலை பார்த்து வந்தேன். என் மனைவி திருமதி தனலக்ஷ்மி அம்மாள் வீடு வீடாகச் சென்று புடைவை விற்று வருவாள். எங்களின் அணுகுமுறையும் தரமும் மக்களுக்குப் பிடித்துப் போனதால் வியாபாரம் சூடு பிடித்தது. பிறகு ஆட்டோவில் சப்ளை செய்ய ஆரம்பித்தோம். எனக்கு முழு நம்பிக்கை வந்தவுடன் 1992-ல் வேலையை ராஜினாமா செய்துவிட்டு தொழிலில் இறங்கி விட்டேன்.


“எங்களுக்கென்று சொந்தமாக Dyeing Company இருப்பதால் கெட்டி சாயத்துடன் கூடிய தரமான புடைவைகளைக் குறைந்த விலையில் தர முடிகிறது. இது தவிர நாங்கள் 100's Ordinary, 100's Special Combed Cotton மற்றும் 120's Superior Quality போன்றவற்றை ஸ்பெஷலாகத் தயார் செய்கிறோம். Madurai Original Ranee Sarees நாங்கள் Retail விலைக்கே விற்பனை செய்கிறோம். அதே சமயம் பல வாடிக்கையாளர்கள் வேண்டுகோளுக்கு இணங்க ஆர்டரின் பேரில் அவர்களுக்குப் பிடித்த டிசைன் செய்து தருகிறோம்.

“எங்கள் குறிக்கோள் குறைந்த இலாபம்; அதிக விற்பனை. பெண்களால் அதிகம் விரும்பப்படுகிற காட்டன் சேலைகளில் கூட சாயம் போய் விடுகிறது என்ற புகார் பரவலாக உள்ளது. இந்தக் குறையை நீக்க நாங்கள் Fancy Design 120' Superior Quality- ல் தயார் செய்கிறோம். இதற்கு அதிக கெட்டி சாயம் பயன்படுத்தப்படுவதால் சீக்கிரம் சாயம் போவதில்லை!” என்கிறார்.

இவருக்கு உதவியாக இவரது மகன் வெங்கடேசனும் இத்தொழிலில் ஈடு பட்டு வருகிறார் என்று தெரிவித்தார்.

தனலக்ஷ்மி சாரீஸ்
1, கோபாலகிருஷ்ண ரோடு,
தி. நகர், சென்னை — 17.
போன்: 8281327

Advt.





''பாட்டி, உங்க பாட்டியோட பழைய ப்ளவுஸ் ஏதானும் வச்சிருக்கீங்களா? எனக்கு மாடலுக்கு வேணும்!''

''ஜன்னல் வச்சது வேணுமா, ஜன்னல் வக்காதது வேணுமா?''

''என்னதான் ஃபாஷன்னாலும், என்னோட எல்லா ஷர்ட்டையும் நீயே தெனம் போட்டுட்டுப் போய்ட்டா, நான் எத்தனை நாளைக்கி வெறும் பனியனோட ஆபீசுக்குப் போறது?''

இது ஃபேஷன்!





''நீ புதுசா தெச்சு வச்சிருந்தியே ஒரு ஃபுல் ஸ்லீவ்ஸ் ஷர்ட்? ரொம்ப பிரமாதம்னு ஆபீஸ்ல எல்லாரும் பாராட்டினாங்க.''

''கஷ்டம், கஷ்டம். அது என்னோட புது ஜாக்கெட்டுங்க!''



''பொண்ணைக் கூப்பிட்டு இன்ட்ரொட்யூஸ் பண்றேன்னீங்க. வெறும் கவுன் மட்டும் பெரிசா வந்து நிக்குது?''

''அது புது டிசைன்ங்க. பொண்ணு உள்ள இருக்கு. ஈவ் டீசிங்க சமாளிக்கத்தான்!''

— எஸ்.வி.என்

KALKI SHOPPING PAGE

KALKI SHOPPING PAGE





தத்துவத்தை உணர்த்தும் ஃபாஷன்!





சுனிதா சாரதி. இவரது குரலுக்கு அகில இந்திய அளவில் அங்கீகாரம் கிடைத்திருக்கிறது. ஆம்! சேனல் 'வீ'யும், ஒரு மியூஸிக் கம்பெனியும் சேர்ந்து நடத்திய இசைப் போட்டியில், அகில இந்திய அளவில் முதலிடம் பெற்று, தன் திறமையை நிரூபித்திருக்கிறார். இதற்கு அங்கீகாரமாக, இவரது இசை ஆல்பம் வெளிவரப் போகிறது; இவருக்கு, சேனல் 'வீ'யில் இசை நிகழ்ச்சி வழங்க வாய்ப்பு தரப்படவுள்ளது. சென்னையைச் சேர்ந்த சுனிதா சாரதியிடம் சில கேள்விகள் :

"ஃபாஷன் என்பதற்கு உங்களைப் பொருத்தவரை என்ன அர்த்தம்?"

"உடைதான் ஃபாஷனில் பிரதான அங்கம். அதே நேரம், தலைமுடி அலங்காரம், நகைகள், மேக்-அப் இவையும் அதில் அடங்கும். ஃபாஷனின் ஸ்பெஷாலிடியே, அடிக்கடி மாறுவதுதான். மாற்றம்தான் இந்த உலகில் நிரந்தரமானது என்கிற ஆழமான தத்துவத்தை ஃபாஷன், உலகுக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது."

"ஃபாஷன் ஷோக்கள் பற்றி உங்கள் கருத்து?"

"இந்திய அழகிகளுக்கு, உலக அளவில் அங்கீகாரம் கிடைத்தபின், இங்கே அழகு, ஃபாஷன் பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆனால் ஒருசில தரப்பிலிருந்து ஃபாஷன் ஷோக்களுக்கு எதிர்ப்பு வருவது அவசியமில்லாதது. எனக்குப் பிடித்தது பியூட்டி வித் பிரெய்ன்தான்."

"உங்களுக்கு என்ன மாதிரி உடைகள் பிடிக்கும்?"

"எது மாதிரியான உடையும் பிடிக்கும். என் மூடைப் பொருத்துத்தான் என் உடை அமையும். எந்த நிகழ்ச்சிக்கு என்ன உடை என்றும் நான் பார்ப்பேன். ஜீன்ஸ், டீ-ஷர்ட், பேண்ட், ஷர்ட், மிடி, ஷார்ட்ஸ், சுரிதார் இப்படி எதுவும் எனக்கு ஓ.கே.தான்."

"மேடை நிகழ்ச்சிகளில் பாடுகிற போது என்ன மாதிரி உடையணிந்து கொள்ளுவீர்கள்?"

"பேண்ட், ஷர்ட் போல மேற்கத்திய ஸ்டைலில் இருக்கும். ஆனாலும் அதில் பெண்மைக்குரிய நளினம் இருக்கும்."

— சி.எம்.

வண்ணப்படம் : யோகா



மாறிவிட்ட கிராமத்து ஃபாஷன்!

நகர்ப்புறங்களில் ஏகப்பட்ட ஃபாஷன்கள் வளர்ந்து கொண்டிருக்கையில், கிராமங்களின் நிலை என்ன? சாம்பிளுக்காக கோவை மாவட்டத்திலுள்ள அ.க. புதூர் என்கிற கிராமத்துக்குச் சென்றிருந்தோம்...

"இப்பல்லாம் காலம் ரொம்பத்தான் மாறிப் போச்சு போங்க! நாங்களெல்லாம் எட்டு கெஜம் சேலையப் பின் கொசுவம் வச்சுக் கட்டிக்கிட்டு வயல் வேலையை ஆரம்பிச்சா, பொழுது உச்சிக்கு வர்றப்பத்தான் – மத்தியானச் சாப்பாட்டுக்குத்தான் தலை நிமிர்ந்து பார்ப்போம். ஆனா இன்னிக்கு இருக்கற வளுக முன் கொசுவம் வச்சுக் கட்டிக்கிட்டு, தளுக்கி மினுக்கறாளுவளே தவிர, எங்க வேலை செய்ய றாளுங்க..." என்று ஆரம்பித்தார் அறுபது வயதுப் பெண்மணி ஒருவர்.

அங்கே விவசாய வேலைகளில் ஈடுபட்டிருந்த பதினாறு பெண்களில் நான்கு பேர்தான் பின் கொசுவம். பன்னிரண்டு பேர் முன் கொசுவம். விடுவார்களா, மெஜாரிடியினர்? ஒரே பட்டி மன்றச் சண்டைதான்!

ஐம்பதுக்கும் மேற்பட்ட

• **கரியம்மாள் : "இன்னைக்கா இருந்தா பச்சை குத்திக்க மாட்டேன்!**



வர்கள், 25-க்கும் மேற்பட்டவர்கள்தான் இப்படிச் சண்டை போட்டுக் கொள்கிறார்களே தவிர, 25க்குக் குறைவான வயதுடையவர்களிடம் இந்தச் சண்டையெல்லாம் இல்லை. சேலை என்று கட்டினால் அது முன் கொசுவம்தான். பள்ளி, கல்லூரிகளுக்குச் செல்பவர்களின் வோட்டு சுரிதாருக்குத்தான்! "அதுதானுங்க வசதி!" என்கிறார்கள்.

அந்தக் காலத்தில் பச்சை குத்திக் கொள்வதென்பது மிக மிக முக்கியமான ஃபாஷனாக இருந்தது. "கடைசில கட்டைல போறபோது, புருஷன், புள்ளைங்க உள்பட யாரும் கூட வரப் போறதில்லை. நம்ம உடம்புல குத்திக்கிற பச்சை மட்டும்தான் கடைசி வரைக்கும் நம் மோடவே வரும்னுதான் நானும் பச்சை குத்திக்கிட்டேன். இன்னைக்கா இருந்தா நிசமாலுமே நான் குத்திக்க மாட்டேன். என் மவளுவ மூணு பேரும் குத்திக்கலையே!" என்றார் எழுபத்தைந்து வயதான கரியம்மாள்.

இதே மாதிரி, காலில் தண்டை, மேல் காதில் அணியும் கொப்பு என்கிற ஒருவகை அணிகலன்களெல்லாம் போயே போச்சு!

"இன்னைக்கு கிராமத்துப் பெண்கள் கூட ரவிக்கைகளில் புதுப்புது டிசைன்கள் வேண்டுமென்று கேட்கிறார்கள். தையற்கூலி எவ்வளவானாலும் அது பற்றியெல்லாம் கவலைப்படுவதுமில்லை. 'என் வீட்டுக்காரருக்குத் தெரிய வேண்டாம். தெரிஞ்சா ரவிக்கை தைக்க இவ்வளவு ரூபாயா என்று அநாவசியமாச் சண்டை வரும்' என்று சொல்லும் பெண்கள்தான் அதிகம்!" என்றார் கிராமத்து டெய்லர் ஒருவர்.

இதே போல் கிராமத்துத் தாத்தாக்களிடமும் பழைய காலம் மலையேறி விட்டது.

"அப்பெல்லாம் கோவணம்தான் கட்டியிருப்போம். ஊர் விருந்து, அப்படியிப்பன்னு வெளியில எங்காச்சும் போறபோது தான் வேட்டியே கட்டுவோம். கல்யாணத்தில் மாமனார் கொடுத்த மோதிரத்தையும் போட்டுக்கிட்டு, மேல் துண்டைத் தோளில் போட்டுக்கிட்டுக் கிளம்புவோம். சட்டை போடறதெல்லாம் ரொம்பப் பெரிய சமாசாரம். ஆனா இன்னிக்கு எல்லாமே மாறிப் போச்சு! கோவணத்தைக் கட்டிக்கிட்டிருந்தா, பைத்தியக்காரன்னுல்ல நெனைப்பாங்க!" என்றார்கள் பழனிக் கவுண்டர், ராமசாமிக் கவுண்டர் ஆகிய தாத்தாக்கள்.

கட்டுரை, படங்கள் :
கா.சு. வேலாயுதன்



• தாத்தாக்கள் :
"கோவணமெல்லாம் போயே போச்சு!"

கோவைக்கு வந்த குஜராத்தி ஃபாஷன்!

'பாந்தினி' என்ற (நம் சுங்குடி மாதிரி) ராஜஸ்தான் சேலைகளால்




தைக்கப்பட்ட இந்த குஜராத்தி ஃபாஷன் இப்போது கோவைக்கும் வந்து விட்டது. விலைதான் எட்டாயிரம் ரூபாய் அளவுக்குச் செலவு செய்ய வேண்டுமாம்! இருந்தாலும் ஃபாஷனை விரும்பும் வசதியுள்ள இளைஞிகள் விலையைப் பற்றிக் கவலைப்படாமல் வாங்கித் தள்ளுகிறார்கள்.

— ரோஹிணி



நெற்றிக்கு நகைகள்!



கொஞ்சம் பருமனான சைஸ் மூட்டைப் பூச்சி அளவுக்கு எட்டு ஸ்டிக்கர் பொட்டுகள் அடங்கிய ஒரு பாக்கெட்.... விலை அறுநூறு ரூபாய்!

நாம் வாயைப் பிளந்தபோது 'இதுக்கே இப்படி அசந்துட்டீங்களே...' என்பது போலொரு பார்வை பார்த்தார் வஸந்த். சென்னை ஃபவுண்டன் பிளாசாவிலுள்ள ஒரு கடையின் உரிமையாளர்.

''ஒவ்வொரு பொட்டுலயும் சின்னச் சின்ன வெள்ளைக் கல் பதிச்சிருக்கு பாருங்க சார்... அதெல்லாம் அமெரிக்கன் டயமண்ட் - அதனால்தான் விலை...''

பொட்டு மட்டுமே விற்கிறார் இவர் கடையில்! டெல்லியிலும் மும்பையிலும் தயாராகி, மும்பையில் மட்டுமே கண்ணாடித் தாள் போர்த்திய அட்டைகளில் 'பேக்' செய்யப்பட்டு தருமமிகு சென்னைக்கு வருகின்றன இவை. இரண்டு ரூபாய் விலையில் தொடங்கி காசுக்கேற்ற பவிசுடன் பல டிசைன்கள்.

புதிய டிசைன்களை நாம் விரும்புகிற வகையில் தயாரித்தும் கொடுக்கிறார் வஸந்த். நகாசு செய்யப்படாத சிவப்பு, கறுப்பு ஸ்டிக்கர் பொட்டுகளை எடுத்து நாம் கேட்கும் வடிவில் வெட்டி, முத்து, கல், மணி என்று ஒட்டி அலங்காரம் செய்து தருகிறார். அதற்கான பொடிசான கருவிகள் வைத்துள்ளார். ஒட்டியது உலர ஒரு மணி நேரம் அவகாசம் மட்டும் தர வேண்டும்.

வாடிக்கையாளர்களின் 'சரும நலன்' கருதி தெருவோர ஸ்டிக்கர் பொட்டுகளைப் புறக்கணித்து விடுகிறார் வஸந்த். நம்பகமான நிறுவனங்களிலிருந்து மட்டுமே தருவித்து விற்கிறார்.

சிறிய நெற்றிக்கு வட்டமான பொட்டு, சுமாரான அகல நெற்றி என்றால் ஓவல் வடிவம், மைதானம் போன்ற அகலமெனில் நீள பொட்டு - இது வஸந்த் கொடுக்கும் பொட்டு டிப்ஸ்!

''தமிழ் சினிமா பற்றி ரொம்பத் தெரியாது - அதனாலே என் கடைக்கு வர சினிமா நடிகைகள் பேரெல்லாம் சரியாத் தெரியல்லை... ஆனால் சில்க் ஸ்மிதா ரெகுலர் கஸ்டமரா இருந்தாங்க... அடிக்கடி வந்து அவங்க டிசைன் செலக்ட் பண்ணு வாங்க. கூட வர்ற தயாரிப்பாளர்கள்தான் பில்லுக்குப பணம் தருவாங்க. அவங்க இறந்தப்போ ரொம்ப வருத்தமாயிருந்தது...'' என்கிறார்.

''எந்த பிராண்ட் பொட்டு ரொம்ப அதிகமா விற்குது...?'' என்று கேட்டால் இடிஇடியென்று சிரிக்கிறார் வஸந்த்.

''ஒரு ரகசியம் சொல்றேன்... ஒரே கம்பெனிக்காரங்கதான் திரும்பத் திரும்பப் பெயரை மாற்றி பாக்கிங் பண்றாங்க... வாங்கறவங்கதான் புதுப் பெயர்னு நினைச்சு வாங்கிட்டுப் போறாங்க...!''

''அதனால்தான் நான் பம்பாயிலேயே பொட்டு ஷாப்பிங் செய்கிறேன்'' என்கிறார் அட்டையிலுள்ள காயத்ரி. ''எனக்கு விதம் விதமாகப் பொட்டு வைத்துக் கொள்ள ஆசைதான். ஆனாலும் பாக்கெட் (பத்து பொட்டுகள் கொண்டது) இருபது ரூபாய்க்கு மேல் கொடுத்து வாங்க மாட்டேன்!'' என்கிறார்.

— அருண் சரண்யா

அட்டை வண்ணப்படம் : **பிரவீண்குமார்**

படம்: **ஸ்ரீஹரி**

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392 /99* Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka
Supplement to the Kalki issue Dated 18.4.99





உஜாலா

உஜாலாவின் துரித செயல்திறன் தண்ணீரில் உடனடியாக கரைகிறது மற்றும் துணிகளின் மீது ஆழமாக செயல்பட்டு பளபளக்கும் வெண்மையை சீராக தருகிறது. துணிகளை மீண்டும் துவைக்கும் போது உடனடியாக அழுக்குடன் வெளியே தள்ளப்பட்டு விடப்படுகிறது. உஜாலாவை திரும்ப உபயோகிக்கும் போது புதுப்பித்த வெளிச்சம் பரவுகிறது. ஓரல்-டாக்ஸிஸிடி, சரும அரிப்பு ஆகிய டெஸ்டுகளில் தீங்கற்றது மற்றும் சருமத்திற்கு ஹானியற்றது என சர்ட்டிபிகேட் பெற்ற விஞ்ஞான ரீதியான தயாரிப்பு ஆகும் உஜாலா.

எல்லாவற்றிற்கும் மேல், ஜோதி லேபாரட்டரீஸின் தயாரிப்பு அல்லவா உஜாலா!

உஜாலா

கேட்டு வாங்கும் போது உஜாலாவைப் போல தோற்றமளிக்கும் மற்றொன்றுமல்ல தருகிறார்கள் என்பதை உறுதிக் கொள்ளுங்கள்

A Product of JYOTHY LABORATORIES, Mumbai.

இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

பார்க் டவுன் பெனிபிட் பண்டு லிமிடெட்

மத்திய அரசாங்க அங்கீகாரம் பெற்ற ''நிதி''கம்பெனி

துவக்கம் 1985. பதிவு எண்: 11600/85

பதிவு அலுவலகம்

223, தெற்கு தங்க சாலை தெரு, சென்னை - 600 003.

✆ 5352676, 5355472, 5359316

கிளைகள்

2, கிழக்கு மாட வீதி, திருவான்மியூர், சென்னை - 600 041.
✆ 4413582, 4416417,

995, II அவின்யூ, 12வது மெயின் ரோடு, ஜங்ஷன்,
அண்ணாநகர், சென்னை - 600 040. ✆ 6262656, 6280750

73 & 74 ஆற்காடு ரோடு, முதல் மாடி, கோடம்பாக்கம்,
சென்னை - 600 024. ✆ 4846528,


215, எம்.டி.எச். ரோடு, முதல் மாடி அம்பத்தூர்,
சென்னை 600 053, ✆ 6357725

8, மகாலட்சுமி தெரு, தி. நகர்.
சென்னை - 600 017. ✆ 4344319, 4332378

537, T.H.ரோடு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை - 600 021.
✆ 5965208, 5965256

22. நந்திகோயில் தெரு, தெப்பக்குளம், திருச்சி - 620 002.
✆ 0431 706187, 706681, 706368. (செவ்வாய் விடுமுறை)

நம்பிக்கை ♦ நாணயம் ♦ பாதுகாப்பு



• நகைகள் மற்றும் வீடுகளின் பேரில் கடன் வழங்கப்படும்



இயக்குநர் குழு தலைவர்
Dr. R. விவேகானந்தன்
B.com., MBA.,

நிர்வாக இயக்குநர்
Dr. P. பாலசுப்ரமணியம்
B.Sc.,

அலுவலக நேரம்

காலை 8.30 மணி முதல் 12.30 மணி வரை
மாலை 2.00 மணி முதல் 6.00 மணி வரை

ஞாயிறு: காலை 8.30 மணி முதல் 12.00 மணி வரை

• வார விடுமுறை வெள்ளிக்கிழமை •

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 " Registered No. TN / MS (S) M4392 /99" Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 " Registered as a Newspaper in Srilanka

